திலங்குடி ஸ்தல புராணம்

A
C

உ

சுபம்.

ஸ்ரீ கலங்காமற்காத்தவிநாயகர் துணை.

ஸ்ரீ காசியாரணியமாகாத்மியம் என்னும்

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி க்ஷேத்திரமாகிய

# ஆலங்குடிஸ்தலபுராணம்.

இது

முடிகொண்டான் பிரம்மஸ்ரீ

வெ. வெங்கட்டராமகனபாடியவர்களால்

ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பெற்றும்,

மைசூர்

பிரம்மஸ்ரீ R. விசுவநாதய்யரவர்களால்

தொகுத்துச் சீர்திருத்தப்பெற்றும்,

திருநெல்வேலிஜில்லா, கச்சநல்லூர்.

ஸ்ரீ. ல. ஸ்ரீ. இலக்குமணபோற்றிகளால்

பரிசோதிக்கப்பெற்றது.

Acc. No. 4322
158p

PRINTED AT THE ARYAPRAKASINI PRESS,

TINNEVELLY BRIDGE.

1915

*Registered Copy Right.*

Price] [Rs 1—4—0

LIBRARY SERVICE INDIA
KOTTAIYUR-623106.
TAMIL NADU. INDIA.

O23:38.2197
N15

4322

B



## ஸ்ரீ கலங்காமற் காத்த விநாயகர் துதி.

இலங்கேசிரும்பூலை ஈசனளித்த
கலங்காமற்காத்த கணேசன், நலங்காண
எக்காலும் சிந்திக்க இன்பநிலை தானளிப்பன்
துக்காகரத்தைத் தொலைத்து.

## மூலவிநாயகர் துதி.

மருமலரிதழிமாலை வனைந்தொளி பரப்பும்வேணி
நிருமலனோர் பான்மேவு நேரிழை பயந்தசேயை
கருமுகிற வழநீண்ட காசியாரணியத்தோங்கு
மிருபதமுடைய நால்வாயிபத்தினை யகத்துள் வைப்பாம்

## சுப்பிரமணியக்கடவுள் துதி.

அறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப் பெருங்கடலுங்கலங்கக்
கார்வந, துறங்குசிகைப்பொருப்புஞ்சூருரப்பொருப்பும்பிளப்பம
றையுணர்ந்தோராற்றும், அறங்குலவுமகத்தழலுமவுணமட
வார்வயிற்றினழலுமூள, மறங்குலவுவேலெடுத்த குமரவேள்
சேவடிகள் வணக்கஞ் செய்வாம்.

## தக்ஷிணாமூர்த்தி துதி.

கல்லாலின் புடையமர்ந்து நான் மறையாறங்க முதற்கற்றகேள்வி
வல்லார்கணால் வருக்கும்வாக்கிறந்த பூரணமாய்மறைக்கப்பாலாய்
எல்லாமாயல்லதுமாயிருந்ததனை யிருந்தபடியிருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமனினைந்துபவத்தொடக்கை
(வெல்வாம்

TAMIL NADU ARCHIVES LIBRARY
4322
EGMORE, MADRAS-600 008

ஸ்ரீ கலங்காமற்காத்த விநாயகர் துணை.

பவிஷ்யோத்தரபுராணத்திலுள்ள

# காசியாரணிய மாகாத்மியம்.

## விநாயகர் துதி.

1. தேவர்களுக்குண்டான அபகீர்த்தியாகிற களங்கத்தை நிவிர்த்திசெய்ய வல்லமையுள்ளவரும், கணங்களுக்கதிபரும், உத்தமமாயும் ஆச்சரியமாயுமிருக்கின்ற பராக்கிரமத்தையுடையவரும், தேவர்களால் சேவிக்கப்பட்ட பாதாரவிந்தங்களையுடையவரும், ஈசுவரனுக்குப் புத்திரனுமிருக்கின்ற கலங்காமற்காத்த கணபதியை நான் ஸ்தோத்திரம் செய்கின்றேன்.

2. கஜாசுரனுடைய கர்வத்தை யடக்கினவரும், இளமைப்பருவத்தை யுடையவரும், ஆறுமுகனுடன் சேர்ந்து குழந்தைகள் போல் விளையாடுவதில் சந்தோஷத்தை யுடையவரும், தெற்குக்கோபுரவாசலிலிருப்பவரும், நாடோறும் மோதகத்தில் பிரியமுள்ளவரும், வேளாகாம்பாளின் புத்திரரும், சிறந்தவரும், ஒற்றைக்கொம்பை யுடையவருமான விநாயகரை யான் தியானஞ் செய்கின்றேன்.

## க்ஷேத்திரம், தீர்த்தம், மூர்த்தி முதலியவைகளின் துதி.

3. காசியாரணியத்தையும், அமிர்த புஷ்கரணியையும், தேவர்களுக்கதிபரான ஆபத்சகாயரையும், அழகான நடையுடைய வேளாகாம்பாளையும், யான் வணங்குகின்றேன்.

4. கணபதி, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, சுப்பிரமணியர், சந்தரர், சண்டேசர், நந்திகேசர், பைரவர் முதலானவர்களை யான் வணங்குகின்றேன்.

5. ஹரிஹரபுத்திரர், வீரபத்திரர், மஹாகாளி, சபாபதி, தேவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சகல லிங்கங்கள், ஸகல தீர்த்தங்கள், முதலானவைகளையும் வணங்குகின்றேன்.

6. இருஷிகளிற் சிறந்த அகஸ்திய முனிவரையும், பக்தியிற் சிறந்த அமுமேதாகரையும், (புண்ணிய சீலரான) மகாமதியென்னும் பிராமணரையும், மற்றுமுள்ள சிவனடியார்களையும், எப்பொழுதும் யான் வணங்குகின்றேன்.

உ

## முதலாவது அத்தியாயம்.

## சூதமாமுனிவர் இருஷிகளுக்கு க்ஷேத்திர மகிமை யுரைத்தது.

ஸ்ரீ கைலாசபதியாகிய சிவபெருமானு லருளிய வேதங்களையறிந்த பிரம்மதேவனால் குறிக்கப்பெற்றதும், ஸகல முனிவர்களும் சேர்ந்து செய்த ஓர் யாகத்தின் முடிவில் தேவர்களால் நிரப்பப்பட்டுப் பிரம்ம ரிஷிகளால் ஸேவிக்கப் பெற்றதும், பலவிதமான அலங்காரங்களுடன் விளங்கப்பெற்றதும், யூபமென்னும் ஸ்தம்பங்களால் அலங்கரிக்கப்பெற்றதும், சத்வ குணம் பொருந்திய யாகத்தில் உண்டாகிய புகைக்கூட்டத்தால் நிரப்பப்பெற்றதும், வேதமந்திரங்களால் அழைக்கப்பட்ட இந்திரன்முதலான தேவர்களோடு பிரகாசம் பொருந்தியதும், வேதசப்தத்தால் பரிசுத்தமடைந்து அவ்வொலிகளாலேயே நிரப்பப் பெற்றதுமான, நைமிசாரண்யமென்னும் க்ஷேத்திரத்திலிருக்கும் மிகவும் கற்றுணர்ந்தவர்களும், உண்மைப்பொருளையே புகட்டுகின்றவர்களும், மீமாம்சம் என்னும் சாஸ்திரத்திலன்புள்ளவர்களும், மிகுந்த கிருபையுள்ளவர்களும் நல்லொழுக்கமுடையவர்களுமாகிய சௌனகர் முதலிய இருஷிகளிருக்குமிடத்திற்கு வேத வேதாந்தங்களின் முடிவைக்கண்டவரும், ஸகல புராணங்களையுமுணர்



ந்தவரும், மிகுந்த கிருபையுடையவரும் ஸதா காலமும் சிவபூஜை செய்பவரும், விபூதி ருத்ராக்ஷங்களை யன்புடனணிந்திருப்பவரும், வியாஸரைப்போல் பார்ப்பவர்களுக்கு சிறந்த ரூபத்தோடு விளங்குகின்றவருமான சூதமகாமுனிவர் ஓர் காலத்தில் எழுந்தருளினர். அவரைக் கண்டவுடனே சௌனகர் முதலான ரிஷிகள் எழுந்திருந்து சந்தோஷமானதுடன் அவரை விதிப்பிரகாரம் அருக்கியம் பாத்யம் ஆசமனியம் முதலான உபசாரங்களால் பூஜித்துப் பிறகு பிராமணர்களுக்குரிய ஆசனத்திலமர்த்தி, மற்றவர்களும் அவரனுமதிபெற்று தங்கள் தங்களாசனங்களிலமர்ந்து, மிக்க சந்தோஷமனதுடன் எழுந்தருளியிருக்கும் சூதமகா முனிவரை நோக்கிப் பின் வருமாறு கூறலாயினர்.

“சகல வேதாகமபுராணங்களிலுந் தேர்ச்சிபெற்ற ஓ சுவாமி! முன்னர் ஒரு முறை சிவபுராணம் சொல்லிக்கொண்டு வரும் சமயத்தில், தாம் சற்குருவான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் பிரதாபத்தையும், அவரது திவ்யசரித்திரத்தையும், ஆலகால விஷத்தை யுண்ட விதத்தையும், பார்வதியினுடைய விவாகத்தையும், பதினான்கு உலகங்களிலுள்ள க்ஷேத்திரங்களைத் தெரிசிப்பதைப் பார்க்கிலும் காசியாரணிய க்ஷேத்திரத்தை தரிசிப்பதாலுண்டாகும் பல விசேஷத்தையும், இப்புராணத்தின் முன்பாகத்தில், பரமசிவன் மிகுந்த பிரியத்துடன் இதில் வசிக்கின்றேனென்ற விஷயத்தையும், அகஸ்திய முனிவர் ஒரு அம்சத்தால் அந்த க்ஷேத்திரத்தில் வசிக்கின்றாரென்ற விவரத்தையும், அக்ஷேத்திரத்திலுள்ள விக்னேசுவரருக்குக் கலங்காமற்காத்த விநாயகரெனப் பெயருண்டானமைக்குக் காரணத்தையும், உலகங்களுக்கு அகாலத்தில் பிரளயம் உண்டானதற்கும், பார்வதியின் விவாகத்திற்குப் பின்பு கணபதி சுப்பிரமணியர்கள் குழந்தைகளைப்போல்விளையாடினதற்கும், அவர்களும், வீரபத்திரர், ஐயனாராகிய இருவர்களும் அம்பாளுக்கு முன்பாக இருப்பதற்கும், சுந்தரமூர்த்தி ஆலால சுந்தரரென்ற பெயர் பெற்றமைக்கும், அவரது ஓடம் நதியில் மூழ்கினதற்கும், அவரது பரிசுத்தமான சரீரத்தில் அம்மைத்தழும்புண்டானதற்கும், விஷ்ணுவுக்குப் பிரயோக சக்ரந்

னதக் கையிலுடையவரென்றும் வரதரென்றும் இருநாமதேயங்கள் உண்டானமைக்கும் காரணங்களையும் சுருக்கமாகச் சொல்லக் கேட்டிருக்கின்றோம். ஆனால் இப்பொழுது அவைகளைப்பற்றி விரமாயறிய விரும்புகின்றோம். அருள்புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

இவ்விதம் மிகுந்த ஆவலுடனும் பக்தி சிரத்தையுடனும் வினவாநின்ற சௌனகர் முதலான ரிஷிகளை நோக்கிச் சூதர் "ஓ முனிவர்களே! நன்றாகக்கேட்டீர்கள். அது உலகத்திற்கும் மிகுந்த நன்மையைப் பயக்கத்தக்கதாகவே யிருக்கின்றது. உங்களறிவிற்கு விளங்கும்படி சொல்லுகின்றேன் கேட்பீர்களாக" என்று கூறிச்சொல்லத் தொடங்கினார்.

"முனிவர்களே! இப்பூவுலகத்தின் கண் வெகுபேர்கள் மோக்ஷத்தை விரும்பிப் பல புண்ணிய ஸ்தலங்களிற் போய் வாசஞ்செய்து முக்தியடைகின்றனர். ஆயினும் இக்காசிபாரண்ணியத்தைச் சேர்ந்தவர் இழிந்த ஜாதியாராயினும், மிக்க பாபிகளாயினும், முடிவில் புண்ணிய ஜன்மத்தையே யடைகின்றார்கள். பசு பக்ஷி மிருகங்கள் முதலியவைகளும் அவ்விதமே ஆகின்றமையால் அவைகளின் ஜன்மமும் சாபல்யமாகின்றது. அக்காசிபாரண்யத்தின் மகிமை மிகவும் ஆச்சரியமுடையதாயும், பெருமையுடையதாயும், உலகத்தோரால் பூஜிக்கப்பெற்றதாயுமிருக்கின்றது. இத்தகைய பிரதாபத்தோடுகூடிய அத்தலத்தையடைந்த சகலமான தேவர்களும், முனிவர்களும், அசுரர்களும், மனிதர்களும், மற்றும் அக்ஷேத்திரத்தின் மகிமையை யறிந்தவர்களும், பின்பு வேறிடஞ்செல்லமாட்டார்கள். அதனுடைய பெருமை வெகு இரகசியமாகவே யிருக்கப்பட்டது. ஆதலாலேயே முனிவர்களே! நானும் அதைப் பற்றி இதுகாறும் வெளியிடாமலிருந்தேன். நீங்கள் இப்பொழுது மிக்க ஆவலுடன் கேட்கின்றமையால் சொல்லுகின்றேன். உலகங்களுக்குண்டாகும் விபத்துக்களை நீக்குவதே விரதமாகக் கொண்ட ஸ்ரீ கணபதியின் சரித்திரத்தை முதலிற் கூறுகின்றேன்.

அச்சரித்திரமானது ஸர்வபாபங்களையும் நிவிர்த்திசெய்



வதும், வெகு ஆச்சரியத்தையுடையதும், மகாபிரளயத்தை நிவிர்த்தி செய்வதுமான பிரதாபத்தைப் பெற்று விளங்குகின்றபடியால், இதனைப்படிப்பவர்களும், கேட்பவர்களும், மகாதேவரின் புத்திரரான கணபதியினுடைய அனுக்கிரஹத்தால் அவரவர்களுடைய இஷ்டங்கள் பூர்த்தியாகி, நல்லபுத்திரர்களையும், ஐசுவரியங்களையும், தீர்க்காயுளையும் பெறுவார்கள். இவ்விடத்தில் யாகம் முதலிய கிரியைகள் செய்பவர்களும் அவர்களுக்குத்தத்தம் சக்திக்குத் தக்கபடி ஓர் சோகியாவது கொடுத்து உதவி செய்பவர்களும் முடிவில் சிவபதமடைவார்கள்" என்று நைமிசாரண்ணியவாசிகளுக்குச் சூதமாமுனிவர் திருவாய் மலர்ந்தருளினார்.

:0:

# இரண்டாவது அத்தியாயம்.

## கஜாசுரன் கர்வபங்கமடைந்ததும், கணபதி கலங்காமற்காத்த விநாயகரெனப் பெயர் பெற்றதும்

சூதமகாமுனிவர் சொல்லுகின்றார் "ஓ முனிசிரேஷ்டர்களே! முற்காலத்தில் மாகதரென்னும் ஓர் இருஷி இருந்தனர். அவருக்கு மகாபலவானும், துஷ்டனுமாகிய கஜாசுரனென்னும் ஓர் புத்திரன் இருந்தான். அவன் தினந்தோறும் உலகங்களுக்கு மிகுந்த துன்பங்களைச் செய்து வந்தான். அவ்வசுரன் ஒரு சமயத்தில் ஆகாயத்திற் சென்று அண்டச் சுவரைத் தன் வலிமையால் உடைத்து, அதற்கப்பால் இருக்கும் சங்கையால் இவ்வுலகம் முழுமையும் மூழ்கும்படி செய்துவிட்டான்.

இவ்விதம் முழுகிப்போன உலகங்களையெல்லாம் பிரமாவிஷ்ணு முதலான தேவர்கள்பார்த்து அகாலத்தில் இப்பிரளயம் உண்டானமைக்குக் காரணம் யாதெனச் சிந்தித்து, மிக்க பயங்கொண்டு, தாங்கள் இருப்பதற்கு ஒரு இடமுமில்லாமல்

மிகுந்த சிரமத்துடன் எங்கும் சுற்றிக்கொண்டு, சிவபெருமானுக்கு முக்கியஸ்தலமாயும் பிரளயத்தால் நாசத்தையடையாததாயுமிருக்கின்ற காசியாரண்யமென்னும் இரும்பூளை வனத்திற்கு வந்து ஸகல ஆபத்துக்களையும் நிவிர்த்திசெய்யும் ஸ்ரீ ஆபத்சகாயேசுவரரைத் தெரிசித்து "ஜெயத்துடன் விளங்கும் ஓ பிரபுவே! சம்போ! மகாதேவா! அடியார்களாகிய எங்களுக்கு வந்த இந்த ஆபத்தை நிவிர்த்திசெய்யத் தங்களைவிட வல்லமையுள்ளார் யார்? தக்கன் யாகத்தையழித்து ஜெயத்துடன் விளங்குபவரே! திரிபுரத்தை எரித்த தயாபரா! இப்பொழுது கஜாசுரனால் விளைக்கப்பட்ட இக்கொடிய ஆபத்தையும், அபகீர்த்தியையும், நிவிர்த்திசெய்து எங்களை இரக்ஷிக்கவேண்டுகின்றோம்," என்று பலவிதமாகப் பிரார்த்திக்க, இம்மொழிகளைக்கேட்டுக் கருணாநிதியாகிய பரமேசர் மிகுந்த கிருபையோடு தேவர்களை நோக்கி "ஓ தேவர்களே! அவ்வசுரனை நான் கொல்வது தகுதியன்று. ஆனால் உங்கள் நன்மையின் பொருட்டு அவனை வதைசெய்ய ஓர் உபாயம் சொல்லுகின்றேன். நீங்கள் இதுகாறும் அவனுக்கு மிகுந்த பயத்துடன், தோப்புக்கண்டம் போட்டும், சிரசில் குட்டிக்கொண்டும் தேங்காயுடைத்தும் இவ்வண்ணம் மரியாதை செய்து வந்தமையால் இக்கதியையடைந்தீர்கள். அப்படிச் செய்ததனால் விளைந்திருக்கும் பாபங்களை நிவிர்த்திசெய்ய ஓர் உபாயஞ் சொல்லுகின்றேன் கேளுங்கள். இன்றுமுதல் நீங்கள் அவனுக்குச் செய்துவந்த அச்சேவைகளையெல்லாம் நங்குமாரனாகிய கணபதிக்குச்செய்துவணங்கிப்பூஜிப்பீரேல் அவன்பிரசன்னனாகிஜலம் வருகின்ற அண்டச்சுவரையுமடைத்து தண்ணீரையும் வற்றச்செய்து, அவ்வசுரனையும்சங்கரித்து விடுவா"னென்று சொல்லி ஏலாளகாம்பாளின் பதியாகிய சிவபெருமான் சிவலிங்கத்தில் மறைந்தருளினர்.

பிறகு விஷ்ணு முதலான தேவர்கள் தெற்குக்கோபுர வாசலிலிருக்கின்ற கணபதியைப் பத்திர புஷ்ப தூப தீப நைவேத்தியங்களாலும் தோப்புக்கண்டம் முதலிய மரியாதைகளாலும், பூஜித்து "ஓ கணபதே" ஜெயத்துடன் மூஷிக வாகனத்தில்விளங்குகின்றவரே! கஜமுகத்துடன் பிரகாசிக்கின்றவரே! பிரபுவே! இடையூறாகிய பர்வதத்திற்கு வச்சிராயுதமாக இருப்பவரே! ஜெயத்துடன் வேதாந்தங்களால் துதிக்கப்பெற்றவரே!" என்று பலவாறாகத் தோத்திரஞ்செய்து அவரைப் பலமுறையும் நமஸ்கரித்து, பயபக்தியுடன் நின்றனர். சிவபுத்திரனாகிய கணபதியும் தேவர்களது பூஜைக்குமெச்சி அவர்கள் முன் பிரசன்னமாகி மிகுந்த கிருபையுடன் அவர்களைப்பார்த்து ஓ விஷ்ணு முதலான தேவர்களே! என்னால் உங்களுக்குசெய்ய வேண்டுவது யாது? பயமின்றிச் சொல்லுங்கள் எனத்திருவாய் மலரக்கேட்ட தேவர்கள் பயத்தைவிட்டு கணபதியைப்பார்த்து பிரமதகணங்களுக்கு நாதரும் அடியார்கள் கோரிக்கையை நிறைவேற்றுபவருமாகிய பிரபுவே! எங்களது கலக்கத்தையும் அபகீர்த்தியையும் நிவிர்த்திசெய்து இரக்ஷிக்கவேண்டுமென்று விண்ணப்பிக்க, எங்கும் சமுத்திரம்போல் ஜலத்தால் வியாபிக்கப்பட்டுள்ள உலகத்தைப்பார்த்து காசியாரண்யமென்னும் இரும்பூளை வனத்திற்கு இரண்டு நாழிகை வழிதூரத்தில் ஜலம்தியங்கி நிற்பதையும் பார்த்து விநாயகக்கடவுள் விரைவில் ஆசனத்தினின்றும் இறங்கி பயப்படாதீர்களென்று தேவர்களுக்கு அபயஸ்தம்கொடுத்து தான் ஓர் பெரும் பூதத்தின் மேலேறிக்கொண்டு, குடைகள், ஆலவட்டங்கள், விசிறிகள், புஷ்பங்கள், தூப தீபங்கள், வாத்யங்கள் இத்தகைய பலவித விருதுகளுடன் கிளம்பி, தேவர்கள் பூமாரி பொழிய பூதகணிபத்துடன் வெளிப்போந்து, ஜலத்தினால் மூழ்கியிருக்கின்ற உலகமுழுவதையுங்கண்டு, தேவர்களின் பேரில் மனமிரங்கி, குழந்தைகள்விளையாட்டாக ஜலத்தையுறிஞ்சுவதுபோல், அத்தண்ணீர் முழுவதையும் தன் துதிக்கையால் வற்றச்செய்து, ஆகாயத்திற் கிளம்பி ஜலம் வெளிக்கிளம்புகின்ற அண்டச்சுவரின் துவாரத்தைத் தன் காற்பெருவிரலின் நகத்தின் நுனியால் ஜலம் வராமல் நன்றாயடைத்து விட்டுப் பின்பு அக்கஜாசுரனையுந் தேடினார். அதற்குள்ளாக அவ்வசுரன் தன் தூதர்களால் கணபதிவந்த விவரத்தை யறிந்துகொண்டு மிக்க பயங்கொண்டு தன்னைச் சேர்ந்த அசுரர்களுடன் ஓடத்தலைப்பட்டனன். தலைவிரிகோலமாய் ஓடும் அவனது பரிதாப நிலையைக்கண்டு கணபதி மிகமனமிரங்கி ஓடு

ன்றவனைத் தூரத்துவது நியாயமன்றென்றெண்ணி அவனைப்பின் தொடராது நின்று விட்டனர். அவனும் தனக்கு அது மறுபிறப்பேயென ' எண்ணி வெகு வேகமாகப் பாதாளலோகஞ் சென்று ஓர் குகையில் மறைந்துகொண்டனன்.

அச்சமயத்தில் விஷ்ணுமுதலான தேவர்கள், முனிவர்கள், கந்தருவர், சித்தர் முதலிய யாவரும் மகாகணபதியைத் துதித்து " ஓ விக்னேசரே! எங்களுக்குண்டான இப்பெருந் துன்பத்தை நீக்கி எங்கள் சத்துருவை ஸம்ஹாரம் செய்த வ மகானுபாவா! முக்கண்ணனுக்குச் சற்புத்திரனும் நிர்மலனும் விளங்கும் பிரபுவே! தம்மை இன்றுமுதல் நாங்கள் " கலங்காமற்காத்த கணபதி " யென வழைக்க விரும்புகின்றோம். அப்பெயரானது உலகமெங்கும் பிரசித்தியாகும் வண்ணமருள்புரியல்வேண்டுமென்று பிரார்த்தித்தனர். இம்மொழிகளைக் கேட்ட கணேசர் மனமுவந்து ' அப்படியே யாகட்டும் ' என்றருள், தேவர்கள்யாவரும், பூஜைசெய்வதற்கு வேண்டிய திரவியங்கள் யாவையும் சேர்த்துக்கொண்டு, மிக்க பயபக்தியோடு விதிப்பிரகாரம் அவரது திருவடிகளிற் பூஜித்து நின்றனர் ' வருவெள்ளத்தை யழித்து அருள் வெள்ளத்தை யளித்த விநாயகரும் ' அவரது பூஜையை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றனர்.

அச்சமயத்தில் தேவர்கள் யாவரும் ஒருங்கு சேர்ந்து கணபதியை நோக்கி " பிரபுவே! நாம் இந்தத் தெற்குக் கோபுர வாயிலில் அம்பாளுக்கு முன்பாக எழுந்தருளியிருந்து எங்களை இரக்ஷிக்கக் கோருகிறோம். ஆடிமாத சுக்கிலபக்ஷ சதுர்த்தியிலும் சுக்கிரவாரங்களிலும், மார்கழி மாதத்திலும் எவர் உம்மை சுப்பிரமணியருடன் பூஜிக்கின்றார்களோ அவர்களுடையகோரிக்கையை நிறைவேற்றும்படி பிரார்த்திக்கின்றோம் " என்று வணங்க, அப்படியே யாகட்டுமென்றனுக்கிரஹித்து பார்வதி பரமசிவன் இருவரையும் நமஸ்கரித்து, அவர்களின் உத்திரவையும் பெற்று தெற்குக் கோபுர வாசலில் தன் ஸ்தானத்தில் எழுந்தருளியிருந்தார்.

பின்பு விஷ்ணு முதலியோர்கள் விநாயகரை நமஸ்கரி



த்துக் கை கூப்பிக்கொண்டு " தேவாதி தேவனே! நாங்கள் கஜாசுரனுக்கு முன்பாக இதுகாறும் தோப்புக்கரணம் போட்டும் தலையிற் குட்டிக்கொண்டும் தேங்காய் முதலானவைகளை அவனுக்கு வழங்கியும் வந்தோம். அவ்வுபசாரங்களை இன்றுமுதல் தங்களுக்குச்செய்து வருகின்றோம் தேவரீரால் எங்களுக்குச் செய்துள்ள பெருமுபகாரத்தை என்றும் மறவாதிருக்கும் நாங்கள் செய்யும் இச்சிறிய உபசாரங்களைப் பெருமையாகப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். மேலும் இவ்விதம் தங்களுக்கு எமமனிதர்கள் செய்தாலும் அவர்களின் மனக்கோரிக்கையை நிறைவேற்றப் பிரார்த்திக்கின்றோம். அன்றியும் கைலாச சிகரத்தின் கோபுரவாசலில் எழுந்தருளியிருப்பதுபோல, கைலாயத்திற்கிணையானதும் சுபத்தையே தரத்தக்கதாயுமிருக்கின்ற இந்த க்ஷேத்திரத்தில் அம்பாளுக்கு முன்பாகத் தெற்குக் கோபுரவாயிலில் எழுந்தருளி எங்களை இரக்ஷிக்கவேண்டும் " எனப்பிரார்த்தித்தனர். கணபதியும் தேவர்களெல்லோருக்கும் வேண்டிய வரங்களைக் கொடுத்தனுப்பித் தாமும் எலாளகாம்பாளுக்குமுன்பாக எழுந்தருளினர்.

கணபதியின் உத்தரவைப் பெற்றுச்செல்லும் தேவர்களெல்லோரும், போகும்போது கஜாசுரனைக் கணபதி எவ்விதத்திலும் சங்கரித்து விடுவார். கணபதிக்கு முன் நின்று யுத்தம் செய்பவர் பூலோகத்தில் எவரிருக்கின்றனர் ?". என்று அவரைப் புகழ்ந்துகொண்டே சென்றனர்.

அன்றுமுதல் அவருக்கு ' கலங்காமற்காத்த விநாயகரென்று ' திருநாமம் வழங்கலாயிற்று. இச்சரித்திரத்தையெவர்கள் பக்தியுடன் கேட்கின்றார்களோ அவர்களுடைய எல்லாப் பாபங்களும் நிவிர்த்தியாகி அவர்களுக்கு ஸகல பலன்களும் ஸித்திக்கும். ஓ முனிவர்களே! ஸகல சுகங்களையும் கொடுக்கக்கூடிய இச்சரித்திரத்தை உங்களுக்குச் சொன்னேன். இதனைக் கேட்பவருக்கு சிறந்த புத்திரர்களையும், ஆயுசு ஐசுவரியங்களையும் கொடுத்துக் ' கலங்காமற்காத்த கணபதி ' இரக்ஷிப்பாரென்று சூதமகாமுனிவர் நைமிசாரண்ய வாசிகளுக்குச் சொல்லியருளினர்.

# மூன்றாவது அத்தியாயம்.

## கணபதி சுப்பிரமணியர்களுடைய திருவிளையாட்டுரைத்தது.

நைமிசாரண்ய வாசிகளான சௌனகர் முதலான முனிவர்கள் சூதரை நோக்கி "சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவரும், திரிபுர சங்காரியான பரமசிவனுடைய பாதாரவிந்தங்களில் பக்தியுடையவரும் சிரேஷ்டருமான ஓ பிரபுவே! உம்முடைய முகாரவிந்தத்திலிருந்து உண்டாகின்ற புண்ணிய சரித்திரமாகிற மதுவை எங்களுடைய காதுகளாகிய பாத்திரங்களால் பானம் செய்தும், இன்னும் பூரணமான திருப்தியை யடையவில்லை. ஆதலால் இப்பொழுது எங்களுக்குக் கணபதி சுப்பிரமணியருடைய பாலஸம்வாதத்தையும் அவர்களுடைய திருவிளையாடல்களையும் பற்றிச் சொல்லியருளும்படி பிரார்த்திக்கின்றோம். அவர்களுடைய விளையாடல்கள் ஸகலருடைய மனதையும் சந்தோஷப்படுத்தி வைக்குமானதால்கேட்க விரும்புகின்றோமென்று பிரார்த்திக்க அம்முனிவர்களை நோக்கி சூதமகாமுனிவர் மிகுந்த கிருபையுடன் சொல்லத் தொடங்கினார்.

"ஓ முனிவர்களே! நன்றாகக் கேட்டீர்கள். உலகங்களுக்கு நன்மையைக் கொடுப்பவரும், பாலரும், ஒருவருக்கொருவர் விவாதத்தையுடையவருமாகிய அவ்விருவருடைய பால விவாதங்களை நினைக்கும்பொழுது எனக்கு மிக்க மகிழ்ச்சியுண்டாகின்றது. உங்களுக்கு அதைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

முற்காலத்தில் இமயமலையில் பார்வதியைப் பரமசிவன் விவாகஞ்செய்துகொண்டு, காசியாரண்ணியத்தில் ஸதாகாலமும் புஷ்பங்கள் நிறைந்த அழகிய பூஞ்சோலையின் மத்தியில், பார்வதீ சமேதராய் பரமசிவன் ஆநந்தத்துடன் இருக்குங்காலத்தில் ஓர் நாள் ஏலாளகாம்பாள் தன் நாயகனை நோக்கி "ஜெகதீசா! குழந்



தைகளிருவரும் எவ்விடத்திலிருக்கின்றனர்? அவர்களைப் பார்த்து நெடுநாளாயின. இப்பொழுது அவர்களைப் பார்க்க வேண்டுமென்ற அவா உண்டாகியிருக்கின்றது. அவர்களை வரவழைக்க விரும்புகின்றேன்". என்று கேட்க, பரமசிவனும் அவளது இனியமொழிகளுக் கெதிர்மொழி சொல்லாது 'என தருமைத் தேவியே! அவர்கள் இச்சமயம் கைலாச சிகரத்திலுள்ள பூந்தோட்டத்தில் தேவர்களெல்லோரும் கொண்டாடும் படியாக விளையாடிக்கொண்டிருக்கின்றனர். உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்விக்குமாறு அவர்களை இங்கு இப்பொழுது வரவழைக்கின்றேன். அவர்களுடன்கூட இவ்விடத்தில் சுகமாயிருப்பாய்" என்று சொல்லிவிட்டு நந்திகேசுவரரைப் பார்த்து "அன்ப! குழந்தைகளாகிய கணபதி சுப்பிரமணியரிவர்கள் திருவிளையாடல்களைக் கண்டு மகிழ நாங்கள் விரும்புகின்றமையால் நீ சீக்கிரம் கைலாயஞ்சென்று அவர்களையுடனே அழைத்து வருவாய்" என வுரைப்ப, அவ்வுத்தரவைச் சிரமேற்கொண்டு நந்திகேசுவரர் கைலாய சிகரத்திற்குச்சென்று, உலகநாதர்களாயும், உலககர்த்தர்களாயும், ஸகல ஸத்குணங்களும் நிறைந்தவர்களாயும், குழந்தைகளாயும், இருக்கும் கணபதி சுப்பிரமணியர்களை வணங்கி, சிவபெருமானுத்தரவைத் தெரிவித்து, அவ்விருவர்களையும் இரதத்திலேற்றி வைத்துக்கொண்டு, வெகு சீக்கிரத்தில் காசியாரண்யம் வந்து சேர்ந்தார்.

குழந்தைகளும் மிக்க வாநந்தத்துடன் தம் பெற்றோர்களிடம் சென்று அவர்களை வணங்கி அவர்களது பாதங்களுக்கருகில் நின்றனர். தேவியும் பக்கலில் நின்றுகொண்டிருக்கும் குழந்தைகளைத் தூக்கி, இறுகக்கட்டி, மார்போடணைத்து, உச்சிமோந்து, முத்தமிட்டுப் பின்பு தேவரை நோக்கி 'ஓ ஜகதீசா! இக்குழந்தைகளைக் கண்டு வெகுகாலமாகி விட்டபடியால், இப்பொழுது இவர்களைக் கண்டவுடன் எனக்குண்டாகும் ஆநந்தத்திற்களவேயில்லை. எல்லாம் தேவரீரது அநுக்கிரகமேயாகும். குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்டானந்தியாதகாதுகளும் காதுகளாமா? என்னுடைய வருத்தங்கள்யாவும் இன்றொழிந்தன.

இனிக்கவலையில்லை " என்று சொல்லி அன்றமுதல், ஒரு க்ஷணப்பொழுதும் விட்டுநீங்காது, அவர்களுடனேகூடி விளையாடி அவர்களது மகிழ்ச்சியிலேயே தானும் மூழ்கிக் காலங்கழித்து வந்தனள்.

இவ்விதங் காலங்கடத்தி வருநாட்களில் ஓர் நாள் இவ்விரு குழந்தைகளும், சில ரிஷிபுத்திரர்களோடுகூடி, அருகாமையிலுள்ள ஓர் வனத்திற் புகுந்து பலவிதமாக விளையாடலாயினர். சிலர் யானைகளின் துதிக்கைகளைப் பிடித்திழுத்தனர். சிலர் சிங்கங்களின் முதுகின் மேலேறிச் சவாரி செய்யலாயினர். சிலர் மரங்களின் மேலேறிப் பக்ஷிகளைப் பிடித்து விளையாடினர். சிலர் அவர்களுக்குக் கனிகளைக் கொணர்ந்தூட்டினர். அவைகளை விடுத்துப்பின்னர்ப்பிடித்தனர். சிலர் மரக்கொம்புகளிலோடும் வானரங்களைத் தாவுந்தொழிலில் தோற்கடித்தனர். இவ்விதம் இச்சிறுவர்கள் விளையாடல்களால் காடுமுழுதும் குதூகலமாயிருந்தது. மரங்களிலும், புதர்களிலும், பதுங்கியிருக்கும் பக்ஷிகள், இவர்களிடும் பேரிரைச்சலைக்கண்டு நடுங்கி உயரப்பறந்தன. இக்குழந்தைகளின் தீரத்தைக்கண்டு திகிலடைந்த பல மிருகங்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டோடத்தலைப்பட்டன. சுருக்கிச் சொல்லப்புகின், அன்றையதினம் அக்காடு கொதிப்புண்ட ஓர் கடலையொத்ததென்னலாம்.

• இவ்விதம் நெடுநேரம் விளையாடிப்பின்பு, அவர்களனைவரும் ஆங்குள்ள அமிருத புஷ்கரணியிலிறங்குவராயினர். ஆங்கு அவர்கள் நீருள்மூழ்கிக் கிளம்புவதையும், போட்டிபோட்டுக் கொண்டு நீந்துதலையும், புஷ்பங்களைப் பறிக்க முன் செல்வதையும், தேவர்களறிந்து, அங்கு ஓடிவந்து அவர்களின் விளையாட்டில் தாங்களும் கலந்து கொண்டனர். சிலர் கணபதியையும், வேறுசிலர் சுப்பிரமணியரையும், கொண்டாடினர். விஷ்ணு முதலியோர், ஆகாயத்தில் நின்று கொண்டு இவ்விளையாடல்களை மிக்க ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர். இவ்விதம் சிலநேரம் நீரில் விளையாடின பிறகு பாலகரிருவரும் அவ்விடத்தை



விட்டகன்று தேவியின் முன்வந்து தம் மனம்போனபடி விளையாடலாயினர்.

ஸ்ரீ சுப்பிரமணியர் தம் தமையனாரை நோக்கி " அண்ணா! இதோ பார்த்தீர்களா? அறுபத்துமூன்றடிக்கோடு கிழித்திருக்கின்றேன். இதைத்தாண்டிவிடும் பார்ப்போமென்ன அதைக்கேட்டுக் கணபதி வஸ்திரத்தை இழுத்துக் கட்டிக்கொண்டு, மிகவும் வேகத்தோடு ஓடிவந்து பலமுறையும் தாவிக்குதித்தும், முடிவில் குறித்த விடத்திற்குத் தாண்டமுடியவில்லை. அவர் தாண்ட முயல்வதையும், கீழே விழுவதையும், பின்பெழுந்து விழிப்பதையும், பார்த்து அவரை ஏளனம்பண்ணி, முருகர் தன் குடுமியை நன்றாய் முடித்துக்கொண்டு, வேகமாய் ஓடிவந்து, குறிப்பிட்ட விடத்துக்கப்பால் தாண்டிக்குதித்து, எழுந்தோடி தன் தமையனிடம் வந்து " அண்ணா! தாங்கள் அடிக்கடி அம்மாளிடம் சென்று மோதகங்களை வாங்கிச்சாப்பிடுவதில் மட்டுமே மிக்க சமர்த்தரேயன்றி இத்தகைய விளையாடல்களில் என்னெதிரில் நிற்க உம்மாலியலுமா? " என்று பரிகாசமாய்ச் சொன்னார்.

இவ்விதம் தன் தம்பி ஏளனம் செய்வதைச் சிறிதேனும் பொறுக்கமுடியாமல் கணபதி தன் சகோதரனை நோக்கி " சுப்பிரமணியா! நீயே தாண்டுவதில் சமர்த்தனாயிரு. நான் மோதகஞ்சாப்பிடுவதில சாமர்த்தியமுள்ளவனாக விருந்தாற்போதும் " என்றார். இதைக்கேட்ட தேவர்கள் யாவரும் 'கொல்' என்று சிரித்தனர். அதன்மேல் அவர்களுக்குள் பின்கண்டபடி சம்பாஷணை நடந்தது. சுப்பிரமணியர் உம்முடைய துதிக்கை எவ்வளவு நீளமாயிருக்கின்றது?

கணபதி ' உனக்கு எவ்வளவு முகங்களப்பா? உன் கைகளை எண்ணமுடியவில்லையே. இவைகள் மிகவும் அழகாயிருக்கின்றது!'

சுப்பிரமணியர், " அண்ணா உம்முடைய வயிறு என்ன

ஓர் பெருப்பானை போலிருக்கின்றதே. ஓர்கொற்றதிர்கூட இதற்கிணையாகாது என்று எண்ணுகிறேன்." என்று அவரது திருவயிற்றைக் குத்திக் காண்பித்தார்.

கணபதி (மிக்க கோபத்துடன் அவருடைய கண்களை எண்ணிப்பார்த்து) உனக்கு எவ்வளவு கண்களடா?

சுப்பிரமணியர். "உங்கள் கண்கள் மட்டும் மிகவுமழகாயிருக்கின்றன. கிணறுகள் கூட இவ்வளவு ஆழமாயிருக்காவென்றெண்ணுகின்றேன். இவ்வளவழகிய கண்களை நான் கண்டதேயில்லை ' அஃதிருக்கட்டும் உங்கள் காதுகளுடைய அழகிற்குத்தான் என்ன சொல்வதென்று தெரியவில்லை. முறங்களும் விசிறிகளும் அவைகளுக்கிணையாகா.

கணபதி. உனக்கு இவ்வளவு கைகளேனோ? அதை மட்டும் சொல்பார்ப்போம்.

சுப்பிரமணியர். அண்ணா! உங்கள் காதில் எவ்வளவு பெரிய ஆழம் இருக்கிறது அண்ணா! என்று சொல்லி அவரது காதில் ஓங்கிக்குத்திவிட்டார். அவ்வலியைப்பொறுக்கமாட்டாமல் விக்னேசர் கூக்குரலிடவாரம்பித்தார். அவரிட்ட சத்தம் பேரிடி முழக்கம்போல உலகமுழுவதும் நிரம்பிற்று. இதனை அம்பாள்கேட்டு நடந்ததின்னதென்றறியாது அங்கு ஓடி வந்து பார்க்க மூத்தவனழுதுகொண்டும் இளையவன்சிரித்துக்கொண்டும் நின்றதைக்கண்டு உலகமாதாவும் கணபதியைப்பார்த்து சிறிது கலங்கி குழந்தாய்! ஏன் அழுகின்றாய் எனவினவினாள்.

விநாயகர். "அம்மா! எனது காதில் இவன் தன்உலக்கைபோன்ற கைகளால் குத்திவிட்டான்" என்றார். அம்பாள் (சுப்பிரமணியரை நோக்கி) ஏனடா அண்ணன் காதில் குத்தினாய்? என்று வினவ, அவர் அம்மா! என்மீதில்சிறிதும்குற்றமில்லை. அவர் மட்டும் என்கைகளை எண்ணிப்பார்த்து எவ்வளவு கைகளடா உனக்கு என்றேளனஞ் செய்யலாமோ என்றனர்.



TAMIL NADU ARCHIVES 4322

அதன்மேல் உமையாள் க[illegible]தியைப் பார்த்து நீ அப்படிச்செய்யலாமாவென்று குறிப்பா[illegible]க, அவரும் தாயே! ஒருவன் மற்றொருவன் கண்ணைக் குத்திக்கி[illegible] இதென்னடா கிணறு போலிருக்கிறது" என்று சொலவானு[illegible]ருக்க, வொண்ணுமா? அம்மா! நீங்கள்தான் சொல்லு[illegible] அது போகட்டும் என்று துதிக்கையைத்தூக்கி அதனுள் சிற்றெறும்புகளையெடுத்துவிடுத்தால்நான சும்மாவிருப்பேனோ? இவைகளெல்லாம் நியாயமா? என்றார்.

இவ்விதம் அவ்விருவரும் ஒருவர்மேலொருவர் கோட்சொல்ல, கடைசியாகக் குற்றஞ்செய்தவன் தன்னிளையகுமாரனேயெனவறிந்த அம்பாள் அவரை யடிப்பதாகக் கையோங்க அவர் ஓர் குகையைத்தேடி ஒளித்துக்கொண்டார். பின்னர் குழந்தைகள் மேலுள்ள வாஞ்சையினால் அவர்களைப்பின்பு ஒருங்கு கூட்டிச் சமாதானஞ்செய்து, பலவித பக்ஷணங்களையும் வஸ்திராபரணங்களையும் கொடுத்து அவர்களை நோக்கி "குழந்தைகளே! உலகத்திலுள்ள சாதுக்களுக்கனுக்கிரகம் செய்யும் பொருட்டு என் சன்னதியில் என் உத்தரவைத்தவறாமல் இருக்கவேண்டும். உங்களைத் தரிசிப்பவர்களுக்குச் சகல சம்பத்துமுண்டாகட்டும். அன்றியும் எவர் உங்களைக் கார்த்திகை மாதம் சுக்கில பக்ஷ சஷ்டியிலும், மார்கழிமாதச் சதுர்த்தியிலும், விதிமுறைப்படி பூஜிக்கின்றனரோ அவருக்குப் புத்திர பௌத்திர தனதானிய ஆயுள், இவைகள் விருத்தியாகட்டும்' என்று ஏலாளகாம்பாளனுக்கிரகம் செய்தருளினான்.

:0:

## நான்காம் அத்தியாயம்.

### ஐயனார், வீரபத்திரர்களின் சரித்திர முரைத்தது.

நைமிசாரண்ய வாசிகளான முனிவர்கள் யாவரும் சூத மகரிஷியை நோக்கி 'ஐயா! தாங்கள் எங்கள் மீது கருணைகாட்டி

இதுகாறும் சொல்லிவந்த கதைகள் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை விளைவித்தன. இனி, பாபங்களையும், துக்கங்களையும் நீக்கவல்ல ஐயனார், வீரபத்திரர் இவர்களின், புண்ணிய சரிதையையும், பார்வதியினுடைய விவாகத்தைப்பற்றியும், எங்களுக்கறிவிக்கப் பிரார்த்திக்கின்றோம்' என்று வணங்கிநிற்ப, அவர்களை நோக்கிச் சூதர் ஓ முனிபுங்கவர்களே! ஐயனார் வீரபத்திரர் இவர்களின் பிரதாபத்தைப்பற்றியும், பார்வதியினுடைய விவாகத்தைப்பற்றியும் ஸ்காந்தத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதை இந்த சுருக்கமாகச் சொல்லுகிறேன்". என்று மேலே சொல்லவாரம்பித்தார்.

பூர்வகாலத்தில் கைலாயத்திற் பார்வதி பந்தாடிய நிமித்தம், சிவபெருமானால் சபிக்கப்பெற்று, வாடியமுகத்துடன் ஈசுவரனின் சரீரத்தைவிட்டுப் பூலோகத்தில் காசிபாரண்யமென்ற க்ஷேத்திரத்திலுள்ள அமிர்த புஷ்கரணியிலவதரித்து, பிரம்மஸ்வரூபியும், வேதங்களாலறியப் பெறாதவரும், சுயம்புவாயிருப்பவருமான பரமசிவனை நாயகனாகவடைய வேண்டி அவரைக்குறித்து திருவிசாலை சுவர்ணமென்னுமிடத்தில் கடுந்தவம் புரிந்துவந்தாள்.

அப்பொழுது கைலாச பதியாகிய பரமசிவன் அம்பாளை விவாகம் செய்யத் திருவுளம் கொண்டிருக்கும்போது பராக்கிரமத்தையுடைய ஐயனார், வீரபத்திரரிருவரும்வந்து பரமசிவனை வணங்கி வேதங்களால் துதித்துப் பக்கங்களிற் கைகட்டி வாய்புதைத்து நின்றனர். சிவபெருமானவர்களை நோக்கி ஓ! புத்திரர்களே! "காசிபாரண்யமென்னும் ஸ்தலத்தில் அம்பிகை தவஞ்செய்து வருகின்றாள் நீங்களிருவரும் உங்கள் பரிவாரங்களுடன் அங்கு சென்று அவளுக்குப் பணிவிடைசெய்து, ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வாருங்கள்" என்று சொல்லி அனுப்பினர் அவ்வுத்திரவை சிரமேற்கொண்டு அவர்கள் அக்கணமே, திருவிசாலேஸ்வரம் வந்தடைந்து தவம் புரிந்து கொண்டிருக்குந் தேவியை நமஸ்கரித்து 'தாயே! கைலாயத்திலிருந்து சிவபெருமான்



உத்தரவின் பேரில் நாங்களிருவரும் தங்களுக்குப் பணிவிடை செய்ய வந்திருக்கின்றோம். இதோ இருக்கின்றவர் மகாப்பிரதாபத்தையுடைய ஐயனார். யான் வீரபத்திரன் என்போன்" என்று சொல்லி அஞ்சலிபந்தம் செய்து பக்கலில் ஒதுங்கி நின்றனர். அவர்களுடைய வசனத்தைக் கேட்டு, மலர்ந்த முகத்துடன் சிவபூஜையில் கருத்தைச் செலுத்தி வந்தவளான தேவி, மிக்கமிருதுவான பார்வையுடன் அவ்விருவரையும் பார்த்து 'சிவபெருமானது கோபத்தினால் பூமியிலடிக்கப்பட்ட அவரது சடையிலிருந்து உண்டான வீரபத்திரனே! முன்னொருகாலத்தில் தக்கனுடைய யாகத்தில் நீ சூரியனுடைய பற்களை யுதிர்த்ததும், தக்கனின் சிரத்தை யறுத்ததும், அக்கினியின் நாவைத்துணித்ததும், பிரம்மதேவனுடைய கன்னங்களிற் புடைத்ததும், தேவேந்திரனின் கண்களைக்குத்தியும், மற்றுமுள்ள தேவர்களைப் பலவிதமாக உபத்திரவித்ததும், இன்னும் பலவிதமாக என் நிமித்தம் செய்து விட்டாயெனச் சிவபெருமான் மூலமாயறிந்தேன். ஆதலால் என்னிடம் பணிவிடைசெய்ய நீ மிகவும் அருகனே அவ்வண்ணமே நீயும் செய்துவருவாய் " என வுத்தரவிட்டுப் பின்னும் ஐயனாரை நோக்கி 'குழந்தாய்! உன் வரலாற்றை துர்வாசமுனிவர் முன்னொரு தடவை சொல்லக்கேட்டிருக்கின்றேன். பூர்வ காலத்தில் விருகாசுரன் என்றொருவன் கடுந்தவம் புரிந்து 'எவர் தலையில் அவன் கையை வைத்தாலும் அவர்கள் அக்கணமே எரிந்துவிடுவர்'' என்ற ஓர் அரியசக்தியையும் பரமசிவனிடமிருந்து பெற்றனன். அவன் அதனுடன் நிற்காது தனக்கு வரமளித்த தயாளுவினிடமே தன் சக்தியைக்காட்ட முயல, பக்தப்பிரியரான பரமேசன் "ஐவிரலிக்காயில்" மறைந்து தன்மைத்துனராகிய விஷ்ணுவை நினைக்க அவர் அவ்விடம் தோன்றினர். வந்ததும் ஈசுவரன் அவரை நோக்கி "நாராயணா! நீர் உடனே மோகினி வடிவுடன் தோன்றி விருகாசுரனை மோகிக்கச்செய்து அவனை யெவ்விதத்தாலாவது மரணத்தை யடையும்படி செய்வீர்" என்ன அவரும் உலகம் மயங்கும்படியாக ஓர் ஸ்திரீ ரூபத்தை யெடுத்தனர்.

விருகாசுரன் அம்மாயப் பெண்ணைக் கண்டதும் மிகக்

கலங்கி, மதிமயங்கி, அவனது மாயைகளுக்கட்பட்டு, ஒன்றுந் தோன்றாமல், அவளை நோக்கி "பெண்மணியே! நீ யார்? உன்னைக் கண்டது முதல் என் மனம் உன்னிடமேயன்றி வேறெங்குஞ் செல்லவில்லை. நீ மட்டும் எனக்கு உடன்படுவையேல், உன்மனஞ்சிறிதுஞ் சோராமல் நடந்துகொள்வேன். அதைப்பற்றிச்சிறிதுஞ் சமுசயப்படவேண்டாம். மேலும் உலகங்களிலுள்ள எவரையும் உனக்கு பணிவிடை செய்யச்சொல்லுகிறேன். என்னைப்போன்ற புருஷன் உனக்குக் கிடைப்பதரிது. என்னுடைய கையினால் எவனது சிரசைத் தொடுகின்றேனோ அவன் அச்சமயமே சாம்பலாகிவிடுவான். இத்தகைய சக்தி எவனுக்குண்டு ஆகையால், நான் சொல்வதைக்கேள். வேறெங்குஞ் செல்லாதே. என்னையே மணந்துகொள்" என்றிரங்கிநிற்க, அப்போது மோகினி புன்னகையுடன் "விருகாசுரனே! உம் அபாரசக்தியனைத்தும் தெரிந்துகொண்டே நான் இவ்விடம் வந்தேன். ஆனால், நீர் இத்தடாகத்திற்சென்று நியமத்துடன் ஸ்நானஞ்செய்து விபூதிசந்தனமுடன் பிரணவத்தை ஜபம்பண்ணிவிட்டு வந்தால், உம் கோரிக்கையைத் தடையின்றிச் செய்வேன்" என்றனள்.

அவளது மதுரமான மொழிகளைக்கேட்டு மதிமயங்கிக் கிடந்த அவ்வசுரன் அப்படியே மூழ்கிவிட்டுப் பிராணயாமஞ் செய்யவேண்டியதற்காக தன் கையைத் தன் தலையின்மேல் வைக்க ஈசனது வர மகிமையால் சாம்பராகிவிட்டான். அன்று முதல் அவனுக்குப் பஸ்மாசுரன் என்ற காரணப்பெயர் வழங்கிவருகின்றது. அவ்வசுரனின் உயிரும் சிவனடியையடைந்தது. அத்தருணத்தில் ஹரிஹரருக்குப் புத்திரனாகப் பிறந்தமையால் உனக்கு 'ஹரிஹரபுத்திரனென்று' திருநாமம் வழங்கிவருகின்றது. ஆதலால் எனக்குப் பணிவிடைசெய்ய மிக்க யோக்கியனாயிருக்கின்றமையால் இவ்விடத்திலேயே யிருந்துகொண்டு எனக்குதவி புரிந்து வருவாய் என்று கட்டளையிட்டனள்.

இவ்விதம் இட்ட உத்தரவுகளை சிரமேற்கொண்டு அவ்விருவர்களும் தங்கள் பரிவாரங்களுடன் அந்த வனத்திலேயே



தங்கியிருந்து அம்பாளுக்குப் பணிவிடைகள் செய்வதில் சிறிதும் சலிப்பின்றியிருந்தனர். அன்றியும் ஸ்ரீ ஆபத்சகாயேசுவரருடைய ஆலயம், கோபுரம் இவைகளை நன்றாகக் கட்டிவைத்து, மிகவும் ஜாக்கிரதையாக அவைகளைப் பாதுகாத்து வந்தார்கள். அச்சமயம் கோரதவம் புரிந்துகொண்டிருக்கும் தேவியின் முன்பாக ஸ்ரீ பரமேசுவரன் ஒரு கிழப்பிராமண வேடந்தரித்துத்தோன்றி, அவளுடன் சில வார்த்தைகளாடி, பின்பு அவளறியாவண்ணமே சென்று மறைந்து, உடனே ரிஷபாரூடராய்த் தோன்றி அம்பாளை விவாகஞ்செய்துகொண்டு அங்கே சுகமாய் எழுந்தருளியிருந்தார்கள்.

அத்தருணத்தில் தேவியானவள் ஐயனை நோக்கி "என்னருமைப்புத்திரனே! நீ வீரபத்திரனோடு சேர்ந்துகொண்டு கலியாணத்திற்கு வந்திருக்கும் விஷ்ணு முதலாகிய தேவர்களுக்குத் தக்க மரியாதைகளைச் செய்துவிட்டு என் சன்னிதானத்தில் கல்யாண சாஸ்தா வென்றும் கல்யாண வீரபத்திரனென்றும் திருநாமங்களை வகித்துக்கொண்டு இருந்துவாருங்கள்" என்று சொல்ல, அவர்களும் அவ்விதமே விருந்தினருக்குபசாரஞ் செய்து அனுப்பிவிட்டு தங்களிடங்களில் அமர்ந்தனர்.

ஆகையால், ஓ ரிஷிகளே! இக்கல்யாண சாஸ்தாவையும், கல்யாண வீரபத்ரரையும், எவர்கள் பக்தியுடன் பூஜிக்கின்றார்களோ அவர்களின் மனோபீஷ்டங்கள் யாவும் அவர்களது திருவருளால் நிறைவேறும். அவர்களின் தரிசனத்தால் மானிடர்கள் தங்கள் பாபங்களனைத்தும் நீக்கப்பெற்றவராய் நித்ய கல்யாணத்தை பெறுவார்கள். மேலும் மகாமேருவை வில்லாகக்கொண்ட பரமசிவனின் கல்யாண சரித்திரத்தைப் படிப்பவர்களும், கேட்பவர்களும், தானஞ்செய்பவர்களும், சகல போகங்களுடனும் ஈசனின் திருவருளால் இரக்ஷிக்கப்படுவர்" என்று சூதமாமுனிவர் நைமிசாரண்ய வாசிகளுக்குக்கூறினர்.


# ஐந்தாவது அத்தியாயம்.

## சுந்தரமூர்த்திநாயனாருக்கு சிவபிரான் ஓடம்விட்டது.

சூதர் பின்னும் சொல்லுகின்றார் :— "முனிசிரேஷ்டர்களே! இப்பொழுது உங்களுக்கு, சுந்தரமூர்த்திநாயனாரின் வரவையும், அவரைச் சிவபெருமான் நதியினின்றும் கரையேற்றிய விவரத்தையும்பற்றிச் சொல்லுகின்றேன். கேளுங்கள். மகா ஆச்சரியமான அச்சரித்திரத்தை நினைக்கும்பொழுதே எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியுண்டாகின்றது.

பூர்வகாலத்தில் சங்கரதாசரென்ற சுந்தரமூர்த்தியானவர் கைலாசத்திலிருந்து பூமியில் ஓர் ஆதி சைவகுலத்திலவதரித்தாரென்டதை நீங்களறிவீர்கள். ஞானத்திற் சிறந்தவரும், தயாசமுத்திரமுமாகிய அவர் தம்மெய்யடியார் பலருடன் சிவக்ஷேத்திரங்கள்தோறுஞ் சென்று சிவபதிகங்களால் சிவபிரானைத் துதித்துக் கொண்டே வந்தார். இதற்கிடையிற்றானே அவர், முதலையால் விழுங்கப்பட்ட ஓர் பிராமணஸ்திரீயின் பிள்ளையை தயவாய் அம்முதலையின் வாயினின்றே உமிழும்படி செய்வித்து அஸ்திரீயின் மனக்கவலையைத் தீர்த்தனர். இவ்விதம் சிவகைங்கரியங்களையே செய்துகொண்டு, காலங்கழித்துவரும் நாட்களில் ஓர் நாள் அவருக்கு உத்தம க்ஷேத்திரங்களிலொன்றாகிய காசியாரண்யக்ஷேத்திரத்தில் விளங்கும் சற்குருவான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியையும், உலகத்திற்குண்டாகும் ஆபத்தை நிவர்த்திசெய்ததாலுண்டாகிய ஆபத்சகாயரென்னும் திருநாமத்துடன் விளங்குகின்றஏலாளகாம்பாள் சமேதரான சிவபெருமானையும், தரிசிக்க உத்தேசித்து மிக்கபக்தியுடனும், ஆநந்தத்துடனும் காசியாரண்யக்ஷேத்திரத்தை நோக்கிக் கிளம்பினார், வரும்வழியில் அகஸ்தியகாவிரியாகிய வெட்டாறு மிகுந்த பிரவாசத்துடனும், வேகத்துடனும் செல்வதைப்பார்த்து, ஒன்றுந்தோன்றாமல், சிவபெருமானைக்குறித்துப் பல பாடல்கள்பாடிக்கொண்டு ஓடக்காரனைத்

20A



தேடி நிற்க, அத்தருணத்தில் அவைகளைக்கேட்டு அடியார்களை இரக்ஷிக்குந் தொழிலையே மேற்கொண்ட சிவபிரான் அவர்களைக் கரையேற்ற வெண்ணங்கொண்டு, தலையில் மயிற்றோகையினால் அலங்கரிக்கப்பட்டு வண்டுகள்போலக் கறுத்தபின்னல் உடையவராயும், தமாலம்போன்ற கறுத்த திருமேனியையுடையவராயும், காதுகளில் சங்கு குண்டலங்களையணிந்தவராயும், செவ்வசத்தை போன்ற சிவந்த வஸ்திரத்தையணிந்தவராயும், கழுத்தில் முத்துமாலைகளைத் தரித்தவராயும், அழகிய சமுத்திரத்திலுண்டான பூர்ணசந்திரனைப்பழித்த திருமுகத்தையுடையவராயும், தோன்றி இவ்வித அலங்காரங்களோடு கூடிய வேட.ரூபத்துடன் சுந்தரமூர்த்தி முதலான அடியார்களை நோக்கிச் சொல்லுகின்றார்.

“பிரர்மணோத்தமர்களே! நான் ஓர் ஓடந்தள்ளுவோன் இந்த ஆறோ என்றுமில்லாதவாறு இன்று மிகுந்த பிரவாகத்துடனும், வேகத்துடனுஞ் செல்லுகின்றது நீங்களும் பெருங் கூட்டமாகவிருக்கிறீர்கள். உங்களைப்பார்த்தால் மிகுந்த பயத்தையடைந்திருக்கிறீர்களென்பது வெளியாகின்றது. நீங்கள் சிறிதேனும் பயப்படவேண்டாம். நான் ஒருவனாகவே என் கைவல்லமையால் உங்களை அக்கரையிற்கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன்” என்று சொல்ல அவ்வோடக்காரனைப்பார்த்துச் சிவபெருமானிடம் மிக்க அன்புகொண்ட சுந்தரமூர்த்தி ஓ நாவிகனே உன் வரவு நல்வரவாகுக! உனக்கு மங்களமுண்டாகட்டும். எங்களை எவ்விதத்தாலாவது அக்கரையிற் சேர்த்துவிடு. உனக்கு என்ன கொடுக்கவேண்டுமோ அதைச்சொல் தருகிறோம்” என,

அப்போவிநாவிகன் தன் நீண்ட பற்றுக்கோலைப் பிடித்துக்கொண்டு அவர்களை நோக்கி “அன்பர்களே! நான் இவ்வோடந்தள்ளுவதாற் சம்பாதிக்கும் பொருளில் என் வயிற்றுக்கு மாத்திரம் வேண்டியதை யெடுத்துக்கொண்டு, மீதியை காசியாரண்ய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கடவுளுக்குக்கொடுத்துவிட்டு இந்தக்கரையிலுள்ள பூந்தோட்டத்தை விருத்திபண்ணிக்கொண்டு காலந்தள்ளிவருகின்றேன். இத்தோட்ட

த்தில் புஷ்பிக்கும் பூக்களை சிவனடியார்கள் வந்து எடுத்துப்போய் காசியாரணியேசுவரருக்கு அருச்சிப்பது வழக்கம்" எனமொழிந்தான்.

அம்மொழிகளைக்கேட்ட, சிவபக்தியிற் சிறந்த சுந்தரமூர்த்தி, அச்சிவபிரானை அவ்விடத்திலேயே சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, அவரைப் பலவாறு துதிசெய்து, மிகுந்த சந்தோஷமனதுடன் அவ்வோடக்காரனிடம் ஆயிர வராகன் பணம் கொடுத்தார். அவ்வோடக்காரனும் அதனைப்பெற்றுக் கொண்டு இது சிவபெருமானுக்கென்றோரிடத்தில் அதைவைத்து விட்டு அவர்களை நோக்கி "ஐய! நீங்கள் சிலர்களுடன் இங்கேயேநின்றுகொண்டிருங்கள், சீஷர்கள் முதலான மற்றவர்கள் என் ஓடத்தில் ஏறிக்கொள்ளட்டும். இவர்களைக் கொண்டக் கரைசேர்த்துப் பின்னும் உங்களை யழைத்துச் செல்லுகின்றேன்" என்று சொல்ல அப்படியே அவர்கள் அவ்வோடத்தில் ஏறிக்கொண்டார்கள்.

அவனும் தன் பற்றுக்கோலால் அவ்வோடத்தை மிக வேகமாகத் தள்ளிச் சென்று தென்கரையில் அவர்களைச் சேர்த்துவிட்டுத் திரும்பி சுந்தரமூர்த்தியிடம் வந்து அவரை நோக்கி "ஓ சுந்தரரே! என் திறமையைக்கண்டு சம்மானங் கொடுக்க வேண்டுமெனக் கேட்க, சுந்தரரும் அவனது வல்லமையைக்கண்டு மகிழ்ந்து, இவை சிவனுக்குப் பிரீதியாகட்டுமென்று இரண்டு பீதாம்பரங்களை யெடுத்து அவனிடத்தில் கொடுத்து தன் அடியார்களுடன் தோணியிலேறினர்.

ஓடக்காரன் அப்பீதாம்பரங்களை தன் பற்றுக்கோலால் வாங்கி ஓர் மரப்பொந்தில வைத்துவிட்டு, முன்னொருகாலத்தில் எவ்விதம் சிவபிரான் சம்பந்தமூர்த்திக்காக ஓடம் விடுத்தனரோ அவ்வண்ணமே, அதிவேகமாய் ஓடத்தைத் தள்ளிக்கொண்டுவந்தார். அவ்வோடக்காரன் ஆற்றுமத்தியில் வரும்பொழுது அவ்விடத்தில் ஓர் சுழலுண்டாகும்படி செய்து அதில் ஓடத்தைத் தள்ளி, தன் பற்றுக்கோலையும் நழுவவிட்டு, அதை யெடுப்பவன்



போல தடுமாறித் தண்ணீரில்மூழ்கி அடிக்கடி ஜலத்தைக் குடித்து, பிரவாகத்தாலிழுக்கப்பட்டு ஆற்றுடன் சென்றுவிட்டார். அச்சமயத்தில் மறுகரையிலிருந்து யாவரும் பார்த்து "ஆ! ஆ! ஆ!" என்று கதறினர்கள். சுந்தரமூர்த்தியும் மூழ்கித்தத்தளிக்கும் ஓடக்காரனைக்கண்டு மனம்புழுங்கி, சகல ஆபத்தையும் நிவர்த்திக்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியைக்குறித்து தியானித்தனர். இதற்குள்ளாக ஓடமும் ஆற்றின் வழியே இரண்டு நாழிகை வழிதூரத்திற்கப்பாலுள்ள திருக்கொளம்புதூர் என்னும் ஊரினருகிற்சென்றுவிட்டது.

சுந்தரமூர்த்திசுவாமிகள் மிகக்கலங்கிய மனத்துடன் ஆங்கெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வில்வாரண்ணியேசுவரரைப் பிரார்த்திக்க, பக்தர்களிடத்தில் மிக்க பிரியமான வில்வாரண்ணியேசுவரர் பிரத்தியக்ஷமாகி, நதிக்கு மேற்புறத்தில் எழுந்தருளி, சுந்தரரை நோக்கி "ஓ சுந்தரரே! பயப்படாதீர்! முன்னொருகாலத்தில் எவ்விதம் சம்பந்தமூர்த்தியை ஓடத்திலிருந்து கரையேற்றினேமோ அவ்வண்ணமே உம்மையும் இரக்ஷிப்போம்' என்று திருவாய்மலர்ந்தருளி லிங்கத்திலுள் மறைந்துவிட்டனர்.

அவ்வற்புதத்தைச் சுந்தரர் முதலிய யாவரும் பார்த்து! மிக்கவாச்சரியமடைந்து "ஏ ஜகந்நாத! ஸர்வலோகசரண்ய! ஆபத்பாந்தவா! சமுசாரமாகிய சாகரத்தில் மூழ்கித்தவிப்பவருக்குக் கைகொடுத்துக்காக்கும் கருணாநிதியே! நதியின் வேகத்தால் இழுக்கப்பட்டு இன்னலையடையும் எங்களை ஆதரிப்பதின் பாரம்" உம்மது என்றுஈசனிடத்தில் முழுப்பாரத்தையும் போட்டு நின்றனர். இதற்குள்ளாக படகும் வெகுதூரஞ்சென்றுவிட்டது. ஓடக்காரனும் அவ்வோடத்திற்கு சற்றப்பால் மூழ்கிக்கொண்டும், தத்தளித்துக்கொண்டும், சென்றான். முனிவர்களே! இவ்விதம் தன் உயிரையிழக்கும் தருவாயிலிருந்த அங்காவிகனைக்கண்டு அனைவரும் துயருற்றுக்கொண்டிருக்கும்பொழுது, அந்த ஓடமும் ஓர் சுழலுள் அகப்பட்டுக்கொண்டது.

அச்சமயத்தில் சுந்தரர் முதலியோர் இன்னது செய்வதென்றறியாமல் ஈசனைக் குறித்து "மகாதேவா! இந்த ஆபத்தினின்றும் எங்களை இரக்ஷியும், காப்பாற்றும்." என்று கதறினார்கள். அதைக்கேட்டு சிவபிரான் மனமிரங்கி, அங்கு பிரத்தியக்ஷமாகி "அன்பர்களே! பயப்படாதீர்கள். ஓடத்தை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்ல சுந்தரர் அவரது திருவாக்கைக்கேட்டுச் சற்று தேறுதலடைந்து ஸர்வபிராணிகளுக்குங் கர்த்தனாயிருப்பவரே! ஜபிப்பதனாலேயே எவ்வித ஆபத்தும் விலகிப்போகும்படியான சக்திபெற்ற திருநாமம் அமைந்தவரே! கர்த்தரே! நாங்கள் நட்டாற்றில் தவிக்கும்பொழுது எங்களுக்குக் கைகொடுத்து இரக்ஷிக்கலாகாதா? சிறியோர்களாகிய நாங்கள் எவ்வித பிழைகள் செய்திருப்பினும் அவைகளை பொறுத்து காப்பாற்றவேண்டும்." என்று பிரார்த்தித்தும், சிவபெருமான் ஓர் திருவிளையாட்டையுத்தேசித்து அச்சமயத்திலும் மறைந்துவிட்டனர். அத்தருணத்திலடியார்கள் ஓடத்தைக்கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்கள். (அது முதற்கொண்டு அந்த க்ஷேத்திரத்திற்கு அமிழ்ந்தீசுவரம் என்னும் நாமம் வழங்கிவருகின்றது.) ஓடக்காரனும் ஆற்றில் மூழ்கிக்கொண்டே போயினன். சிறிது நேரத்திற்குள் ஓடமானது திடீரென்று ஓர் பாறையின்மீது மோதிச் சிதறுண்டுபோக அங்கிருந்தவர்கள் யாவரும் மிகக்கலக்கத்துடன் "ஈசுவரா! இத்தருணத்தில் காப்பாற்றவேண்டும்" என்று கதறினார்கள். இதனைக்கண்டு ஓடக்காரனும் நீங்களும் என்னைப்போலானீர்களா என்றுரைத்தான்.

அச்சமயத்திலும் சந்திரனைச்சிரசில் வகித்திருப்பவரும் உலகத்திற்குச் சுகத்தையளிப்பவருமான பரமசிவன் அவர்கள் முன்தோன்றி "அன்பர்காள்! அஞ்சல் வேண்டாம்" எனவுரைப்ப, ஓடத்தின் சிதறுண்ட பலகைகளைப் பிடித்துக்கொண்டு உயிருக்கு வாதாடும் அச்சுந்தரர் முதலியோர் ஈசனைநோக்கி "தேவாதிதேவனே! எங்களை எப்பொழுது காப்பாற்றப்போகிறீர்கள்! எங்கள் பிராணனுக்கே ஹானிவரும்போல் தோற்றுகின்றதே! நாங்கள் அவஸ்தைப்படுவதைத் தாம் விளையாட்டாகக் கருதல்



கூடாது. இரக்ஷிக்கவேண்டும். காப்பாற்றவேண்டும் என்று கதறிக்கொண்டிருக்கும்போதே, ஈசன் முன்போல மறைந்துவிட்டனர் (அதுமுதல் அந்த க்ஷேத்திரத்திற்குத் (தோணிபுரம்) கப்பலுடையான் என்னும் நாமம் வழங்கிவருகின்றது.)

இதற்குள்ளாக சுந்தரர் முதலான அடியார்களும், ஓடக்காரனும் ஆற்றின் வேகத்தால் வெகுதூரம் இழுக்கப்பட்டுச் சென்றனர். ஓடக்காரன் ஓர் பெருஞ்சுழலில் அகப்பட்டுக்கொண்டு தன் பற்றுக்கோலுடன் தானும் சுழன்றான். சுந்தரரும் ஓர் சுழலினூடே அகப்பட்டுக்கொண்டு திகைத்தார். அத்தருணத்தில் அவர்களிருந்தவிடத்திற்குச் சற்று மேற்றில் சகல தேவதைகளுக்கும் பிதாவாக விளங்கும் மகேசுவரர், நந்தி, பிருங்கி முதலிய பிரமதகணங்களுடன் விருஷபாரூடராய்த் தோன்ற, பார்வதீபதியான அவ்வீசுவரனை அடியார்களனைவருங் கண்டு, பெருமகிழ்வுகொண்டு, அடியார்களின் ஆபத்துக்களை நிவிர்த்திசெய்வதையே கருத்திற்கொண்டிருக்கும் கருணாகரா! பயங்கரமான ஓர் சுழலினூடே அகப்பட்டுக்கொண்டு, உயிர்கண்டத்திலேற, வேறு வழியில்லாமையால் நீரைக்கணக்கின்றிக்குடித்து, வயிறு பெருத்து, இறப்பதையேயன்றி வேறு வழியையறியாத எளியோர்களை இரக்ஷிக்கவேண்டும்" என்று வாய்நீர் கொப்பளித்து கீழ்நீரோடு கலக்கத், தள்ளாடித்தள்ளாடிப் பிரார்த்திக்கும்பொழுது, கிருபாசமுத்திரராகிய ஆண்டவன் தனது நீளமான கைகளை நீட்டினர். அவர்கள் யாவரும் மிக்கபரபரப்புடன் அக்கைகளைப்பிடித்துக் கொள்ள, ஈசனும் அவர்களை மெதுவாகக் கரையேற்றினர். அதுமுதற்கொண்டு அந்த க்ஷேத்திரத்திற்குக் கைப்பத்தூர் என்னும் திருநாமம் வழங்கிவரலாயிற்று.

இவ்விதம் ஜலப்பிரவாகத்தால் துன்பத்தையடைந்த சுந்தரர் முதலிய அடியார்களுக்கு அமிர்தம்போன்ற தன் திருவாக்கினால் ஆறுதல்கூறி, சகல தேவர்களாலும், முனிவர்களாலும், சித்தர்களாலும் துதிக்கப்பெறுபவரும், தன் செல்விய நகத்தின் நுனியாற்செய்யும் வீணைகானத்தால் அவர்களையுண்பிக்கச் செய

பவரான நாரதமஹரிஷியினுடைய ஸ்தோத்திரங்களிற் பிரியமுடையவருமான ஜகதீசன் மறைந்தருளினர்" என்று சூதமகா முனிவருரைத்தனர்.

## ஆறாவது அத்தியாயம்.

### சுந்தரமூர்த்திக்கு சிவபெருமான் முக்தியடைய வரங்கொடுத்தது.

இந்திரன் முதலிய திக்குபாலர்களாலும், ரிஷிகளாலும் ஸ்துதிக்கப் பெற்றவரும், அஷ்டமூர்த்தியா யிருப்பவருமான சிவபெருமானைச் சந்தோஷத்தால் பூரித்த மனத்தோடு அடியார்களுடன் சுந்தரமூர்த்தி துதிசெய்கின்றார்.

"தேவாதிதேவா! உலகங்களுக்குண்டாகும் துன்பத்தை நிவிர்த்தி செய்பவரே! ஏக மூர்த்தியாய் விளங்குபவரே! நித்தியானந்த புருஷா! அனாதியே! ஸர்வோத்தமா! உலகத்துக்கெல்லாம் ஒரே மூர்த்தியாயும், ஸகலருக்கும் ஜேஷ்டராயும், எல்லாவற்றையும் துறந்தவராயும், எங்கும் நிறைந்தவராயும், பிரபுவாயுமிருக்கின்ற தேவே! உம்மைப்பலகாலும் நமஸ்கரிக்கின்றேன். அருள்புரியவேண்டும்." என்றார்.

இவ்விதம் துதிக்கும் சுந்தரரை நோக்கி, மிகக்கிருபை கூர்ந்து "அன்பனே! உன்பேரன்பில் மிகத்திருவுளங்கொண்டோம். உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள். அவ்வண்ணமே அநுக்ரகிக்கின்றோம்." என்று பரமசிவன் திருவாய் மலர்ந்தருளினர். அவ்வசனத்தைக்கேட்டு அடியார்களுள் உத்தமரான சுந்தரமூர்த்தி பரமபுருஷனான ஈசுவரனை ஆயிரந்தடவை நமஸ்கரித்து, "திருவுளம்புரிந்து எல்லோராலும் விரும்பப்படும் மோக்ஷத்தை யெனக்கருளவேண்டும்." எனப்பிரார்த்திக்க, பார்வதீசமேதரும், புன்சிரிப்புள்ள முகார



விந்தத்தையுடையவரும், சிரசில் சந்திரனை தரித்துக்கொண்டிருப்பவரும், மிகுந்த கிருபையுடையவருமான சிவபெருமான் சொல்லலுற்றார். "எனது பக்தனும், பிரியனுமான ஏ சுந்தரா! உலகங்களுக்கு மிகுந்த ஆபத்தையுண்டுபண்ணி நாசத்தை விளைவிக்கும் காளகூட விஷத்தைப் புசித்து அவ்வுலகினுக்கு நன்மையையே செய்யும் நாம் வாசஞ்செய்வதும், மகாபரிசுத்தமானதுமான **காசியாரணியம்** என்ற திவ்யக்ஷேத்திரமொன்றுண்டு. அதனில் ஜெயத்தோடு விளங்குகின்ற ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை விஷ்ணு முதலான தேவதைகள் முற்காலத்தில் பூஜைசெய்து அவரவர்களுடைய இஷ்ட சித்திகளைப் பெற்றுச் சென்றிருக்கின்றனர். ஆகையால், அத்தகைய மகிமைபெற்ற அந்த க்ஷேத்திரத்தை நீயும் அடைந்து என்னைப் பூஜித்து முன்னர் பிரமதேவனாலுண்டு பண்ணப்பட்டு சமாதி முதலிய குணங்களுடன் பிரமஞானத்தையளிக்கும் **பிரமதீர்த்தத்திலும்**, சிவஞானத்தைக் கொடுக்கக்கூடிய **ஞானகூபம்** என்னும் தீர்த்தத்திலும், நித்தியா நித்தியத்தையறியக்கூடிய ஞானத்தையும் பின்பு மோக்ஷத்தையும் கொடுக்கக்கூடிய **அமிர்தபுஷ்கரணி** யென்னும் புண்ணிய தீர்த்தத்திலும், தினந்தோறும் ஸ்நானம் செய்து, நம்மை அன்புடன் மூன்று வருஷகாலம் பூஜித்து வந்தால், ஸாதன சதுட்டயங்களை யடைந்திருக்கும் உனக்கு தாரகமாகின்ற மோக்ஷத்தைக் கொடுக்கின்றோம்." என்றனுக்கிரகம் செய்து தக்ஷிணமுகத்தில் மறைந்தருளினர். (அன்றுமுதல் அந்த க்ஷேத்திரத்திற்கு **நிலீனபரம்** என்ற பெயர் வழங்கிவருகின்றது.)

அச்சமயத்தில் சுந்தரர் முதலியோர், பார்வதிகாந்தனான சிவபெருமான் தன் உமையுடனும் கணங்களுடனும் எப்பக்கமாக மறைந்தனரோ அதற்கு நிருதி மூலையிலிருக்கும் **நிலீனேசுவரரைப்** பலவிதமாக ஸ்தோத்திரஞ் செய்தனர். பின்பு சிவனடியார்களுடன் சுந்தரமூர்த்தி, தக்ஷிணாமூர்த்தி க்ஷேத்திரமாகிய அக்காசியாரண்ய க்ஷேத்திரத்தை நோக்கிப் பிரயாணப்பட்டனர். சகலமுந் தெரிந்த முனிவர்களே! பரமசிவபக்தரான சுந்தரமூர்த்தியின் பொருட்டு ஆச்சரியமான இத்திருவிளை

யாடலைச் செய்துவிட்டு, செந்தாமரைக்கண்ணனால் பூஜிக்கப்பட்ட சிவபெருமான் பார்வதியுடன் மிகுந்த சந்தோஷத்தோடு காசியாரணியத்திலெழுந்தருளியிருந்தார்.

# ஏழாவது அத்தியாயம்.

## சுந்தரமூர்த்திக்கு சிவபெருமான் பிரத்தியக்ஷமானது.

" ஓ சௌனகாதிருஷிகளே! இப்பொழுது உங்களுக்குச் சுந்தரரின் சரித்திரத்தைச் சொல்லுகின்றேன் கேளுங்கள்.

முற்கூறியபடி பரமசிவன் திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். சுந்தரர் முதலான அடியார்கள் கைப்பத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற அஸ்தாவலம்பேசுவரரை வாசனை பொருந்திய மல்லிகை தாமரைபுஷ்பங்களாலும், நன்றாகப் பூஜித்துவிட்டு ஸந்நிதானத்தில் நின்றுகொண்டு பார்வதீசமேதரும், பிரம்மசொரூபரும், நித்யரானவருமான சிவபெருமானை அநேக விதமாக ஸ்தோத்தரித்துவிட்டுப், பிறகு ஓடம் உடைந்துபோனவிடத்திற்கு மேற்புறத்திலிருக்கின்ற நாவபக்கினேசுவரர் என்னும் ஈசனை சகல உபசாரங்களோடும் பூஜித்துப் பின்பு ஓடம் மூழ்கினவிடம் வந்து ஆங்கு நிமஜ்ஜனேசுவரனைப் பூஜித்து, அவ்விடத்தை விட்டுப்புறப்பட்டு, மூர்த்தி சம்பந்தர் அனுக்கிரகம் பெற்ற திருக்கொளம்புதூர் வந்து, முன்னொருகாலத்தில் சத்தியோசாத மூர்த்தியான பரமசிவனைப் பார்வதியுடன் துதி செய்து அர்ஜுனனுக்கு அனுக்கிரகம் புரிந்து அஸ்திரங் கொடுத்து இரட்சித்தவரும், உலகங்களாற் சேவிக்கப்பெற்றவருமான சிவபெருமானை அருச்சனை முதலியவைகளாற் பூஜித்துத்தோத்திரஞ்செய்து நின்றனர்.



அச்சமயம் பரமசிவன் அவர் முன்றோன்றி அவரைப் பார்த்து " ஏ சுந்தரா! இதற்கு மேற்காகவுள்ளதும், எனக்குப் பிரியமானதுமான காசியாரணிய க்ஷேத்திரத்திற்குச் சீக்கிரஞ் சென்று மகேசுவரரான தட்சிணாமூர்த்தி சற்குருவைப் பூஜித்து வருவாயானால், நீ முக்தி பெறலாம் ஆகையால், அடியார்களுடன் அவ்விடஞ் செல்வாயாக." என்றருளி மறைந்துவிட்டனர்.

அம்மொழிகளைக் கேட்டு அவர்கள் சர்ப்பம்போல் வெகு வேகமாய்ப் பிரயாணப்பட்டு, அவ்விடத்திற்கு மேற்காயுள்ளவரும், முன்பு ஓடத்தை ரட்சித்துத் தங்களைக் காப்பாற்றியவருமான ஸ்ரீ குருமோக்ஷேசுவரனைக் கண்டு தரிசனம் செய்து அப்பாலகன்றனர். (அதற்குள்ளாக அந்நதியில் சிவபெருமானால் விடப்பட்ட அவ்வோடமும் கீழ் சமுத்திரத்தை யடைந்துவிட்டது) அன்று முதல் அதற்கு நாவவாகினி என்று திருநாமம் வழங்கலாயிற்று. அதனைத் தென்மொழியில் ஓடம்போக்கி யென்பர். பிராமணோத்தமர்களே! அப்புண்ணிய நதியில் எவர்கள் ஸ்நானஞ் செய்கின்றார்களோ அவர்கள் மனோபீஷ்டம் நிறைவேறும். பின்பு சுந்தரர் முதலியோர் அந்நதிக்கு நிருதிமூலையிலிருக்கும் கார்க்கோடக பூஜிதரான பரமசிவனை விதிப்பிரகாரம் ஷோடசோபசாரங்களால் பூஜித்துவிட்டு கார்க்கோடகேசுவரம் என்னும் அரலூரைவிட்டு பிரயாணப்பட்டுக் கோகாமுகேசுவரஞ் சென்று ஆங்கும் சக்கரவாகபக்ஷியால் பூஜிக்கப்பெற்ற சிவபெருமானை வில்வம், தாமரை முதலிய புஷ்பங்களால் பூஜித்துவிட்டு, அதன் வடக்கில் மகாக்ஷேத்திரமாயும் பிரம்ம விஷ்ணு முதலிய தேவர்களாலும் சேவிக்கப்பட்டதாயும் இருக்கும் காசியாரண்யக்ஷேத்திரம் வந்து, ஏலனகாம்பாள்சமேதராய் எழுந்தருளியிருக்கும் ஆபத்சகாயருடைய ஆலயத்தைக் கண்டு, மகா மகிழ்ச்சியுடன் அவ்வாலயத்திற்குச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, பின்பு கோவிலுள் சென்று, ஆங்கு மகா

தேவராயும் என்றுமழியாதவராயும் விளங்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை பலவித உபசாரங்களால் பூஜித்து, அவரது பக்தியிலேயே ஈடுபட்டு நின்றனர்.

இவ்விதமே தினந்தோறும் செய்துகொண்டு, பரமசிவனது கட்டளைப்படி ஞானத்தைக் கொடுக்கும் ஞான கூபமென்னும் தீர்த்தத்திலும், மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய அமிர்தபுஷ்கரணியென்னும் தீர்த்தத்திலும், புண்ணியத்தையும் பிரமஞானத்தையும் விளைவிக்கக்கூடிய பிரம தீர்த்தத்திலும், ஸ்நாநஞ்செய்து, ஏலாளகாபதியாயும் உலகங்களுக்குச் சுகத்தைக்கொடுப்பவராயும் சம்புவாயுமிருக்கின்ற சிவபெருமானை மிகுந்த சந்தோஷமனத்துடன் மிகுந்த பக்தியோடு துதிசெய்து "ஓ! ஜெகதீசா! உலகங்களுக்கெல்லாம் பிதாவாயிருப்பவர் நீரே! ஸர்வசிருஷ்டிக்கும் அதிகாரி நீரேயாவீர்! உலகத்திலுள்ளோர் யாவரும் உம்மையே தியானிக்கின்றனர். ஏ! ஜகத்ரூபியே! விராட் சொரூபியே! உத்தமரே! ஸகல தேவர்களுக்கு மேலானவரும், வேதாந்தத்தின் பொருளையறிந்த பெரியோர்களாலறியப்பட்டவரும், மூன்றாம்பிறையினையும், கங்கையையுஞ் சிரசில் தரித்தவரும் சந்திரன் சூரியன் அக்கினி இவர்களை நேத்திரங்களாகக் கொண்டவரும், விஷ்ணு முதலிய தேவர்களால் பூஜிக்கப்பெற்ற பாதாரவிந்தங்களையுடையவருமான பிரபு நீரேயன்றோ? உம்மைப் பலகாலும் பணிந்தேன்" என்று தண்டனிட்டுப் பணிந்து வந்தனர்.

இவ்விதம் மூன்று வருஷங்களானதும், முன்வாக்களித்தபடியே பரமசிவன் அவர் முன் பிரத்தியக்ஷமாகி "ஓ சுந்தரா! உனது பக்தியின் மேன்மையில் மிக்க உவகைகொண்டோம் உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளலாம்" என்று சொல்லியருள, பக்த சிரோமணியானசுந்தரர் மிகுந்த ஸந்தோஷமடைந்து கை கூப்பிச் சிரமேற்றாக்கி "மகேசுவரா! அடியேனிடத்தில் கிருபைகொண்ட பெருமானே! எனக்கு மோக்ஷத்தையேயருளுவீர்". வேதாந்தங்களாலறியப் பட்டவரும், வாக்சொரூபியும், அளவிலா பராக்கிரமத்தை யுடையவரும், ஞானக்



கடல் போன்றவரும், அகத்திய முனிவரால் பூஜிக்கப்பட்டவரும் காரணங்களுக்கெல்லாங் காரணரும், மோக்ஷத்தைக் கொடுக்கின்றவரும், ஒருவராலுமறியக் கூடாதவரும், ஆதிமத்தியாந்தமில்லாதவருமான பிரபுவே! என் வேண்டுகோளுக் கிணங்க வேண்டுமெனப் பிரார்த்தித்து நின்றனர்.

---

# எட்டாவது அத்தியாயம்.

## சுந்தரமூர்த்தி முக்தியடைந்ததும் பஞ்சாக்ஷர மகிமையுரைத்ததும்.

—:(o):—

"ஓ ரிஷிகளே! இவ்விதம் சுந்தரர் பிரார்த்திக்க அடியார்களுக் கனுக்கிரகஞ் செய்வதே தம் தொழிலாகக்கொண்ட ஜகதீசன் சுந்தரரை நோக்கி 'அடியார்களிற் சிறந்த சுந்தர! இந்த புண்ணிய க்ஷேத்திரத்தில் என்னுடைய ஸந்நிதியில் அகஸ்திய முனிவர் மோக்ஷத்தைக்கருதி மிக்க மேலானதான பஞ்சாக்ஷரத்தை ஜெபித்து என்னைத் தியானித்துக் கொண்டிருக்கின்றார். மேலும் பிரம்மவித்தை யறிந்தவர்களான சனகாதிமுனி சிரேஷ்டர்களும் மோக்ஷத்தைக் கொடுக்கும் இப்பஞ்சாக்ஷரத்தை ஜெபித்துக்கொண்டு ஜீவன் முக்தர்களாயும் ஆநந்தத்தை யுடையவர்களாயும் என் ஸமீபத்தில் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். என் அன்பனே! பஞ்சாக்ஷரமென்பது சுகத்தையும் ஆநந்தத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கக்கூடிய சிறந்த மந்திரம்" எனச்சொல்லியருளினர்.

இவ்விதம் சூதர் சொல்ல, அம்மொழியைக்கேட்டு ரிஷிகளனைவரும் அவரை நோக்கி "ஓ! சுவாமி! பஞ்சாக்ஷர மந்திரத்தின் மகிமையை எங்களுக்குக் கிருபைகூர்ந்தறிவிக்க வேண்

டுகின்றோம் என்று கேட்டார்கள். அதன் மேல் சூதர் "முனி புங்கவர்களே! பஞ்சாக்ஷரத்தின் மகிமையை விரிவாகச் சொல்ல வேண்டின் கோடி வருஷத்திலும் சொல்ல இயலாது ஆகையால் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். கேளுங்கள். அச்சிவமந்திரத்தின் அருமையை, அச்சிவபெருமானையன்றி மற்றெவர்களாலுமறிய முடியாது. ஸப்தகோடி மந்திரங்களுள் இவ்வொன்றே உத்தமமாக விளங்கி வருகின்றது. நான்கு வேதங்களும், அவைகளினங்கங்களும், பதம் முதலானவைகளும், பதினெண்புராணங்களும் ஸ்மிருதிகளும், பிராமணர் முதலிய நான்கு வருணங்களும், பிரம்மசரியம் முதலிய நான்கு ஆசிரமங்களும், இப்பஞ்சாக்ஷரத்தினின்று முண்டானவைகளே! மேலும் மனுஷிய தேகத்தை யடைந்தவர்களும், சுக துக்கமிவைகளை யறிந்தவர்களுமான மானிடர்கள் இம்மந்திரத்தின் பலனைப் பெறுவிட்டால் பசுக்களுக் கிணையாவர். பசுக்களாவது பால் முதலியவற்றைப் பிறருக்கு தவுவதால் பிரயோஜனமுள்ளவையாகின்றன. ஆனால் உபகாரமற்ற மனிசனே இருந்தும் பயனற்றவனாவான். ஆதலால் சிவமந்திரமறியாதவர்களையும் சிவபக்தியில்லாதவர்களையும், விபூதி ருத்ராக்ஷமிவைகளை யணியாதவர்களையும், ஒருக்காலும் பார்க்கக்கூடாது. அவர்களைப் பார்த்த தோஷத்தால் பார்த்தவர்கள் நரகமடைய நேரிடும். அப்படிப் பார்த்த தோஷம் நிவிர்த்தியாகும் பொருட்டு சூரியன் அக்னி, பசு, பிராமணன், சிவனடியார், ஜலம், சிவாலயம் இவைகளைப் பார்ப்பின் அந்த தோஷம் நிவர்த்தியாகும். எவனுடைய சிரசில் ருத்திராக்ஷமும், நெற்றியில் விபூதியும், மனதிற் பஞ்சாக்ஷரமுமில்லையோ, அவன் நடை பிணமேயாவான். பல ஜன்மங்களிற் சிவபுண்ணியங்களைச்செய்து, சைவாசாரத்தை யனுஷ்டித்தவர்களுக்கே, பஞ்சாக்ஷர ஜபத்திலும் சிவபெருமானிடத்திலும் நிச்சயமான பக்தியுண்டாகும்.

பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜெபிப்பவன் பிராம்மணனாயிருந்தாலும், அல்லது கீழ்ப்பட்ட ஜாதியானாயிருந்தாலும், அவன் அம்மந்திரத்தைத் தினந்தோறு முதயாஸ்தமன காலங்களில் மிக்க பக்தி சிரத்தையோடு ஜபித்து வருவானேல், அவனே ரிஷி



சிரேஷ்டனாவான். அவன் யமபயத்தையும்யமவேதனையையும் ஒரு நாளுமடைய மாட்டான். எவ்விதத்திலாவது நல்ல ஆசாரியனைத்தேடி, உத்தமமானதும் சமுசாரத்தினின்றும் கரையேற்ற வல்லதும், நியாசம், தியானம், இவைகளுடன் கூடினதும், இருபத்தைந்து பேதங்களுடையதுமான பஞ்சாக்ஷரத்தை எப்போதும் ஜபஞ்செய்பவனைக் கண்ட மாத்திரத்தில் பூதம், பிரேதம், பைசாசம், வேதாளம், டாகினி முதலியவை நெருங்காது. விலகித் திக்குத்திக்காக ஓடிவிடும். ஸகல வியாதிகளும் நீங்கும். நானாவிதமான துன்பங்களு மற்றுப்போம்.

இப்பலங்கள் சாதாரணமான ஸ்தலங்களினின்று ஜபஞ்செய்கின்றவர்களுக்கே யுண்டாகக் கூடியவை. சிவக்ஷேத்திரங்களிலிருந்து ஜெபிக்கின்றவர்களுக் குண்டாம் பலனையென்னால் அளவிட்டுக் கூறல் இயலாது. கேதார முதல் இராமேசுவரம் மலையபர்வதம் வரையில உள்ள அத்தகைய க்ஷேத்திரங்களைச் சொல்லுகின்றேன். பாக்கியவான்களாகிய நீங்கள் சிரத்தையுடன் கேட்பீர்களாக. அவைகளாவன. கேதாரம், நைமிசம், காசி, குருக்ஷேத்திரம், அவந்தி, பிரபாசம, பிரயாகை, உத்தமமான சித்தாசிரமம், பதரிகாரண்ணியம், மலையாசலம், காச்மீரம், திரியம்பகம், ஸப்த கோதாவரீதீரம் ஸ்ரீ சைலம், வேணு நகரம், விரிஞ்சிபுரம், ஸ்கந்தபுரம், குஹாரண்யம், ஸ்ரீ காளகஸ்தி, வேங்கடாசலம், ஸம்பாதிநகரம் அருணாசலம், கோபர்வதம், விருத்தபர்வதம், புண்டரீகபுரம், பிரம்மபுரம், ஜடாயுபுரம், வேதாரண்ணியம், வில்வவனம். காசியாரண்ணியம் முதலியனவாம். இக்ஷேத்திரங்களில் பார்வதீ சமேதரான பரமசிவன் எழுந்தருளி மனிதர்களுடைய அபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார். இச்சிவக்ஷேத்திரங்களில் யாதாமொன்றிலாவது எவர்கள் பஞ்சாக்ஷரத்தை சிரத்தையுடன் ஜபிக்கின்றார்களோ அவர்கள் சதுர்வித புருஷார்த்தங்களையும் பெறுவார்கள்.

இக்காசியாரணியத்திலுள்ள வடவால விருக்ஷத்தடி-

யில் வீற்றிருக்கும் சற்குருவான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியானவர் மகாத்மாக்களாயும் பக்தர்களாயும் இருக்கும் பிரமன் முதலான சிலர்களுக்கு, முன்னொரு முறை இப்பஞ்சாக்ஷரத்தின் வியாக்கியானத்தைப் பிரகாசமாகச் சொல்லியருளினர் பின்னும் அப்பிரமன் முதலியவர்கள் பிரார்த்தித்ததன்பேரில், பிறகொரு சமயத்தில் அந்த விடத்திலேயே சனகர் முதலான மகாத்மாக்களுக்கும் அவ்வுபதேசம் செய்யப்பட்டது. ஆகையால் இந்த க்ஷேத்திரம் மிக்க சிறப்பு வாய்ந்தது. எந்தச் சாதியிற் பிறந்தவனாயினும், இந்த க்ஷேத்திரத்தை யடைவனேயானால் ஈசனவனுக்கு முக்தியளிக்கின்றார். இந்த க்ஷேத்திரத்திலிறப்பவன் நிச்சயமாகச் சாரூப்பியத்தை யடைகின்றான். இந்த விடத்திலுள்ள பிராணிகள் இறக்குந் தருவாயில் ஈசுவரன் அம்பாளுடன் சென்று அவைகளின் வலது காதில் பஞ்சாக்ஷரத்தை யுபதேசிக்கின்றார். ஆகலால் இங்கு மரிக்கும் பாக்கியத்தைப் பெற்ற பசுபக்ஷி மிருகம் மனிதர் முதலான யாவர்களும் நிச்சயமாக மோக்ஷத்தை யடைகின்றார்கள். பஞ்சக்குரோசத்துடன் கூடினதும், காசிக்குச் சமானமானதும் உத்தமமானதுமான இந்த க்ஷேத்திரத்திலுள்ள வடவால விருக்ஷத்தைச் சுற்றியும், பஞ்சகுரோசத்துக்கு மத்தியிலும் வசித்தவர்களுக்கும் பிறந்தவர்களுக்கும் ஈசுவரன் தன்னுடைய பதவியை யளிக்கின்றார். ஈசுவரனே பஞ்சாக்ஷர மந்திரத்தை யுபதேசிப்பதால் இது சகல க்ஷேத்திரங்களுள்ளுஞ் சிறந்ததாக விளங்குகின்றது. குருமூர்த்தியின் ஸந்நிதானத்தில் பஞ்சாக்ஷரத்தை ஒரு தடவை ஜபம் செய்தால் கோடி ஜன்மங்களிற் செய்த பாபங்கள் போய் விடும். காசியாரணிய க்ஷேத்திரத்திற்கு போகவேண்டுமெனக் கருதி எந்த மனிதன் உதயகாலத்தில் தினந்தோறும் மூன்றடி வைக்கின்றானோ அவன் காசியாத்திரை செய்த பலனை யடைகின்றான். அவனுடைய பிதுர்க்கள் நரகத்தை விட்டு சிவலோகத்தை யடைகின்றனர். சுபமான காசியாரணிய க்ஷேத்திரத்தில் பிதுர்க்களை உத்தேசித்து எவன் சிராத்தம் செய்கின்றானோ அவனுக்குக் கயாசிராத்தம்செய்த புண்ணியத்திலும் நூறுமடங்கதிகமான பலனை ஈசுவரன் சமுசயமின்றிக் கொடுக்கின்றார். இது முக்காலும் சத்தியம். இவ்வு



க்த்தில் மோக்ஷத்தையடைய விரும்புவோர்கள், இக்காசியாரணிய க்ஷேத்திரத்தில் அவசியம் வாஸஞ்செய்யவேண்டும் இப்புண்ணிய க்ஷேத்திரத்தில் ஓர் பிடியளவு அரிசியாவது எவர்கள் சத்பாத்ரத்திற் செலவு செய்கின்றனரோ அவர்கள் உத்தமமான சாம்பிராச்சிய பதவியையடைந்து முடிவில் சிவசாயுச்சியத்தையும் பெறுகிறார்கள். இது நிச்சயம். இந்த க்ஷேத்திரத்தில் அகஸ்தியர் சனகாதி முனிவர்கள் ஜீவன் முக்தர்களாக வஸிக்கின்றார்கள். ஆனதால் ஓ! முனிவர்களே! இந்த க்ஷேத்திரத்தின் மகிமையைக் கேட்ட மாத்திரத்திலேயே ஸகல பாபங்களும் நீங்கிவிடும். இது மிகவும் ரகசியமாயுள்ளது. இவ்விஷயத்தைச் சிவபக்தியில்லாதவர்களுக்குச் சொல்லக்கூடாது.

ரிஷிசிரேஷ்டர்களே! பஞ்சாக்ஷரத்தின் மகிமையையும், இக்ஷேத்திரத்தின் பெருமையையும் உங்களுக்குச்சொல்லி வந்தேன். ஈசுவரன் முன்பு வாக்களித்தபடியே சுந்தரருக்கு மோக்ஷமருளி, தக்ஷிணாமூர்த்தி வடிவுடன் பிரமன் முதலானவர்கட்குபதேசஞ்செய்து மறைந்தபொழுது காசியாரணிய வாசிகள் பரமசிவனைப் புகழ்ந்து நின்றனர்.

முனிவர்களே! சுந்தரரின் சரித்திரம் உலகங்களுள் மிக்க வாச்சரியமானது. எந்த மனிதனும் முதலில் பிரம்ம ஞானத்தை யடைந்து பிறகு முக்தியையடைவான். இருபத்தைந்து தத்துவங்களையறிபவன் ஓர் பிரம்ம ஞானியாவான். இந்தத் தத்துவ ஞானத்தையறிந்த பின்பே பிரம்ம ஞானத்தைக்கோற வேண்டும். சாஸ்திரம் சொல்பவனும், புராணம் சொல்பவனும் சிஷ்யர்களால் சூழப்பெற்றவனும், தேசாபிமானியும், எப்பொழுதும் சிவத்தியானத்தைச் செய்பவன் பதவியை யடைய மாட்டான். அன்றியும் விஷ்ணு முதலான தேவர்களாலும் சிவத்யானம் செய்பவன் பெருமைப் படுத்தப்படுகின்றான்.

இச்சரித்திரமானது ஆயுளையும் புக்தி முக்தியாகிற பலனையும் கொடுக்கக்கூடியதானதால் இதனைச் சிரத்தையுடன் ஆராய்வோர்கள் நிச்சயமாய்த்தன்பயனைப் பெறுவார்கள்" என்று இவ்வி

தம் பஞ்சாக்ஷர மகிமையையும் காசியாரண்யப் பெருமையையும்
பற்றிச் சவிஸ்தாரமாகக் கூறினர் பிரம்ம ரிஷியாகிய சூதர்.

# ஒன்பதாவது அத்தியாயம்.

## சுந்தரமூர்த்தி திருவாரூர் சென்றது.

"முனிவர்களே! சுந்தரமூர்த்தி முக்தியடைந்த பின்பு
அவரிடம் அன்புகொண்ட அவரது சிஷர்கள்யாவரும், அவரைப்
போலொரு விக்கரகஞ்செய்து அக்காசியாரணிய க்ஷேத்திரத்தி
லுள்ள ஆலயத்திற் பிரதிஷ்டைசெய்து பூஜித்து வந்தனர். அப்
படிச் செய்து வரும்பொழுது திருவாரூரில் தியாகராஜப் பெரு
மானுக்கு உத்ஸவம் நடந்தது, அச்சமயம் அந்நகர் சக்கரவர்த்
தியான ஈசசோழனென்னு மரசன், தமது இராஜ்யத்திலுள்ள
ஒவ்வொரு சிவாலயத்திலுமிருக்கும் சுந்தரமூர்த்தி விக்கிரகங்களை
த் திருவாரூருக்குக் கொண்டுவரும்படியாய் தன் தூதர்களுக்குக்
கட்டளையிட்டனன் அவர்களும் பல சிவாலயங்களுக்குச்சென்று
அநேக சுந்தரமூர்த்தி விக்ரகங்களைக் கொணர்ந்து சேர்த்தனர்.
காசியாரணியம் வந்தடைந்த தூதர்களும் அர்ச்சகரிடம் தம் அர
சனினுணையைத் தெரிவித்தவுடன், அவர்கள் மிக்க பக்தியுடன்
ஆலாலசுந்தரரைப் பூஜித்துவிட்டு, மிக்க மனவருத்தத்துடனும்
கவலையுடனும் அதனைத் தூக்கிக்கொண்டு, அரசன் ஆக்கினைப்படி
ஆரூர்கொண்டு சேர்த்தனர்.

ஆங்கு தியாகராஜர் ஆலயத்திலிருக்கின்ற ஆயிரக்கால்
மண்டபத்திலோரிடத்தில் அவரை பிரதிஷ்டைபண்ணிப் பூஜை
செய்து வரும்போது, அர்ச்சகர் மிகக்கலங்கிய மனதுடன் "இந்
தச் சுந்தரமூர்த்தியை காவற்காரர்களாலும் ராஜ தூதர்களாலும்
காக்கப்பட்டிருக்கும் இந்த ஆலயத்திலிருந்து எவ்விதம் கொண்டு



போகப்போகின்றேன் ' என்று ஏங்கின மனதுடன் சுந்தரமூர்த்தி
யின் சந்நிதியில் சிந்தித்து வரும்போது, சக்கரவர்த்தியாகிய சோ
ழமன்னன் ஆங்கு வந்து சுந்தரமூர்த்தியை நமஸ்கரித்து பலவித
ஆபரணங்களையும் வஸ்திரங்களையுங் கொடுத்துப் பூஜித்து "அழ
குள்ள இச்சுந்தரமூர்த்தி விக்ரகமானது இவ்விடத்தில் தானே
இருக்கவேண்டும். நேத்திரங்களுக்கு ஆநந்தத்தை விளைவிக்கக்
கூடியதாக விருப்பதால் இதனை இவ்விடம் விட்டு வேறிடத்திற்
குக் கொண்டுபோகக்கூடா" தென்று தன்னுடைய சேவகர்களு
க்கு உத்திரவு செய்துவிட்டு மந்திரிகளுடன் தன்னரண் மனைக்
குச் சென்றனன்.

இதைக்கேட்டதும் அர்ச்சகரின் மனக்கவலை மிக்கவதிகரி
த்தது. அவர் "ஓ ஆபத்ஸகாயா! தேவேசா! தேவர்களுக்குண்
டாகும் பயத்தை நீக்கி அவர்களை ரக்ஷிப்பவரே! பூர்வகாலத்தில்
ஆலஹால விஷத்தினால் துன்பத்தையடைந்த விஷ்ணு முதலான
தேவர்களைக் காப்பாற்றினவரே! அதுபோலவே இந்த அரசாக்
கினையினின்று என்னைக் காப்பாற்றி இச்சுந்தரமூர்த்தியுடன் காசி
யாரண்ணிய க்ஷேத்திரம் செல்லும்படி அனுக்கிரகிக்க வேண்டும்.
என்று கவலையுடன் தியானஞ் செய்து கொண்டிருக்கும்போதே,
சிறிது நித்திரை போய்விட்டார்.

அச்சமயத்தில் அவர் ஓர் கனவுகாண அதனில் திவ்யதே
ஜஸோடுகூடிய சுந்தரமூர்த்தியானவர் தரிசனங்கொடுக்க, அவ்
வர்ச்சகர் சுந்தரமூர்த்தியைப் பார்த்து வெகுபக்தியுடன் நமஸ்
கரித்து "ஓ தேவேசா! ஈசசோழ மகாராஜனால் இவ்விக்கிரகமா
னது இவ்விடத்திலேயே இருக்கட்டுமென்று சேவர்களுக்கு உத்
திரவு செய்யப்பட்டிருக்கின்றது. அச்சேவகர்களால் சூழப்பட்
டிருக்கும் இவ்வாலயத்தினின்றும் உம்மையெடுத்துக்கொண்டு எவ்
விதத்தில் செல்வதற்கு முடியும். எனக்குக் காசியாரணிய
க்ஷேத்திரத்தில் உம்முடன் எப்பொழுதும் வாசம் செய்வதற்கிச்
சையாயிருக்கின்றது " என்று பிரார்த்தித்தனர்.

தம் பக்தருடைய வசனங்களைக்கேட்டு அருபார்த்தை

ரக்ஷிப்பதில் மிக்க பிரியமுடையவரும் அழகிற்சிறந்தவருமான சுந்தரமூர்த்தி புன்னகை கொண்டு அவரை நோக்கி "பக்தரே! உமக்கோருபாயஞ் சொல்லுகின்றேன் கேளும்; நான் வைசூரி முத்துக்களுடன் இந்த விடத்தில் பாலகனாகி விடுகிறேன். பயப்படாமல் என்னைப்பாயினால் சுற்றி எடுத்துக்கொண்டு இந்த ஆலயத்திலிருந்து சீக்கிரமாக வெளியேறிவிடும். உம்மை வாசற்காப்பவர்கள் யாதொரு தடையுஞ் செய்யமாட்டார்கள்" என்று கிருபையுடன் சொல்லிவிட்டு, அவ்வண்ணமே சுந்தரமூர்த்தி பாலரூபத்தையடைந்தார்.

அச்சமயத்தில் அம்மை கொப்புளங்களுடனிருக்கின்ற சுந்தரமூர்த்தியாகிய அக்குழந்தையைப் பார்த்துக் குருக்கள் மிக்கவாச்சரியத்தை யடைந்து. அக்குழந்தையை ஓர் பாயிற் சுருட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டார். வழியில் காவற்காரர்கள் அவரை மறித்து ஈதென்ன' வென்று கேட்க, அக்குருக்கள்' காவற்காரர்களே! இவ்விடம என்னுடன் வந்திருந்த என்னருமைப்புத்திரனுக்கு அகஸ்மாத்தாய் வைசூரி போட்டதால்', அவனை யிங்கு வைத்துக்கொண்டிருத்தல் தகாதெனக் கருதி' வெளியிலெடுத்துச் செல்கின்றேன். "என்றார், அவ்வசனத்தைக் கேட்டு அரசனின் சேவகர்களாகிய அக்காவற்காரர்கள் "இக்குழந்தையை யெடுத்துக்கொண்டு இவ்வாலயத்தை விட்டுச் சீக்கிரம் வெளியே போய்விடும் இவ்விஷயம் அரசனுக்கெட்டுமானால் எங்களுக்குத் தண்டனை விதிப்பார்" என்று சொல்ல 'இதுவும் ஓர் நன்மையே' எனக்கருதிக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு அதிவேகமாக வெளியில் வந்து காசியாரணிய க்ஷேத்திரத்தை நோக்கிப்பிரயாணப்பட்டார்.

அச்சமயத்தில் ஈசசோழனென்னும் மன்னன் தியாகராஜப்பெருமானை தரிசனம் செய்துவிட்டு ஆயிரக்கால் மண்டபத்தில் அழகுள்ள சுந்தரமூர்த்தி விக்கிரகத்தைத்தருசிக்கவந்தபோது, ஆங்கு அவரைக்காணாமையால், அரசன்வெகுண்டு, மந்திரி முதலியோரைநோக்கி, சுந்தரமூர்த்தி விக்கிரகத்தை இவ்விடத்தை விட்டுக்கொண்டு போனவர்கள் யார்' என்று வினவ, அவர்கள்



யாதொரு பதிலும் சொல்ல இயலாமல் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து திகைத்தனர். அத்தருணத்தில் ஆகாயத்தில் மேக சப்தம்போல் ஓர் அசரீரிவாக்கு உண்டாகி' அரசனே? உன் மனதுக்கொப்பாக நடந்துகொள்ளும் மந்திரி முதலானவர்களை நீ வருத்தஞ் செய்யவேண்டாம். சுந்தரமூர்த்தி எந்த க்ஷேத்திரத்தில் மோக்ஷத்தையடைந்தாரோ அந்தக்காசியாரணியத்திற்கே அம்மைபோட்டவாபோல மாறுவேடந்தரித்துச் சென்றுவிட்டார்" என்று சொல்லிற்று. இவ்விதம் ஆகாயவாணி சொல்ல அதை ஆச்சரியத்துடன் அரசன் கேட்டு அரண்மனைக்குச் சென்றான்.

இதற்குள் குழந்தையாகிய சுந்தரமூர்த்தியை யெடுத்துக்கொண்டு அக்குருக்கள் அதிவேகமாக திருக்கொளம்புதூர் வந்து சேர்ந்து. அதற்கு வாயுமூலையிலுள்ள ஒரு வடவால விருக்ஷத்தினடியில் அக்குழந்தையைப் பாயுடன் வைத்துவிட்டு, அவ்விடத்திலுள்ள நதியில் ஸநானம்சந்தி முதலிய நித்ய கருமானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, திரும்பிவந்து அப்பாயிலிருந்த குழந்தையை யெடுக்க, அது மேருமந்தரமலைபோல் அசைக்கமுடியாமற் போனதைக்கண்டு, 'ஓ' வென்று கதறினார். அச்சமயத்தில் காசியாரணிய க்ஷேத்திரத்திலுள்ள ஏலாளகாபதியான சிவபெருமானுக்கு உஷக்கால பூஜை நடந்து கொண்டிருந்தமையால் சங்கம் மேளம் முதலிய வாத்தியங்களை முழக்கிக்கொண்டிருந்தார்கள்.

அவ்வொலியைக்கேட்டு அக்குருக்கள் "ஓ அன்பர்களே! இவ்விடத்தில் சுந்தரமூர்த்தியை வைத்திருக்கின்றேன் அதைத் தூக்க என்னால் முடியாமல் வருத்தப்படுகின்றேன்' என்று கூக்குரலிட அதனைக்கேட்டுக் காசியாரணிய வாசிகளனைவருமங்குசென்று இதென்னவென்று வினவ, குருக்கள் அவர்களுக்கு நடந்த விருத்தாந்தங்களைக்கூற சுருட்டிவைத்திருந்த அப்பாயைப் பிரித்துப்பார்க்கும்போது, அதில் பிரபுவானவரும் மாறுவேடத்துடன் கூடினவரும், தொங்குகின்ற காதுகளையுடையவரும் மிகுந்த தலைமயிரைக்கொண்டையாக அணிந்தவரும்

பாயினால் சுற்றப்பட்டிருக்கும் அடையாளத்தையுடைய திருமேனியுடையவரும், அம்மைத்தழும் புடையவருமான சுந்தரமூர்த்தி விக்கிரகத்தைப்பார்த்து, மகாசந்தோஷங்கொண்டு, வாத்தியங்களுடன் ஓர் புஷ்பரதத்தில் அவரை யெழுந்தருளப்பண்ணிகாசியாரணிய க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்கள்.

அன்று முதல் அக்காசியாரணியத்திற்குச் சோர விஷபானபுர மென்று திருநாமம் வழங்கி வருகின்றது. எந்த இடத்தில் அக்குருக்கள் சுந்தரமூர்த்தி விக்ரகத்தை வைத்துவிட்டுத் தூக்க முடியாமற் கதறினாரோ அவ்விடத்திற்குக் கூவாலடி என்று பெயர். அதுமிகவும் பரிசுத்தமுள்ள புண்ணிய பூமியாகும்.

ஓ முனிவர்களே! இச்சுந்தரமூர்த்தியின் சரித்திரம் மிக்க வாச்சரியமானது, சர்வபாக்கியங்களையும் கொடுக்கின்ற இச்சரித்திரத்தை முக்கியமாய் படிக்கவும் கேட்கவும் வேண்டுமென்று மிகக வாச்சரியத்துடன்கூடின சௌனகர் முதலியரிஷிகளைப்பார்த்துச் சூதமுனிவர் கூறிவிட்டு, சுபத்திற் கிருப்பிடமும், மோக்ஷத்தைத் தரக்கூடியதும், யாவர்களாலும் வணங்கப்பட்டதுமாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் தாமரை மலர்போன்ற திருவடிகளை மனதில் தியானஞ் செய்துகொண்டு விளங்கி வந்தனர்.

———:(o):———

## பத்தாவது அத்தியாயம்.

### வரதராஜப் பெருமாள் சரித்திரம்.

நைமிசாரணிய வாசிகளான முனிவர்கள் சூதரை நோக்கி "சுவாமி! தாங்கள் வியாஸருடைய அனுக்ரகத்தால் ஸகல புராணங்களையு மறிந்திருக்கின்றீர்கள். ஆதலால், தேவர்களுக்குண்டான பயத்தை நிவிர்த்திசெய்த மகாவிஷ்ணுவின் சரித்திரத்தைத் தயவுசெய்து எங்களுக்குக் கூறும்படியாகப் பிரார்த்திக்கின்றோம், கருணை புரிவீர்களாக" எனக்கேட்கச் சூதர் முனிவர்களைப்பார்த்துச் சொல்லுகின்றார்.



முனிவர்களே! ஆச்சரியமான செய்கையுடைய மகாவிஷ்ணுவின் சரித்திரத்தை உங்களுக்குச் சொல்லுகின்றேன் கேளுங்கள். இலக்ஷ்மி, கருடன், வருணன், இவர்களால் பூஜிக்கப்பட்ட தாமரைக்கண்ணனாகிய மகாவிஷ்ணு காசியாரணிய க்ஷேத்திரத்திற்கு மேற்கிலுள்ள ஆலயத்தில் எழுந்தருளி ஆநந்தத்துடன் அம்பிகையுடன் கூடின சிவபெருமானை எப்பொழுதும் பூஜித்துவந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் யான் உங்களுக்குக் கூறவேண்டிய விஷயமொன்றுண்டு; முற்காலத்தில் திருப்பாற்கடலில் காளகூடவிஷ முண்டாக அதைக்கண்டு பிரமன் முதலிய தேவர்கள் அஞ்சி நடுநடுங்கி ஒன்றுந்தோன்றாமல் மகாதேவாவென்று கதற, அவ்விஷம் சிறிது சாந்தமடைந்தது. அச்சமயத்தில் தேவர்களுக்கதிபரும், ஜனார்த்தனருமான விஷ்ணுவானவர் தன் சக்கராயுதத்தால் அவ்விஷத்தை ஸ்தம்பிக்கும்படி செய்துவிட்டார். அப்பொழுது தேவர்களுடன் காளகூட விஷத்தால் பீதியை யடைந்த மகாலக்ஷ்மியும் ஆங்கு வந்தடைந்து உலகங்களால் வணங்கப்பட்ட விஷ்ணுவைத் தாமரையிதழ்களாலும் துளசிதளங்களாலும் பூஜித்து, அங்குள்ள ஆலயத்திற்கு வடக்கிலிருந்த பரிசுத்தமானதும் தன் பேருடன் விளங்குகின்றதுமான லக்ஷ்மீதீர்த்தத்தை யுண்டுபண்ணி அதில் ஸ்நாநம் செய்து, மதுசூதனனை மறுபடியும் பூஜித்துத்துதி செய்யவாரம்பித்தனள்.

ஜயத்துடன் விளங்குகின்ற ஓ விஷ்ணுவே! விசாலமான நேத்திரங்களையுடையவரே! ஜெயத்துடன் விளங்குகின்ற திருமேனியை யுடையவரே! கிருபாமூர்த்தியே! நரகாசுரனைச் சங்கரித்தவரே! தேவர்களுக்கு மேலானவரே! உலகங்களுக்கெல்லாம் நாதரே! வெகுகாலமாயிருப்பவரே! புருஷர்களுட் சிரேஷ்டமானவரே! என்னை இரக்ஷித்து, சத்குணங்கள் நிறைந்தவரும், ஸகல வித்தைகளிலும் தேர்ந்தவர்களுமான புத்திரர்களுற்பத்தியாகும்வண்ண மனுக்கிரகிக்கவேண்டு" மென்றுபிரார்த்தித்தனள்.

அதைக்கேட்ட மகாவிஷ்ணுவானவர் "லக்ஷ்மி! உன் கருத்து நிறைவேற ஒருபாயஞ் சொல்கின்றேன் கேள். என் ஆலயத்திற்கு முன்பாகவிருக்கும் சிவாலயத்தில் சற்குருவான தக்ஷிணாமூர்த்தியானவர் வடவிருக்ஷத்தின் கீழ்,எழுந்தருளி சர்வான்மாக்களுக்கும் வேண்டும் வரங்களைக்கொடுத்து ரக்ஷித்துவருகின்றார். அவரைப் பிரார்த்தித்தால் உன்மனோபீஷ்டம் நிறைவேறும்" என்றுசொல்ல, மகாலக்ஷ்மியும் மிக்க சந்தோஷமனத்துடன் விஷ்ணுவை நமஸ்காரம்செய்து, அவ்விடம் விட்டகன்றாள்.

பின்பு ஆங்குள்ள அமிர்த புஷ்கரணியில் விதிமுறைப்படி ஸ்நானஞ்செய்து வடவிருக்ஷத்தினடியிலிருக்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை விதிப்படி சோடசோபசாரத்தால் பூஜித்துத் தோத்திரஞ்செய்து பின்பு குருவாரத்தில் தக்ஷிணாமூர்த்திக்கு பசுவின்பாலாலும் யானைகளின்பேரில் கொண்டுவரும் தீர்த்தங்களாலும் அபிஷேகங்கள்செய்வித்து, அமுதபோன்ற நைவேதனங்களாலும் தாம்பூலங்களாலும் உபசரித்து, சிரசில் தன் இருகைகளையும் கூப்பிக்கொண்டு தாமரைபோன்ற நேத்திரங்களையுடைய லக்ஷ்மி தோத்திரஞ்செய்ய வாரம்பித்தாள்.

"துஷ்டனான மாயை யென்னும் அசுரனுடைய முரடாயிருக்கின்ற முதுகின்மீது மிதித்துக்கொண்டிருக்கும் திருவடிகளை யுடையவரும் அடியார்கள் பிரார்த்திக்கின்றவைகளைக் கொடுப்பதில் சிறந்தவரும், தாமரையிதழ்போன்ற நேத்திரங்களையுடையவரும், புத்திமுக்தி முதலான பலன்களைக்கொடுப்பவரும், திரிமூர்த்திகளால் பூஜிக்கப்பட்டவரும், என் இஷ்டத்தைப் பூர்த்திசெய்கின்றவரும், கருத்தனுமாகின்ற ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை வணங்குகின்றேன். குபேரனுக்குப்பிரியரும் பிரமன் முதலானவர்களால் பூஜிக்கப்பட்டவரும் மோக்ஷகாமிகர்களால்வணங்கப்பட்டவரும் உறுதியான பக்தியுடைய யோகிகளுக்குச் சுகத்தைக் கொடுப்பவரும், சிவந்த திருவடிகளில் மிகுந்த அன்புகொண்ட அடியார்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பவரும், என் மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்விப்பவரும் உலகங்களுக்குக் கர்த்தாவுமாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை யான் வணங்குகின்றேன்.



தக்ஷனைக்கண்டித்தவரும், யாகத்துக்குக் கர்த்தாவாயும் மேன்மையுடையவராயும் விளங்கும் வீரபத்திரரால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவரும், யக்ஷ ராக்ஷஸ மனிதர் கின்னரர் தேவர் பன்னகர் முதலானவர்களால் வணங்கப்பட்டவரும், இரத்தபானஞ் செய்கின்ற கணநாதரென்னும் அன்னுடைய மனமாகிற வண்டினால் அடையாளம் பண்ணப்பட்டிருக்கிற சிவந்த திருவடியையுடையவரும் உலகத்துக்குக் கர்த்தாவுமாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை யான்வணங்குகின்றேன், என்று இவ்வாறு பலமுறை துதிக்கும் லக்ஷ்மிக்கு முன் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி யெழுந்தருளி "ஓ பிராமணர்களே! இவ்வாச்சரியமான விஷயத்தைக்கேளுங்கள்" "வில்வரூபமாயிருக்கின்ற தன் மூன்று நேத்திரங்களையும் அவளுக்குக்கொடுத்துப் பின்பு. அத்தேவியைப்பார்த்துச் சிவபெருமான் உனக்கு வேண்டியவரத்தைக்கேள் என்று சொல்ல, பிரசன்னமாயிருக்கும் அக்லக்ஷ்மியும் மகாசந்தோஷத்துடன் குருமூர்த்தியைப் பலமுறை நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்து 'பிரபுவே! எனக்கு நல்ல புத்திரர்கள் உண்டாகும் வண்ணம் அனுக்கிரகிக்கவேண்டும் என பிரார்த்தித்தனள்.

அவ்வேண்டுகோளைக் கேட்டு அடியார்களிடத்திற் பிரியமுடைய சிவபெருமான் "ஏ! லக்ஷ்மி! உனக்கு, ஸ்ரீ சூக்தமென்னும் மந்திரத்தில் சொல்லப்பட்டிருப்பவர்களும் உலகத்துக்கு நன்மையைக் கொடுப்பவர்களுமாகிய புத்திரர்கள் உண்டாவார்கள்" என்றனுக்கிரகம் செய்துவிட்டு அவ்விடத்திலேயே மறைந்தருளினர்.

இவ்வண்ணம் சிவபெருமானிடமிருந்து வரத்தைப் பெற்றுச் சென்ற லக்ஷ்மிதேவிக்கு, ஸகல லக்ஷணங்களும் பொருந்தியவர்களாயும், கீர்த்தி, மணி, நிசரன், சாதவேதசன், தாமன், மனோகரனென்ற இவ்வநாமங்களையுடையவர்களாயும், ஆறு புத்திரர்கள் உற்பத்தியாயினர். மகாலக்ஷ்மியும் அப்புத்திரர்களைப் பெற்றதால் பெருமகிழ்வுகொண்டு விஷ்ணுவினுடைய ஸ்ரீவத்ஸமென்னும் மறுவையுடைய மார்பையடைந்தாள். அதுமுதலந்த லக்ஷ்மிக்குப்பிரகிருதி யென்னும் நாமம் வழங்கி வருகின்றது.

ஓ பிராமணர்களே! லக்ஷ்மியானவள் சிவபெருமானுக்கு என்று முதல் யானையின்மீது திருமஞ்சனங் கொண்டுவந்து அபிஷேகம் செய்வித்தனளோ அன்று முதல் சிவக்ஷேத்திரங்களில் யானைகளால் அபிஷேகம் செய்யப்பட்டவளாயும், பத்மநாபனுக்குப் பிரியமுள்ளவளாயும், மங்களகரமுள்ளவளாயும், தாமரை போன்ற கண்களையுடையவளாயும், இருக்கும் லக்ஷ்மியானவள் சிவபிரானைத் தியானஞ் செய்துகொண்ட வண்ணமேயிருந்தாள். அச்சமயத்தில் விஷ்ணுவானவர் லக்ஷ்மியால் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை, புத்திரலாபத்தால் மிக்க அன்புடன் துதிசெய்ய ஆரம்பித்தார்: பிரணவசொரூபமாயிருப்பவரும், அளவில்லா குணங்களையுடையவரும், மிகுந்த பராக்கிரமத்தையுடையவரும் வேதங்களால் சிந்திக்கப்பட்டவரும் எண்ணுதற்கரிய ரூபங்களையுடையவரும், ஓங்காரத்தாலறியப்பட்டவரும், சருவான்ம சொரூபியாயுள்ளவரும், என் குலதெய்வமானவரும், ஆகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை யெப்போதும் வணங்குகின்றேன், சிறந்த சர்ப்பங்களை எவர் ஆபரணமாகக் கொண்டிருக்கின்றனரோ, எவர் அசைவும் அளவுமில்லாமலிருக்கின்றனரோ, எவர் யானைத்தோலை வஸ்திரமாயணிந்திருக்கின்றனரோ, எவர் மிக்கவழகு பொருந்திய சரீரத்தையுடையவரோ, எவர் சராசரங்களை சிருஷ்டிப்பதற்கும் இரக்ஷிப்பதற்கும் ஸங்கரிப்பதற்கும் காரணமாய் நிற்கின்றனரோ, அத்தகைய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை யெப்போதும் யான் வணங்குகின்றேன்". என்றிவ்விதமாக ஸமஸ்த பிராணிகளிடத்திலும் வசிக்கும் விஷ்ணுவானவர் துதித்து அச்சிவபெருமானிடத்தில் ஞானத்தைப் பெற்று, அவ்விடத்திற்கு மேற்கிலுள்ள ஓர் ஆலயத்தில் உலகஸம்ரக்ஷணையின் பொருட்டு ஸ்ரீதேவி ஸமேதராய் எழுந்தருளியிருக்கின்றார் அன்று முதல் அந்த க்ஷேத்திரமும் லக்ஷ்மீ தீர்த்தத்துடன் விளங்கி வருகின்றது. ஸர்வ சம்பத்துக்களையுங் கொடுக்கின்ற அத்தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்வதாலுண்டாகும் பயனை என்னால் அளவிட்டுக் கூறவியலாது— பிராமணோத்தமர்களே! அம்மகாவிஷ்ணு லக்ஷ்மி இவர்களின் மகிமையைச்சொல்வதற்கு யாரால் முடியும். அந்த லக்ஷ்மியின் ஸ்தோத்திரத்தை சுக்கிரவாரந்தோறும் எவன் துதிக்கின்றனனோ, அவன் ஸர்வாபி



ஷ்டத்தையும் பெற்று அரசனுக்கொப்பான சுகத்தையுமடைந்து பின்பு அத்தேவியின் பதத்தை யடைகின்றான்" என்று சவிஸ்தாரமாகக் கூறினர்.

# பதினோராவது அத்தியாயம்.

## கருட சரித்திரம்.

சூதமாமுனிவரை நோக்கி நைமிசாரணியவாசிகள் பின்னும் "புருஷோத்தமனாகிய மகாவிஷ்ணுவானவர் கருடனாலும் வருணனாலும் பூஜிக்கப்பட்டு, அவர்களுக்குப் பிரியத்துடன் என்ன வரங்களைக் கொடுத்தார் அவ்விஷயத்தைக் கிருபைகூர்ந்து எங்களுக்கறிவிக்க வேண்டுமென்று கேட்க அவர்களை நோக்கிச் சூதர் சொல்லுகின்றார்.

"ரிஷிகளே! எல்லாப்பாபங்களையும் நிவர்த்திசெய்பவரும் ஸர்வசம்பத்துக்களையுங்கொடுப்பவரும் லக்ஷ்மீபதியுமாகிய வரதராஜப்பெருமானுடைய மகாத்மியத்தைச் சொல்லுகின்றேன் கேளுங்கள். முற்காலத்தில் இராதந்திரமனுவினுடைய கல்பத்தில் வினதை புத்திரனாகிய கருடபகவான் தன் தாயாருக்குண்டான தாஸிவேலையைப்பார்த்து மிக்க வருத்தமடைந்து, அதை நிவர்த்திசெய்துகொள்ள மகாவிஷ்ணுவின் பூஜையே சிறந்த மார்க்கமெனக்கண்டு, ஸமுத்திரத்திற்கு மேற்காகவும் தேவதீர்த்தத்திற்கு நிருதி மூலையாகவும் இருக்கும் ஓரிடத்தில் கருடதீர்த்த மென்று மோர் தீர்த்த முண்டுபண்ணி, அதனில் விதியாசாரப்படி ஸ்நாநஞ்செய்து, அவ்விடத்திலேயே தவஞ்செய்துகொண்டு, தினந்தோறும் மகாவிஷ்ணுவைப் பூஜித்துத்துதி செய்ய வாரம்பித்தனர்.

"ஜயத்துடன் விளங்கப்பட்டவரே! ஸ்ரீவிஷ்ணுவே! விசாலநேத்திரங்களையுடையவரே! ஜயத்துடன் லக்ஷ்மியால் பூஜிக்கப்பட்டவரே! ஜயத்துடன் உலகத்தை ரக்ஷிக்கின்றவரே! ஆதியந்தமற்றவரே! மூன்று உலகங்களுக்குங் கர்த்தரே! வசுதேவகுமாரரும், சங்கர்ஷணசொரூபியும், அனந்தரூபியும், பிரகாசமாய் விளங்கப்பட்டவரும், யதுகுலதிலகராயுமிருக்கு முமக்கு வந்தனஞ் செய்கின்றேன்." என்று தாமரைக்கண்ணனாகிய அவ்விஷ்ணுவைப் பிரார்த்தித்துப் பின்னும் சொல்வார் "சர்வலோகங்களுக்கும் கர்த்தாவாய் விளங்கும் ஓசுவாமி! முன்னொரு சமயத்தில் கத்ருவான என் பெரியதாயார் ஸ்நானத்திற்குச் சென்றிருக்குமிடத்தில், அச்சமயத்தில் ஆகாயமார்க்கமாய்ச் சென்றுகொண்டிருந்த உச்சைச்ரவஸ் என்னுங் குதிரையினுடைய வால் துனியை தன் புத்திரர்களான கிருஷ்ணசர்ப்பங்களால் சுற்றிக்கொள்ளும்படி செய்துவிட்டு என்தாயாராகிய வினதையைப் பார்த்து 'அவ்வசுவத்தின்வால் கறுப்பாகவன்றோ விருக்கின்ற' தென வஞ்சகமாகச்சொல்லி, அவர்கள் சபதப்படி என் மாதாவை யவளுக்கடிமையாக்கிக்கொண்டனள். இது தங்களுக்குத் தெரியாத விஷயமன்று; அவளுடைய அவ்வடிமைத்தன்மையை நிவர்த்திசெய்து ரக்ஷிக்கவேண்டு' மென்று" வணங்கி நிற்கும் கருடனைப்பார்த்து " ஓ கருடா! நம்முடைய சந்நிதானத்தில் மகாதேவராயும், அம்பாளுடன் கூடினவராயும், பிரம்மசொரூபியாயும், ஆதியந்த மில்லாதவருமாகிய சிவபெருமானைத் தியானித்துப் பக்தியுடன் அமிர்த புஷ்கரணியில் ஸ்நானஞ்செய்து நியமத்துடன் அவரைப் பூஜைசெய்து வருவாயானால் ஸர்ப்பங்களாலுண்டாகிய விஷபாதை உனக்குண்டாகமாட்டாது; ஆதலால் அவ்விதமே செய்து அவ்வரத்தைப் பெற்றுவருவாய்" என்று அனுக்ரகித்தனுப்பினார் மகா விஷ்ணு.

அவ்வுபதேசத்தைச் சிரமேற்கொண்ட கருடாழ்வார், உலகங்களுக்கு நன்மையைக்கொடுக்கும் சிவபெருமானை வழிபட்டதனால், எவ்விதம் [illegible] புத்திரபாக்கியத்தைப் பெற்றனனோ, அதைப்போல விஷத்தினாலுண்டாகும்பயமானது தன்னை



யணுங்காவண்ணம் வரம்பெற்று, மேலேயெழும்பி உச்சைச்ரவஸ் என்னும் குதிரைவாலிற் சுற்றிக்கொண்டிருக்கும் பாம்புகளைத் [illegible]யும் புசித்துவிட்டுத் தன் பெரியதாயாருக்கு அக்குதிரையின் வால் வெளுப்பாயிருப்பதைக் காண்பித்துத் தன் தாயாரின் தாசிவேலையை நிவர்த்திசெய்து, பின்பு தேவலோகஞ் சென்று இந்திரனுடைய மாளிகையிலிருந்து அவ்விடத்திலுள்ள அமிர்தத்தைக் கொண்டுவந்து சற்குருவாகிய தக்ஷிணாமூர்த்திக் கபிஷேகஞ்செய்து (புத்திமானாகிய கருடன்) தன் தாயாருடன் சிறந்த ஞானத்தைப்பெற்றார்.

இச்சரித்திரத்தை எவன் தினந்தோறும் சிந்தனைசெய்கின்றானோ அவனுக்கெந்நாளும் விஷத்தினால் அபயமுண்டாகாது ஏ! முனிவர்களே! கருடாழ்வார் வரம்பெற்ற அன்றுமுதல் அந்த க்ஷேத்திர எல்லைகளுக்குட்பட்டவர்கட்கு விஷபாதையுண்டானாலும் முட்கிறந்தற் கெர்ப்பமாயிருக்கும் அதனையறிந்து அங்குபோய் வாசஞ்செய்யவேண்டும். ஓ பிராமணர்களே! உலகநாயகனான விஷ்ணுவானவர் வருணனால் சோடசோபசாரங்களால் பூஜிக்கப்பட்டு அப்புண்ணிய க்ஷேத்திரத்திற்கு மேற்கில் விளங்கிவருகின்றார்.

இச்சரித்திரத்தைக் கேட்பவர்கள் மனோபீஷ்டத்தையும், புத்திரலாபத்தையும், துக்க நிவர்த்தியையும், பெறுவார்கள்" என்று சூதமகாமுனிவர் சொல்லியருளினார்.

# பனிரெண்டாவது அத்தியாயம்.

## சங்காரணிய யோகி சரித்திரம்.

நைமிசாரணிய வாசிகளான சௌனகாதி முனிவர்கள் சூதரை நோக்கி "ஸகலமுங் கற்றுணர்ந்த [illegible]!

வான ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஒரு சமயத்தில் சங்கராசாரிய சுவாமிகளுக்கு அறுபத்துநான்கு கலைகளையும் உபதேசித்தருளினதாக முன்பு சொல்லியிருக்கின்றீர்கள் அச்சரித்திரத்தை விரிவாய்க் கேட்கவேண்டுமென்ற அவா எங்களுக்குண்டாகின்றது. மேலும் ஸ்ரீசுப்பிரமணியருக்கு ஸ்வாமிநாதரெனப் பெயர்வாய்ந்தமைக்குக்காரணத்தையும்சவிஸ்தாரமாகச்சொல்லியருளவேண்டும். " எனப் பிரார்த்திக்க அம்முனிவர்களை நோக்கி மயிர்கூச்சலுடனும், மிக்க சிரத்தையுடனும், தயவுடனும், எல்லாப் புராணங்களையும் உணர்ந்த சூத முனிவர் சொல்லத்தொடங்கினர்.

"முற்காலத்தில் கேரள தேசத்தில் காலடி யென்னும் பெயருடைய அழகிய ஓர் பட்டணத்தில் பிரபுவானவரும், எல்லாவித்தைகளிலும் சிறந்தவரும், சிவபக்தரும், ஐம்புலன்களை யடக்கியவரும், சிவகுருவென்னும் பெயருடையவருமான ஓர் பிராமணோத்தமரிருந்தார். அவருக்கு நல்லொழுக்க முள்ளவளும் பதிவிரதையும், மிகுந்த சௌந்தரியம் பொருந்தியவளும், புருஷனுக்குப் பணிவிடை செய்வதில் மிக்க பிரியமுள்ளவளும், சிவபூஜையிலாசை யுள்ளவளுமாகிய, ஆரியாம்பாளென்னும் பெயருடைய ஓர் மாது மனைவியாயிருந்தாள். அவளுடன் அச்சிவகுருவென்னும் பிராமணர் மிகுந்த பக்தி சிரத்தையோடு சிவபெருமானைப் பூஜைசெய்வதும், சிவவிரதங்களை யனுஷ்டிப்பதும் சிவனடியார்களை யுபசரிப்பதுமான சிவகைங்கரியங்களைச்செய்துகொண்டு ஓர் சத்புத்திரனை யுத்தேசித்து வெகுகாலந் தவஞ்செய்து வந்தனர்.

சிவபெருமானும் அவர்களுடைய பக்திக்கிரங்கி ஓர் நாள் சொப்பனத்தில் அப்பிராமணனுக்கு முன்வந்து 'ஓ! பிராமணா! உனக்கிஷ்டமான புத்திரனைக்கொடுக்க வந்திருக்கின்றேன். ஆகையால் பிரியத்துடன் பெற்றுக்கொள்ளுமென்று வரங்கொடுத்து விட்டு அங்கே மறைந்தருளினர். பின்பு பிரம்மதேவனின் வேண்டுகோளால் துஷ்டர்களைக் கண்டிக்கவும் நல்லவர்களை ரக்ஷிக்கவும்



எல்லா வுலகங்களினுடைய நன்மையின் பொருட்டு சர்வஞ்ஞரும் கிருபாமூர்த்தியுமான சிவபெருமானே அவர்களுக்குப் புத்திரனாகப் பிறக்க வேண்டுமென்று திருவுளங் கொண்டார்.

இவ்விதம் சொப்பனங்கண்ட சிவகுரு மிக்க வானந்தத்துடன் விழித்தெழுந்து தனது நல்லொழுக்கமுடைய பாரியாளை நோக்கித் தான் சொப்பனத்திற் கண்ட விஷயத்தைச் சொன்னார். அதைக்கேட்ட அந்த நன்மனைவி மகாசந்தோஷத்தால் மலர்ந்த செந்தாமரை போன்ற முகத்துடன், சொப்பனத்திற் கண்ட விஷயத்தைத் தினந்தோறும் சிந்தித்துக்கொண்டு, அவ்விஷயத்தைத் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு காலங்கழித்து வந்தனள். இவ்விதமாக சிலநாட்கள் கழிந்த பிறகு சிவபெருமானருளால் அவளும் கர்ப்பவதியாகிப் பத்தாவது மாதத்தில் நல்ல சுபதினத்தில் சிவபெருமானுடைய அம்சமாகிற புத்திரனைப் பெற்றாள். அச்சமயத்தில் தேவதுந்துபி வாத்தியங்கள் முழங்கின புஷ்பமாரி பொழிந்தது.

பெற்றோர்கள் அக்குழந்தையைக் கண்டு மகா சந்தோஷமடைந்து, அதற்கு ஜாதகர்மா முதலான கிரியைகளைச் சிறப்பாகச் செய்து, சங்கராசாரியரென்னும் நாமகரணஞ் செய்து வளர்த்து வந்தார்கள். அக்குழந்தை இளமைப் பருவமாயிருக்கும் பொழுதே அதன் பிதா சிவலோகத்தை யடைந்து விட்டார். பிறகு சகல வித்தைகளையுங் கற்று வித்வானாயிருக்கின்ற சங்கராசாரியர் மாதாவினுடைய உத்தரவைப் பெற்றுக்கொண்டு சந்தோஷமனதுடன் சந்நியாச ஆசிரமத்தை யடைந்து புண்ணிய க்ஷேத்திரங்கள்தோறுஞ் சென்று ஆங்காங்கு சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு பின்பு காமியாரண்ய க்ஷேத்திரத்தை யடைந்து, அமிர்தபுஷ்கரணியில் ஸ்நானம் செய்து சற்குருவாகிய தக்ஷிணாமூர்த்தியைத் தோத்திரஞ் செய்ய வாரம்பித்தார்.

"உபாசிக்கின்ற மனிதர்களுக்கு மெய்ப்பொருளாயுள்ளவரும், வடவிருக்ஷத்தினடியில் வாசஞ் செய்பவரும், அடியார்களை ரக்ஷிப்பதிற் றிருப்பையுடையவரும், [illegible]

விளங்கப்பட்டவரும், மிகுந்த அறிவைக் கொடுப்பவருமாகிய குருமூர்த்தியின் இருப்பிடமானது என் மனதில் விளங்கி வருகின்றது. அன்றியும் குளிர்ந்த பார்வையுடையவரும், அழிவற்ற [illegible] இருப்பிடமாயுள்ளவரும், ஆதியான ஆசாரியரும்வடவிருக்ஷத்தினடியிலெழுந்தருளி யிருப்பவரும், புன்சிரிப்பினாலும் மௌனத்தாலும் மகரிஷிகளுக்குண்டான அஞ்ஞானத்தை நிவிர்த்தி செய்கின்றவருமாகிய தக்ஷிணாமூர்த்தியை யான் வணங்குகின்றேன். தமோகுணத்தை நிவிர்த்தி செய்யப்பட்ட சின்முத்திரையின் மகிமையால் முனிவர்களுக்குண்டான மலமாயாகன்மங்களை நிவிர்த்திசெய்து கிருபையால் மகாதத்துவ மசியென்னும் உண்மை வாக்கியத்தை யருளுகின்றவும்மை வணங்குகின்றேன்; வரையறையில்லாத கிருபையென்னும் அமிர்தப்பிரவாகத்தையுடைய கடைக்கண் பார்வையால் அருள் செய்கின்றவரும், அநாதியாயுள்ள அஞ்ஞானமாகிற இருளுக்கு சூரியோதயகாலம் போன்றவரும், ஒப்பற்றகுரு சிரேஷ்டராயுமிருக்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை வணங்குகின்றேன். மேலும் ஒரு கையில் வித்யாமுத்திரையையும் ஒரு கையில் பரசுவையும், ஒரு கையில் ஸர்ப்பத்தையும், கொண்டு, ஒரு கையைத் தன் முழந்தாளில் வைத்திருப்பவரான குரு சிரேஷ்டரை யான் தரிசிக்கின்றேன்.

மன்மதனுடைய தேகசௌந்தரியத்தை தகித்தவரும், புலித்தோலை யாடையாகக் கொண்டவரும், அஞ்ஞான மௌனும் பர்வதத்திற்கு வடவா முகாக்கினி போன்றவரும் ஒப்பற்றவருமாகிய குரு சிரேஷ்டரை யான் தரிசிக்கின்றேன். தனது வலது கால்மீது வைக்கப்பட்டிருக்கின்ற இடதுகால் பாதத்தை யுடையவரும், வயிற்றில் முழந்தாளைச் சேர்த்து யோகப்பட்டையாற் கட்டிக்கொண்டிருப்பவரும், மாயையின் மீது வைக்கப்பட்டபாதத்தை யுடையவரும், பிரணவ சுரூபியும் நல்லொழுக்கத்திற் கிருப்பிடமானவருமான குரு சிரேஷ்டரை நான் நமஸ்கரிக்கின்றேன் தன்னருகிலிருக்கின்ற ரிஷிகளுக்கு எவர் உண்மைப் பொருளை யுபதேசிக்க இச்சிக்கின்றனரோ அக்குரு சிரேஷ்டரை நான்வெகு காலமாய் செய்த புண்ணிய விசேடத்தால் நமஸ்கரிக்கின்றேன்.



TAMIL NADU ARCHIVES 43உஉ

தொங்கும் ஜடைகளால் விளங்கப்பட்டவரும், மூன்றாம் பிறையினை முடியின்மேற் கொண்டவரும், சந்திரனைப்பழித்த முகத்தையுடையவருமாகிய குருசிரேஷ்டர் [illegible]த்தில் பிரகாசிக்கின்றார். தம்மை உபாசிக்கின்றவர்களின் [illegible] யும் பொருட்டுப் பூர்ணசந்திரன்போல் பிரகாசிக்கச் [illegible] இவ்விடத்திலிருக்கின்றவருமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் தரிசனத்தால் என் மனமாகிற சந்திரகாந்தக் கல்லானது உருகுகின்றது இது மிகவும் ஆச்சரியம்.

கொவ்வைக்கனி போன்ற அதரத்தை யுடையவரும், சந்திர கலையைச் சிரத்தில் தரித்தவரும் வீணையை யுடையவரும், சக்கரமாகச் சுற்றிக்கொண்டிருக்கின்ற சடாசமூகத்தை யுடையவரும் யோகிகளால் உபாசிக்கப்பட்டவரும், பிறரை ரக்ஷிப்பதில் மகிமை பொருந்திய பாதாரவிந்தங்களை யுடையவருமான உம்மை வணங்குகின்றேன். குற்றமில்லாதவர்களாயும் நிர்மலமாகிய சித்தசுத்தி யுடையவர்களாயுமிருக்கின்ற சுகர் முதலான முனிவர்கள் எவரை யுபாசிக்கின்றார்களோ அத்தன்மையான மகேசுவரராகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை அஞ்ஞானமாகின்ற பிணிபோகும் பொருட்டு யான் உபாசிக்கின்றேன். எவர், பிரசன்னமான தக்ஷிணாமூர்த்தியின் வடிவை எப்பொழுதும் கொண்டிருக்கின்றனரோ, எவர் சிரத்தில் சந்திரனை யணிந்து கொண்டிருக்கின்றனரோ, எவர் குற்றமற்ற வித்தையை யுடையவரோ, எவர் வேதாந்தத்தின் உண்மைப் பொருளை யுபதேசிக்கின்றனரோ, அத்தகைய தக்ஷிணாமூர்த்தியை யான் வணங்குகின்றேன்.

தமது தேககாந்தியால் அவமதிக்கப்பட்டிருக்கின்ற குருந்த புஷ்பத்தின் மொட்டுப்போன்ற திருமேனியை யுடையவரும் வடவிருக்ஷத்தினடியில் வசிப்பவரும், கிருபையாகிற அமிர்தப் பிரவாகங்களையுடைய நேத்திரங்களால் முனிஜனங்களைப் பார்ப்பவரும், அஞ்ஞானமான இருளை நிவிர்த்தி செய்பவரும் தத்துவமசியென்னும் வாக்கியத்தைச் சின்முத்திரையால் போதிக்கின்ற [illegible] வரும் கிருபாகடாக்ஷத்தால் ஞானத்தை [illegible]

மான தக்ஷிணாமூர்த்தியை யான் வணங்குகின்றேன். வெளுத்த மேனியடையாதவர்களும் நெற்றியிற் கண்ணில்லாதவர்களும் பொறுமையில்லாத வேஷத்தை யுடையவர்களும் ஸர்ப்பத்தை யாபரணமாக அடையாதவர்களும், அறிவை விளக்கப்பட்ட சின்முத்திரையை யடையாதவர்களும், நீங்காத நித்திரையை யுடையவர்களும், பூரணமில்லாத இச்சை யுடையவர்களுமாயிருக்கின்ற, மற்ற தேவர்களால் நமக்குச் செய்யப்படவேண்டுவன வொன்றுமில்லை: இப்பூமியில் அளவற்ற தெய்வங்களிருக்கின்றன. அவைகளிலெல்லாம் என் மனத்திற்கு ஒவ்வாது எனக்கு அனுக்கிரகஞ் செய்வதிற் பூரண கிருபையுடைய தக்ஷிணாமூர்த்தியையே நான் வணங்குகின்றேன்.

சந்தோஷத்தின் பொருட்டு மனோக்ஞமான சந்திரனைச் சிரசில் தரித்தவரும் விபூதியணிந்த அழகிய திருமேனியை யுடையவரும், உலகமாகிற இந்திர ஜால வித்தையைச் செய்வதில் வல்லவரும், ஜோதி சொரூபியும், வடவிருக்ஷத்தினடியிலெழுந்தருளியிருப்பவருமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை யான் வணங்குகின்றேன்'

என்று இவ்வாறு குருநாதரும் அழிவில்லாதவருமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியாகிய சற்குருவை வணங்கி அவருடைய சந்நிதியில் நின்றுகொண்டு 'தனக்கு அறுபத்துநான்கு கலைகளையும் அருளும்வண்ணம் பிரார்த்தித்து நிற்கும்போது, தேவர்களால் துதிக்கப்படும் சற்குருவான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியானவர் சனகாதிகளுடன் தோன்றி, அவரது வேண்டுகோளின்படி மகாவாக்கியத்தையும் அறுபத்துநான்கு கலைகளையும் உபதேசித்து அந்த சங்கராசாரியரால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்ட சற்குருவான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அவ்விடத்திலேயே மறைந்தருளினர்.

பிறகு தேசிகோத்தமரான சங்கராசாரியர் வித்தைகளுடைய முடிவையடைந்து துஷ்டர்களைக் கண்டிப்பதில் பிரியமுடையவராகி, சகல தர்மங்களையும் ஸ்தாபனஞ் செய்து, அறுபத்துநான்கு கலைகளுடனும் பிரகாசித்து முடிவில் சிவசாயுஜ்யத்தை யடைந்தனர். ஆகையால் எல்லா க்ஷேத்திரங்களிலும் காசியா



ணிய க்ஷேத்திரமானது மிகவுஞ் சிறந்தது அவ்விடத்தில் எல்லா தருமங்களும் வித்தைகளும் சித்திக்கின்றன.

என்றிவ்விதம் சூதர் சொல்லிவிட்டுப் பின்னர் ஸ்வாமிநாதருடைய மகிமையைப்பற்றிக் கூறத் தொடங்கினர்.

"கேளுங்கள் பிரமஞோத்தமர்களே! பூர்வகாலத்தில் கைலாசபதியான பரமேசுவரன் தன் நாயகியான பார்வதியுடன் தேவர்களை ரக்ஷிக்கும் வண்ணம் வேண்டிக் கொண்டிருக்கும் போது, சுப்பிரமணியக்கடவுள் கங்கையிலுள்ள நாணற்காட்டில் திருவவதாரஞ்செய்து, கிருத்திகாதேவிகளாகிய ஆறுபேர்களிடத்தில் ஸ்தன்னியபானஞ் செய்யும் பொருட்டு ஷண்முகருமானவராயினர். பின்பு பாலனானவரும், எல்லா குணங்களையுடையவரும் சர்வஞ்ஞரும், மயில் வாகனத்தை யுடையவருமாகிய சுப்பிரமணியர், சிவபெருமானுக்குப் பிரணவத்துடன் பஞ்சாக்ஷரத்தை ஒரு காரணத்தால் உபதேசித்து சுவாமிநாதனென்ற பிரசித்த நாமத்தைப்பெற்றார்; அன்றுமுதல்" 'ரிஷிசிரேஷ்டர்களே' " அவருக்கு அப்பெயரே வழங்கி வருகின்றது, அன்றியும் அவரை வேதங்கள் குமாரகுருவென்று சொல்லுகின்றன.

சிவபெருமான் சுப்பிரமணியரைப்பெற்று பிரசித்தியடைந்ததுபோல என்குருவான வியாசர் சுகரையடைந்து பிரசித்தி பெற்றார்.) பின்பு லோகோபகாரத்தின் பொருட்டு அக்குமாரக்கடவுள் எடுத்த பதினாறாயிரம் ஜென்மங்களைப் பதினாறாயிரம் பதிகங்களாக ஸ்திரீகள் சூத்திரர் முதலியவர்கள் மோக்ஷமடையும் வண்ணம் பாடிய ஸகலகுண ஸம்பன்னரும், ஸகல வித்தைகளிற் சிறந்தவருமாகிய ஞானசம்பந்தரென்னும் பிராமணராகப் பூமியில் அவதரித்து, நல்லோர்களை ரக்ஷிக்கவேண்டி, சிவனடியார்களுடன் கூட சிவக்ஷேத்திரங்கள் தோறுஞ் சென்று, அநேக புண்ணியங்களைச் செய்து, சென்றவிடமெல்லாம் சிவபெருமான்மேற் பதிகங்கள் பாடி, துஷ்டர்களாகிய பௌத்தர்களைக் கண்டித்து அவர்களை ஜயித்து, கடைசியாக சிவசாயுஜ்யத்தை யடைந்தார்.

இவ்வத்தியாயத்தை யெவர்கள் பக்தி சிரத்தையோடு படிக்கின்றார்களோ அவர்களுக்கு குருவருளால் தர்மார்த்தகாம மோக்ஷங்கள் சித்திக்கும், விஷ்ணு உபமன்யு, சனகர், ஸ்கந்தர், சந்திரன், நந்தி, முதலான முக்கிய ஆசாரியர்கள் எந்தமூர்த்தியின் கிருபானுக்கிரகத்தால் மேன்மையடைந்தனரோ அத்தன்மையுள்ள, சற்குருவும், மனோக்ஞமான திருமேனியினரும் புன்சிரிப்பால் பிரகாசிப்பவரும், சற்சொரூபியும் மங்களரூபியுமாகிய தக்ஷிணாமூர்த்தியை யான் மனதில் தியானிக்கின்றேன்." என்று கூறித்தியானத்திலழுந்தி விட்டார் சூதமாமுனிவர்.

## பவிஷ்யோத்தரபுராணம் காசியாரணிய மகாத்மியம்

12வது அத்தியாயம் முற்றிற்று.



உ

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திகுருவே நம:

ஸ்காந்தபுராணம் க்ஷேத்திரகண்டத்திலுள்

# காசியாரணியமாகாத்மியம்.

## முதலாவது அத்தியாயம்.

### நந்திகேசுவர சனத்குமார சம்வாதம்.

நைமிசாரணிய வாசிகளான முனிவர்கள் சர்வஞ்ஞரான சூதரை நோக்கி "முனிசிரேஷ்டரே! சர்வபாபங்களையும் நிவிர்த்திசெய்யும் வில்வாரணிய மாகாத்மியத்தைக் கேட்டு மிகுந்த சந்தோஷத்தையடைந்தோம். அக்கதாமத்தியில் காசியாரணிய ஸ்தலத்தை தரிசிப்பதானது பதினான்குலோகங்களிலுள்ள க்ஷேத்திரங்களை தரிசிப்பதைக்காட்டிலும் மேலான பலனைக்கொடுக்குமென்றும், ஒரு முறை பரமசிவன் அந்த ஸ்தலத்தைத் தனது வாசஸ்தலமென்று பார்வதியினிடம் கூறியிருக்கின்றாரென்றும் அத்தலமே தர்மார்த்த காமமோக்ஷத்தைக் கொடுக்கவல்லதென்றும் சொல்லியருளினீர். அவ்வளவு சிறப்பு வாய்ந்த அஸ்தலம் எங்குளது? அதன் மகிமை யென்ன. இவ்விஷயங்களை உலக நன்மையின் பொருட்டு எங்களுக்குச் சொல்லியருளுவீர்" என்று பிரார்த்திக்கச் சகல சாஸ்திரங்களிலும் வல்ல அச்சூதர் சொல்லத் தொடங்கினர்.

"பாக்கியவான்களான ஓ முனிவர்களே! நன்றாகக் கேட்பீர்கள். பூர்வகாலத்தில் உலகமுய்யும் பொருட்டு நந்திகேசுவரரால் யோகிகளிற் சிறந்த சனத்குமாரருக்குச் சொல்லப்பட்டதும், ரகசியமானதும், மோக்ஷத்தைக் கொடுக்க வல்லதுமான சரித்திரங்களெல்லாவற்றையு முங்களுக்குச் சொல்லுகின்றேன். அக்காலத்தில் சனத்குமாரர் நந்திகேசுவரரை நோக்கி "எல்லா

தேவர்களுக்கு அதிபரும், சர்வஞ்ஞரும், கிருபைக்கிருப்பிடமானவரும், வேதாகமபுராணங்களின் சந்தேகமென்ற இருளுக்குச் சூரியனைப் போன்றவரும், வேதவேதாந்தங்களினுண்மையை யறிந்தவரும், சராசரங்களாயிருக்கின்ற சகல பிராணிகளுக்கும் நான்கு புருஷார்த்தங்களையும் கொடுக்கப்பட்டவருமாகிய ஓ நந்தி யெம்பெருமானே! தேவரீரால் சொல்லப்பட்ட சிவபெருமானின் மகிமையை யான் கேட்டு உம்முடைய அனுக்கிரகத்தால் அவைகளைச் சதா நினைத்துக்கொண்டிருந்தேன்.

அப்படியிருப்பினும் சில விஷயங்களை பக்தி சிரத்தையோடு மறுபடியும் கேட்க விரும்புகின்றேன். ஆகையால், தாங்கள் தயவு செய்து எனக்கு அவ்விஷயங்களைத் தெரிவிக்கவேண்டும். மேலும், தாங்கள் எல்லா உலக விஷயங்களையும் நன்கறிவீர். சர்வபுராணங்களிலிருக்கின்ற ஸ்தூல சூக்ஷ்ம அர்த்தங்களை யறிந்தவர்களாகிய தாங்கள் பூமி அந்தர சொர்க்கம் இவைகளிற் புருஷர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுக்க வல்லதும், எல்லா கருமங்களையும் செய்து சித்தி பெறக்கூடியதும், தர்மார்த்த காமமோக்ஷத்தை கொடுக்கக்கூடியதும், ஒழுக்கத்துடன் தபஞ்செய்பவர்களுக்குத் தக்க பலனை யளிப்பதும், விபூதி ருத்திராக்ஷத்தைத் தரித்திருப்பதினாலும், சிவத்தியானம் செய்வதினாலும், பெறற்கரிய பதவியை யளிப்பதும், பெரியோர்கள் முன்பு தவஞ்செய்து முக்தி பெறத்தகுந்த இடமானதும், அங்கு வசிக்கும் புத்தியில்லாதவர்களுக்கும், பாபிகளுக்கும், கீழ்ப்பட்டவர்கட்கும், தாவரம் முதலிய சராசரவஸ்துக்களனைவற்றிற்கும், புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியதும், பூமி முதல் அந்தரம் ஈறாக உள்ளவைகளில் உத்தமமானதும், சகல தானபலன்களையும், ஒருங்கே அளிக்கக் கூடியதுமான, ஸ்தலம் எங்கேயிருக்கின்றது? அதைச் சொல்லியருளவேண்டும்" என்று பிரார்த்தித்து, நல்லொழுக்கம் நிறைந்த பல முனிசிரேஷ்டர்களோடுகூடி, மிக்க பயபக்தியுடன் கைகூப்பிஸ்தோத்தரித்து, சம்சார சாகரத்தினின்றும் கரையேற்றி ரக்ஷிப்பவராயும், உலகத்துக்கு அனுக்கிரகஞ்செய்யும் ஆசாரியராயும், சகல சாஸ்திரங்களிலும் சமுத்திரம் போல் விரிந்த ஞான



முடையவராயிருக்கும் நந்திகேசுவரரின் பாதாரவிந்தங்களில் நமஸ்கரித்து நின்றனர்.

—:(o):—

# இரண்டாவது அத்தியாயம்.

## நந்திகேசுவரர் எல்லா க்ஷேத்திரங்களின் மகிமையையும் பற்றிக்கூறினது.

நந்திகேசுவரர் சனத்குமாரரை நோக்கிச் சொல்லுகின்றார். "சனத்குமாரரே! பக்தி சிரேஷ்டராயிருக்கின்ற உம்மால் கேட்கப்பட்டது ஓர் புண்ணிய க்ஷேத்திரத்தின் விஷயமாயிருக்கின்றது. ஆகையால் அதைச் சொல்லுகின்றேன் கேளும். மேலும் ஸம்ஸாரத்தில் மிக்க ஆசை வைத்திருக்கும் பிராணிகளின் க்ஷேமத்தின் பொருட்டே நீர் இப்புண்ணிய விஷயத்தைக் கேட்டீர். சிவபெருமான் அவ்வுயிர்களின் கருமங்களுக்குத் தக்கபடி சுகாசுகத்தைக் கொடுத்தருளுகின்றார். அதைமாற்ற ஒருவராலும் முடியாது. அச்சிவபெருமானுடைய முக்கிய வாசஸ்தலங்களையும் அவரது பெருமையும் பற்றிச் சொல்லுகின்றேன். முதலிற் சிவக்ஷேத்திரங்களைச் சொல்லுகின்றேன். அவைகளாவன.

கங்கை யமுனை இவைகளின் கரையிலும், சுபமாயிருக்கின்ற கோதாவரிக் கரையிலும், ஸரஸ்வதி தீரத்திலும், ஆம்ராவதி தீர்த்திலும், காவேரிக்கரையிலும் உள்ள க்ஷேத்திரங்களிலும், பரிசுத்தமாகிய முக்தாவதிக் கரையிலும் அழகாயிருக்கின்ற கிருஷ்ணவேணிக் கரையிலும், தாமிரபரணி தீரங்களிலும், லக்ஷ்மீ நதிக்கரையிலும் சுபமாயிருக்கின்ற கருமவதிக் கரையிலும், காளிந்தி நதிக்கரையிலுமுள்ள க்ஷேத்திரங்களிலும், ரேவாநதி, திவ்யமான

வை கைநதிக்கரையிலும், ஞானத்தைக் கொடுக்கின்ற கோமதிக் கரையிலும், துங்கபத்திரா நதிக்கரையிலுமுள்ள, க்ஷேத்திரங்களிலும்; பொன்னிறமாயிருக்கின்ற சுவர்ணமுகிக் கரையிலும், பெண்ணை நதிக்கரையிலும், உள்ள க்ஷேத்திரங்களிலும், உத்தமமாயிருக்கின்ற மூராஜீ தீரத்திலும், அயிராவதி பாதுகை இந்நதிக்கரையிலும், சம்வரணைக்குச் சமீபத்திலும், குமாரி தீரங்களிலுள்ள க்ஷேத்திரங்களிலும், புண்ணிய பூமியாகிய கௌசிக தீரத்திலும், பம்பாநதி, துவாரகை, மணிகர்ணிகை இவைகளின் கரைகளிலும், மாலினீ, வேத்திரவதீ, கந்தவதீ இந்நதிக்கரைகளிலும், ரம்மியமாகவிருக்கின்ற சந்திரபாகைக்குச் சமீபத்திலும், சுபமாயிருக்கின்ற சித்ரோத்பலதடத்திலும், கன்யாநதி, பிரம்மநதி, மதுமதி, இவைகளின் கரைகளிலும், பயோஷ்ணிக்கரைகளிலுமுள்ள க்ஷேத்திரங்களிலும், மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய கமலாலயக்கரையிலும், சரயூ நதிக்கரைகளில் இருக்கும் ஸ்தலத்திலும், சதத்ருக்குச் சமீபத்திலும், விதஸ்தா நதிக்கரையின் அருகாமையிலுமுள்ள க்ஷேத்திரங்களிலும், முக்கியமாயிருக்கின்ற மூராளாதடத்திலும், பாதாளகங்கைக்குச் சமீபத்திலும் புண்ணியமாயிருக்கின்ற சோணபத்திரைக்கரையிலும், வெண்மையாயிருக்கின்ற சித்தசரசின் ஸமீபத்திலும், குற்றமற்றமானஸ தடத்திலும், இந்தரபிரத்தியும்ன சரசிற்குச் சமீபங்களிலிருக்கின்ற பருவதங்களிலும், சமுத்திரக் கரையிலிருக்கின்ற க்ஷேத்திரங்களிலும், மற்றுமுள்ள தீபாந்தரங்களிலும் ஸர்வநதிகளினுற்பத்தி ஸ்தானங்களிலும், புண்ணிய க்ஷேத்திரங்களிலும், உள்ள விசேஷங்களைப் பற்றியும் அவைகளின் மகிமை, தரிசனபலன்கள், இவைகளைப்பற்றியும் முன் சொல்லியிருக்கின்றேன். இவைகளையேயன்றி மூன்று உலகங்களிலுள்ள ஸ்தலங்களையும் அவைகளின் மாகாத்மியபலன்களையும்பற்றி தனித்தனியாக முன்பு சொல்லியிருக்கின்றேன். அவைகளில் எந்த க்ஷேத்திரத்தைப் பற்றியறிய விரும்புகின்றீர்" என்று சிரித்துக் கொண்டு, கிருபைக் கிருப்பிடமாகிய நந்திகேசுவரர் கேட்க, அதைக்கேட்டு பகவனாயிருக்கின்ற சனத்குமாரர்சொல்லுகின்றார்.

"எம்பெருமானே! உம்மையேசரணமாகப் பெற்றிருக்கும்



என்னைப்போன்ற மாணுக்கன் உமக்கு வேறுயாரிருக்கின்றார்கள்? அதற்கு, தாங்களென்னிடங்கொண்ட கிருபையே சரியான சாக்ஷியாகும். முன்பு எனக்கு அநேக க்ஷேத்திரங்களையும், அவைகளைத் தரிசனஞ் செய்வதாலுண்டாகும் பலன்களையும், தீர்மார்த்தங்களின் சித்தியையும்பற்றி தனித்தனியாகச் சொல்லியிருக்கின்றீர்கள். என்றாலும் சகல க்ஷேத்திரங்களையும் தரிசனம் செய்வதாலுண்டாகும் பலன்களனைத்தையும் ஒருங்கே கொடுக்க வல்ல க்ஷேத்திரம் இன்னதென்பதையும், அதனுடைய மகிமை யெவ்வளவு என்பதையும் பற்றிச்சொல்லியருள வேண்டுகின்றேன். அறிந்தும் அறியாமலுமிருக்கின்ற சராசரங்களினுடைய நன்மையின் பொருட்டே யான் கேட்கின்றேன். அது தங்களுக்குந் தெரிந்த விஷயமே. மேலும் இவ்விஷயத்தைப் பற்றியே யறியமிக்க ஆவலுடன் அநேகம் ரிஷிகள் இங்கு சூழ்ந்து நிற்கின்றனர். அவர்கள் யாரெனில் வசிஷ்டர், புலஸ்தியர், புலகர், மரீசி, விசுவாமித்திரர் குத்சர், பரத்துவாசர், அத்திரி, ததீசி, வத்சர், வியாஸர், வரதந்து, அகஸ்தியர், சூதர், மார்க்கண்டேயர், மிருகண்டு, துருவாசர், கிரது, கண்ணுவர், ஜமதக்கினி, உபயாஜர், யாஜர், குமுதாக்ஷர், சக்தி, மாண்டவியர், மதங்கர், கண்டரீஷர், கண்டு, ரோமசர், தால்டபியர், தாந்தர், சுவேதகேது, சண்டகவுசிகர், சாண்டில்லியர், சாகடாயினர்; கௌசிகர், ஆபஸ்தம்பர், பிருகஸ்தம்பர், போதாயனர், கபோதகர், முதலானவர்களே

சிவபக்தர்களின் தலைமை பெற்றவரும், வேதாந்தப் பொருளின் உண்மையை அறிந்தவரும் வேதாகம புராணங்களில் உண்டாகின்ற சந்தேகமாகிற இருளிற்குச் சூரியனைப்போன்ற தேவரீரும், எல்லா உலகங்களிலும் வியாபகருமாயிருக்கின்ற தேவரீரைப் பிரார்த்திக்கின்றோம் தேவரீருடைய வாக்கிலிருந்து வெளிவரும் வசனங்களைக் கேட்டு நாங்கள் எல்லோரும் இரட்சிக்கப்பட்டவர்களாயிருக்கின்றோம். சிவாகமம், சிவாசாரம், சிவாந்திரம், சிவரகசியம், இவைகளெல்லாம் தேவரீருடைய அநுக்கிரகத்தால் விளைந்தனவேயாகும். உயர்ந்தனவாயிருக்கும் ஆக

மங்களின் ரகஸியங்களை, பரமசிவன் பார்வதி சுப்பிரமணியர்
இவர்களிடத்தில் கேட்கவேண்டும். அந்தஸ்வரூபமே தேவரீராக
யிருப்பதால் சைவாகம புராணங்களின் இரகஸியங்களைச்சொல்
வதில் தேவரீரைப் பார்க்கிலும் அருகர்யாரிருக்கின்றார்கள்? தங்க
ளிடத்தில் யெங்களுக்குப் பக்தி யுண்மையாகவேயிருக்கின்
றது. அவ்வண்ணம் தங்களுக்கும் எங்களிடம் அருளிருக்த மா
கில் எங்களுக் குண்டாயிருக்கும் அஞ்ஞானம் என்னும் இருளை
நிவிர்த்தி செய்யவனுக்கிரகிக்க வேண்டும்.,, என்று பிரார்த்திக்
கும் சனத்குமாருடைய வசனங்களை கேட்ட, மகாதயாளுவான
நந்திகேசுவரரானவர் மிக்கசந்தோஷத்துடனும் புன்சிரிப்புட
னும் சொல்ல ஆரம்பித்தனர்.

# மூன்றாவது அத்தியாயம்.

## காசியாரணியஸ்தலமகிமையையுரைத்தது.

" ஓ! சனத்குமாரரே! உமக்கிருக்கின்ற பக்தியை வெகு
விதமாக பரீக்ஷித்துப் பார்த்தேன். உம்மைப் போன்ற பக்தியிற்
சிறந்தவர்களும் சிரேஷ்டருங் கிடையாது. ஆகையால் அத்தன்
மையான பக்தியுள்ள உமக்குயான் பிரியத்துடன் சொல்லு
கிறேன். சாவதானமனதுடன் கேளும் க்ஷேத்திரங்களிற்
சிறந்ததும் பிரம விஷ்ணு முதலாகிய தேவர்களால் உண்டு பண்
ணப்பட்ட அமிர்த புஷ்கரணி யென்னும் புண்ணிய தீர்த்தத்
துடன் கூடினதும், தர்மார்த்தகாம மோக்ஷங்களை கொடுப்பது
ம், இந்திராதி தேவர்களுக்கு அபையப் பிரதஞ்செய்ததும்,
அந்தேவர்களுக்கு அவரவர் பதவியைக் கொடுத்ததும், உத்தம
மான தர்மத்தைக்கொடுப்பதும், சுவாசனுக்கு அனுக்கிரகஞ்
செய்ததும், பார்வதியின் தவத்திற் கிரங்கி மனோபீஷ்டத்தைக்



கொடுத்ததும், முசுகுந்தனுக்கு மந்திரியாயும் சிவபக்தராயும்
இருந்த அமுதோதகருக்கும் வேடன் வேடஸ்திரீக்கும் மோ
க்ஷத்தைக் கொடுத்ததும், முனிகளால் சேவிக்கப்பட்டதும். பசு
பக்ஷி மிருகங்களுக்கும் தாவரங்களுக்கும், இஷ்டத்தைக் கொடுக்
கக்கூடியதும், வெகு தீர்த்தங்களுடன் விளங்கக்கூடியதும், தே
வர்கள் வாசஞ்செய்யப்பட்டதும், முனிவர்கள் சித்தர்கள் யக்ஷர்
கள் சாரணர்கள் கந்தருவர்கள் வித்தியாதார்கள், கிம்புருஷர்கள்,
கின்னரர்கள் அப்ஸரஸ்திரீகள், இவர்களால்எப்போதுஞ்சுகமாய்
வசிக்கப்பெற்றதும், புண்ணியமானதும், உத்தமமானதும், தேவ
ஸ்திரீகள் கூட்டத்தையுடையதும், யானை சிம்மம் இவைகள் வி
ரோதமன்றி வாசஞ் செய்வதும், புலிகளும் மான்களும் ஒன்றுக்
கொன்று ஒற்றுவாழ்வதும், மயில்களும் பாம்புகளும் சிநேகமாய்
கூடிவாழ்வதும் விருக்ஷங்களால் சூழப்பெற்றதும், அவைகளின்
இலை துளிர், காய், கனி, கிளைகள் முதலியவைகளால் மறைக்கப்
பட்டிருக்கும் ஆகாயத்தை யுடையதும், கற்பகவிருக்ஷங்கள், மந்
தாரை, தேவதாரு, நமேரு, மா, பவளம், பலா, பாக்கு, நாரத்தை
நாகவல்லி, தென்னை, கடப்பு, அசோகம், செண்பகம், சால,
மருதை, அசுவகாணிகை, புன்னகம், மகிள், இவைகளுடன் கூடி
னதும், மல்லிகை, திராக்ஷை, இவைகளால் நிரம்பப் பெற்றதும்,
ஓடப்புகையினுடன் கூடினதும், மரத்தின் கிளையில் தொங்கிக்
கொண்டிருக்கும் மரவுரிகளால் விளங்கப்பட்டதும், அக்ஷேத்திர
த்திலிருக்கின்ற ரிஷியாசிரமங்களால் விளங்கப்பட்டதும், அந்த
விடத்தில் தேவர்கள் ரிஷிகளிவர்களால் பிரதிஷ்டைசெய்யப்பட்
ட சிவலிங்கங்களால் விளங்கப்பட்டதும், குபேரனுடையசைத்தி
ரதமென்னும் நந்தவனத்தை அழகிற்றோற்கடிப்பதுமான காசி
யாரணிய மென்னும் க்ஷேத்திரத்தில், சித்தியடைந்த தே
வர்கள் மனிதர்கள் ஸ்திரிகளுடன் தேவாதி தேவனாகிய சிவபெரு
மானுடைய சரித்திரங்களைக் கானம்பண்ணிக் கொண்டு வந்தார்
கள். அப்படியே கந்தருவர்கள் புஷ்பரசத்தை பானஞ்செய்து
விட்டுச் சுகமாக விளையாடிவந்தனர். சிலயோகிகள் ஐம்புலன்
களையடக்கித் தனியாகவிருந்துகொண்டு மிக்க ஆநந்தத்துடன்

சருகு, வாயு முதலியவைகளைப் பக்ஷணஞ்செய்துகொண்டு பொறுமையுள்ளவர்களாகத் தவஞ் செய்து கொண்டு வந்தார்கள். அன்றியும் கதலி, தென்னை, மா, சந்தனம், செண்பகம், தக்கோலம், அசோகம், கூந்தற்பனை, பனை, தாழை, மாதுளை, நாவல், கடம்பு, தும்பை, கருங்காலி, பாதிரி, மருது, நாகவிருக்ஷம், புன்னாகம், சரளம், தேவதாரு, கரஞ்சம், லவங்கம், காயவிருக்ஷம், ஏலம், பிரியங்கு, திலகம், விபீதகை, வில்வம், அரசு, இலுப்பை, ஆல், கேசரம், பாக்கு, எலுமிச்சை, நார்த்தை, வேம்பு, நெல்லி, கௌசிகம், இவைமுதலான அநேக விருக்ஷங்களால் விளங்கப்பட்டதும், வாசந்தி, குந்தம், ஜாதி, முதலிய கொடிகளையும், எங்கும் நிறைந்த வாசனையால் இழுக்கப்பட்ட வண்டுகளின் சப்தத்தால் ஒலிக்கப்பெற்றதும், தன்னுடைய அழகினால் குபேரனுடைய நந்தவனத்தைக் கூடப்பழிப்பதும், இந்திரனுடைய உத்யானவனத்தைத் தனக்குக் கீழாகவுடையதும், சுகந்தமுடைய மலர்ந்த செந்தாமரை முதலான புஷ்பங்களினுடைய வாசனையால் நிரம்பிய திக்குகளையுடையதும், பொறுமையுள்ள அநேக ரிஷிகளுடைய ஆசிரமங்களால் சூழப்பட்டதும், அந்த ரிஷிகள் புசிக்கும் காட்டுத்தானியங்களால் விளங்கும் தெருக்களையுடையதும், வாக்குமனது இவைகளுக்கெட்டாததும், மிகுந்த ஆநந்தத்தைக் கொடுப்பதும், லக்ஷ்மியின் வாசத்தால் பிரகாசிப்பதும், ஸந்தோஷத்தையுண்டு பண்ணுவதற்கு முக்கியஸ்தானமாயிருப்பதுமான அவ்விடத்திலுள்ள கிளிகள் சிவாகமங்களின் உண்மைப்பொருளைப் பேசுவதும், ஆகாயம் முழுமையும் ஓமப்புகை சூழ்ந்திருப்பதைக்கண்டு அங்கிருக்கும் மயில்கள் மேகங்களைக்கண்டனவாக வெண்ணிச் சந்தோஷிப்பதும், புஷ்பங்கள் நிறைந்த வனங்களில் வண்டினங்கள் ரீங்காரஞ் செய்துகளிப்பதும், சித்தர்கணங்கள் கானஞ்செய்வதுமாய்,—ஓ! சனத்குமாரரே!—பார்ப்பதற்கு மகா ஆநந்தத்தை விளைவிக்கும்.

அத்தகைய காசியாரணியத்தில், விஷ்ணு முதலியதேவர்களால் சிருஷ்டிக்கப்பட்டு, அன்னம் முதலிய பக்ஷிகளால் நிறைந்துள்ள அமிர்தபுஷ்கரணியின் மத்தியில் சிவபெருமானுடைய



ஆலயம் விளங்குகின்றது. அத்தீர்த்தத்தில் விஷ்ணு முதலிய தேவர்கள் தினந்தோறும் ஸ்நானஞ்செய்துவருகிறார்கள். தேவர்களும் சகிக்கமுடியாத விஷத்தையுண்ட சிவபெருமானின் உக்கிரத்தை நிவிர்த்தி செய்ததும், பிரம்மகத்தி முதலான தோஷங்களைத் தீர்க்கவல்லதுமான அப்புண்ணியதீர்த்தத்தில்பலவிதமான முத்துக்களும் இரத்தினங்களும் கணக்கற்றனவாகக் கிடக்கின்றன.

பாபிகளுக்குப் புண்ணியத்தையும், அதர்மிகளுக்குத் தர்மஞ் செய்வதில் பக்தியையும், கோபிகளுக்குச் சாந்தியையும், கொடுத்து சிவபெருமானது ஆலயத்தை மத்தியில் உடைய அப்புஷ்கரணியின் மகிமையை என்னால் சொல்லமுடியாது, அன்றியும் சக்கிரவாகம், பகம், கிரௌஞ்சம், காரண்டம், அன்னம் முதலான பக்ஷிகளும், செங்கழுநீர், செந்தாமரை, நீலோத்பலம், முதலிய புஷ்பங்களும், நிறைந்ததுமான அத்தீர்த்தத்தைக் காட்டிலும் சிறந்தது இந்த வுலகத்திலுமில்லை வேறெந்த உலகத்திலுமில்லை,

சனத்குமாரரே! உருத்திராக்ஷத்தைக்காட்டிலும் உயர்ந்த ஆபரணம்வேறொன்றுமில்லை பூசுவதில்விபூதியிலும்சிறந்ததொன்றுமில்லை பஞ்சாக்ஷரத்தைக் காட்டிலும் உயர்ந்த மந்திரங்கிடையாது. அகஸ்தியர் விஷ்ணு இவர்களைக்காட்டிலும் சிறந்த சிவபக்தர்கள் எவ்வுலகத்திலும் இல்லை. காசியாரணியத்தை விட மேலான க்ஷேத்திரமும் கிடையாது. இதை நன்றாய் உணரவேண்டும்'' என்று சனத்குமாரரை நோக்கி நந்திகேசுவரர் கூறி முடித்தனர்.

பிறகு சனத்குமாரரும் நந்திகேசுவரரின் பாதங்களில் தன் சிரசைவைத்து நமஸ்கரித்துப்பின்னும் அவரை நோக்கி சொல்லுவாராயினர்,

# நான்காம் அத்தியாயம்.

## ஆலகால விஷம் பிறந்த வரலாறு.

"சிலாதர்குமாரரும், சர்வஞ்ஞரும், கிருபைக்கிருப்பிடமுமாகிய ஓ சுவாமி! தேவரீர் சொல்லிவந்த சரித்திரங்கள் யாவையும், யான் கவனமாய்க் கேட்டு மறக்காமல் மனதில் வைத்திருந்தும், ஒரு விஷயத்தைப்பற்றி நான் விரைவாகக் கேட்க விரும்புகின்றபடியால் தயவு செய்து அதனைச் சொல்லியருளவேண்டும். அது என்னவெனில், தேவாசுரர்கள் திருப்பாற்கடலைக் கடையும்போது அதிலிருந்து காளகூட விஷம் உண்டாகவும், தேவர்கள் அதனைக்கண்டு பயமடையவும், அதனைச் சிவபெருமான் புசித்து அவர்களைக் காப்பாற்றவும், நேர்ந்த சம்பவங்கள் என்ன, என்பதேயாம். தாங்கள் சற்று தயவு செய்து விரிவாகச் சொல்லப் பிரார்த்திக்கின்றேன்." என்று சனத்குமாரர் கேட்க, அவரைப் பார்த்து நந்திகேசுவரர் சொல்லுகின்றார்.

பூர்வகாலத்தில் மேன்மை பொருந்திய தங்கத்தால் செய்யப்பட்டதும், நவரத்னங்களோடு பிரகாசிப்பதுமான கோபுரங்களையுடைய கைலாச சிகரத்தில், விஷ்ணு, பிரமன், முதலிய மூர்த்திகளும், சகல தேவர்களும், முனிசிரேஷ்டர்கள், சாரணர், கந்தருவர், யக்ஷர், வித்தியாதரர், சித்தர், கின்னரர், கிம்புருடர், அப்ஸரசு, முதலியவர்களும் சூழ்ந்துகொண்டு நிற்ப, கோடிசூரியப் பிரகாசம் போன்ற விஸ்தாரமான ஓர் இரத்தின சிம்மாசனத்தின் மீது, தேவாதிதேவனும், உலகசரண்யனுமாகிய, பரமசிவன் எழுந்தருளியிருந்தார். அச்சமயத்தில் தேவதாசிகள் காதுக்கினிய சங்கீதங்களைப்பாடினர். முனிசிரேஷ்டர்கள் சிவகதையை போதினர்,

அதன் மத்தியில் துருவாசமகரிஷி யெழுந்து, நித்யரும், விபூதியால் விளங்கப்பட்ட திருமேனியையுடையவரும், சம்பு



வாயுமிருக்கின்ற சிவபெருமானைப்பார்த்து, துதிசெய்யவாரம்பித்தார்.

"தேவர்களுக்குத்தேவரும், உலகங்களுக்குநாதரும், ஸர்வஞ்ஞரும், கிருபைக்கிருப்பிடமும், மேருவைவில்லாகக்கொண்டவரும், வாசுகியென்ற சர்ப்பத்தை நாணாகவுடையவரும், விஷ்ணுவைப் பாணமாகச் செய்தவரும், பூமியை ரதமாக உபயோகித்தவரும், சூரியசந்திரர்களை தேர்க்கால்களாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், பிரம்மாவை சாரதியாகவும், அமைத்துக்கொண்டவரும், புன்சிரிப்பினால் ஒரு நொடியில் திரிபுரர்களை யெரித்தவரும், தேவர்களுக்கதிபரும், அந்தகாசுரனை சம்ஹரித்தவரும், தக்கன் யாகத்தை யழித்தவரும், அழகுள்ள மன்மதனைத் தகித்தவரும், யமனைக் காலாலுதைத்துக் கொன்றவரும், உலகத்துக்குக்கெடுதி செய்து வந்த மதத்தையுடைய யானையைக் கிழித்து இரத்தந்தோய்ந்த பெரிய தோலை வஸ்திரமாகக் கொண்டவரும், பக்தர்கள் மனமென்னும் தாமரையில் வாசம்பண்ணும் பிரபுவானவரும், மனதிற்கெட்டாதவரும், விஷ்ணு முதலிய தேவர்களால் சேவிக்கப்பட்டவரும், எங்கும் நிறைந்தவரும், பக்தர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்துவைப்பவரும், ஸ்தோத்திரப்பிரியருமான தேவரீரின் பாதகமலங்களில் எப்பொழுதும் நமஸ்கரிக்கின்றேன்."

என்றிவ்விதம் துதி செய்து அஞ்சலிசெய்து நிற்கின்ற துருவாசமுனிவரிடத்தில் சந்தோஷங்கொண்டு, சர்வசம்பத்தையும் சுபத்தையுங் கொடுக்கும் தன் கழுத்திலிருந்த புஷ்பமாலையை அவருக்குக் கொடுத்தருளினார். அதை அவர் மிகுந்த வணக்கத்துடன் பெற்றுத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு, ஆங்கு வீற்றிருந்த விஷ்ணு முதலிய திக்குபாலர்களையும், தன் குருவையும், இஷ்டர்களையும், முனிவர்களையும், மற்றுமுள்ளோர்களையும், உபசரித்துவிட்டுப் பிறகு, அவ்விடம்விட்டுப் புறப்பட்டு மிகுந்த செல்வத்தையுடையதாயும், நவரத்ன மாலைகளால் அலங்கரிக்கப்பட்டதாயும், ஸ்படிகரெத்னத்தால் நிருமிக்கப்பட்டதாயும், உயர்ந்த உப்பரிகையின்மீது இருக்கின்ற தேவஸ்திரீகளோ

கூடினதாயும், தங்கச்சங்கிலியில் சேர்க்கப்பட்டிருக்கிற மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட வீதிகளையுடையதாயுமிருக்கின்ற **அமராவதி** யெனப்படும் சுபமான தேவலோகம் சென்றனர்.

அத்தருணத்தில் தேவேந்திரன், ஸர்வாபரணங்களாலும் தன்னை யலங்கரித்துக்கொண்டு மிகவும் உயரமானதும், மிகுந்த மதத்துடன் கூடியதுமான தன் வெள்ளையானையின் மீதேறிக் கொண்டு, முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும் சூழ்ந்துவர, தேவதாசிகள் நிருத்தஞ்செய்ய, கந்தருவர்கள்பாட, சேவகர்கள் கட்டியங்கூற, ஸகலவாத்திய கோஷங்களுடன் அரண்மனையிலிருந்து புறப்பட்டு உல்லாசத்துடன் நகரப்பிரவேசம் செய்து கொண்டிருந்தனன். அச்சமயத்தில் அவ்விடம் சென்ற துருவாசர் தேவராஜனுக்கு மரியாதையாகச் சிவபெருமானால் அளிக்கப்பெற்ற அப்புஷ்ப மாலையை மிகுந்த ஆசீர்வாதங்களுடன் அவனிடம் கொடுத்தனர். இவ்வண்ணம் துர்வாசரால் கொடுக்கப்பட்ட அப்புண்ணிய மாலையை இலக்ஷியம் செய்யாமல், தன் அங்குசத்தால்வாங்கியும் தன் கண்களிலொற்றிக் கொள்ளாமலும், சிரசில் வைத்துக்கொள்ளாமலும், தன் வெள்ளை யானையின் மத்தகத்தில் வைத்துவிட்டான். அச்சமயத்தில் அம்மாலையின் வாசனையைக் கிரகிக்கும் பொருட்டு மொய்க்கும் வண்டுகளின் உபத்திரவத்தாலும், அந்த யானையின் மதஜலத்தைக் குடிக்க மொய்த்துக்கொண்டிருக்கின்ற வண்டுகளின் தொந்தரவாலும் உண்டாகும் துன்பத்தைச்சகிக்க வியலாத அவ்வைராவதமானது அப்புஷ்பமாலையை யிழுத்துத் தன் காலிலிட்டு மிதித்துச் சின்னபின்னமாக்கி விட்டது.

இவ்விதம், சிவபெருமானால் மிகுந்த பிரியத்துடன் அளிக்கப்பட்ட அப்புண்ணியமாலை சின்ன பின்னமாக்கப் பட்டதைப் பார்த்துத் துர்வாசர் அதனையவமதித்த மூன்று குற்றங்களையும் கண்டு, மிகவும் வெகுண்டு, “ அடே! இந்திரா! உனக்கிருக்கும் செல்வச் செருக்கினாலன்றோ, ஈசுவரப்ரஸாதத்தை யவமதித்து உன் யானையின் காலால் மிதிக்கச் செய்தனை. உன் செல்வமனைத்தும்



நாசமடையக்கடவது, உன் சம்பத்திற்கு சமுத்திரந்தான் கதி” என்று சொல்லிவிட்டுத் துர்வாசர் தன்னிருப்பிடம் சென்றனர்.

தன் அறியாத் தன்மையால் துர்வாசரின் சாபத்தை வருவித்துக்கொண்ட இந்திரன், மிகவும் வருந்தி, அவரது ஆசிரமம் சென்று அவரை மிக வணங்கி “ சுவாமி! அடியேன் செய்துள்ள பிழையை மன்னித்து, எனக்குக் கொடுத்துள்ள சாபத்திற்கு விமோசனம் எப்பொழுது என்று கூற வேண்டும்” என்று மன்றாட, அவனது இரக்கமொழிகளைக் கேட்டுத் தர்வாசர் “ ஏ இந்திரா! விஷ்ணு முதலிய தேவர்களுடன் நீ எப்பொழுது பாற்கடலைக் கடைகின்றாயோ, அப்பொழுது உன் சாபம் நிவர்த்தியாகி விடும்” உன் சம்பத்துக்களும் கிடைக்கும் என்றனர். அதனைக்கேட்டு இந்திரன் [illegible] ; பின்னும் ரிஷிபுங்கவரை நமஸ்கரித்து தன்னிருப்பிடஞ் சென்றான்.

இஃது இங்ஙனமிருக்க அசுரர்கள் இச்செய்தியைத் தெரிந்துகொண்டு மிகுந்த குதூகலத்துடன் தேவலோகஞ் சென்று இந்திரனை ஜெயித்து, அவ்விடத்தில் அரசாட்சிசெய்யத் தொடங்கினர். இதனைக் கண்டு இந்திரனும் தேவர்களும் மிகவும் கலக்கமுற்று யாது செய்வதென வறியாமல் திகைத்தனர். அச்சமயத்தில் அவர்களுக்குத் துர்வாசர் இந்திரனுக்குச் சொன்ன வார்த்தைகள் நினைவுக்குவர, அவர்கள் குதூகலத்துடன், அசுரர்களையும் தம்வசப்படுத்திக்கொண்டு, ஸமுத்திர மதனம் செய்ய யத்தனித்தர்.

அவர்கள் சிவபெருமானை நினையாமல், மந்தர கிரியை மத்தாக நாட்டி, வாசுகி யென்னும் ஸர்ப்பத்தைக் கயிறாகச் சுற்றி, ஒரு பக்கத்தில் தேவர்களும் மற்றப் பக்கத்தில் அசுரர்களும் நின்று இழுத்துக்கடையும் போது, அப்பாற் கடலினின்றும், மூதேவியும், இலக்ஷ்மியும், கௌஸ்துப ரத்தினமும் உச்சைசிரவசென்னும் குதிரை முதலியவைகளும், துர்வாசரின் சாபத்தாலழிந்து போன இந்திரனின் செல்வங்கள் யாவும், ஒன்றன் பின்னொன்றாய் உண்டாயின. அச்சமயத்தில் அமுதத்தை

யெடுப்பதையே நினைவாகக்கொண்டு சிவபெருமானைச் சிறிதும் நினையாமல் பாற்கடலைப் பின்னுங் கடையுங்கால் பரமசிவன் மிக்க கோபங்கொள்ள, அக்கோபமே பொறுக்கக்கூடாத காலகூட விஷமாய்க் கிளம்பிற்று." என்று இவ்விதம் சனத்குமாரருக்கு, உலகத்தை யழிக்க வல்ல விஷத்தினுற்பத்தியைச் சொல்லிவிட்டுப் பின்னும் அதன் மகிமையைக் குறித்து நந்திகேசுவரர் சொல்லுவாராயினர்.

# ஐந்தாவது அத்தியாயம்.

## தேவர்களுக்குச் சிவபெருமான் தரிசனங்கொடுத்தது.

சனத்குமாரரை நோக்கி சகலமுமறிந்த நந்தி கேசுவரர் சொல்லுகின்றார் " ஓ! சனத்குமாரரே! அக்காள கூடமென்னும் விஷமானது, மிகவும் பயங்கரமாயும், கோபமாகஎரிகின்றதாயும், உலகங்களால் சகிக்க முடியாததாயும், அதன் கொடுமையைக் கடக்க முடியாததாயும், ஸர்வபிராணிகளையும் நாசம் செய்யப்பட்டதாயும், தேவர்களைத் துரத்துவதாயும், கண்ணாற்காண முடியாததாயும், எங்கும் வியாபிக்கப்பட்ட விஷஜ்வாலையால் விஷ்ணுவைக்கருத்த மேனியுடன் பயந்தோடச்செய்வதாயும், இருந்தது.

விஷ்ணு ஓடும்போது பயத்தினால் பலமுறை தடுக்கி விழுந்தனர். பிரம்மாவும் திக்குகள் தெரியாமல் கால்தடுமாறிக் கீழே விழ அவர் முகத்தினின்றும் இரத்தம் வெளிப்பட்டது. இந்திரனும் விஷபயத்தால் தன் கிரீடமாட, வஜ்ஜிரமும் ஆயுதங்களும் நழுவிவிழ, நேத்திரங்களில் கண்ணீர் ததும்ப, ஆ! இரக்ஷிக்கவேண்டுமென்று கதறிக்கொண்டோடினன். அக்கினி



தேவனோ அவ்விஷச்சுவாலையில் தகிக்கப்பட்டவனாய் தேகங் கறுத்து, தன ஆயுதங்களை யெறிந்துவிட்டு, ஓட்டம் பிடித்தான். யமனும் உலர்ந்த சரீரத்துடனும் காய்ந்த வாயுடனும் தன் கண்களில் நீர்வடிய, தண்டாயுதத்தையும் நழுவவிட்டு, எருமைக்கடா வாகனத்தினின்றும் கீழே விழுந்து ஓடலானான். நிருதியும் அவ்வண்ணமே சிதறி தூரம் ஓடித் தடுமாறிக் கீழே விழுந்தான். அவ்விதமே வருணனும் வஸ்திரமில்லாதவனாய் அக்கினிபோல் எரியக்கூடிய சரீரத்துடன் ஓடும்போது கையிலிருக்கும் பாசத்தைச்சர்ப்பமென வெண்ணியஞ்சி அப்பாலெறிந்து விட்டுப்பூமியில் விழுந்தனன். வாயு பகவானும் தனக்குள்ள வேகத்துடன் பயந்தோட, மத்தியில் விஷம் வந்துவிட்டதென்று சந்தேகித்து, நான்கு பக்கங்களிலும் சுற்றிக்கொண்டிருக்கும்பொழுது, கறுத்ததூள்கள் பறக்கவாரம்பித்துவிட்டன. சிவபெருமான்றோழனாகிய குபேரன் சங்கரனை மனதில் நினையாமலிருந்தமையால், எவ்வளவு ஓடமுயன்றும பயன்படாமற்போக ஒன்றுந்தோன்றாமல் கீழே சாய்ந்தான். ஈசானனும் பயந்து வேகமாய் ஓடும்போது கையிலிருந்த ஆயுதங்களை நழுவவிட்டுக் கதறிக்கொண்டு செல்லும் வாகனத்துடன் பூமியில் அதோமுகமாக விழுந்தனன். பன்னிரண்டு சூரியர்களும் திசைகளின் வழி தெரியாமல் மிகுந்த பயத்துடன் பிரமித்து, மழுங்கின தேஜஸையுடையவர்களாய்ப் பூமியில் விழுந்தார்கள். சந்திரனும் விஷத்தைப் பார்த்தவுடனேயே சரீரங்கறுத்து, தன் சோடசகலைகளுங்குறைந்து, அரூபியாய் கீழே விழுந்தான். நக்ஷத்திரங்களனைத்தும் விஷாக்கினியால் தகிக்கப்பட்டுக் கீழே விழுந்தன. மேரு முதலிய மலைகள்; அசைந்து நடுக்கமுடைந்தன. சமுத்திரங்கள் வற்றிப்போய்ப் புழுதிகளாயின. பூமியும் விஷஜ்வாலையைப்பொறுக்க முடியாமல் அநேகபிளவுகளாகப் பிளந்து போயிற்று. மனிதர்களிற் சிலர் பூமியில் விழுந்தனர். சிலர் ஓடினார்கள்; சிலர் மரித்துவிட்டனர். சிலர் மல்லாந்தும், சிலர் குப்புறவும் விழுந்து புரண்டனர். பலருக்கு கைகள் ஒடிந்தன, கால்கள் முறிந்தன. தோல்கள் கிழிப்புண்டன. மண்

டைகளுடைந்தன: பற்கள் தெறித்தன எல்லாம் ஏகரத்த வெள்ளமாய்க்கிடந்தது. ஜனங்கள் யாவரும் " இரக்ஷிக்கவேண்டும். இரக்ஷிக்கவேண்டும் " என்று கதறினார்கள். வாய்களைப் பெரிதாகத் திறந்துகொண்டும் நாக்குகளைத்தொங்க விட்டுக்கொண்டும், ஓடும்போது, கீழே இறந்துகிடக்கும் மனிதர்களால் இடறுண்டு கீழேவிழுந்து உயிரைத் துறந்தவர் பலர். சிலமுனிவர்கள் தங்கள் பெருவயிற்றைத் தூக்கிக்கொண்டு செல்லமுடியாமல் கையிலிருந்த தண்டு கமண்டலங்களை யெறிந்து விட்டு ஓடியும் பலமுறை கீழே விழுந்தார்கள். மற்றுஞ்சிலர் அவிழ்ந்து தொங்கக் கூடிய ஜடைகளைத் தூக்கிக்கொண்டு மிகுந்த பிரயாசத்துடன் ஓடினார்கள். வேறும சிலர் விஷஜ்வாலை பொறுக்கமாட்டாமல் தங்கள் ஜடைகளால் முகத்தை மறைத்துக்கொண்டு மூச்சுவிடக் கூடாமல் தவித்து முடிவில் இறந்தனர். சிலர் தங்கள் ஜடைகளின்பாரங்களைத்தாங்கிக்கொண்டு ஓடமுடியாமல் அவைகளைப் பிய்த்தெறிந்து சென்றனர். சிலரின் தாடிமீசைகள் பொசுங்கிப் போயின எச்சமயத்திலும் பரமசிவனைத் தியானஞ்செய்து கொண்டிருந்தவர்கள் கூட அச்சமயத்தில் அவரை மறந்து விட்டனர். சிலர் சிவபெருமானைத் தியானிக்கப்புத்தி செல்லாமல் நாசத்தையடைந்தனர்.

அத்தருணத்தில் விஷ்ணு பிரமன் இந்திரன் முதலானவர்கள் ஓடோடிவந்து, காசியாரணியத்தை யடைந்து, எல்லோரும் ஏகோபித்துப் பரமசிவனை நோக்கி" ஓ! மகாதேவா! பக்தரக்ஷகா! ஆபத்தினின்றும் ரக்ஷிப்பவரே! இந்த விஷபயத்தினின்றும் காப்பாற்றும். காப்பாற்றும். என்று பெருங்கூச்சலிட மகாதேவா என்ற தொனியைக் கேட்டவுடன் அவ்விஷத்தின் வேகம் கொஞ்சமடங்கிற்று. அப்பொழுது மேல் ஸமுத்திர முதல் கீழ் சமுத்திரம் வரையில் தாரையாய் இருந்த அக்காளகூட விஷமானது ஸ்வல்பமாகிவிட்டது. அவ்விஷ தாபத்தால் பூமியானது ஸாரமற்றதாயும் சக்கான் கல்லுகளுடன் கூடினதாகவுமாயிற்று. தேவர்கள் சொன்ன ' மகாதேவா' என்ற சப்தத்



தால் அந்த க்ஷேத்திரத்திற்குக் கிழக்கிலும்மேற்கிலும் கொஞ்சங் கொஞ்சமாகத் தணியலுற்றது.

அச்சமயத்தில் கிருபாநிதியும், சதுர்ப்புஜங்களையுடையவரும், திரிநேத்திரங்களையுடையவரும், பூரண சந்திரனைப் போன்ற முகத்தையுடையவரும், மான் மழுதரித்த கைகளும் அபயவரத அஸ்தமுடையவரும், ஜடாமகுடத்தால் விளங்கப் பட்டவரும், விபூதியால் வெளுத்ததிரு மேனியையுடையவரும், சந்திரன் கங்கை இவைகளைச் சிரசிற்கொண்டவரும், நவரத்னாபரணங்களைத் தரித்திருப்பவரும், பிரகாசம் பொருந்திய முத்துமாலை வைரத்னமாலைகளை அணிந்தவருமான பரமேசன், கைலைக் கொப்பான ரிஷபத்தின் மேல் பார்வதி சமேதராய் ஏறிக் கொண்டு பிரமதகணங்கள் சூழ்ந்துவர, பதினெண் வாத்திய கோஷங்களுடன், எழுந்தருளி, விஷசோகத்தால் வாடிக்கிடக்கும் தாமரைபோன்ற முகங்களையுடைய அத்தேவர்கள் முன்பாக, பிரகாசம் பொருந்திய ஒரு சூரியனைபோலுதயமானார்.

அப்பொழுது, எங்கும் நிறைந்தவரும், ஈசுவரருமான பரமசிவன் தங்கள் முன்வந்து நிற்பதைக்கண்டு, தேவர்கள் முதலிய யாவர்களும் ' இத்தப்பயத்தினின்றும் எங்களை இரக்ஷிக்கவேண்டு' மென்று, சிரசில் கைகூப்பிக்கொண்டு வெகு பொருளடங்கிய வாக்குகளால் ஸ்தோத்திரஞ் செய்யத்தொடங்கினர்.

## ஆறாவது அத்தியாயம்.

### தேவர்கள் பரமேசுவரனைக் குறித்து ஸ்தோத்தரித்தல்.

" ஓ! ஜகதீசா! திரிமூர்த்தி சொரூபமாயிருக்கின்ற உம்

மை நமஸ்கரிக்கின்றோம் எங்களுக்குண்டான காளகூட விஷ பயத்தை நிவர்த்தி செய்தவரே! மிகுந்த கிலேசத்தை யடைந்து உக்கிரமான தவஞ்செய்து அத்தவமகிமையால் தரிசிக்கப்பட்ட பாதகமலங்களை யுடையவரே! ஜயத்துடன் விளங்கப்பட்ட தேவரே! மகாதேவரே! வாமதேவரே! ரிஷபக்கொடியுடையவரே! காலனைக்காலாலுதைத்தவரே! விஷத்தைப் போக்கடித்தவரே! நீலமாயும் சிவந்ததாயுமிருக்கிற கண்களையுடையவரே! ஏ? சங்கரா! கங்காதரா! சந்திரசேகரா! காமதகனா! தக்கன் யாகத்தை யழித்த ஈசா! சிவந்த ஜடைகளையுடையவரே! உலகங்களை ரக்ஷிப்பவரே! மகேசா! திரிபுராந்தகா! பார்வதி மணாளா! ஜயத்துடன் விளங்கும் பரசுவைப் பாணியிலுடையவரே! சூலத்தையுடையவரே! பசுபதே! வரதா! பர்க்கா! கௌரீசா! பிரம்ம கபாலத்தை யுடையவரே! பிரமதகணங்களுக்கதிபரே! மங்களஸ்வரூபா! உருத்திரா! காலகாலா! பினாகபாணி! உலககாரணா! கங்காதரா! ஆகாயத்தைக் கேசங்களாயுடையவரே! மலையில் சயனித்திருப்பவரே! யமனை நிக்கிரகித்தவரே! பிரம்ம விஷ்ணுக்களால் காணப்படாத அடிமுடியையுடையவரே! மனதையபகரிப்பவரே! ஜயத்துடன் விளங்கப்பட்டவரே! இருஷிகளால் ஏவப்பட்ட மானையடக்குவதில் வேடன்போன்றவரே! யானைத்தோலை வஸ்திரமாகவுடையவரே! கிருபாநிதியே! அக்கினியைவீரியமாகவுடையவரே கைலையின் கொடுமுடியில் வாசஞ்செய்பவரே! சுந்தரமாயிருப்பவரே! இக்காசியாரண்யத்தில் வாசஞ்செய்பவரே! தில்லை வனத்திலிருப்பவரே! பிரபுவே! அருணாசலத்தில் வாசஞ்செய்பவரே! மிகுந்த ஐசுவரியங்களையுடையவரே! காஞ்சீபுரம், கும்பகோணம் மத்யார்ஜுனம், இராமேசுவரம், காசி, ஸப்தாபுரம், கமலாலயம், முதலிய க்ஷேத்திரங்களில் வசிப்பவரே! ஜயத்துடன் எங்கும் நிறைந்தவரே! ஸர்வாந்தர் யாமியாயிருப்பவரே! ஓ ஈசுவரா! ஜயத்துடன் பிருதிவி, அப்பு ஸ்வரூபியாயிருக்கின்ற உம்மைப்பலகாலும் நமஸ்கரிக்கின்றோம். எங்களை இரக்ஷிக்கவேண்டும்.

நாசத்தையடையாத செல்வத்தையுடையவரே! தயாபரா ஸர்வ உலகங்களையும் சிருஷ்டிப்பதிலும், இரக்ஷிப்பதிலும்,



ஸம்ஹாரிப்பதிலும், உம்மைவிட மேலானவர் யாரிருக்கின்றார்கள்? குணங்களைக் கடந்தவரே! எங்களை இரக்ஷியும் இரக்ஷியும். திரிகால ஸ்வரூபியே! சிறிதிற்குச் சிறிதாயும் பெரிதிற்குப் பெரிதாயும் உள்ளும் புறமும் எங்கும் நிறைந்து விளங்குபவரே! மிகவும் ஜோதியாக விளங்குகின்ற திருமேனியை யுடையவரே! ஆத்மஸ்வரூபியும் ஞான ஸ்வரூபியும் ஓங்கார ஸ்வரூபியும், வஷட்கார ஸ்வரூபியும், மகாவாக்கிய ஸ்வரூபியும் நீரே யன்றோ? பிரபுவே! தேவர்கள் அசுரர்கள் ஸித்தர்கள் வித்யாதரர்கள், உரகர்கள், பக்ஷிகள், சர்ப்பங்கள், பருவதங்கள், மிருகங்கள், முதலான சராசரங்களும் நீரே! பிரம்மனும் நீரே! விஷ்ணுவும் நீரே! ஸ்வர்க்கமும் நீரே! மோக்ஷமும் நீரே!

ஓ! பிரபுவே! தேவர்களுக்குத் தேவரும் பிதாக்களுக்குப் பிதாவும் நீரே! ஓங்காரம், யாகம், ஞானம், வைராக்கியம், இவைகளெல்லாம் நீரே! யோகமும் பரமும் உலகங்களுக்கெல்லாம் குருவும் நீரே! ஆதி மத்தியாந்த மற்றவரே! உலகத்தை உம்பிரகாசத்தால் விளங்கும்படி செய்பவரே! கால ஸ்வரூபராக இருந்துகொண்டு ஸதா காலமும் விளங்குபவரே தேவரீர் ஆக்ஞையால் வாயு வீசுகின்றான். ஆதிசேஷன் பூமியைத் தாங்குகின்றான். சூரியசந்திரனிவர்கள் பிரகாசிக்கின்றனர். பக்ஷிகள் ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றன. ஸ்தாவரசங்கமங்கள் உம்மால் ஜீவிக்கின்றன. நக்ஷத்திரங்கள் முதலான ஜோதிகள் பிரகாசிப்பதும் உம்மாலேயே; உமது ஆக்ஞையால் சைலபிரபஞ்சங்களிலுமுள்ள பிராணிகள் நடக்கவும் பேசவும் புசிக்கவும் சுகிக்கவும், எல்லா விஷயங்களிலும் ஸாமர்த்தியத்துடன் விளங்குகின்றன. இன்னும் தேவரீர் ஆக்ஞையால் சிருஷ்டிக்கவும், ரக்ஷிக்கவும் சமர்த்தராயிருக்கின்றார்கள். மழைபெய்யும் வண்ணம் மேகங்களையும் பயிர்களுடன்கூடிய பூமிகளையும் உண்டு பண்ணி ஜனங்களை ரக்ஷிப்பவர் நீரே! உம்முடைய மகிமையால் சமுத்திரங்கள் கரையைக் கடந்து பூமியில் வருவதில்லை பிரபுவாயிருக்கும் தேவரீரை நினையாமல் மறந்து விட்டோம் இப்போது எங்களுக்குத் துன்பமுண்டான பிறகே தேவரீரை நினைக்கின்றோம். ஓ சுவாமி! இது எங்களுக்கு ஸஹஜமாயிருக்

கின்றது. அதனால் அடியார்கள் பேரில் கோபங்கொள்ள வேண்டாம். எங்கள் பேரில் தயவுசெய்து காப்பாற்ற வேண்டும். ஓ பிரபோ! என்று கைகளைக் கூப்பிக்கொண்டு, தேவர்களும் முனிவர்களும் நிற்க, அவர்கள் மீதிரக்கங்கொண்டு அக்காளகூட விஷத்தைச் சமனஞ் செய்ய மனங்கொண்ட சிவபெருமான், அவர்கள் சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி ஓர் வசனம் சொல்ல வாரம்பித்தார்.

# ஏழாவது அத்தியாயம்.

## பரமசிவன் விஷமுண்டது.

பரமசிவன் திருவாய்மலர்ந்து சொல்லுகின்றார் "சுமுகர்களாயிருக்கின்ற விஷ்ணுபிரம்மன் முதலான தேவர்களே!! முனிவர்களே! பயப்படாதீர்கள். நான் இங்கு பிரசன்னமாயிருக்கின்றேன் ஏ! பிரம்ம! விஷ்ணு! அசுரர்காள்! இந்திர! தேவர்காள் சித்தர்காள்! கின்னரர்காள்! வித்தியாதரர்காள்! கிம்புருடர்காள் அப்ஸர ஸ்திரீகாள்! நீங்கள் யாவரும் ஒருங்கு சேர்ந்து இவ்விடம் வரக்காரணம் யாது? உங்களுக்குண்டான பயத்தின் காரணம் என்ன? உங்களுடைய முகங்கள், தண்ணீரில்லாக் குளத்தில்வாடி நிற்கும் தாமரைப் பூவைப்போலிருக்கின்றன. ஓ! விஷ்ணுவே! நீர் என் வாடின முகத்தோடும், கறுத்த மேனியுடனும் நிற்கின்றீர்? எங்கும் விஜயத்தை யுடையவரும், பராக்கிரமத்தை யுடையவரும், இராவணனை சங்கரித்தவரும், சிசுபாலனை வதைத்தவரும், இரண்யனை நாசஞ்செய்தவரும், மதுவென்னு மசுரனை முடித்தவரும், மிகுந்த பலத்துடன் கூடின மகாபலியை யடக்கினவருமாயிருக்கின்ற வுமக்கு இவ்விதமான ஆபத்துண்டானதற்குக் காரணம் யாது?... ஓ! பிரம்மனே! உம்மைப் பார்த்தால் மிகுந்த துக்



கமடைந்தவர்போல் காண்கின்றீர். உம்முடைய சரீரம் இரத்தத்தால் பூசப்பட்டிருக்கின்றதே! அசுரர்கள் யாவரையும் உண்டு பண்ணப்பட்டவரும் உலகங்களுக்கு வரங்களைக் கொடுப்பவருமாகிய உமக்கேன் கஷ்டம் வரவேண்டும்? அதைச் சொல்லும்... ஓ! இந்திரா! தலையிற் கிரீடமில்லாமலும், இடுப்பில் வஸ்திரமில்லாமலும், கையில் வச்சிராயுதமில்லாமலும் நிற்கும் வண்ணம் விருத்திராசுரனைக் கொன்றவனும் தேவர்களுக்கதிபனுமாயிருக்கின்ற உனக்கு என் இவ்வருத்தமுண்டாயிற்று?... ஓ! அக்கினிதேவா! உக்கிரமாய் இருக்கின்ற உன்னுடைய தேஜஸானது மழுங்கிப்போய் கறுத்தமேனியுடன் உஷ்ணமில்லாதவனாயும், ஆயுதமில்லாதவனாயும், அலங்காரமற்றவனாயும், இருக்கின்றாயே? அஃதேன்? ஓ! தர்மதேவனே! உன்னுடைய தண்டாயுதத்தால் உலகங்களை ஜயித்த சர்வான்மாக்களையும் கொன்று வரக்கூடிய நீ அவிழ்ந்த தலைமயிருடனும் நிராயுதனாயும், வாகனமின்றியும், தவித்து நிற்பதைப் பார்த்தால் மிகுந்த ஆச்சரியமாயிருக்கின்றதே? இதற்கென்ன காரணம்?... ஓ நிருதியே! யுத்தகளத்தில் சத்ருக்களை ஜயித்து விரட்டக்கூடிய பராக்கிரமத்தை யுடையவனும் மகோன்னதனுமாயிருக்கின்ற நீயும் ஆயுதமில்லாமல் வாகனத்துடன் வாடிநின்றனையே அதற்குக் காரணமென்ன சொல், ஓ! வருணா! குறைந்த அங்கத்துடனும் துக்கத்துடனும், பராக்கிரமமில்லாமலும், இருக்கின்றாயே ஏன்! சத்ருவாகிய தவளைக்கும் சர்ப்பம்போன்ற உன் கையிலிருந்த பாசக்கயிறானது எங்கே போய்விட்டது?......ஓ! வாயுதேவா! உன் கதி எங்கே போய்விட்டது? சக்தியில்லாமல் அசைவற்றவனாயிருக்கின்றாயே! முன்பு உன்னால் மேரு முதலான பர்வதங்கள் தூளாக்கப்பட்டனவல்லவா? இச்சமயம் உனக்கு இவ்வித துக்கம் வந்ததற்குக் காரணம் என்ன? ஓ! குபேரனே! நீயும் துக்கத்தை யுடைந்ததாகக் காணப்படுகின்றாயே! உன் கண்களில் ஏன் பெரும்பள்ளம் விழுந்திருக்கிறது? சத்ருவே யில்லாதவனாயும் எங்கும் ஜயத்தை யுடையவனாயும் இருக்கும் உனக்குக்கூட வருத்தம் வரக்காரணம் யாது. சொல்வாய்?...ஓ! ஈசானனே! அவிழ்ந்த ஜடையும், எளிமையடைந்து வாடின மேனியும் ஆயுதமில்லாத கரங்களும், கறுத்த உடலும்

சத்துருக்களை ஜயிக்கும் வல்லமையுமுடைய உனக்கு ஏன் இந்த வருத்தம் உண்டாக வேண்டும்? அதனை விவரமாய்ச் சொல்வாயாக.... ஓ! தேவர்களே! நீங்கள் எல்லோரும் ஏன் சக்தியில்லாதவர்களாயிருக்கின்றீர்கள்?... முனிவர்களே! உங்களுக்கும் துன்பமேனுண்டாக வேண்டும்? ஓ! சூரியர்களே! காந்தியில்லாதவர்களாயும் இருளை யடைந்தவர்களாயும், ஏன் இருக்கின்றீர்கள்? உங்கள் உக்கிரம் எங்கே? பிரகாசமெங்கே?... ஓ! தேவர்களே! சந்திரன் எங்கே? காணவில்லையே. என்று இவ்விதமாகப் பரமசிவன் கேட்கலுற்றார்.

சந்திரனைப்பற்றிக் கேட்டவுடன் தேவர்கள் யாவரும், பிரபோ! சந்திரன் தங்கள் சிரசிற்றானே இருக்கின்றான். பாருங்கள்." என்றுசொல்ல அதனைக்கேட்ட பரமசிவன் "இந்த அமிர்த கிரணங்களையுடைய சந்திரனால் உங்கள் தாபத்தை நிவிர்த்தி செய்துகொள்ளலாமே" என்று சொல்லித் தன் சிரசில் விளங்கும் மதியைநோக்கி "ஓ! சந்திரனே! கையில் கத்தியைக்கொண்டு எங்கும் ஜயத்தைக் கொள்பவனும், மின்னற் போன்றவனும், விசாலமான நேத்திரங்களை யுடையவனும், மெதுவான குரலை யுடையவனும், நல்ல அழகுடையவனும், சுவர்க்கத்தைப் பரிபாலனஞ் செய்பவனும், வில்லைத்தரித்துக் கொண்டிருப்பவனும், நீலமான நேத்திரங்களை யுடையவனும், தங்கம் போன்ற மேனியை யுடையவனும், சாந்தமுள்ளவனும், நல்புத்தியுடையவனுமாகிய உனக்கும் துக்கம் உண்டோ" எனக்கேட்டுப்பின்னும் "ஓ! சித்திரபுத்திரா! விசித்திரமான அங்கத்தை யுடையவனே! சிங்கத்தையும் மேகத்தையும் தோற்கடிக்கவல்ல கர்ச்சனையையுடையவனே! உனக்கேன் இவ்வருத்த மேற்பட்டது?... சுவர்க்கங்களை இரக்ஷிப்பவர்களும், மிகுந்த சூரர்களும், இந்திரபாணம் முதலியவைகளைத்தரித்தவர்களுமான, கின்னரர், சித்தர், கிம்புருடர், வித்தியாதரர், உரகர், ஆரக்கர், முதலானவர்களே! நீங்கள் ஏன் கிலேசமுடனிருக்கின்றீர்கள்?... வசிஷ்டர், விசுவாமித்திரர், அத்திரி, புலஸ்திரியர், புலகர். கிரது, யாசர், பரத்துவாசர், ததீசி, அகஸ்தியர், ஜாபாலி, மரீசி, ஜைமினி, தௌமியர், பிருகு, அங்கிரஸ,



பிப்பிலாஜர், உபயாஜர், உபமன்னியு, வியாஸர், விபாண்டகர், குச்சர், வச்சர், குஷி, தூமகாக்ஷர், கண்வரிஷி, கண்டி, சண்ணுவர், மாண்டவ்வியர், கௌசிகர், ஆகியமுனிவர்களே! நீங்கள் ஏன் வாடின முகத்தினராய், அவிழ்ந்துதொங்கும் சடையுடையராய், தண்டுகமண்டலமில்லாதவராய், வருத்தமடைந்த வங்கத்தினராய், நிற்கின்றீர்களே! உங்களுக்கென்ன நேரிட்டது" என்று சகலமுமறிந்த சிவபெருமான் பின்னும் ஒவ்வொருவரையுங் குறித்துக் கேட்கத்தொடங்கினார்.

இவைகளைக் கேட்டு இலச்சையானும், மனவருத்தத்தானும் பதிற்சொல்ல இயலாதவராகித் தேவர்கள் முனிவர்கள் முதலிய யாவரும் பிரம்மனைப் பதிற் சொல்லும்படிக் கண்சாடையாலேவினார்கள். அவரும் சிவபெருமானை வணங்கிச் சொல்லலாயினர்.

"ஓ சுவாமி! ஸர்வலோகநாதனும், எங்கும் பரிபூரணமாக விளங்கப்பட்டவனுமான கர்த்தனே! எங்களுக்குண்டான அவமானம் தேவரீர் திருவுளமறியாததன்றே ஓ! ஜகதீசா? நாங்கள் பாற்கடலைக் கடையும்போது அதனின்று திடீரென்று சகிக்கமுடியாத ஓர் பெரிய சத்தமுண்டாயிற்று உடனே ஸகிக்கமுடியாத கொடுமையுடன் காலகூட விஷமானது பிரளயகால விருள்போலப் பயங்கரத்துடன் தோன்ற, அச்சமுத்திரமே வற்றிவிட்டது. அதனின்றும் பின்னும் கிளம்பிய வடவாக்கினி எங்களைக்கொல்ல வருகின்றது. அஃதேதென்றே தெரியவில்லை. ஓ! பிரபோ! காட்டுத் தீயால் வேகும் பிராணிகள் போலும், வனம் போலும், வருத்தமுற்ற எங்களுக்குத் தேவரீரின் திவ்யதரிசனத்தினால் அவ்வாதை நீக்கிற்று. பிரபோ! காட்டுத் தீப்போன்ற இவ்விஷத்தால் வதங்கும் எங்களுக்குத் தங்கள் தரிசனம், ஜலத்தை வருவிக்கின்ற மேகமாக உதவவேண்டும். ஜகதீசா! வெகு பயங்கரமாயிருக்கின்ற இந்த விஷமானது எங்களையேயன்றி உலகம் முழுமையுமே தகித்துவிடும் போலிருக்கின்றது. ஆகையால் தாங்கள் தாமதியாமல் எங்களைக்காப்பாற்றவேண்டும். தாங்கள் மறந்துவிட்டால் பின்பு எங்களுக்குப் புகலிடம் வேறில்லை."

என்று பிரமன் சொல்ல, அவரும் விஷ்ணு முதலான தேவர்களும், பரமசிவனுடைய பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தனர். உடனே கருணாநிதியாகிய சிவபெருமான் அவர்களை நோக்கி "தேவர்களே! எழுந்திருங்கள். பயத்தை விட்டுவிட்டு என் பின் நில்லுங்கள்." என்று சொல்லி விட்டு, தம் பக்தனாயிருக்கும் சுந்தரமூர்த்தியைப் புன்சிரிப்புடன் நோக்கி "சுந்தரா! இவ்விடம்வா நமது உத்தரவின் பிரகாரம் நீ சென்று அவ்விஷத்தைக் கிரகித்துக்கொண்டு சீக்கிரம் நம் ஸமீபம் வருவாய்" என்றுத்தரவு செய்தனுப்பினர். சுந்தரரும் சிவபெருமானின் கட்டளையைச் சிரமேல் கொண்டு, அங்கு சென்று, சிவனருளால் பிண்டமபோலாக்கப்பட்ட அக்காளகூட விஷத்தைக் கையிலேந்திக்கொண்டு வந்து அதைத் தன் நாயகனிடம் கொடுத்தனர்.

அதைக்கண்டு, அங்குள்ளவர்கள் யாவரும் மகா ஆச்சரியத்தை யடைந்தனர். சிவபெருமானும் அதனை வாங்கிக்கொண்டு, அனைவரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, தன் வாயில் போட்டுக்கொண்டு விழுங்கிவிட்டனர். அது அவரது கண்டத்திலேயே தங்கிவிட்டமையால் அவ்விடம் நீலமாகிவிட்டது. அன்றையமுதல் அந்த க்ஷேத்திரத்திற்கு ஆலங்குடி என்ற திருநாமம் வழங்கிவருகின்றது. மேலும், விஷ்ணு முதலான தேவர்களை இரக்ஷித்ததின் காரணமாய் சுவயம்புவான பரமசிவனுக்கு ஆபத்ஸகாயர் என்றும் நீலகண்டரென்றும் நாமங்கள் வழங்கலாயிற்று.

அந்தத்திவ்ய க்ஷேத்திரத்தில் தேவர்களும் இருஷிகளும் தங்கள் தங்கள் பெயர்களால் தீர்த்தங்கள் அமைத்துக்கொண்டு, அவரவர்களும் தனித்தனி லிங்கங்கள் நியமித்துப் பூசைசெய்து, காசியாரண்ணியாதிபதியாகிய சிவபெருமானின் ஆச்சரிய ரூபத்தைத்தரிசனங்கொண்டு நின்றனர்.

இவ்விதம் சிலாதர் குமாரரான நந்தி கேசுவரர் இப்புண்ணிய சரித்திரத்தைச் சொல்லி முடிக்க, பிரியத்துடனும் மயிர்க்



கூச்சலுடனும், கேட்டுக்கொண்டிருந்த சனத்குமாரர் பின்னும் அவரை நோக்கிச் சில கேள்விகளைக் கேட்கலாயினர்.

# எட்டாம் அத்தியாயம்.

## தேவர்கள் அமிர்தம் கண்டது.

நந்திகேசுவரரைப் பார்த்து சனத்குமாரர் சொல்லுகின்றார் "கலைமறிந்த பிரபுவே! மிகவும் கற்றுணர்ந்தவராயிருக்கும் தேரால் சொல்லப்பட்ட, சமுத்திரமதனத்தையும், அதனினுண்டான காளகூட விஷ உற்பத்தியையும், அதன் மகிமையையும், விஷ்ணு முதலான தேவரிஷிகளுக்குண்டான அவமானத்தையும், காளகூட விஷத்தைப் புசித்த சிவபெருமானுடைய பெருமையையும், அவருக்கு நீலகண்டனென்னும் நாமம் உண்டான காரணம் முதலிய வற்றையும் தங்கள் வாக்கினின்று கேட்டு மகா ஆனந்தமடைந்தேன். இவ்விஷயங்களை நான் ஒருகாலும் மறவேன். ஆனால் மற்றொரு விஷயமும் அறிய விரும்புகிறேன், அதனையும் எனக்குச் சொல்லியருளவேண்டும்.

தேவர்களால் கொண்டுவந்து விடப்பட்ட அமிர்த புஷ்கரணியின் உற்பத்தி, தேவரிஷிகளால் உண்டு பண்ணப்பட்ட தீர்த்தங்களின் மகிமை, வெவ்வேறிடங்களில் பெரியோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட புண்ணிய ஸ்தானங்கள், லிங்கங்கள் இவைகளினுடைய மகாத்மியங்கள் முதலியவைகளைப்பற்றிக்கூறும்போது, முன்னொருமுறை தாங்களே "பதினான்கு லோகங்களிலுமுள்ள க்ஷேத்திரங்களைத் தரிசிப்பதிலும் காசியாரண்ணிய தரிசனமே சிறந்தது" என்று சொன்னமைக்குக் காரணத்தையும், எனக்குச் சொல்லியருள வேண்டும் என்று பிரார்த்திக்க மகாதயாளுவான நந்தி கேசுவரர் சொல்லத்தொடங்கினர்.

" சனத்குமாரரே! சிவபெருமான் வெகு குரூரமாயிருந்த காளகூட விஷபிண்டத்தைப் புசித்துவிட்டுக் கோபத்தால் ஜொலிக்கப்பட்ட பிரளய காலாக்கினியைப் போன்று ஹூம்காரஞ் செய்து பெருமூச்சுவிட்டனர். அதனைத்தாங்க முடியாமல் விஷ்ணு முதலிய தேவர்களும் முனிவர்களும், வெகு தூரம் தள்ளப்பட்டவர்களாய்க் கீழே விழுந்து மூர்ச்சையற்றுப் போயினர். அவ்விதம் பூமியில் ஆயிரங்கோடி வருஷங்கள் சென்றுவிட்டன. சிவபெருமானின் உக்கிரத்தால் அந்த க்ஷேத்திரத்தைச் சுற்றி இரண்டு நாழிகை வழிதூரம்வரையில் வீரியமற்றதாயும், ரசமற்றதாயும், ஆகிவிட்டது. ஓ! முனீசுவரரே! அச்சமயத்தில், சிவபெருமானெனக்கு உத்தரவளிக்க, யான் அத்தேவர்கள் கிடக்கும் இடத்திற்குச் சென்று அவர்களை யெழுப்பி 'ஓ! தேவர்களே! இச்சமயத்தில் சிவபெருமான் மகாகோபத்துடன் விளங்குகின்றார். அவரது கோபசாந்தியின் பொருட்டு நீங்கள் அமிர்தத்தைச் சம்பாதித்து, அவரது ஆலயத்தைச் சுற்றி நிரப்புங்கள் " என்று நான் சொல்ல, தேவர்கள் என்னை நோக்கி " ஸ்வாமி! அமிர்தம் எங்கேயிருக்கின்றது எங்களுக்குத் தெரியவில்லையே " என்று கேட்க அவர்களை நோக்கி நான் " தேவர்களே! வெகு பொருள்களடங்கிய ஸ்துதிகளால் சிவபெருமானை ஸ்தோத்தரியுங்கள். அமிர்தமிருக்குமிடம் உங்களுக்குத் தெரியவரும். " என்றுசொன்னேன். அவர்களும் அதற்கிணங்கி சம்புவின் ஸமீபஞ் சென்று ஸ்தோத்திர மொழிகளால் அவரைப் பிரார்த்திக்க வாரம்பித்தார்கள்.

" சம்போ! மங்களரூபியாயும், சூலபாணியாயும், இருக்கின்ற மகேசுவரா! கௌரீசா! காமதகனா! ஸர்வ லோகநாதா! திரிபுராந்தகா! சர்வஞ்ஞா! வரதா! உக்கிரவிஷாசனா! ஜகத்குருவே! தேவா! பரமேசுவரா! அபீஷ்டவரதா!! அமிர்தானந்த சொரூபா ஐயா! ஈசானா! சரணாகதவத்ஸலராயிருக்கின்ற ஓ ஸ்வாமி! எங்களை இரக்ஷிக்கவேண்டும். அமிர்தமிருக்குமிடத்தை எங்களுக்குக் காண்பித்தருளவேண்டும். " என்று மிகவும் விநயத்துடன் பிரார்த்திக்கச் சிவபெருமான் அவர்களுக்கு முன்னால் பிரசன்னமாகி



அவர்களை நோக்கித் " தேவர்களே! நீங்கள் மறுபடியும் பாற்கடலைக் கடையுங்கள் அதினின்றும் அமுதம் வெளியாகும் " என்று மொழிந்தருளி மறைந்தனர் அதனையே தேவர்கள் கட்டளையாகக் கொண்டு, மறுபடியும் திருப்பாற்கடலுக்கே சென்று முன்போற்கடையலுற்றார்கள். அச்சமயத்தில் ஈசுவரரின்மொழிப்படியே அக்கடலினின்றும் அமுதங்கிளம்பியது தேவர்கள் அதைக்கண்டு மகாசந்தோஷத்துடன் எடுத்துக்கொண்டுவந்து, காசியாரணியவாசியான ஆபத்ஸகாயரின் ஆலயத்தைச் சுற்றி அதனை நிறைப்பித்து, அவ்விடத்தில் ஓர் குளமாக்கி, மிஞ்சியதைக்கொண்டு சம்புவான சிவபிரானுக்கு அபிஷேகமுஞ் செய்தனர். பின்பு நாரதர் முதலான பாடகர்களுடன் சிவபெருமானைத் துதித்துத் தங்களுக்கதிகமான இஷ்டமாயிருக்கும் 'நடனதரிசனம்' கொடுக்கவேண்டுமென பிரார்த்திக்க, பக்தப் பிரியரான சிவபெருமானும் அவர்களுக்கு அவ்விதமே தரிசனங் கொடுத்தருளினர்.









LIBRARY SERVICE INC
KOTTAIYUR-623106
INDIA

அத்தருணத்தில் தேவர்கள் யாவரும் ஆநந்தபரவசமடைந்தவர்களாகிச் சிவபெருமானை நோக்கி "ஏ! கிருபாநிதே! அடியார்களின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றும் பிரபுவே! எங்களால் செய்யப்பட்ட இந்த அமிர்தசரசென்ற புஷ்கரணியானது தேவரிஷி தீர்த்தமென்ற பிரசித்தமான பெயருடன் விளங்கும்படி யருளவேண்டும்." என்று பிரார்த்தித்தனர். அச்சமயத்தில் சிவபெருமான் மிகுந்த கிருபையுடன் அவர்களை நோக்கி "தேவர்களே! உங்கள் பிரியத்தின்படியே இந்தத் தீர்த்தமானது உங்கள் பெயரால் விளங்கட்டும். மேலும் இத்தீர்த்தமானது சகல பாபங்களையும் நீக்குவதாயும் தீர்த்தங்களுக்கெல்லாம் உத்தமமானதாக இருக்கட்டும் என்று சொல்லியருளினர். அன்றுமுதல் அத்தீர்த்தமானது வாசனையுடைய நீலோற்பலம், செந்தாமரை, செங்கழுநீர், முதலான புஷ்பங்களாலும், சக்கிரவாகம், பகம், கிரௌஞ்சம், அன்னம், காரண்ட முதலான பக்ஷிகளாலும், பலவிதமான சொர்ணதாமரைகளாலும், நிரப்பப்பட்டு, வாக்குக்கெட்டாததாயும், மிகுந்த ஆநந்தத்திற்குக் காரணமாயும், சரசுகளுக்கெல்லாம் உத்தமமாயும், மாநதசரசென்னும் தீர்த்தத்தைப் பழிக்கத் தக்கதாயும், அமிர்த புஷ்கரணி என்ற திருநாமமுடையதாயும், பரமாயும், மனிதர்களுக்குச் சௌக்கியமாயும், மூன்றேதின ஸ்நாநத்தால் ஸகல வியாதிகளையும் நிவர்த்திசெய்யத் தக்கதாயும், மனதிலுண்டான தாபத்தை நிவர்த்தி செய்வதாயும் மகாகீர்த்தி பெற்றதாயும், திவ்வியமாயும், நேத்திரங்களுக்குப் பிரியத்தைக் கொடுப்பதாயும், யாவராலும் கொண்டாடப்பட்டதாயும், விளங்கி வருகின்றது. மேலும் அத்தீர்த்தத்தில் தேவஸ்திரீகள் ஸ்நாநஞ்செய்து விளையாடினபொழுது அவர்களுடைய நெற்றியிலிருந்து விழுந்த செந்தூரத் தூள்களின் சேர்க்கையால் அது சிவப்பு வர்ணத்தையும் அவர்களுடைய தலைமுடிச்சுகளினின்று நீங்க புஷ்பங்களின் சேர்க்கையால் மிகுந்த வாசனையையும் பெற்றிருக்கின்றது.

அந்த தடாகத்திலுண்டான நெருங்கியசெந்தாமரை புஷ்பங்களால் அலங்காரஞ் செய்யப்பட்டதாயும், ருசியுள்ளதா



யும், சேறு இல்லாததாயும், நிர்மலமாயும், மிருதுவாயும், அநாதி முதல் செய்யப்பட்ட பாபங்களை நாசஞ்செய்ய வல்லதாயும், அமிர்த ஜலத்தோடு கூடினதாயும் இருக்கும் அப்புண்ணிய தீர்த்தமானது, பரமசிவன் அநுக்கிரகம் செய்தவன்று முதல், தேவரிஷி தீர்த்தமென்ற சிறந்த பெயருடன் விளங்கி வருகின்றது.

## ஒன்பதாவது அத்தியாயம்.

### அமிர்த புஷ்கரணியின் மகிமை யுரைத்தது.

இந்தப் பிரகாரம் அமிர்த புஷ்கரணியுண்டான விதத்தைப்பற்றி நந்திகேசுவரர் விரிவாகச் சொன்னபிறகு, அவரை நோக்கி சனத்குமாரர் "தேவரீர் சொல்லிவந்த விஷயங்களை மிக்க கவனமாகக் கேட்டறிந்தோம். மேலும் அந்த அமிர்த புஷ்கரணியின் மகிமையை ஒருவாறு அறிய விரும்புகின்றேன்" எனக் கேட்க சிலாதர் புத்திரராகிய நந்திகேசுவரர் சொல்லத் தொடங்கினார்.

"சனத்குமாரரே! சிவபெருமானுக்குச் சந்தோஷமுண்டாகும் பொருட்டும், உலகரக்ஷணையின் பொருட்டும், தர்மார்த்த காமமோக்ஷங்களின் சித்தியின் பொருட்டும், தேவர்களால்கொண்டுவந்து நிரப்பிவைக்கப்பட்ட அவ்வமிர்த புஷ்கரணியின் மகிமையைச் சொல்லுகின்றேன் கேளும். அத்தீர்த்தத்தில் எவர்கள் பக்தியுடன் ஸ்நாநம் செய்கின்றார்களோ அவர்களுடைய பாபமனைத்தும் ஒரு நொடியில் அகலும்; அவர்களும் மோக்ஷத்தை யடைவர். இத்தீர்த்தத்தைச் சுற்றிப் பத்து யோசனைக்குள்ளாக விருக்கும் மனிதர்கள் நற்கதியைப் பெறுவார்கள். இதிற் சந்தேகமில்லை, இந்த அமிர்தசரசின் தீர்த்தத்தைக் காற்றானது ஸ்பரிசித்து

எந்த விடத்தில் வீசுகின்றதோ அவ்விடத்திலுள்ளவர்கள் முக்தியடைவார்கள். ஆகையால் அக்ஷேத்திரத்தில் வசிக்கும் மனிதர்களின் பெருமையை சொல்ல முடியுமா? அத்தீர்த்தக்கரையில் பிராணிகளின் எலும்பைப் போடுவதினாலேயே, அப்பிராணிகள் சிவலோகம் போய்ச் சேருகின்றன. மனிதர்கள் எந்த தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்தாலும் அப்பொழுது அவ்வமிர்த புஷ்கரணியை தியானஞ்செய்து கொண்டால், அவர்கள் அழிவில்லாத பலத்தையடைகின்றனர். எதுவரையில் அத்தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்யவில்லையோ அதுவரையில் மனிதர்களைப்பிடித்த பாபம் அவர்களை விட்டகலாது. அத்தீர்த்தத்தின் ஈசானிய பாகத்தில் ஸ்நாநம் செய்பவர்கள் சிவபிரானுடைய கிருபா வல்லமையால், புத்திரன் முதலிய சம்பத்துக்களைப் பெறுகின்றார்கள் இதிற் சந்தேகமில்லை, பூமி, அந்தரம், சுவர்க்கம் முதலிய இடங்களிலுள்ள ஸகல புண்ணிய தீர்த்தங்களும், பிராதக்காலத்தில் ஸ்நானம் செய்யும் பிராணிகளின் பாபசாந்தியின் பொருட்டு தினந்தோறும் இந்த அமிர்த புஷ்கரணியில் வந்து வாசஞ் செய்கின்றன, ஓ! முனிசிரேஷ்டரே! வித்வானாயிருக்கும் எந்த மனிதன் தினந்தோறும் உதய காலத்தில் எழுந்திருக்கும்போது, இந்தப் புண்ணிய தீர்த்தத்தை ஸ்மரிக்கின்றானோ அவனுடைய கொடிய பாபங்களனைத்தும், ஒரு நொடியில் விலகிவிடுகின்றன.

இந்த அமிர்த புஷ்கரணியில் ஒரு முறை ஸ்நாநம் செய்வதால், இழிவான விடங்களிற் புசித்த தோஷங்கள், தாமரையிலைத் தண்ணீர்போல், மனிதர்களிடம் அணுகமாட்டாது. அதனில் ஸ்நாநபானம் செய்கிறவர்களுக்கு வேறுவழிகளால் நிவிர்த்தியாகாத எவ்வித கொடியபாபங்களும் உடனே நிவிர்த்தியாகும். மானிடஜன்மமடைந்த எவனும் இவ்வமிர்த புஷ்கரணியில் ஸ்நாநம் செய்யாமற் போனால், அவன் அஜ்ஜென்மமெடுத்ததின் பயனைப்பெறாமற் போகின்றான். அவ்வமிர்த புஷ்கரணியில் விதிப்பிரகாரம் செய்யப்படும் ஒரு ஸ்நாநமானது, கங்கையில் அமாவாசைதினம் செய்யும் ஸ்நாநத்தைக் காட்டிலும் மிகுதியான பலன்களைக்கொடுக்கும்.



தேவர்களுக்குள் மகாதேவரும், நக்ஷத்திரங்களுக்குள் சந்திரனும், மனிதர்களுக்குள் அரசனும், விருக்ஷங்களில் கற்பக விருக்ஷமும், பஞ்சபூதங்களுக்குள் ஆகாசமும், சக்திகளுக்குள் பராசக்தியும், மந்திரங்களுக்குள் பஞ்சாக்ஷரமும், தேவாயுதங்களுள் வச்சிராயுதமும், தத்துவங்களுக்குள் ஆத்மதத்துவமும் யஜுர் வேதமந்திரங்களுக்குள் உருத்திரமந்திரமும், ஸர்ப்பங்களுக்குள் அனந்தனும், பர்வதங்களுக்குள் ஹிமயமும், எவ்விதம் மேலானவைகளாக இருக்கின்றனவோ அவ்வண்ணமே க்ஷேத்திரங்களுள் காசியாரணியமும், தீர்த்தங்களுள் அமிர்த புஷ்கரணியுமே உத்தமமானவை; சிவபெருமானும் அவ்வண்ணமே சொல்லியிருக்கின்றார்.

பரிசுத்தம், சுகம், க்ஷேமம் இவைகளை விரும்புகிறவர்கள் சுபத்தைக் கொடுக்கும்; அந்த அமிர்தபுஷ்கரணியைத் தினந்தோறும் நினைக்கவேண்டும், நமஸ்கரிக்கவேண்டும், வாக்கினால் துதிக்கவேண்டும், மனதினும் அர்ச்சிக்கவேண்டும். ஒவ்வொருவனும், விஷ்ணு முதலிய தேவர்களால் சிவபெருமானுக்குச் சந்தோஷத்திற்கேதுவாக உண்டு பண்ணபபட்டதும் பாபங்களை நிவிர்த்தி செய்பவல்லதும், ரோகங்களைச்சமனஞ் செய்யக்கூடியதுமாகிய அப்புண்ணிய தீர்த்தத்தையடையவேண்டும்.

மேலும், அதனில் ஸ்நாநஞ்செய்யும் பொழுது "மகாபாதகங்களாகிய அழுக்கையுடைய இச்சரீரத்தை உன்னுடையஜலத்தால் அலம்பிக்கொள்ளுகின்றேன். எனக்குப் புகழ் முதலான பலன்களைக் கொடுத்தருளவேண்டும் என்று இரண்டு வேதமந்திரங்களை நன்றாய்ச் சொல்லிக்கொண்டு, பரிசுத்த மனத்துடன் அதனில் ஸ்நாநஞ்செய்தால் அவன் ஆத்மசுத்தனாகி மிகுந்த சந்தோஷத்தையடைகின்றான். சுகத்தை விரும்புபவர்கள் அத்தீர்த்தத்தின் மகிமையை இவ்விதமாகச் சொல்லிக்கொண்டிருக்கவேண்டும். அதைப்போல நல்லமனதுடனும் பக்தியுடனும் ஸ்நாநஞ் செய்யவேண்டும். அத்தீர்த்தத்தில் சூரியகிரகணம் ஆகிய புண்ணிய தினங்களில் ஸ்நாநஞ் செய்து, அந்தக்கரையில் தானம்

களும் செய்தால், அதற்கு அழிவில்லாத பலன்கள் உண்டாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும், சங்கிராந்தி, அயனங்கள், பூசம், வியதீபாதம், ஆதிவாரம், புண்யதிதிகள், முதலியவைகளில் அத்தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்பவன் கோடி குலங்களை உத்தாரணம் செய்தவனாகின்றான். ஜன்மநக்ஷத்திரம் ஜன்மதினம் இவைகளில ஸ்நாநம் செய்தால் சுகம் க்ஷேமம் ஆரோக்கியம், செல்வம் முதலியவைகள் உண்டாகும், பயங்கரமான சொப்பனங்கள், கிரகங்களால் உண்டாகும் பீடைகள் அனைத்தும் நீங்கும். அந்த அமிர்த புஷ்கரணியில் ஒரு மாட்டின் தோலளவு பூமியை சத்பிராமணனுக்குத் தானம் செய்வதால் பூமி முழுமையும் தானங்கொடுத்த பலனைப் பெறலாம். அந்த இடத்தில் கன்றுடனும் வஸ்திராபரணங்களுடனும் கோவை சத்பிராமணனுக்குத் தானம்செய்தால் சிவபதத்தையடையலாமென் பதிற் சந்தேகமேயில்லை, அத்தீர்த்தக்கரையில் ஜபம், தவம், ஹோமம், தானம், விரதம், தேவபூஜை, பிராமணபூஜை முதலியசற்கருமங்களைச் செய்பவனுக்கு, மற்றையவிடங்களில் செய்வதாலுண்டாகும் புண்ணியத்தைப் பார்க்கிலும் நூறுமடங்கு அதிகமாகவே கிடைக்கும் அப்படிச் செய்பவன் பூர்வஜன்மத்தில் செய்த சஞ்சித வினைகளையும், இஜ்ஜன்மத்தில் செய்யும் மகாபாபங்கள், மறு ஜன்மத்தில் செய்யப்போகும் கொடியபாபங்கள் முதலிய பஞ்சமாபாதகங்களினின்று விடுபட்டு மோக்ஷமடைகின்றான் இது நிச்சயம். விஷ்ணு முதலான தேவர்கள் வசிஷ்டர் முதலாகிய ரிஷிகள் முதற்கொண்டு சராசரமாகிய ஸர்வப்பிராணிகளுறுக, அதனில் ஸ்நாநஞ்செய்த மாத்திரத்தில் மிகுந்த பிரீதியையடைகின்றன.

அமிர்த புஷ்கரணியின் கரையில் ஒரு பிராமணனுக்கு அன்னதானம் செய்தவன் ஆயிரம் பிராமணர்களுக்கு அன்னமிட்ட பலனையடைகின்றான் வைகாசி மாதத்தில் விசாக நக்ஷத்திரத்தன்று தேவர்கள் முனிவர்கள் யாவர்களுடனும், பார்வதி சமேதராய், காமதகனரான சிவபெருமான், அவ்வமிர்தபுஷ்கரணி தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, அதனில் ஜலக்கிரீடை முதலான



வைகளுஞ் செய்கின்றார். அப்பொழுதல்லாத் தேவர்களும் அவரைப் பூஜிக்கின்றார்கள். அத்தருணத்தில் எவர்கள் அந்த தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்கின்றனரோ அவர்கள் ஈசுவர சம்பந்தமான சாயுஜ்ஜியத்தையடைகின்றார்கள்.

இவ்விதம் சனத்குமாரா தேவரிஷி தீர்த்தத்தின் மகிமையைப் பற்றி நந்திகேசுவரர் சொல்லக்கேட்டு, மகிழ்ச்சியுடன் ஆநந்தத்தால் சிறிது நேரம் கண்ணை மூடிக்கொண்டிருந்து பிறகு விழித்துப் பின்னும் சில விஷயங்களைக்குறித்துக் கேட்கலாயினர்.

# பத்தாவது அத்தியாயம்.

## தேவர்கள் லிங்கப் பிரதிஷ்டைசெய்தது.

சனத்குமாரர் நந்திகேசுவரரைப் பார்த்து 'ஜகத்குருவும் தேவர்களால் பூஜிக்கப்பட்டவருமான ஸ்வாமி! தேவரீரால் தெளிவாகச் சொல்லப்பட்ட அமிர்த புஷ்கரணியின் உற்பத்தியையும் சிறந்ததான அதன் மகிமை என்னும் அமிர்தத்தைக் காதுகளென்னும் பாத்திரங்களால் பானம்செய்தும் என்மனம் திருப்தியடைந்தபாடில்லை. ஆகையால் இன்னும் பலவிஷயங்களையறிய விரும்புகின்றேன். ஏ! ஸத்குருவே! அந்த க்ஷேத்திரத்தில் பாபங்களை நிவிர்த்திசெய்கின்ற அத்தீர்த்தத்தைத்தவிர மற்றும் தீர்த்தங்கள் உண்டோ? உண்டானால் அவைகளின் மகிமையென்ன? அவைகளில் ஸ்நாநம் செய்வதால் என்ன பலனுண்டாகும்? அவைகளைத் தரிசிப்பதாலும் ஸ்பரிசிப்பதாலும், ஸ்நாநம் செய்வதாலும், அவ்விடத்தில் புண்ணிய கருமங்களைச் செய்வதாலும், உண்டாகும் பலனைக்கேட்கவேண்டுமென்ற பிரியமுண்டாகின்றது.

ஆகையால் இச்சரித்திரத்தை விரிவாகச்சொல்லியருளவேண்டும்.
ஓ வேதவித்தகா!" என்று கேட்ட சனத்குமாரரை நோக்கி
மகேசுவரர் சொல்லுகின்றார்

"சனத்குமாரரே! பூர்வத்தில் பிரமன் முதலான தேவர்
கள் காளகூட விஷாக்கினியால் வருத்தமுற்றுத் தங்கள் தங்கள்
அதிகாரங்களை மறந்து துக்கத்தை அடைந்தவர்களாயும் மழுங்
கிய காந்தியையுடையவர்களுமாகி காசியாரணியபதியாகிய சிவ
பெருமானை வணங்கி " ஓ! ஜய! தேவா! ஜகன்னாதா! ஜயா! கா
ள விஷாசனா! ஜயா! ஸர்வசுராத்யக்ஷா! ஜெயா! காருண்யா! பி
ரபோ! ஜயா—கோடி சூரியப்பிரகாசா! ஜய—அஞ்ஞான விமோ
சக! ஜய!— ருத்ரா!— விரூபாக்ஷா! ஜய— நாகேந்திரபூஷணா!
பார்வதீநாதா! உம்மைநமஸ்கரிக்கின்றோம். பக்தரக்ஷகா! விச்
வைகவந்தியா! உம்மை நமஸ்கரிக்கின்றோம். விசுவரூப! உம்மை
நமஸ்கரிக்கின்றோம்" என்று பலவிதமாகத் தோத்திரம் செய்து
விட்டு மகாதேவரான சிவபெருமானைப் பார்த்துத் தேவர்கள் தங்
களுக்குண்டான குறையைச் சொல்லிக்கொண்டனர்.

"சுவாமி! தேவரீரால் நியமிக்கப்பட்டிருக்கின்ற எங்கள்
இருப்பிடங்களிலிருந்து எங்கள் அதிகாரங்களை நடத்த இயலாத
வர்களாகவிருக்கின்றோம். விஷத்தினால் பலமும் தைரியமும் ப
ராக்கிரமும் குறைந்திருக்கின்றோம். இப்பொழுது தேவரீருடைய
தரிசனத்தாலும் தியானத்தாலும் இந்த அவஸ்தை சிறிது நீங்கி
யிருக்கின்றது. ஓ! ஜகதீசா! தேவரீருடைய பாதாரவிந்தங்களில்
எங்களுக்கு எப்பொழுதும் அழிவற்ற பக்தியுண்டாகும்படி
ஞானத்தை யுபதேசித்து அஞ்ஞானமாயிருக்கிற இருளை நிவிர்த்
தி செய்யவேண்டும்" பார்வதீநாதனாகிய ஜகதீசா! தேவரீருடைய
கிருபாகடாக்ஷத்தால் அடியார்களாகிய எங்களை இரக்ஷிக்கவேண்
டுமென்று பிரார்த்தித்தனர். அச்சமயத்தில் காசியாரணியபதி
யாகிய சிவபெருமான் அத்தேவர்களுக்கு முன் பரமானந்த சொ
ரூபத்துடன், ஞானத்தைத்தரக்கூடிய சிவலிங்கத்தினின்று மூன்
றாம்பிறைச் சந்திரனைச் சிரசிற் கொண்டவராகவும், சர்ப்பத்தைப்



புரிநூலாக வணிந்தவராகவும், அக்ஷமாலையைக் கையிலுடைய
வராகவும், ஜடைகளையுடையவராகவும், ஸ்படிகம் போன்ற திரு
மேனியையுடையவராகவும், சூரியன்சந்திரன் அக்கினி இவைகளை
நேத்திரங்களாயுடையவராகவும்,மற்றுமுள்ள அலங்காரத்துடன்,
கோடி சூரியப்பிரகாசம்போல எழுந்தருளி, தேவர்களைப்பார்த்து
"நீங்கள் பயப்படாதீர்கள். உங்களுடைய ஸ்தோத்திரங்களால்
லிங்கத்தினின்றும்,உலகநன்மையின்பொருட்டும், உங்களுக்குஉப
தேசம் செய்யும் பொருட்டும் தக்ஷிணாமூர்த்தி வடிவுடன் வந்தி
ருக்கின்றோம். நீங்கள் அஞ்ஞானத்தைவிட்டு, மிகவும் பரிசுத்
தமான இப்புண்ணியக்ஷேத்திரத்தில் இப்பொழுது உங்கள் பேர்
களால் எல்லாத்திக்குகளிலும்தீர்த்தங்களையுண்டுபண்ணி அந்தந்த
விடங்களில் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து, தினந்தோறும் என்
னைப்பூஜித்து வருவீர்களேயானால் அப்புண்ணியத்தால் உங்களு
டைய மனோபீஷ்டத்தை யடைவீர்கள்" என்று உபதேசித்து
விட்டு, அந்த தக்ஷிணாமூர்த்தி வடிவுடனேயே அன்றுமுதல் அவ்
வடவிருக்ஷத்தினடியில் சனகாதி முனிவர்களால் சூழப்பட்டவ
ராயும் அடியார்களுக்கென்றும் அனுக்கிரகம் செய்பவராயும், கிரு
பாநிதியுமாயுமிருக்கின்ற சிவபெருமானெழுந்தருளினர்.

பிறகு விஷ்ணு பிரமன் முதலான தேவர்கள் சிவபெருமா
னிடம் மிக்கபக்தியுடையவர்களாகி வெவ்வேறு இடங்களிற் பூ
ஜை செய்தார்கள். அப்படியவர்களால் பூஜை செய்யப்பட்ட
லிங்கங்களும் அவர்களால் உண்டுபண்ணப்பட்ட தீர்த்தங்களும்
எல்லாத்திக்குகளிலும், பாபங்களை நிவிர்த்திசெய்வனவாகி விளங்
குகின்றன, என்று நந்திகேசுவரர் சொல்ல, சனத்குமாரர் "சுவா
மி! பிரமன் முதலான தேவர்கள் எந்தெந்ததிக்குகளில் லிங்கங்
களை பிரதிஷ்டை செய்தனர்? அவ்விஷயத்தை விஸ்தாரமாகச்
சொல்லி யருளவேண்டுமெனக் கேட்ட சனத்குமாரரை நோக்கி
நந்திகேசுவரர் சொல்லுகின்றார்.

"பிரம்மதேவன் தெற்குதிக்கில் ஒரு புண்ணிய தீர்த்தத்
தையுண்டுபண்ணி, அத்தீர்த்தத்தில் ஸ்நாநம் பண்ணி அந்தக்

கரையில் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து, அவ்விலிங்கத்தைப்பூஜித்து, அங்கேயே தவம் புரிந்து முடிவில் காளகூட விஷத்தால் மறந்துபோயிருந்த தன் அதிகாரமான சிருஷ்டித்தொழிலைச் சிவபெருமானருளால் தெரிந்து கொண்டு தன்னிருப்பிடம் சென்றார். அன்று முதல் பிரம்மதேவன் மிகுந்த பக்தியுடன் அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து காசியாரணியபதியாகிய சிவபெருமானை எப்பொழுதும் தரிசனம் செய்து வருகிறார். பிரம்மதேவர் அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தன் அதிகாரத்தையடைந்ததால் அதற்குப் பிரம்ம தீர்த்தம் என்ற நாமம் வழங்கி வருகின்றது. அத்தீர்த்தத்தில் எவரேனும் ஒரு தடவை ஸ்நானம் செய்வாரானால் அவருடைய கொடியபாபங்கள் அவரைவிட்டகலும், அன்றியும் எப்போதும் அதனில் அன்புடன் ஸ்நானஞ் செய்பவர்களுக்கு ஜன்மஜன்மாந்தரங்களில்செய்துள்ளபாபங்களுமொழிந்து, பிரம்மலோகபதவி கிடைக்கும், அத்தீர்த்தத்தில் ஐம்புலன்களையுமடக்கி ஸ்நானஞ்செய்து, அக்கரையில் கோதானம் பூதானம் திலதானம் சுவர்ணதானம் முதலான மகா தானங்களைச் செய்வார்களேயாகில், அவைகள் கங்கோற்பத்தியில் கொடுக்கும் தானங்களைக் காட்டிலும் பதின் மடங்கு அதிகமான உத்தமபலன்களையுண்டாக்கும் அந்த விடத்தில், உலகங்களுக்கு ஆநந்தத்தை விளைவிக்கும் வண்ணம் பிரம்மனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கமானது, பிரம்மேசுவரர் என்ற பெயருடன் அவ்விடத்தில், விளங்கிவருகின்றது. அன்றியும் பிரம்மஹத்தி முதலான பாபங்களை நிவிர்த்தி செய்யப்பட்ட அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துவிட்டு, பார்வதீநாதனும், தரிசனத்தால் பாபங்களைப் போக்கடிக்கக்கூடிய வருமான அப்பிரம்மேசுவரரைத் தரிசித்தவர்கள், நூறு அசுவமேத யாகம் செய்த பலனையடைந்து அவர்கள் தேவரிஷிகணங்களால் துதிக்கப்பட்டு, பிரம்மலோகத்திற்குச் சென்று பரமானந்தத்தை யடைகின்றனர்.

விஷ்ணுவானவர் மேற்குத்திக்கில், பரிசுத்தமாயும் பாபங்களை நாசஞ்செய்யப்பட்டதாயும், விஸ்தாரமானதாயும், தாமரை நீலோற்பலம், செங்கழுநீர், இவைகளுடன் விளங்கப்பட்டதா



யும், அன்னம் முதலான பக்ஷிகளுடன் கூடினதாயும், அமிர்தத்திற்குச்சமானமாயும், தெளிவுடன் கூடிய ஜலத்தையுடையதாயுமுள்ள ஓர் தீர்த்தத்தை யுண்டுபண்ணி, அதில் ஸ்நானஞ் செய்துவிட்டு, அதன் கரையில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து அந்த லிங்கத்தை கந்த புஷ்ப முதலானவைகளாற் பூஜித்து, அவ்விடத்தில் வெகுகாலம் தவஞ்செய்து, காளகூட விஷபயத்தால் மறந்திருக்கின்ற தன் அதிகாரத்தையும், இலக்ஷ்மியையும் அடைந்து வைகுண்டத்தில் அவளுடன் சந்தோஷமாக விளங்கிவருகின்றனர். ஆகையால் அன்று முதல் அந்த தீர்த்தத்திற்கு விஷ்ணு தீர்த்தமென்று பெயர் வழங்கிவருகின்றது.

அந்த விடத்தில் விஷ்ணுவானவர் சிவபெருமானுக்கு மூன்று பிரகாரங்கள் மூன்று கோபுரங்கள் இவைகளுடன் ஆலயத்தைச் செய்து, உற்சவம்முதலானவைகளை நடத்திக்கொண்டு, சதாகாசியாரணியத்தில் வசித்துக்கொண்டு அந்த சிவபெருமானுக்கு விஷ்ணுநாதர் என்றபெயரமைத்து இலக்ஷ்மியுடன் மிகுந்த மரியாதையாகப் பூஜைசெய்துவருகின்றார். அந்த விடத்தில் இலக்ஷ்மீ தன் பெயரால் பரிசுத்தமான ஒரு தீர்த்தத்தை யுண்டுபண்ணி, அதில் ஸ்நானம் செய்துவிட்டு, தன்னிஷ்டரான விஷ்ணுவைப்பூஜை செய்கின்றாள். அன்று முதல் அதற்கு இலக்ஷ்மீசுவரஸ்தானம்என்றபெயர் வழங்கி வருகின்றது. அதனில் இலக்ஷ்மீகாந்தனை விஷ்ணுவசிக்கின்றார். இலக்ஷ்மீ தீர்த்தமென்ற திருநாமத்துடன் வழங்குவதும், பாபங்களை நிவிர்த்திசெய்வதும், புண்ணியத்தையும் செல்வத்தையும் கொடுப்பதுமான அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து விஷ்ணுவைத் தரிசிக்கின்றவர்கள் இவ்வுலகத்தில் சுகங்களை யனுபவித்துவிட்டு முடிவில் விஷ்ணுலோகத்தை யடைகின்றார்கள். அன்றியும், அவ்விடத்தில் புண்ணியமாயும், பரிசுத்தமாயும், குணங்களை விருத்தி பண்ணப்பட்டதுமாயுமிருக்கின்ற விஷ்ணு தீர்த்தத்தில் ஒரு தடவையாவது ஸ்நானம் செய்பவன் நூறுயாகங்களைச் செய்த பலனையடைகின்றான். மேலும் அந்த விடத்திலிருப்பவரும், வியாதி

களை நிவிர்த்தி செய்யப்பட்டவரும், உத்தமருமாயிருக்கின்ற விஷ்ணு நாதரான சிவபெருமானை தரிசித்தால் நூறு அசுவமேதயாகங்களின் பலனையும், ஆயிரம் அக்னிஷ்டோமயாக பலனையும் பெற்றுத்தேவர்களால் துதிக்கப்பட்டவராகி விஷ்ணுலோகத்தையடைந்து சுகத்தைப் பெறுகின்றார்கள்.

கிழக்குத்திக்கில் தேவேந்திரன், பரிசுத்தமாயும் பாபங்களை நிவிர்த்தி செய்வதாயும், சுபமாயுமிருக்கின்ற ஒரு தீர்த்தத்தை யுண்டுபண்ணி, அவ்விடத்தில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து, விருத்திரனைக்கொன்ற இந்திரன் அத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி, சிவலிங்கத்தைப் பூஜித்து அவ்விடத்தில் காற்று ஜலம் முதலியவைகளைப் புசித்து நியமத்துடன் பஞ்சாக்னி மத்தியிலிருந்து கொண்டு ஜடைகளுடனும் விபூதியால் பூசப்பட்ட அங்கத்துடனும் ருத்திராக்ஷங்களுடனும், ஆகாரமில்லாமலும், சூரியனைப்பார்த்து நின்று கொண்டும், அச்சிவபிரானையே பிரார்த்தித்து வெகு காலந்தவஞ் செய்து வந்தான்.

இவ்விதம் அவன் உக்கிரமான தவம்புரிந்து வரும்போது சிவபெருமான் பார்வதியுடன் விருஷபாரூடராய் எழுந்தருளி அவனுக்குத் தரிசனங்கொடுத்தார். அப்பொழுது இந்திரன் சிவபெருமானை மிகுந்த வணக்கத்துடன் பலமுறை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ் செய்யவாரம்பித்தான்.

“ஹரா! சம்போ! தயாசிந்தோ! உம்மை நமஸ்கரிக்கின்றேன் பார்வதீபதே! ஜய! லோகரக்ஷக! வரத! ஜய! பக்தார்த்திநாசன! உம்மை நான் நமஸ்கரிக்கின்றேன். அநந்த! அக்ஷய! சாந்த! வாங்மனோதீத! அணுவுக்கணுவாயும் மகத்துக்கு மகத்தாயும் எங்கும் நிறைந்திருப்பவரும் பிரம்ம விஷ்ணுக்களாலறிய முடியாதவரும் ஆதியந்த மற்ற சொரூபத்தையுடையவருமாகிய உம்மை எவர்களால் அறியமுடியும்? அன்றியும் மாயைக்குள்ளாகப்பட்ட பிராணிகளுக்குள் எவன் உம்மைத்துதிக்கவல்லவன்? ஓ பிரபோ! ஆநந்தத்தைக்கொடுப்பதாயிருக்கும் தேவரீருடைய திவ்யசொரூபத்தைத் தெரிசித்து இப்பொழுது கிருதார்த்தனாகிவிட்டேன்.



ஓ பார்வதிநாத!” என்று பிரார்த்தித்த இந்திரனைப் பார்த்து விருஷபாரூடரான சிவபெருமான் சொல்லுவாராயினர்.

“இந்திர! கொடுமையாகிய விஷங்களால் நீ வருத்தத்தையடைந்திருக்கின்றாய், ஆகையால் உன்னிடத்தில் சந்தோஷத்துடனிருக்கின்றேன். உனக்கு வேண்டும் வரத்தைக் கேட்டுக்கொள் கொடுக்கின்றேன்” என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அத்திவ்ய மொழிகளைக்கேட்டு இந்திரன் சிவபெருமானை நோக்கி பிரபுவே! காளகூடவிஷத்தால் குறைந்திருக்கும் என் செல்வத்தையும், மறந்துபோயிருக்கின்ற என் அதிகாரத்தையுங்கொடுத்து ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, அவனைப்பார்த்து சிவபெருமான் “சக்ரனே! உன்னால் பிரார்த்திக்கப்பட்ட ஐசுவரியம் அதிகாரம் முதலியவைகள் முன்போல் உனக்குண்டாகக் கடவது. அன்றியும் உனக்கு என்னிடத்தில் மிகுந்த பக்தியுண்டாகக்கடவதென்று அனுக்கிரகஞ்செய்தனர். அதனைக்கேட்டு இந்திரன் மிகுந்த பணிவுடன் “ஜகதீசா! சுபத்தைக்கொடுக்கும் இத்தீர்த்தமானது என்பெயரால் விளங்க அனுக்கிரகிக்கவேண்டும். பார்வதீபதே! என்னால் பிரதிஷ்டை செய்யப்பட்டதும், தேவரீர் எழுந்தருளியிருக்கப்பட்டதும் முன்பு நூறு ஜன்மங்களில் செய்துள்ள பாபங்களை போக்கடிக்கப்பட்டதுமான, இந்த லிங்கத்தை இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பின்பு தெரிசிப்பவர்களுக்கு மிகுந்த செல்வமுண்டாகுமாறு அருளவேண்டும். மேலும் இந்த க்ஷேத்திரத்திற்கு அர்த்தசித்தி ஸ்தலமென்று நாமம் வழங்கவேண்டுமென்று, கேட்டுக்கொண்டான்.

உமாபதியாகிய சம்புவும் அவனைப்பார்த்து “விருத்திரஸம்ஹாரியான இந்திரனே! நீ கேட்டுக்கொண்டபடியே யெல்லாம் ஆகட்டும்” என்று அனுக்கிரகம் செய்து, அவனால் துதிக்கப்பெற்றவராய் மறைந்தருளினார். இந்திரனும் இழந்த தன் செல்வத்தையும் மறந்த அதிகாரத்தையும் முன்போலடைந்து அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, அவ்விலிங்கத்தையும் பூஜித்து ஸதாகாலமும் தரிசித்து வருகின்றான். அதுமுதல் அத்தீர்த்தம் இந்திர

தீர்த்தமென்றும் லிங்கத்திற்கு இந்திரேசுவரரென்றும் அந்த ஸ்தலத்திற்கு அர்த்த சித்தி ஸ்தலமென்றும், பெயர்களுடன் விளங்கி வருகின்றன. எவர்கள் அந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, அந்த லிங்கத்தையன்புடன் பூஜிக்கின்றார்களோ, அவர்கள் ஜன்மாந்தரங்களிற் செய்துள்ள பாபங்கள் நீங்கிப்பிறகு அர்த்த சித்தி யடைகின்றார்கள்.

அக்கினிதிக்கில் வாயுவுக்குச் சகாவாயிருக்கின்ற அக்கினி பகவான் ஓர் தீர்த்தத்தையமைத்து அதில் ஸ்நானம் பண்ணி சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூஜித்து, மிகுந்த காந்தியை யடைந்து சிவபெருமானருளால் தன்னதிகாரத்தைப் பெற்றான். அத்தீர்த்தம் அக்னி தீர்த்தமென்றும், தேஜஸைக் கொடுப்பதும், பாபத்தை நிவிர்த்திப்பதும், தரிசனத்தால் மோக்ஷத்தைக் கொடுப்பதுமான அவ்விலிங்கம் அக்னீசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றன.

தெற்குத்திக்கில் யமதர்மராஜன் அபமிருத்யுவை நிவிர்த்தி செய்வதும், ஸர்வபாபங்களையும் நீக்குவதும், புண்ணியத்தைத்தருவதும், ஸமஸ்தமானவர்களுக்கும் காமியார்த்தத்தைக்கொடுப்பதுமாகிய யமதீர்த்தமென்னும் ஒரு தீர்த்தத்தையுண்டுபண்ணி அதன் கரையில் காமியார்த்தத்தைக் கொடுக்ககூடியதும், பாபங்களைநீக்கவல்லதும், சுபமானதுமான யமேசுவரரென்னும் ஒரு லிங்கத்தை பிரதிஷ்டைசெய்து பூஜித்து சிவனருளால் தன்னதிகாரத்தை மீளப்பெற்றான்.

நிருதிதிக்கில், ஸ்நானஞ்செய்த மாத்திரத்தில் புண்ணியத்தைக்கொடுப்பதும், பாபங்களைப் போக்கடிப்பதுமான நிருதிதீர்த்தமென்னும் ஒரு தீர்த்தத்தை நிருதி தேவன் உண்டுபண்ணி, அவ்விடத்தில் மனோபீஷ்டத்தைக் கொடுப்பதும், லிங்கங்களுக்குள் உத்தமமாய் இருப்பதுமான நிருதீசுவரரென்னும் ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூஜித்து, அவரனுக்கிரகத்தால் தான் மறந்துபோனவதிகாரங்களை மீண்டும் பெற்றனன்.



மேற்கு திக்கில் வருணன், தாபத்தை நிவிர்த்தி செய்யப்பட்டதும், பாபங்களை நாசஞ் செய்யப்பட்டதுமான வருண தீர்த்தமென்னும் ஒரு தீர்த்தத்தை யுண்டுபண்ணி அவ்விடத்தில் வருணேசுவரர் என்றவொரு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூஜித்து அவரனுக்கிரகத்தால் அவனும் தன்னதிகாரத்தைப் பெற்றான்.

வாயு திக்கில், புண்ணியமாயும், பலத்தைக் கொடுப்பதாயும், இருக்கும் வாயு தீர்த்தமென்ற ஒரு தீர்த்தத்தை யுண்டுபண்ணி, அதனில் ஸ்நானஞ்செய்து, அவ்விடத்தில் ஆயுளைக் கொடுக்க வல்லமையுள்ள மருதீசுவரர் என்னும் ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணிப் பூஜித்து, தன்னதிகாரங்களைப் பெற்றான் வாயு தேவனும்.

வடக்கு திக்கில் யக்ஷர்களுக்கரசனான குபேரன், மனிதர்களுக்கு சுகத்தைக் கொடுக்கின்ற ஒரு தீர்த்தத்தை யுண்டுபண்ணி அதனில் ஸ்நானம் செய்து, அவ்விடத்தில் செல்வத்தைக் கொடுப்பதான ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூஜித்து, அவரருளால் தன் அதிகாரத்தை யடைந்தான்.

ஈசானிய திக்கில் ஈசானன், புருஷர்களுக்கு சுகத்தைக் கொடுப்பதான ஈசான தீர்த்தமென்னும் தீர்த்தமொன்றுண்டுபண்ணி அதில் ஸ்நானம் செய்து, அங்கு ஞானத்தைக் கொடுக்கப்பட்டதும் சுபமானதுமான ஈசானேசுவரரென்னும் ஓர் லிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து பூஜித்து, அவரருளால் தன்னதிகாரத்தை யடைந்தான்.

கிழக்கு திக்கில், பொறுமையையும் தேஜஸையும் கொடுக்கப்பட்டதாகிய ஆதித்ய தீர்த்தமென்னும், சோம தீர்த்தமென்றும் இரண்டு தீர்த்தங்களைச் சந்திர சூரியர்களுண்டுபண்ணி, அவைகளில் ஸ்நானம் செய்துவிட்டு, அங்கு ஸர்வ செல்வங்களையும் கொடுக்கின்ற சோமேசுவரரென்னும், சூரியேசுவரரென்னும் இரண்டு லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து,

அபூஜித்தவர்களருளால் சூரியன் தன் தேஜஸையும், சந்திரன் தன் கலைகளையும் பெற்றனர்

வாயு திக்கில், கீர்த்தியையும் சுபத்தையும் கொடுக்கப்பட்டதாகிய ஸப்தரிஷி தீர்த்த மென்னும் ஒருதீர்த்தத்தை ஸப்தரிஷிகளுண்டு பண்ணி அதில் ஸ்நாநம் செய்து விட்டு, அவ்விடத்தில் சுபமாயும் மனிதர்களுக்குச் சுகம் ஞானம், மோக்ஷ மிவைகளைக் கொடுக்கப்பட்டதுமான ஸப்தரிஷிநாதர் என்ற ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து பூஜித்து அவரனுக்கிரகத்தால் அவர்கள் யாவரும் தங்கள் தங்கள் இஷ்டங்களைப் பெற்றார்கள்.

இவ்விதமான தீர்த்தங்களுடன் கூடியதும், க்ஷேத்திரத்தின் மகிமை தெரியாமல்வந்தவர்களுக்குக்கூட மோக்ஷத்தைக் கொடுக்கப்பட்டதும், அதர்மிகளுக்குத் தர்மத்தில் புத்தியைக் கொடுக்கப்பட்டதும், பாபிகளுக்குப் பாபங்களை நாசஞ் செய்யக் காரணமாயும் பரிசுத்தமாயும் இருக்கப்பட்டதுமான இந்தக் காசியாரணிய க்ஷேத்திரத்தின் மகிமையை ஓ! சனத்குமாரரே! உமக்குச் சொல்லி வந்தேன். இனி என்ன கேட்க வேண்டுமென்ற இச்சையிருக்கின்றது" என்று மகாகற்றறிந்தவரான நந்திகேசுவரர் கேட்டருளினர்.

# பதினோராவது அத்தியாயம்.

## சுவாசனன் இராஜச்செல்வத்தை யடைந்தது.

நந்திகேசுவரரைப் பார்த்து சனத்குமாரர் கேட்கின்றார்
"தவத்தை யறிந்தவரும், ஸகல வேதாகம புராணங்களை யுணர்ந்தவரும், ஸர்வஞ்ஞரும், கிருபைக்கிருப்பிடமும், அடியார்களி



டத்திலன் புடையவரும் சற்குருவுமாகிய தேவரீர் முன்னொரு
முறை சுருக்கமாகச் சொன்ன சுவாசனனென்னுமரசனுடைய
சரித்திரத்தையும் காசியாரணிய க்ஷேத்திரத்தில் தர்மம் சித்தி
யடைந்தது" என்பதையும் பற்றிச் சற்று விஸ்தாரமாகச்சொல்
லியருள வேண்டு"மென்று கேட்க, நந்திகேசுவரர் "சனத்குமா
ரரே! முன் சொன்ன சுவாசன சரித்திரத்தையும், அந்த க்ஷேத்
திரத்தில் தர்மம் சித்தி யானதையும்பற்றியும் சொல்லுகின்றேன்.
சாவதான மனதுடன் கேளும்." என்று கூறிச்சொல்லத் தொட
ங்கினார்.

வடதேசத்தில் ஒரு பட்டணம் இருந்தது. அதை ஆள்
பவன், மகாபாபிஷ்டனும், ஸர்வ பிராணிகளுக்கும் உபத்திரவத்
தைச் செய்பவனும், துச்சக னென்னும் பெயருடையவனும்,
மிகுந்த அநியாயம் செய்தே ஸம்பாதிப்பவனும், கெட்டவனு
யும், உயிர்களை ஸதாகாலமும் வதைப்பவனும், மகாதுஷ்டனு
யும், இருந்தான். அவனது நீண்ட ஆளுகையில் சிவாலயங்கள்
விஷ்ணு வாலயங்களிலிருக்கும் விக்கிரகங்க ளபரிக்கப்பட்டன,
புஷ்பங்கள் காய் கனிகள் இலைகளுடன் கூடின விருக்ஷங்களும்
கொடிகளும் அழிக்கப்பட்டன. குளங்கள் தூர்க்கப்பட்டன.
பிராமணர்கள் தேசத்தை விட்டு விரட்டோட்டப்பட்டனர். பசு
க்களும் மற்றைய உயிர்களும் வதைக்கப்பட்டன. பிராமணர்கள்
மகாராஜாவின் சந்தோஷ நிமித்தம் தினந்தோறும் காடுகளுட்
சென்று அங்குள்ள விறகுகளை யொடித்துக்கட்டி, அவைகளைச்
சிரசில் வைத்துக்கொண்டு, பொறுக்க முடியாத துக்கத்துடன்
அவனரண்மனையில் கொண்டு வந்து சேர்த்துவிட்டு அவன் தயவு
எப்பொழுது கிடைக்குமோவென்று பார்த்துக்கொண்டே ஜீவ
னஞ் செய்து வந்தனர்.

அக்கொடியோன் அவ்விதம் ஸதா வேலை செய்யாத
பிராம்மணர்களின் கண்களைச் சிறிதுமிரக்கமில்லாமல் பிடுங்குவது
ம், சிவனடியார்களைக் கண்டவிடத்து அவர்களுக்கு அளவில்லாத்
துன்பமிழைப்பதும் ஸ்திரீகளை வதம் செய்வதும், பிரம்மஹத்தி

செய்வதும், பிராம்மண ஸ்திரீகளை யபகரிப்பதும் இவ்விதமாக நாள்தோறும் எல்லாப் பிராணிகளுக்கும் நாசத்தையும் துன்பத்தையுமே விளைத்துக்கொண்டு மகாபாபியாயும், மகாதுஷ்டனாயும் உலகங்களுக்குத் தீங்கிழைத்துக்கொண்டு வந்தான். இவைகளெல்லாம் திரண்டு, மற்றைய மன்னர்களின் மனதிற்புக அவர்கள்யாவரும் அத்துஷ்டனை நாசஞ்செய்ய எண்ணங்கொண்டனர்.

அவர்களும், நூறுகோடி யரசர்களையும், ஆயிரங்கோடி யானைகளையும் பதினாயிரங்கோடி குதிரைகளையும், அநேகங்கோடி காலாட்களையும், ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு, சிங்கநாதஞ்செய்து, ஆயுதங்களுடன் யுத்த சன்னத்தராய் வந்து அப்பட்டணத்தைச் சுற்றிக்கொண்டிருப்பதைக் கேள்வியுற்று, சவாசனனென்னுமக் கொடியனும், தன் சைனியங்களையும், யானைகளையும், குதிரைகளையும்; தேர்களையும்; ஒருங்குசேர்த்துக்கொண்டுயுத்தத்திற்கு வந்து விட்டான்.

அவர்கள் யுத்தஞ்செய்யும்பொழுது யானைகளோடு யானைகள் முட்டிக்கொள்வதும், குதிரைகளோடு குதிரைகள் மோதிக்கொள்வதும், தேர்களோடு தேர்கள் உரைந்து கொள்வதும் காலாட்களோடு காலாட்கள் எதிர்த்துச் செல்வதும், ஒருவருகொருவர் வெட்டிக்கொள்வதும், குத்திக்கொல்வதும், அம்பைப் பூட்டுவதும், நாணையேற்றுவதும், வில்லை வளைப்பதும், உதடுகளையும் பற்களையும் நெரிப்பதும், மீசைகள்படபடப்பதும், ஒரு சமயத்தில் சூரிய கிரணங்கள் பூமியிற் படாவண்ணம் அம்புத்தொகுதிகளா லாகாயத்தை மறைப்பதும், இவ்விதமாக அமர்க்களம் அல்லோலகல்லோலப்படும்படி மூன்றுநாட்கள்யுத்தம் நடந்தது. யுத்த களத்தில் கைகளறுபட்டும், கால்கள் முறிந்தும், உடல் சரிந்தும், விழிபிதுங்கியும், பற்களுடைந்தும், மண்டைகள் பெயர்ந்தும், இரதங்கள் அச்சு வேறு ஆணி வேறாக முறிந்தும், சாரதிகள் மாண்டும், சேனாதிபதிகளிறந்தும், வேகமாக வோடும் இரத்தப் பிரவாகத்தில் முண்டங்கள் மிதந்து சென்றும், இவ்விதம் ஆண்டு கிடந்த காக்ஷிகளைக் கண்கொண்டு எவரும் பார்க்கச் சகியார். மூன்றுநாள் யுத்தத்தன்று உலகத்துக்கு மிகுந்த



கொடுமையைச்செய்து வந்த துச்சகன் ரணகளத்திலடிக்கப்பட்டு மரணத்தை யடைந்தான்.

அச்சமயத்தில் யமதூதர்கள் அங்குவந்து மகாபாபியாகிய துச்சகனைப் பாசக்கயிற்றாற்கட்டி, சூலத்தாற்குத்தி, உலக்கையாலடித்து, கரடுமுரடான கற்களும் முட்களும் நிறைந்திருக்கும் கொடிய மார்க்கத்தின் வழியாக இழுத்துக்கொண்டு போகும்போது அவனுக்கு அளவிலாத்துன்பமுண்டாக, அவன் அதைப் பொறுக்கமாட்டாதவனாய் 'கோ' வென்று கதறினான். யமதூதர்கள் அதனைச் சிறிதும் லக்ஷ்யம் செய்யாமல், அவனை இழுத்துக்கொண்டு சென்று தங்களரசராகிய தர்மராஜன் முன்பு கொண்டுபோய் நிறுத்தினார்கள். அச்சமயத்தில் தர்மராஜன் சித்ரகுப்தனை நோக்கி "இந்தப்பாபியானவன் செய்த கொடிய பாவங்களைச்சொல்வாயாக" என்று மிகுந்தகோபத்துடன் கேட்கும்போது சித்ரகுப்தன்:—

"சுவாமி! இவன் செய்துள்ள பாபங்களைக்கணக்கிட்டுச் சொல்ல என்னாலியலாது. என்னாலியாது" என்றனன். இவ்வார்த்தைகளைக்கேட்டு யமதர்மராஜன் உதடுபடபடக்க, கண்கள் சிவக்கப் பற்களைநறநறவென்று கடித்துக்கொண்டு, தன் தூதர்களை நோக்கி "தூதர்காள்! இக்கொடும்பாவியை நீங்கள் சீக்கிரம் இழுத்துக்கொண்டு சென்று நரகத்தில் ஒருநூறாயிரம் வருஷகாலம் இருக்கும்படிசெய்து. பின்பு பழுக்கக்காயவைத்த இரும்புத்தூணை அவன் கட்டிக்கொள்ளும்படி செய்வித்து அதன்மேல் எரிவாய் நரகம் முதலிய இருபத்தெட்டுக்கோடி நரகங்களில் வீழ்த்திவதைத்துவருத்திப்பின்பு என் முன்பாகக் கொண்டு வாருங்கள்" என்றுத்தரவிட்டனன்.

அவ்வுத்தரவைச்சிரமேற்கொண்டு சென்ற தூதர்கள். அப்பாபிக்கு யமனால் இடப்பட்ட தண்டனைகள் யாவையும் சரியாகச்செலுத்தி, அவரது உத்தரவுப்பிரகாரமே. அவர் முன்னிலையில் அவனைக்கொண்டு வந்து நிறுத்தினார்கள். அப்பொழுது தர்

மராஜன் தன் முன்னிருப்பவனை நோக்கி "அடே! துச்சகா! நீ செய்த கொடியபாபத்தால் பூமியிற் பிசாசாகப்பிறந்து கொடிய காடுகளிற் சஞ்சரித்துப் பிணங்களையும் மிருகங்களையும் புசித்துக் கொண்டு பயங்கரமான வுருவத்துடன் அளவிறந்த காலஞ்சஞ்சரிக்கக்கடவாய்" என்றுத்தரவிட்டு, அவனையும்பூமியிற்பிடித்துத் தள்ளிவிட்டனன்.

திடீரென்று கீழே விழுந்து பைசாசரூபத்தையடைந்த அவ்வரசன் பயங்கரமான ரூபத்துடன் அவ்விடத்திலிருக்கும் மிருகங்கள் பக்ஷிகள் முதலானவைகளைக் காட்டுத்தீபோல் எடுத்து வாயிலிட்டு, சமீபத்திலுள்ள ஊர்களனைத்தையும் கொளுத்தி ஆங்குள்ள பிராணிகளை வதைத்துத்துன்பப்படுத்தி, நூறுயோஜனை வரையிலுள்ள பூமியை புற்பூண்டுகள் கூடவில்லாமலொழித்து, விட்டான். தான்தின்ற மாமிசம் போக எலும்புகளை மலைகள் மலைகளாகக்குவித்து விட்டான். அப்பொழுது அவனுக்குச் சவாசனென்னும் பெயர். அவன் இவ்விதம் பிரேதங்களைத் தின்றுகொண்டு நிசாசரனை சஞ்சரித்து வருங்காலத்தில் ஒருநாள் அகஸ்தியமாமுனி அவ்வழியாகவந்து அவனைக்கண்டார்

சவாசனன் அவரைக்கண்டவுடன் கறுத்தமலைபோன்ற சரீரத்துடனும் அக்கினிச் சுவாலைபோன்ற மயிருடனும், ஆகாயத்தை யளாவிய தலையுடனும், இடிமுழக்கம் போலப் பேரிரைச்சலுடனும், அவர் முன்தோன்றினன். அகஸ்தியர் காலாந்தகனாகிய சிவபெருமானைத் தியானித்துக் கொண்டு சிறிதேனும் பயமற்றவராக நின்றார். அவரது அமைதி நிலைமையைக் கண்ட சவாசனன், தன் கோபத்தைவிட்டு மிகுந்த தயவுடன் ஓ! மானிடனே! இவ்விடம் நீ வராதே! சவாசனனிடத்தில் நின்று தப்பிக்கொள்ள வேண்டுமானால் வேறிடஞ்சென்று பிழைத்துக் கொள்வாய். சீக்கிரம்போ! இல்லாவிட்டால் உன்னைக்கொன்று தின்றுவிடுவேன். " என்று சொல்ல, கிருபைக்கிருப்பிடமான அகஸ்தியர் அவனைப்பார்த்து " சவாசனே! பூர்வஜன்மத்தில் நீ செய்தசுள்ளபாபத்தால் இப்பொழுது கோரமான இப்பைசாச ஜன்

 4322

மத்தையடைந்திருக்கின்றாய். இது நீங்கு வதற்கோர்வழியுண்டு சொல்லுகின்றேன் கேள், தென் திக்கில் காசியாரணியமென் றோர் ஸ்தலமிருக்கின்றது. அவ்விடத்தில் சிவபெருமான் தேவர்களுக்குண்டான விஷபயத்தைநிவிர்த்திசெய்து, அசுரர்களுக்கு இழந்துபோன வதிகாரத்தையும் ஞானத்தையும் கொடுப்பதற்கும், உலகங்தனை இரக்ஷிப்பதற்கும், சிவலிங்கத்தினின்றும் ஆவிர்ப்பவித்து, தக்ஷிணாமூர்த்தி வடிவுடன் பிராணிகளுக்கு மோக்ஷத்தையளிக்கும் சிவபெருமான் விளங்கிவருகின்றார். அவ்விடத்தில் அமிர்தபுஷ்கரணியென்றோர் புண்ணியதீர்த்தம் விளங்கி வருகின்றது. நீ அவ்விடம் சென்று அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து தக்ஷிணாமூர்த்தியைப் பூஜிப்பாயாகில், அவரனுக்கிரகத்தால், உன் பாபங்களெல்லாம் விடுபட்டு, இப்பைசாச ஜன்மம் நீங்கி முன்போல இராசபதவியையும், தர்மசிந்தனையையும் பெறுவாய், நீ என்னோடு வருவாயாகில் உனக்கு அந்த க்ஷேத்திரத்தைத் தரிசனஞ் செய்து வைக்கின்றேனென்று சொன்னமாத்திரத்தில், அவனுக்குத் தர்மத்தில் பக்தியும், நல்ல ஞானமுமுண்டாகி வெகு வணக்கத்துடன் அம்முனிவரை நமஸ்கரித்து, அவர்பின் தொடர்ந்தான்.

அம்முனிவரும் அவனை அந்த க்ஷேத்திரத்திற்கழைத்து வந்து அமிர்த புஷ்கரணியில் ஸ்நானஞ் செய்வித்து, காசியாரண்ணியபதியாயும், காளகூடவிஷத்தையுண்டவராயுமுள்ள தக்ஷிணாமூர்த்தியைத் தரிசிக்கும்படி செய்தனர். சவாசனனுக்கு அக்ஷேத்திரத்தைக் கண்டவுடனே பைசாசத்வம் நீங்கிற்று புஷ்கரணியில் ஸ்நானஞ் செய்தவுடன் சஞ்சித முதலிய பாபங்கள் விலகிவிட்டன. காசியாரண்ணியபதியாகிய தக்ஷிணாமூர்த்தியை ஒரு தடவை தரிசனஞ் செய்த மாத்திரத்திலேயே தர்ம சிந்தையும் இராஜ ஐசுவரியமும் உண்டாகி விட்டன.

உடனே அரசன் அவ்வாலயத்திற்கு ஏழு பிராகாரங்கள், பன்னிரண்டுகோபுரங்கள், பலமண்டபங்கள், முதலான திருப்பணிகளைச் செய்து, பிறகு தக்ஷிணாமூர்த்திக்குச் சகல திரவியங்களை

யுங்கொண்டு விதிப்படி ஷோடச உபசாரங்களால் பூஜை செய்வித்து, சித்திரை மாதத்தில் ஐந்து ரதங்களுடனும், நடனஞ்செய்கின்ற தாசிகளுடனும், நானாவித வாத்திய கோஷங்களுடனும் உற்சவத்தை வெகு சிறப்பாய் நடத்தி பிராமணர்களுக்குக் கோதானம் பூதானம், கன்னிகாதானம், முதலிய பலவித தானங்களைக் கொடுத்து, ஸதா தரும சிந்தனையுள்ளவனாக அந்த ஸ்தலத்திலிருந்து கொண்டு இராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்தான்,

ஓ சனத்குமாரரே! காசியாரண்ணியமானது ஸ்தலங்களுக்கெல்லாம் சிறந்ததாகவும், அதை யுத்தேசித்துப் போகிறவர்களின் பாபங்களனைத்தையும் நீக்குவதாகவு மிருக்கின்றது" என்று நந்திகேசுவரர் சொல்லியருளினர்.

## பனிரண்டாவது அத்தியாயம்.

### ஏலாளகாப்பிராட்டியாரின் திருவவதாரம்.

நந்திகேசுவரரை நோக்கிச் சனத்குமாரர் ஸகல வேதங்களையு முணர்ந்த பிரபுவே! தேவரீரால் சொல்லப்பட்ட சரித்திரங்களைக் கேட்கக்கேட்க ஆச்சரியமுண்டாகின்றது. தங்களுடைய திருவாக்கினின்றும் இன்னும் பல கதைகளைக்கேட்க ஆவலுடனிருக்கின்றேன். எவருக்கும் மனோபீஷ்டத்தை நிறைவேற்றக்கூடிய காசியாரண்ணிய க்ஷேத்திரத்தில் பாரவதியம்மை திருவவதாரஞ்செய்து, ஸர்வலோகநாயகியாயும், ஸகலபிராணிகளுக்கும் விருப்பிபவற்றைக் கொடுக்கக்கூடியவளாயும், தவசிகளுக்குப் பலத்தைக் கொடுப்பவளாயும், விளங்கி, அங்கு தவஞ்செய்து வந்த விபரத்தையும் சற்று விரிவாகக்கூறவேண்டும்" என்று வெகு விநயமாய்க் கேட்டனர்.



இவ்வண்ணம் மிக்க ஆவலுடன் கேட்கும் சனத்குமாரரை நோக்கி நந்திகேசுவரர் "சர்வலோகங்களாலும் வணங்கப்பட்ட தேவியானவள் கைலாசத்தின் மத்தியிலிருக்கப்பட்டதும், ஸர்வலோகங்களாலும் வணங்கப்பட்டதும், மிகவும் உத்தமமானதும், நிர்மலமானதுமான நவரத்னங்களால் விளங்கப்பட்டதும், சுவர்ணமயமாயிருப்பதும், மின்னற் போல் பிரகாசிப்பதும், சரத்கால மேகம் போல் சூழப்பட்ட கொடிகளுடன் கூடினதும், தென்னை, புன்னை, கொன்றை, பனை, மகிழ், வில்வம், அசோகம், எலுமிச்சை, நாரத்தை, விளா, சந்தனம், தேவதாரு, வேம்பு, கட்டுமா, ஒட்டுமா, பலா, பாக்கு, தேக்கு, சம்பகம், கதலி, பாரிஜாதம், கற்பகம், நாகம், புன்னாகம், முதலான அநேக விருக்ஷங்களுடன் விளங்குவதும், மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, ஜாதி, சம்பங்கி, இவை முதலிய கொடிகள், புஷ்பங்கள், பரிமளம் வீசுவதும், அநேகமிருகங்கள் கூடிவசிப்பதும், மயில் குயில் முதலிய பக்ஷிகள் கூவும் சப்தத்தால் நிறைந்ததும், பலவிதமான மலையருவிகளுடன் கூடினதும், நெய் தயிர் பால் தேன் முதலிய பலவும் ஓடப்பெற்ற நதிகளோடுகூடினதும், யோகிகளாலும் தேவர்களாலும் யக்ஷர்கள் கின்னரர்கள், சித்தர்கள், வித்தியாதரர்கள், மற்றுமுள்ள தேவர்கள் முதலியவர்களாலும் சூழப்பட்டதும், ரத்தினங்களால் இழைக்கப்பட்ட அநேக ஸ்தம்பங்களுடன் விளங்குவதும், சொர்ணப்பிரகாரங்களால் பிரகாசிப்பதும், ரத்தினம் வச்சிரம் முதலியவைகளால் இழைக்கப்பட்ட விமானங்களையுடையதும், தாமரை முதலிய புஷ்பங்களால் நிறைந்த அகழால் சூழப்பட்டதும், யந்திரமுதலிய ஆயுதங்களால் நிறைந்ததும், சத்திரம் சாமரம் துவஜஸ்தம்பங்களால் பிரகாசிப்பதும், மனோகரமாகிய அட்டாள மண்டபங்களால் விளங்குவதும், மின்னலுடன் கூடின மேகம்போன்ற நீலரத்தினத்தோரணங்களோடு கூடியதும், உள்ளும் புறமும் சமுத்திர சப்தம்போல பெருந்தொனியுடையதும், மகாமேருவின் முடி போல் விளங்கத்தக்கதான விமானத்தையுடைய மண்டபத்தின் மத்தியில் யௌவன சூரியன்போல் பிரகாசிக்கும் நூறுசிங்காசனங்களின் மீது வீற்றிருக்கின்ற தேவஸ்திரீகளுடைய விளையாடல்களால் நிரம்பினதும், அவர்களின் மத்

தியில் உயர்ந்ததாயும் ஸர்வலக்ஷணங்களும் பொருந்தியதும்
சிறந்த ரத்தினங்கள் இழைக்கப்பெற்றதுமான சிங்காசனத்தின்
மீது முகலாவண்யத்தால் பிரகாசிக்கின்ற பார்வதி அம்மை உல்லா
ஸமாக வீற்றிருந்தனள்.

சுபத்தையளிப்பவளும், பச்சை நிறமுள்ளவளாயிருப்ப
வளும், மின்னற்கொடி போன்ற மேனியையுடையவளும், புன்ன
கையுடையவளும், மனதையபகரிப்பவளும், பொற்சரிகை
போடப்பட்டும், மெல்லியதாயும் வெண்மை நிறமுள்ளதாயுமிருக்
கும் பட்டு வஸ்திரத்தை யணிந்துகொண்டிருப்பவளுமாகிய, அத்
தேவியின் இருபக்கங்களிலும், இரண்டு அன்னப்பக்ஷிகள் ஒன்றைக்
கொன்று யுத்தம் செய்வதுபோல வீசப்படுகின்ற வெளுத்த சாம
ரங்களின் மத்தியில் உல்லாசமாக விளங்குகின்றவளும், சகிகளாயி
ருக்கின்ற சப்தமாதாக்கள், நீலை, வரவர்ணனீ, சோபினி; சுபை,
சுமாலினி, விஜயை, காலசுந்தரீ, விசாலாக்ஷீ, லக்ஷ்மீ, ஸரஸ்வதீ,
மாயை, உத்ஸாகினீ, வேகவதீ, பார்வதிப்பிரியை, தண்டினீ,
முண்டினீ, முதலானவர்களால்சூழப்பெற்றவளும், பூதஸ்திரீகளால்
ஸேவிக்கப்பட்டவளும், விளையாட்டில் ஆசையுடையவளும், விசா
லமாயிருக்கின்ற நேத்திரங்களையுடையவளும், உலகங்களுக்கா
னந்தத்தையளிப்பவளும், கோடி சூரியப்பிரகாசத்தையுடையவளும்,
கோடி சந்திரன்போல் குளிர்ச்சையுடையவளும், ஊமத்தை, வில்
வம், நாகம் முதலான மாலைகளால் அலங்கரித்துக் கொண்டிருப்ப
வளும், பூர்ணசந்திரனைப்போன்ற முகத்தையுடையவளும், சுவர்
ணமாலை முத்துமாலை ரத்தினமாலை முதலியவைகளை யணிந்திருப்
பவளும், புன்சிறிப்போடுகூடிய முகத்தையுடையவளும், தாமரை
யிதழ்போன்ற விசாலமான நேத்திரங்களையுடையவளும், வாசனை
வீசும் புஷ்பங்கள் முடித்த கூந்த லழகையுடையவளும், சூரி
யப்பிரகாசமுள்ள தோடுகளுடன் கூடிய முகமண்டலத்தையுடை
யவளும் மூக்கின் நுனியில் முத்தால் பிரகாசிக்கப்பட்ட
நாஸாபரணத்தோடு கூடியவளும், சிவபெருமானால் கட்டப்பட்ட
திருமங்கிலியத்தோடு கூடிய நூலால் பிரகாசிக்கும், கழுத்தோடு



கூடியவளும், தன் கடைக்கண்பார்வையால் ஏவல் செய்யப்பட்ட
கோடி லக்ஷ்மிகளுடன் கூடியவளும், உலகசிருஷ்டி, ஸ்திதி, ஸம்
ஹாரம், என்னும் முத்தொழிலைச் செய்பவளும், பார்வதீ யென்
னும் திருநாமமுடையவளுமாகிய அத்தேவி, ஒரு சமயத்தில் ப
ந்தாட விருப்பங்கொண்டு, தனதாசனத்தை விட்டெழுந்து, சகி
களுடன் விஸ்தாரமான ஓரிடத்தில் நின்று, விநோதமான பந்து
களைக்கையிலேந்தி, ஆகாயத்தில் எறிந்துகொண்டும், அதனிடத்
தில் பார்வையைச்செலுத்தி இலக்ஷியந்தவறாமல் அடிக்கடி தூக்
கியடித்துக்கொண்டும், ஆகாயத்திலிருந்து கீழேவிழும் பந்து
களைக்குறிதவறாமல் பிடித்துக்கொண்டும், விளையாடினள்.

இவ்வண்ணம் அவள் விளையாடுவதை, ஆகாயத்தில் செ
ன்று கொண்டிருந்த சூரியபகவான் கண்டு, தன்னை அப்புறம்
செல்லாது அங்கே நிற்கும்படியாகத் தேவியார் ஏவுகின்று
ரென எண்ணியந்திரத்தில் கட்டுப்பட்டவர்போல் அனேக கோடி
வருஷங்கள் அவ்விடத்திலேயே அசையாது நின்று விட்டார்.
இப்படிச் சிலகாலமாக, உலகத்திற்கு சூரியோதயாஸ்தமனமா
காமலே நின்றுவிட்டது. அனைவரும் பிரளயகாலம் வந்துவிட்ட
தென எண்ணினர்கள். அப்பொழுது அரசர்கள் மனிதர்கள் பசு
பக்ஷி, மிருகங்கள், ஆகிய சராசரங்களான எல்லாப்பிராணிகளும்
அழிந்துபோய்விட்டன. சந்திரனும் நக்ஷத்திரங்களும் தங்கள்
வேலையைச்செய்யவில்லை. வாயு வீசவில்லை. அக்கினி ஜொலிக்கத்
தவறினன். ஆகாயம் பூமிஇவைகளில் இராப்பகல்ஒன்றும் விளங்
கவில்லை. சமுத்திரங்கள் வறண்டன. அவைகளிலுள்ள மலைகள்
வெளியிற்றோன்றின. விருக்ஷங்கள், கொடிகள், செடிகள்யாவும்
வாடிக்காய்ந்தன. பிராணிகள்மடிந்தும், பக்ஷம், மாசம், ருது, அ
யனம், வருஷம், காலம், இவைகள்யாவும் எல்லைதவறியும், போ
யின. இந்திரன் முதலிய தேவர்களும் மரீசி முதலிய ரிஷிகளும்,
அகாலத்திலுண்டான இப்பிரளயத்தால் துன்பத்தை யடைந்
தனர்.

அக்காலத்தில் ஏற்பட்ட இப்பிரளயத்தாலுண்டான து
ன்பத்தையும், அதற்குக்காரணத்தையும் கிருபாமூர்த்தியான பர

மசிவன் ஞானக்கண்ணால் அறிந்து, பார்வதியிடம் சென்று, " ஓ
பார்வதி! உன்னால் ஸர்வபிராணிகளுக்கும் நாசம் ஏற்பட்டு விட்
டது அவ்வளவு தோஷமும் உன்னையன்றோ அணுகும் " என்று
சொல்ல, பார்வதி நடந்த சங்கதி யொன்றையுமறியாதவளாய்
" சுவாமி! என்னால் உலகத்திற்குச் செய்யப்பட்ட தீமையாது?
அதைச்சொல்லுங்கள் " என்று வினவினள் அதற்குப் பரமசி
வன் " நீ உன்னருமைச்சகிகளுடன் பந்தாடிவரும்போது, கை
களை உயரத்தூக்கி ஆகாயத்தில் பந்தையெறிந்து பிடித்தாயல்ல
வா? அச்சமயத்தில் ஆகாயத்தில் சென்று கொண்டிருந்த ஆதி
த்யன் தன்னைத்தான் அங்கேயே நிற்கும்படி சைகை செய்கிறா
ளென்று எண்ணி, அப்படியே ஆகாயமத்தியில்நின்றுவிட்டனன்.
இவ்விதம் நெடுநாளாகி சூரியசஞ்சாரமேயில்லாமற் போனமை
யால் உலகமழிந்து போயிற்று " என்று சொல்ல அதைப் பார்
வதி கேட்டு, மிகுந்த வாட்டத்தோடுகூடிய முகத்துடன் சுற்ற
மற்றவராயும், சம்புவாயும், தன் நாயகராயும், இருந்தும், சிவபெ
ருமானை நமஸ்கரித்து " சுவாமி! சூரியனுக்கு நான் எவ்வித உத்
தரவும் கொடாமலிருக்கும் காலத்தில் அவன் சந்தேகித்து ஏன்
நிற்கவேண்டும்? பகவானே! ஜனங்களுக்கு இந்நாசமுண்டாகக்
காரணம் யாவர்? " என்று கேட்டனள்.

பரமசிவன் " ஓ தேவி! அந்த சூரியன் நீ உத்தரவிட்ட
தாக வெண்ணியே அங்கு அசையாமல் நின்று விட்டான். அத
னாற்றான் உலகங்களுக்கு நாசம் உண்டாயிற்று ஆகலால் அந்நா
சத்திற்குக் காரணம் நீயேயாவாய், உலகங்களுக்குக் காரணமா
யிருக்கின்ற நீயே இவ்விஷயத்தை அறியாமலிருந்த போதிலும்
இது முதல் நீ என் பாரியையாக இருத்தல் தகாது. ஆகையால்
என்னை விட்டுப்பிரிந்துபூமியிற்சென்றுபிறக்கக்கடவாய் " என்று
சொல்லிவிட்டனர். இவ்வண்ணம் எதிர்பாராத உத்தரவைப்
பெற்ற பார்வதிக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை.
அவளது தாமரை போன்ற முகம் வாடியது. அவள் மகேசுவர
ரையும் கருணாநிதியாயும் இருக்கின்ற கடவுளை நோக்கி ' பிரபுவே!
எனக்கேற்பட்ட இக்கடுந்தோஷம்எப்பொழுது நிவிர்த்தியாகும்?



தவரீருக்கு யான் பாரியையாக என்று மறுபடியும் ஆவேன்? "
ன்று கேட்க, பரமசிவன் " நாயகி! பூலோகத்தில் காசியாரணி
ம் என்னும் க்ஷேத்திரத்தில் ஓர் பிராமணனுக்குப் புத்திரியாக
வதரித்துச் சிலகாலம் தவஞ்செய்து வருவாயானால் உன் தோ
ஷம் நிவிர்த்தியாகும் பின்பென்னைப்பர்த்தாவாக வடையலாம் "
ன்று திருவாய்மலர்ந்தருளினர்.

இவ்விதம் பரமசிவனால் இடப்பட்ட அவ்வுத்தரவைச்
சிரமேற்கொண்டு, அம்பிகை குழந்தைவடிவாய் காசியாரணியத்
தில் விளங்கும் அமிர்தபுஷ்கரணியில் மலர்ந்திருக்கும் ஓர் தாம
ரைப் புஷ்பத்தின் மீது சயனம் பண்ணிக்கொண்டிருந்தனள்.
கறுத்த மேனியுடன் ஆலிலையில் நித்திரைசெய்கின்ற மகாவிஷ்ணு
வின் சரீரகாந்தியால் எவ்விதம் திருப்பாற்கடலே ஒரு விதப்பிர
காசத்தையடைந்ததோ, அதேவிதமாய், பச்சைநிறமுள்ள பார்வ
தியின் தேககாந்தியால் அவ்வமிர்தபுஷ்கரணியே மிகுந்த பிரகா
சத்துடன் விளங்கிற்று. இவ்விதம் அவள் பூமியையடைந்ததும்,
ஆங்குள்ள பிராணிகளனைத்தும் சௌக்கியத்தையும் சுகத்தையு
மடைந்தன நிலங்கள் செழிப்புற்றன. காற்றுப்புழுதியன்றி
மந்தமாகவீசிற்று இந்திரன் முதலான தேவர்கள் பூமாரி பொ
ழிந்தனர். ரிஷிகள் கொண்டாடினர். கின்னரர்பாடினர். அப்
ஸரஸ்திரீகளாடினர். வேதகோஷங்கள் முழங்கின. தேவிபூமியில
வதரித்ததனால் பூமியிலுள்ள மனிதரனைவரும் அன்றையத்தினம்
பெருமகிழ்வு கொண்டனர்.

அச்சமயத்தில், சிவபக்தரும் மகாமதி யென்னும் பெய
ருடையவருமான ஒரு பிராமணோத்தமர் அப்புஷ்கரணிக்கு வழ
க்கம்போல் சென்று ஸ்நானம்செய்து, தர்ப்பணம், ஸந்தியாவந்த
னம், காயத்ரீ, முதலான நியமங்களைச்செய்துமுடித்துக்கொண்டு,
தன் கிரகத்திற்குத் திரும்பினர். அப்பொழுது, தாமரைப் பூவில்
சயனித்துக்கொண்டிருக்கும் குழந்தை மெல்லிய குரலுடன், அ
ழுகிறதைக்கேட்டு மகாஆச்சரியத்துடன், அம்மகாமதி, குளத்தி
லிறங்கி நாலுபக்கமும் பார்த்தார். ஓர் அழகிய கமலபுஷ்பத்தின்
மீது சயனித்துக்கொண்டிருக்கும் சிசுரூபமாயிருந்தபார்வதியைக்

கண்டு, அடங்காமகிழ்ச்சியும் பேரானந்தமுங்கொண்டு, அதனைத்
தன்னிருகைகளாலுமேந்தித் தன் அகமேகி, நெடுநாளாய் குழந்
தையில்லாமல் வருந்திக்கொண்டிருக்கும் தன்னில்லாளாகிய சுசீ
லையிடம் கொடுத்து இந்த ஆச்சரியமான விருத்தாந்தங்களைச்
சொன்னவுடன் அச்சுசீலையானவள் குழந்தையை மிகுந்த ஆனந்
தத்துடன் வாங்கிக்கொண்டாள். ஓ சனத்குமாரரே! அச்சமய
த்தில் அவர்களுக்குண்டான சந்தோஷத்தை என்னால் அளவிட
முடியாது.

அக்குழந்தையை அத்தம்பதிகள் நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர். அதுவும் சுக்
கில பக்ஷத்துச் சந்திரனைப்போல விருத்தியடைந்து வந்தது.
அக்குழந்தை ஓர் மின்னற்கொடிபோலும் தங்கப்பதுமைபோலும்
விளங்கிக்கொண்டு, நாளுக்கு நாள் வயதுக்குத்தக்க விளையாட்டுக்
களைத் தன் ஸகிகளுடன், பந்துகளைக்கொண்டும் மரப்பொம்மைக
ளைக்கொண்டும், இன்னும்மற்றவிளையாட்டுச்சாமான்களைக்கொண்டு
ம்தோட்டங்களிலும் ஆற்றோரங்களிலும்விளையாடி வந்தது. அன
னம்போன்ற மெல்லிய நடையையுடைய அக்குழந்தை வாலிபப்
பருவமடைந்து சகல வித்தைகளிலும் தேர்ச்சி யடைந்து வரும்
காலத்தில் அவளுக்கு சிவபெருமானிடத்தில் மிக்க பக்தி உண்டா
யிற்று அதுமுதல் சதா பூஞ்சோலையிற் சென்று அவ்விடத்தில்
இருக்கும் பூக்களைக்கொய்து தலையில் சூட்டிக்கொள்பவளும்,
மன்மதனைத் தகித்த சிவபெருமானுக்கு மோகத்தையும் பிரியத்
தையும் கொடுக்கப்பட்டதும், ஆத்த ராத்திரியில் பிரகாசிக்கின்ற
சந்திரவொளி போன்றதுமான, அழகிய யௌவனத்தை
யடைந்து சூரியனைக்கண்ட செந்தாமரைபோன்ற முகத்தை
யுடையவளும், நடக்கும்போது பாதங்களிலுள்ள பத்மரேகைகள்
பூமியிற் படுவதால், அவைகள் பூமியில் முளைத்த பத்மங்கள்
போல் பிரகாசிக்கும்படியாக, அவ்வளவு தேஜஸுடன்கூடிய
பாதங்களையுடையவளும், இராஜஹம்சங்களுக்கு நடை பழக்கிக்
கொடுப்பவள்போல மெதுவாயும் அழகாயுமிருக்கும் நடையுடை
யவளும், தண்டை பாதசரம் முதலான ஆபரணங்களைக்காலிலணி



ந்திருப்பவளும், சிறந்த யானைகளுடைய துதிக்கைகள் போலும்
இலக்ஷணமாயும், நன்மையைத் தரத்தக்கதாயுமிருக்
கின்ற தொடைகளையுடையவளும், வணங்கி நிற்கும் நாபிக்குமேல்
இரேகைபோலவும், கறுத்துமிருக்கின்ற உரோமக் கூட்டங்களை
யுடையவளும், யௌவனம் ஏறிப்போவதற்கேயென அமைக்கப்
பட்டிருக்கும் அழகான படிகள்போல் விளங்கப்பட்ட மூன்று
மடிப்புகளை யுடையவளும், தங்கமலை போன்ற இரண்டு கொங்கை
களின் பாரத்தால் வணங்கி வெகு சூக்ஷ்மமாயிருக்கின்ற இடை
யையுடையவளும், வாழைப் பூவைப்பார்க்கிலும் மிருதுவாயும்
அழகாயும் புதிதாயும் பிரகாசம் பொருந்தியதாயும் பவ
ளம் போல் சிவந்ததாயும் மெதுவாயுமிருக்கின்ற ஹஸ்தத்தை
யுடையவளும், இரத்தின மாலை கண்டாபரணம், மூக்குத்தி,
தோடு,முதலிய ஆபரணங்களால் விளங்கப்பட்டவளும், சந்தனம்
புனுகு, குங்குமம், முதலிய வாசனைத்திரவியங்களைப் பூசிக்கொண்
டிருப்பவளும், தாமிரம்போற் சிவந்த அதரத்தையும், புன்சிரிப்
போடுகூடிய முகத்தையுமுடையவளும்,வீணாகானத்தைஜயிக்கத்
தக்கதாயும் ரசமாயும் காதுகளுக்கின்பத்தைப் புகட்டக்கூடியதா
யுமுள்ள தொனியை யுடையவளும், அடிக்கடி பயத்தினால் ஆடிக்
கொண்டிருக்கிற மான்களுடைய கண்கள்போல விளங்கப்பட்ட
நேத்திரங்களையுடையவளும், மன்மதன் வில்லைத் தோற்கடிக்கப்
பட்டதாயும், வணங்கினதாயும், நீல நிறமாயுமிருக்கின்ற புருவங்
களையுடையவளும், தனனழகால் ஜயிக்கப்பட்டிருக்கின்ற சௌரி
மிருகம், மயில், இவைகளின் நிறம்போல நீலமாயும், பரிமளமான
புஷ்பங்களுடன் கூடினதாயுமுள்ள அளகத்தை யுடையவளும்,
சௌந்தரியமான மேனியில் வெகு ஆபரணங்களை யணிந்து
கொண்டிருப்பவளும், பிறரோடு உவமை சொல்லத்தகாத பேர
ழகையுடையவளுமான, தம் புத்திரியைப் பார்த்துப் பெற்றோர்
களிருவரும் அவளது கலியாணத்தை யுத்தேசித்துப் பேசிக்கொண்
டிருந்தனர்.

அப்பொழுது அவள் தன் மாதா பிதாக்களை நமஸ்கரித்து
"என்னருமைப் பிதாவே! மாதாவே! யான் இப்பொழுது பரம

சிவனைக் குறித்துத் தவஞ் செய்ய வுத்தேசித் திருக்கின்றேன். அதற்குத்தரவு கொடுக்கவேண்டும்." என்று பிரார்த்திக்க அவர்களும் அவளுடைய பக்திச் சிறப்பைக்கண்டு அவளை மெச்சி "அங்ஙனமே செய்க" என்றுத்தரமளித்தனர். உடனே யவள் தவத்துக் குரியவாடைகளை யணிந்து, சந்தனப் பூச்சுகள் முதலான அழகு கொடுக்கக்கூடியவைகளை விலக்கி அழகாயும் மிருதுவாயுமிருக்கின்ற கூந்தலைச் சடையாகப் போட்டுக்கொண்டும், உருத்திராக்ஷங்களையும், விபூதியையும் தேகமுழுமையும் தரித்துக்கொண்டும் மரவுரி இடுப்பில் தரித்துக்கொண்டும் ஒட்டியாணம் போட்டுக்கொள்ளும் இடையில், விரதத்தின் நிமித்தம் பரிசுத்தமாய் செய்யப்பட்ட முஞ்சிப்புற் கயிற்றை முப்புரியாய் திடநிச்சயத்துடன் தரித்துக்கொண்டும், பந்தாட்டத்தால் மிகவும்சிவந்ததான கைகளில் ஜபமாலை தருப்பை அக்ஷதை முதலியவைகளைத் தரித்துக்கொண்டும், புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட படுக்கையை விட்டுப் பூமியிற் படுத்துக்கொண்டும், இவ்விதமான செய்கைகளுடன் தவம்புரிந்து வந்தனள். தன்னுடைய விளையாட்டுகளை யெல்லாம் மல்லிகை முதலிய கொடிகளிடத்திலும் கடினமாயும் சஞ்சலமாயும் அசைந்து கொண்டுமிருக்கின்ற கடைக்கண் பார்வைகளை மான்களிடத்திலும், வஸ்திர ஆபரணம் முதலானவைகளைக் கற்பக விருக்ஷத்தினிடத்திலும், தன் கூந்தலழகை மயில் சௌரி மிருக முதலியவைகளிடத்திலும், கொடுத்து விட்டுத் தனக்குரிய பொருளாசையை விட்டுத் தவத்திற்குரிய "ஸ்ரீ விசாலமென்னும் ஓர் ஸ்தலத்தை யேற்படுத்திக்கொண்டு அவ்விடத்திலோராலயங்கட்டி அதனில் ஸ்ரீ விசாலேசுவர ரென்னும் மகா லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து, அவ்விடத்தில் தனக்குத்தவம் செய்வதற்கு ஓராச்சிரமத்தை உண்டு பண்ணிக்கொண்டு சிவபெருமானை யபிஷேகம் செய்வதற்காக ஒரு தீர்த்தத்தையு முண்டு பண்ணி, அதில் ஸ்நானஞ்செய்து, தினந்தோறும் சிவபெருமானைப் பூஜைசெய்து அவ்விடத்தில் ஐயனார், வீரபத்திரர், சப்தமாதாக்களிவர்களால் சூழ்ந்து காக்கப்பட்டவளாக, மனதாகிற தாமரை புஷ்பத்தில் நிர்க்குண ஸ்வரூபியும், உலகங்களுக்குக் குருவுமாகிய



பகவானைத் தியானஞ் செய்து கொண்டு, அச்சற்குருவான தக்ஷிணாமூர்த்தியை சரணமடைய உத்தேசித்தவளாய், பரப்பிரம்ம சுரூபிணியும், மங்கள ஸ்வரூபிணியுமாகிய பார்வதியானவள், பரப்பிரம்ம ஸ்வரூபியான பரமசிவனைப் பர்த்தாவாக அடைய வுத்தேசித்துக் கடுந்தவம் புரிந்து வந்தாள்.

—:(o):—

# பதின்மூன்றாவது அத்தியாயம்.

## ஏலாளகை தவஞ் செய்ததும் விவாகம் நடந்ததும்.

சனத்குமாரரை நோக்கி நந்திகேசுவரர் சொல்லுகின்றார்.

"ஓ சனத்குமாரரே! காசியாரண்ணியகதிலிருக்கின்ற அக்கம்பா நதிக்குச் சமீபத்திலிருக்கப்பட்டதும், தாமரை முதலான புஷ்பங்களின் நிறைவால் பெருமைப் படுத்தப்பட்டதும், அன்னம் முதலான பக்ஷிகளுடனும், பலவிதமான ரத்னங்களுடனும் விளங்கப்பட்டதும், அமிர்தமே ஜலமாகிக்கொண்டதுமான அவ்வமிர்த புஷ்கரணிக்குச் சமீபத்தில், மிகுந்த அழகுபொருந்தியதும், ஒரு யோஜனை விஸ்தாரமுள்ளதுமானஓர் ஆசிரமத்தையுண்டுபண்ணிக்கொண்டு, அவ்விடத்தில் பரதேவதையான பார்வதி, தேவர்களையும் முனிவர்களையும் உபசரித்து, விதிப்படி வாஸ்து ஹோமம் முதலானவைகளையும் செய்துவிட்டு, தேவர்கள், முனிவர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்திரீகள் முதலியோர்கள் சூழ்ந்திருப்ப, ஒருவருக்கும் கிட்டாமலிருக்கப்பட்ட வஸ்துவைத்தியானித்து, சகல ஆசைகளையும் வெறுத்து ஐம்புலன்களையும் அடக்கி, தன் மனோபீஷ்டத்தை நிறை வேற்றிக்கொள்வதற்காக, வெகு உக்கிரமாகவும், பிடிவாதமாகவும் தவஞ்செய்ய வாரம்பித்தனள். அவள் கிரீஷ்மகாலமாகிய ஆனி ஆடிமாதங்களில் பஞ்சாக்கினிமத்தியில் நின்றுகொண்டு, சிறிதேனும் சிரமத்தையடையாமல், மூகமலர்ச்சியு

டன், பசிவந்தகாலத்தில் பிறரிடம் ஜலத்தைக்கூடயாசிக்காமல்
சந்திரகிரணங்களை பானஞ்செய்து கொண்டும், மரங்களினின்று
தானேயுதிரும், காய் கனி சருகு முதலியவைகளைப் புஜித்துக்
கொண்டும், தவம் புரிந்து வந்தாள்.

மழைகாலத்தில் காற்றினால் வீசப்பட்ட ஜலத்திவலைகள்
சரீரத்தில் படுகிறதினால், குளிர்ந்து போயிருக்கிற தன் அழகிய
மேனியையவள் சிறிதேனும் மதித்தவளல்லள் அதைப்போலவே
சூரியகிரணங்கள் பொன்போன்ற மேனியிற்றாக்கிக் கருகினதை
யும் அவள் கருதினவளல்லள். சில சமயங்களில் சிரசில் வியர்வை
உண்டாகி பிறகு புருவங்களிலும் உதடுகளிலும் ஸ்தனங்களிலும்
வயிறு மடிப்புகளிலும் நாபியிலும் சில நேரம் தங்கி, பாதபரியந்
தப் ஓடஆரம்பித்தது. குளிர்காலவிரவுகளில், நடுக்கிக்கொண்டிருக்
கும்தொடைகளுடன்பல சமயங்களில் கல்லில் படுத்துக்கொண்டு
தவம்புரிந்து வருவாள், பனிக்காலத்தில் கழுத்தளவு தண்ணீரில்
நின்றுகொண்டு, தளிர் போன்ற தன்னுதடுகள் துடிப்ப, மனச்
சஞ்சலம் சிறிதேனுமில்லாமல், நின்று தவம்புரிவாள். வாசனை
யுடைய செந்தாமரை போன்ற முகத்தினளாகிய பார்வதி, பனி
யினால் வாடிக்கிடக்கும் புஷ்பங்களுக்குத் தன் முககாந்தியால்
உயிர் மூட்டுபவள் போல, அத்தாமரைத் தடாகத்திற்கு வந்து
மகாகொடுமையாகத்தவம்புரிந்தும், அவளது கொடியதவத்திற்குப்
பரமசிவன் சிறிதேனும் இரங்கினபாடில்லை. அதைக் கண்ட தே
வியானவள், முன்பைவிட உக்கிரமாகவும், அன்ன ஆகாரம் நித்
திரை முதலியவைசிறிதேனுங்கொள்ளாமல், வெளிப்பிரக்ஞையே
சிறிதுமின்றி, சிலாரூபம்போற் சலியாமல் நின்றுகொண்டு, தவஞ்
செய்ய வாரம்பிக்க, அவளது ஸர்வாங்கங்களினின்றும் பயங்கர
மான அக்கினியுண்டாகி ஆகாயத்தை யளாவிய சுவாலையுடன்
வீசத்தொடங்கி உலகத்தைத் தகிக்க வாரம்பித்து விட்டது.
அதனையுணர்ந்த சகல பிராணிகளும் பயந்து கதறின.

அப்போது, அப்பிராணிகளிடம் கிருபைகூர்ந்து சிவபெரு
மான் மிகவும் விருத்தப்பிராமணரைப் போல் வேடம் பூண்டு



ஒருகையில் தடிக்கம்பும், மற்றொரு கையில் கமண்டலமும் தரி
த்து, நரைத்த தலைமயிருடையவராகி, நடக்க முடியாதவர் போல்
நடித்துதொங்குகின்ற புருவங்களையும், வளைந்த முதுகையுமுடை
யவராகவும் பெருமூச்சுவிட்டுக்கொண்டும், அடிக்கடி தடுமாறி
நடந்துகொண்டும், வாதரோகத்தால்இருமியுமிழ்ந்து கொண்டும்,
மிகுந்த வியர்வையும் கிழிந்த வஸ்திரமும், தொங்கின்ற தோலும்
நடுக்கமுற்ற திருமேனியும் விளங்க, கைகளில் அக்ஷதையுட
னும் பஞ்சாங்கத்துடனும், அவள் தவம் செய்யுமிடம் வந்து
தோன்றினர்.

ஸந்தோஷமான முகத்துடன் வரும் அவ்வயோதிகப் பி
ராமணரைக்கண்டு, அம்பிகையானவள் எழுந்து, மிகுந்த பக்தியு
டன் அருக்கியபாத்திய ஆசமனீய முதலிய வுபசாரங்களைச் செ
ய்து பின்பு அவரை ஓர் ஆசனத்திலுட்காரவைத்து, “ஸ்வாமி!
தங்கள் வரவில் இன்றையத்தினம் சுபமாகவும் புண்ணியமாகவும்
ஆயிற்று. அன்றியும் பூர்வகாலத்தில் சப்புவான சிவபெருமான்
பார்வதியை விவாகஞ்செய்து கொண்டதினமின்றேயாகும். அத்
தன்மையுள்ள சிவபெருமானையே, யான் எண்பனதில் தியானஞ்
செய்து கொண்டிருக்கின்றேன், என்றனள். அதனைக்கேட்ட
விருத்தப் பிராமணவுருவங்கொண்ட சந்திரசேகரரான சிவபெரு
மான் அவளைநோக்கி ” தேவி! உனக்கு அபீஷ்டமுண்டாகட்டும்.
மங்களமுண்டாகட்டும். செல்வமுண்டாகட்டும். சுபமுண்டா
கட்டும் “ என்றாசிர்வதித்துப் பின்னும் ஸ்நானமுதலான வொழுக்
கங்களால் பரிசுத்தமான திருமேனியையுடையவளே! உனக்கு
விரதானுஷ்டானங்கள் செய்வதற்கு அனுகூலமாக, சமித்து தர்
ப்பை, தீர்த்தம் முதலான உபகரணங்கள் சுலபமாகக் கிடைக்
கின்றன. தேவி! உன்னுடைய நிர்மலமாகியமனதானது உனக்கு
உபயோகமாகிய தருப்பைகளைப் புசிக்கின்ற மான்களிடத்தில்
சென்றிருக்கின்றது. உன்னுடைய நல்லொழுக்கத்தால் பிசாம
ணர் முதலியோர் உன்னிடத்தில் பிரியமுள்ளவராக விளங்குகின்
றார்கள். அன்றியும் திக்குகளெல்லாம் செழிப்பாயிருக்கின்றன.
மிருதுவாயிருக்கின்ற சரீரத்தையுடைய தேவியே! மிகுந்த வை

ராக்கியத்துடனும் சக்தியுடனும் நீ தவஞ்செய்துவருகின்றாய்,
கடம்ப புஷ்பத்திற்குச் சமானமான உன்னுடைய தேகமிளைத்து
வாடியிருக்கின்றதே. உனது இளைத்த தேகத்தினின்றும் எலும்பு
கள் வெளியிற் புலப்படுகின்றனவே! நீ எதைக்குறித்துத் தவஞ்
செய்கின்றாய்? அழகுள்ள நீ காமியமாயிருக்கின்ற நாயகனைக்
குறித்துத் தவஞ்செய்யவேண்டுவதவசியமில்லை. உலகத்தில் வண்
டுகளிருக்கும் புஷ்பத்தைத் தேடிப்புஷ்பங்கள் செல்வது வழக்கமுண்
டோ, இல்லையே, உனக்கு மணக்க விருப்பமிருக்குமேல்,
உனக்குத்தக்க யோக்கியமான புருஷன் உன்னைத்தேடிவருவான்.
அன்றியும் மிகவும் தெரிந்தவளாயிருக்கும் நீ செல்வத்தையுத்தே
சித்துத் தவஞ்செய்கின்றாயென்றும் சொல்ல இடமில்லை. ஏனெ
ன்றால் ஸகலருக்கும் செல்வத்தைக்கொடுப்பவள் நீயாகவேயிருக்
கின்றாய். மேலும் நீ தர்மத்தைக் குறித்துத் தவஞ்செய்கின்றா
யோயெனில் அதுவும் சரியாகத்தோற்றவில்லை. உன்னுடைய
தவமே தருமரூபமாக விளங்கிவரக்காணும் நான் அவ்வண்ணம்
நினைத்தல் தகாது. மோக்ஷத்தைத்தான் உன் தவங்குறித்ததோ
என்று எண்ணவுமிடமில்லை. மகாபுண்ணியஸ்தலமாகிய இக்காசி
யாரண்ணியத்திலிருப்பவர்கள் மோக்ஷத்தைக்குறித்துத தவஞ்
செய்யவேண்டிய அவசியமில்லை. மேலும் நல்ல முனமுடையவர்
களுக்குப் பக்தியும் மோக்ஷமும் சுலபமாகக்கிடைக்கின்றன ஆ
கையால் நீ அடைய விரும்பக்கூடிய எப்பொருளும் சுலபமாகக்
கிடைப்பதற்கு வழியிருக்க, உன் பொன்போன்ற பேனியை வரு
த்தி நீ தவப்புரியக்காரணமென்ன” வென்று கேட்டார்.

தேவி, அவர் கேட்பதின் தாத்பரியத்தையறிந்து, அவரு
க்குப் பதில்சொல்லும் வண்ணம் தன் சகிக்குச் சண் ஜாடைகா
ட்டினாள். உடனே அவள் பிராமணரைநோக்கி “ஐயா! பிரா
மணசிரேஷ்டரே! இப்பொழுது தாங்கள் சொன்னவை யெல்
லாம் பிராயமே யொழியவேறில்லை. ஆனால் என் தேவி தவஞ்செ
ய்பக்காரணம் யாதோவெனில், [பணத்தாசையாலன்று, தர்மத்
தைப்பெறவேண்டுமென்ற பிரியத்தாலன்று] ஆனால் சிவபிரானைத்
தனக்குப் பதியாகக் கொள்ளவேண்டுமென்னும் பேராவல் கொ



ண்டேயாகும், அவள் எவ்வளவு கடுந்தவம் புரிந்தும் சிவபெரு
மான் இன்னும் அருள்புரிந்த பாடில்லை. ஆகையால் அவள் பனி
யால் நினைந்து வெயிலாலுலர்ந்து வாடின தாமரைப்புஷ்பம் போலா
னாள். பிராமணோத்தமரே! மங்கள சொரூபியும் வாக்கு மனதுக்
கெட்டாதவருமாகிய சிவபெருமான், தவத்தால் மெலிந்த சரீரத்
தையுடையவளும் சதாசிவப்பெருமானையே தியானித்துக்கொண்டி
ருப்பவளுமாகிய எனது தலைவியினிடம் எப்பொழுது சிவபெரு
மான் மனமிரங்கி அவளது கோரிக்கையை நிறைவேற்றிவைப்பா
ரோ விளங்கவில்லை” என்றனள்.

அம்மொழிகளைக்கேட்ட அப்போலிப் பிராமணர் தேவி
யை நோக்கி “சகியின் மூலமாக நீ தெரிவித்தது சரியா என்று
வினவினார். அவரது சந்தோஷமுகத்தைப் பார்த்துத் தேவியா
னவள் மிகுந்த சிரமத்துடன் ” எவருடைய ஆக்ஞையானது எவ்
விதத்திலும் மாறுபடாதோ அத்தகைய சிவபெருமானையே நான்
வரிக்கின்றேன் “ என்றனள். அதற்கு அவர் ” சௌந்தரியமான
முகத்தையுடைய ஓ தேவியே சிவபெருமானைக்குறித்துத் தவம்
புரிவது உனக்கு யோக்கியமில்லை. அவருடைய சரித்திரத்தை
நான் நன்றாய் அறிந்திருக்கின்றேன். அதனை உனக்குச் சொல்
லுகின்றேன், அவர் சுடுகாட்டிலுள்ள பிணங்களுடைய சாம்ப
லைப் பூசிக்கொண்டிருப்பவர். அவரை நீ அபேக்ஷிப்பது முறையா
காது. அன்றியும் அவர் கையில் சர்ப்பங்களைக்கங்கணம் போல்
சுற்றிக்கொண்டிருக்கின்றார். அப்போர்க்கொத்த அவர் கையால்
அழகிய ஆபரணங்களை அணிந்து கொண்டும் மெல்லியபட்டுப்
போன்றதுமான உன் கைகள் தொடச்சகிக்குமா? மேலும் நீ
அடையவிரும்பும் அவர் மிகவும் கிழத்தன்மையுடையவர் நீ யௌ
வனத்தை அடைந்து காம்பரிந்த மல்லிகை முதலான புஷ்பசய
னத்தில் படுத்துக்கொண்டிருப்பவள். அவரோ மயானத்தில் பி
ணங்களின் தலைமயிர்களால் விரிக்கப்பட்ட படுக்கையில் சயனிப்
பவர். அத்தகைய சிவபெருமானுடன் நீ சேர்ந்திருப்பது எவ்
விதம் ஒவ்வும். அன்றியும் முண்டமாலையை ஆபரணமாகக் கொ
ண்டவரும், மயானத்தில் கிடக்கும் எலும்புகளைத் தரித்திருப்ப

வருமாகிய, அச்சிவனை நன்முத்து, ரத்னம் முதலியவைகளாலாக்
கப்பட்டமாலைகளை யணிந்துகொண்டிருக்கும் நீ கணவனாக அடை
ந்தால் உன்னை ஜனங்கள் பார்த்து ஏளனஞ் செய்யமாட்டார்
களா? நீயோ நல்ல பொற்சரிகையால மைததபட்டு பீதாம்பரங்
களைத் தரித்திருப்பவள். அவரோ இரத்தத்துடன்கூடின யானைத்
தோலை உடையாகக்கொணடவர். அன்றியும் கிழத்தன்மையுள்ள
காளைமாடொன்று வாகனமாயிருக்கின்றது. நீ அவரை மணந்
தால் அதன் மேலேறவேரிடும். அப்பொழுது உன்னைப்பார்த்தவர்
கள் பரிகாசம் செய்வார்கள். நல்ல அழகில்லாதவரும், செற்றிக்
கண்ணையுடையவரும், வஸ்திரமில்லாதவரும், [திக்குகளையே
வஸ்திரமாகக் கொண்டவரும்] உன் லக்ஷணத்துக்குத் தக்கவரா
காதவருமாகிய அச்சிவபெருமானை அடையவேண்டுமென்ற எண்
ணம் உனமனதில் எவ்வண்ணம் உதித்தது? ஆகையால் அசபனு?
யிருக்கின்ற அச்சிவனிடத்தில் வைத்திருக்கின்ற ஆசையை நீ
விட்டுவிடு. உன் பெருமையெங்கே? அவரெங்கே? நீயோ ரத்
னம் போன்றவள். அவரோ கல்லுக்குச் சமானமானவர். நீ ஸ்
வர்ணத்துக் கொப்பானவள். அவரோ இரும்புக்கொப்பானவர்
உன்குண மெங்கே? அவர்குண மெங்கே? ஆதலால் அவர் மீது
வீணாசை கொள்ளாதே! அவர் உனக்குத் தகுந்த புருஷனல்ல,
" என்று சொன்னார்.

இம்மொழிகளைக்கேட்டு மிகுந்த கோபத்துடன் உதடுகள்
துடிதுடிபப, புருவங்களை நெறித்து, அவரை நோக்கி," ஓ! பிரா
மணரே! சிவபெருமானை நீருண்மையாக அறிந்தவரல்ல. ஆகை
யால் அவரைப்பற்றி நீர் பேசுவது தகுதியில்லை. பார்ப்பதற்கு
நல்ல சௌந்தரிய முடையவரும், ஞ்னடத்தை யுள்ளவருமான
அச்சிவபெருமானை யுண்மையாக அறியாதவர்களே தூஷிப்பார்
கள். நீர் சொல்வது எனக்காச் சரியமாயிருக்கின்றது. அவரே
மங்களஸ்வரூபர். அவரே உலகங்களுக்குப் பிரபு பரிபக்குவத்தை
யடையாத அஞ்ஞானி அச்சிவபெருமானின் மகிமையை எப்படி
யறிவான்? அணுவுக்கு அணுவாயும, மகத்துக்கு மகத்தாயும்
மங்களத்தை யுடையவர்களுக்கு மங்கள ரூபியாயும், இஷ்டத்தை



வேண்டுவோர்களுக்கு வேண்டும் பொருளை அளிப்பவரும் அவ
ரே! யானை எறும்பு முதலான சர்வான் மாக்களுக்கும் ஆகாரத்
தைக் கொடுப்பவரும, சந்திரசேகரரும், அஸ்திமாலையை யுடைய
வருமான அப்பரமசிவன் பிக்ஷாடனமூர்த்தியாக வரும்பொழுது
அவரைப்பார்த்து மோகிக்காதவர் யார்? அவரது திவ்ய ரூபத
தைக்கண்டு முழுத்திருப்தியையும் அடைந்த மாதர்களுண்டா?
ஓ! பிராமணரே! இவ்விஷயங்களெல்லாம் உண்மையல்லவா?
அன்றியும் திரிபுரஸம்ஹாரம் செய்யும்பொழுது, அச்சிவபெரு
மான் ஸர்வாலங்காரத்துடன், மேருவை வில்லாகவும், வாசுகியை
நாணாகவும், விஷ்ணுவைப்பாணமாகவும், பிரமனைச்சாரதியாகவும்
பூமியை இரதமாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், சூரிய
சந்திரர்களை சக்கரங்களாகவும் அமைத்துக்கொண்டு புன்சிரிப்
பால் திரிபுரர்களை எரிக்கும்பொழுது அவருடைய ரூபத்தையாரா
ல் பார்க்க முடிந்தது. அன்றியும் வாக்கு மனதிற்கெட்டாதவரும்
மங்கள ஸ்வரூபராயுமிருக்கின்ற அச்சிவபெருமானுடைய மகிமை
யை யுண்மையாக வறிந்தவர் யார்? பிராமணரே! மூடர்களுக்கு
அவர் செய்கை அஸத்தாகவும், சாதுக்களுக்கு ஸத்தாகவும்
தோன்றும. ஆகையால் நீர் வீணாகபேசி வாக்கு வலியையுண்டு
பண்ணிக்கொண்டு சிரமப்படுகின்றீர். மிகுந்த விருத்தரானதால்
உம்மைச் சும்மாவிடுத்தேன். ஆகையால் இனிபேசுவதை நிறுத்தி
இவ்விடத்தைவிட்டு அகன்று அப்பாற்போய் விடும்" என்று
சொல்லிச் சிவபெருமானுக்கு அபிஷேகஞ் செய்வதற்கு தங்கக்
குடத்தை எடுத்துக்கொண்டு ஜலங்கொண்டுவரக குளத்தை நோக்
கிச் சென்றாள்.

அச்சமயத்தில் விருத்த பிராமண வேடங்கொண்ட பர
மேசுவரனும் அவள் மனத்திற்கு விரோதமான வார்த்தைகளைப்
பேசிக்கொண்டே அவளைப் பின் தொடர்ந்தார். அவள் அவரை
இலக்ஷியம் பண்ணமல் 'என் பின்னே வராதீர் வராதீர்! என்று
சொல்லிவிட்டுக் குளத்திற்குச் சென்று நீர் எடுத்துக்கொண்டு
திரும்பினாள். அப்பொழுது அவ்வயோதிகர் அவளை நோக்கி மிக்
கப் பிரியத்துடன் "ஓ! சுலாவண்யே! சுலாவண்யே! என்று கூவிக்

கொண்டே கையை நீட்டிக்கொண்டு அவள் கையைப் பற்றியெழுக்க வரும்போது அவள் மிகுந்த பயத்துடன் நடுநடுங்கி அவர் கையைத்தள்ளி குடத்தையும் கீழே யெறிந்துவிட்டு, சிவபெருமானைத் தியானித்துப் பின்பப் பிராமணரை நோக்கி " நீர் என்ன காரியஞ் செய்தீர்? என்றதட்டி அடிக்கயத்தனித்தாள். அந்தச் சமயத்தில் பிராமண வேடங்கொண்ட சிவபெருமான் கிழத்தன்மையைவிட்டு உடனே ரிஷபாரூடராக அவள் முன்தோன்றி சுயரூபத்தை தரிசனங் கொடுத்தார்.

இவ்விதமாகத் தரிசனங்கொடுத்த அப்பிரபுவைக் கண்டு அம்பாள் மிகுந்த ஆச்சரியத்தையும் ஆநந்தத்தையு மடைந்து, தான் கோரியிருந்த மகாபுருஷனைக் கண்டதால் உண்டான லஜ்ஜையால் தலைகுனிந்து தன்கட்டை விரலின் நுனி நகத்தால் பூமியைக் கிளறிக்கொண்டு நின்றனள். பரமசிவனும் அவளை நோக்கி ' ஏலாளகே! உன்னைப் பரீக்ஷிப்பதற்காகவே இப்பிராமண வேடந்தரித்து இங்கு வந்தேன். என்னை சம்புவென அறிவாய். உன்னுடைய தவத்தை மெச்சியே யானிங்கு வந்தது. ஆகையால் உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளலாம் " என்றனர் அதைக்கேட்டு அம்பிகை, மகாதேவரும், பிரகாசமாய் விளங்கப்பட்டவரும், பிறப்பில்லாதவரும், மங்கள ஸ்வரூபியும், மிகுந்த சிரமத்துடன் தவஞ்செய்பவருக்கு பலனைக் கொடுப்பவரும், இஷ்டரும், பிரபுவும், இப்பொழுது பிரத்தியக்ஷமாக வந்திருப்பவருமாகிய பரமசிவனின் பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துப் பலவிதமாக ஸ்தோத்திரஞ் செய்து, தன் சகியை நோக்கி "சிவபிரானுக்கு என் கருத்தை யறிவிப்பாயாக" என்று குறிப்பாகக் கூறினள்.

உடனே அவள் சிவபிரானை நோக்கி " பிரபுவே! ஜகத்சொரூபியும் குணங்களுக் கெட்டாதவரும், தேவர்களாலும் அறியப்படக்கூடாதவரும், தக்ஷிணாமூர்த்தி சொரூபியுமாகிய தேவரீரை என் தலைவியாகிய ஏலாளகை பர்த்தாவாக அடைய விரும்புகின்றாள் " என்று சொல்ல, பரமசிவனும் மிகுந்த கிருபையுடன் " அங்ஙனமே ஆகுக " என்றநுக்கிரகஞ்செய்து விட்டு, அம்பிகையைப்



பார்த்து " ஏலாளே! முன்பு கைலாயத்தில் நீ என்னுடைய பாகத்தை விட்டுச் சகிகளுடன் பந்தாடிக்கொண்டு வரும்போது சூரியன் ஓரிடத்தில் அசைவற்று நிற்க உலகத்திற்குக் கெடுதியுண்டாகிவிட்டது. நல்லொழுக்கத்தையுடைய நீயும் என் சரீரத்தைவிட்டுப்பிரிந்து பூமியிற் பிறக்க நேரிட்டது. உன்னைவிட்டுப் பிரிந்தது முதல் நானும் இக்காசியாரண்ணியத்திலேயே வாசம்பண்ணிவருகின்றேன். ஆகையால் இன்றுமுதல் "என் பாகத்தை விட்டுப் பிரிந்தவளென்ற நாமதேயத்துடன் இந்த க்ஷேத்திரத்திலேயே என்னோடுகூட வாழ்ந்திரு " என்று திருவாய் மலர்ந்தருளினர்.

இம்மொழிகளைக் கேட்டதாலுண்டான ஆநந்த வாரத்தில் மூழ்கின அம்பாள் தம் பர்த்தாவாகிய ஜகதீசனைப் பார்த்து ' பிரபுவே அடியார்களினிஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் பரமபுருஷா! லோககர்த்தரே! பக்தர்களிடத்தில் பிரியமுள்ளவரும் வேண்டிய வரங்களைக் கொடுப்பவருமாகிய தயாளுவே! தாங்கள் என் மாதா பிதாக்களின் முன்னிலையில் வாக்களித்த பிரகாரம், சாஸ்திரோக்தமாக என்னை மணம் புரிந்து இக்ஷேத்திரத்திலேயே வாசஞ்செய்ய வேண்டும்". என்று பிரார்த்தித்தாள். சிவபெருமான் அவளது விருப்பத்தின்படியே யெல்லாம் நடக்கட்டுமென்று வாக்களித்துத் தேவசிற்பியாகிய விசுவகர்மாவை வரவழைத்து, அவனை நோக்கி " சிற்பவேலையில் தேர்ந்த விசுவகர்மனே! இப்பொழுது நீ நமது விவாகத்தைக் குறித்து, மிகவும் உன்னதமானதும், உலகங்களுக்கு ஆச்சரியத்தை யுண்டுபண்ணத் தக்கதும் நமது கௌரவத்திற்கு ஒத்ததுமான ஓர் கலியாண மண்டபத்தை நிர்மாணஞ் செய்வாய் " என்று உத்தரவளிக்க, அவன் மகா சந்தோஷத்துடன் அவராக்ஞையை சிரசால் வகித்து தான் செய்யப்போகிற விசித்திர வேலைகளை மனதில் யோசித்துக்கொண்டு ஸ்ரீ விசாலமென்னும் க்ஷேத்திரத்தில் வந்து அங்கு தங்கமயமான ஆயிரங்கால்களுடன் கூடியதும், இரத்தின ஸ்தூபிகளால் அலங்கரிக்கப்பட்டதும், நான்கு வாயில்களுடன் கூடினதும், வாழை வெகு அலங்காரமான மேல் கட்டிகள் கட்டப்பெற்றதும், விருக்ஷங்களால் சூழப்பட்டதும், புன்னாகம் கற்பகம் முதலிய

மல்லிகை சம்பகம் ஜாதி முதலான புஷ்பமாலைகளால் அலங்கரிக்கப்பட்டதும், பலவித வர்ணங்களோடுகூடிய கொடிகளாலும் மகரதோரணங்களாலும் அலங்காரஞ் செய்யப்பட்டதும், அழகானதும் பிரகாசம் பொருந்தியதுமான பிரதிமைகளாலும் நிலைக்கண்ணாடிகளாலும் ஒளிரப்பெற்றதும், தங்கம் வெள்ளி முதலியவைகளாலிழைக்கப்பட்டதனவரிசைகளோடும், சுவர்ணமயமான தீபங்களால் எங்கும் பிரகாசிக்கப்பெற்றதும், மற்றுமுள்ள பற்பல விசித்திர சாமான்களால் அலங்கரிக்கப் பட்டதுமான ஓர் கலியாண மண்டபத்தை நிருமித்துவிட்டு, சிவபெருமானிடம் வந்து வணங்கி நின்று விஷயத்தை யறிவித்தான்.



உடனே சிவபெருமான் நந்தி முதலான பிரமதகணங்கள் விஷ்ணு முதலான ஸகல தேவர்கள் முனிசிரேஷ்டர்கள் முதலிய யாவராலும் புடைசூழ, பலவிதமான வாத்தியங்கள் முழங்க,



நாரதர் முதலியோர் துதிக்க, தேவதாசிகள் வாழ்த்துக்கூற, மணக்கோலங்கொண்டு ரிஷபாரூடராய் எழுந்தருளி பட்டணப்பிரவேசஞ்செய்து வந்து, கலியாணமண்டபத்துள் நந்திகேசுவரரின் கையைப் பிடித்துக்கொண்டு பிரவேசித்து, கலியாண வேதிகையின் மத்தியில் நவரத்னங்களாலிழைக்கப்பட்டதும், குடைசாமரங்களுடன்கூடியதும் ஸர்வாலங்காரத்துடனும் பிரகாசிப்பதுமான சிங்காசனத்தின் மீதெழுந்தருளி அம்பிகையின் வரவை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

அப்பொழுது தேவியின் மாதாவாகிய சுசீலையம்மாள் மகாசந்தோஷத்துடன் ஏலாளகா பிராட்டியாருக்குச் சந்தனாதி முதலிய தைலங்களால் மங்களாபிஷேகஞ் செய்வித்து, பொற்சரிகை யமைத்த பீதாம்பரத்தை யுடுத்தி உயர்ந்த கச்சை யணிவித்து, உத்தரீய முதலியவைகளாலலங்கரித்து, நவரத்னங்களாலிழைக்கப்பெற்ற ஆபரணங்களைப் பூட்டி, சுகந்தபரிமளம் வீசும் புஷ்பங்களைச்சூட்டி, சந்தனம் புனுகு கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களைப் பூசி, நெற்றியில் திலகமிட்டு, கண்களுக்கு மையிட்டு, அலங்கரித்து, மெதுவாக அழைத்துவந்து காசியாரண்ணியபதியாயும் பிரபுவாயுமிருக்கின்ற சிவபெருமானுடைய வலது பாகத்தில் வீற்றிருக்கச்செய்து தானும் மகேசுவரனைப் பூசித்து வணங்கி நின்றாள். அச்சமயத்தில் உலகங்களுக்குக் கர்த்தாவும் நித்தியரும் சம்புவானவருமான பகவான் லோகோபகார நிமித்தம் அம்பாளுடைய பாணிக்கிரஹணத்தைச் செய்ய உத்தேசித்து பிரம்ம தேவனை ஓமம் செய்யும்படி உத்தரவு செய்ய அவ்வுத்தரவைச் சிரமேற்கொண்டு பிரம்மதேவன் நெய், ஸமித்து, முதலானவைகளைக்கொண்டு ஓமஞ்செய்தனர். பிராமண சிரேஷ்டராகிய மகாமதியென்பவர் சுசீலையுடன் சுவர்ண கெண்டியிலிருந்த தீர்த்தத்தை யெடுத்துக்கொண்டு, தக்ஷிணை தாம்பூல ஸகிதமாய் கன்னியாரத்னமாகிய ஏலாளகாம்பாளின் திருக்கரத்தைப் பிடித்து சிவபெருமானின் வலக்கரத்தில் வைத்தனர். சிவபெருமானும் அக்கன்னிகாரத்தினத்தைக் கிரகித்துக்கொண்டு, சிறந்த லக்னத்தில், சர்வலோகங்களுக்கும் நன்மையைக் கொடுக்கும்திருமாங்

கலிய ஸூத்திரத்தைக் கையிலேந்தி, மந்திரங்களுடன், மிக்க அழகானதும் பலவித ஆபரணங்களுடன் பிரகாசிப்பதுமான அம்பாளுடைய திருக்கழுத்திற் பூட்டினார். அத்தருணத்தில் ஸர்வாங்க சுந்தரியும், மகாதேவியுமான ஏலாளகாப் பிராட்டியார் மிகுந்த சிறப்புடன் விளங்கி நின்றனள். பின்பு சிவபெருமான் பிராட்டியோடு பொரி முதலியவைகளை ஓமம் செய்தார்.

அவர்களை விஷ்ணு முதலிய தேவர்களும் நாரதர் முதலிய ரிஷிகளும் பூஜித்தனர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். கந்தருவ சிரேஷ்டர்கள் ஸகலவித வாத்தியங்களையும் கோஷித்தார்கள். அப்ஸரஸ்திரீகள் நடனஞ் செய்தனர். அச்சமயத்தில் தான், ஏலாளகாம்பாள் கலியாண சாஸ்தாவாயிருக்கும் ஐயனைப் பார்த்து "ஓ! புத்திரனே! நீ வீரபத்திரனுடன் சேர்ந்து கலியாணத்திற்கு வந்திருக்கும் விஷ்ணு தேவர்கள் முதலான யாவர்களையும் வஸ்திராதிகளாலும் ஆபரணங்களாலும் உபசரித்தனுப்பு" என்றேவினள். அவ்வுத்திரவைச் சிரமேற்கொண்ட ஐயனார், வீரபத்திரர், ஆகிய இருவரும், விஷ்ணு பிரமன் இந்திரன் ஆகிய தேவர்களுக்கும் நாரதர் வசிஷ்டர் முதலான முனிவர்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும அவரவர்களுக்குத் தக்கபடி வஸ்திராபரண புஷ்ப சந்தன தாம்பூலாதிகளாலும் போஜனங்களாலும் மிகவும் உபசரித்தனர். இவர்கள் செய்த மரியாதையால் மிகுந்த சந்தோஷத்தை யடைந்த தேவர்கள் முதலிய யாவரும் சிவபெருமான் உத்தரவுகொண்டு தத்தம் ஸ்தானங்களை யடைந்தனர்.

எம்பெருமான் பிராட்டி யிவர்களின் திருக்கலியாணமகோற்சவத்தைக்கண்ட அக்காசியாரண்ணிய வாசிகள் யாவரும் அவர்களருளால் சிறிதும் ரோகமின்றி சுகமே வாழ்ந்து வந்தனர். அப்பொழுது ஏலாளகாம்பாள் சுவாமியை நோக்கி "சுவாமி! நம்மிருவர்களையும் இக்ஷேத்திரத்தில் எவர்கள் தரிசித்து இப்புஷ்கரணியில் மூழ்கின்றனரோ அவர்களுடைய ஸர்வ பாபங்களும் நீங்கி, மனோபீஷ்டமும் நிறைவேறும் வண்ணம் அனுக்கிரகிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தனள். கிருபாநிதியாகிய சிவபெருமான்



அப்படியே அனுக்கிரகித்துவிட்டு, தேவிக்குச் சகிகளாயிருந்த ஸப்த மாதர்களையும் கிழக்குக் கோபுர வாயிலுக்கதிகாரிகளாகவும், பலவானும், சத்துருக்களுக்குப் பயங்கரமாயிருப்பவருமான வீரபத்திரர் ஐயனார் இவர்களை தெற்குக் கோபுரவாயிலுக்குச் சமீபத்தில் இருக்கச்செய்து தன் பிராட்டியின் கையைப் பிடித்துக்கொண்டு அந்தப்புரம் சென்று, தேவர்களும் முனிவர்களும் ஸதா வணங்கி நிற்கப்பெற்ற திருவடிகளையுடையவராய் விளங்கி வருகின்றார் அன்றியும் ஆங்கிருந்துகொண்டே அடியார்களுக்குத் தர்மார்த்த காமமோக்ஷங்களைக் கொடுத்து வருகின்றார்.

சிவபெருமான் அம்பிகையை ஏலாளகேயென்றழைத்த பெயரே இப்பொழுதும் விளங்கி வருகின்றது. அன்றியும் அவரது பாகத்தைவிட்டு வந்ததேவிக்குச் சிவபெருமான் உத்தரவால் பாகவியோகை என்னும் நாமம் வழங்கி வருகின்றது. ஓ சனத்குமாரரே! கேளும், பரப்பிரம்மத்தின் பாரியும் தக்ஷிணாமூர்த்திரூபிணியுமான அவ்வம்பிகை நம்மைத் தரிசிப்பவர்களுக்கு, பதினான்கு உலகங்களிலுள்ள க்ஷேத்திரங்களனைத்தையும் தரிசித்த பலனைக்காட்டிலும் விசேஷமான பலனைக் கொடுப்பேனென்று சிவபெருமானிடமிருந்து வரத்தைப்பெற்றிருக்கிறாள். அது முதல் அப்பிராட்டியார் தெற்கு முகமாக இருந்துகொண்டு உலகங்களுக்கு நன்மையைச் செய்து வருகின்றாள்.

எந்தக்காலத்தில் சிவபெருமானின் கலியாண நிமித்தம் மண்டபங்கட்டப்பட்டதோ அது முதல் அந்த ஸ்ரீவிசாலமென்ற க்ஷேத்திரத்திற்குத் திருமணமங்கலமென்ற திருநாமம் வழங்கிவருகின்றது. அவ்விடத்தில் கௌரியால் பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பூஜிக்கப்பட்ட லிங்கத்திற்குக் கௌரீசர் என்றுபெயர், பார்வதியின் கரத்திலிருந்து விழுந்துடைந்த தங்கக்குடத்திலிருந்து உண்டான தீர்த்தத்திற்கு பாசமோக்ஷம் என்னும் பிரசித்தமான நாமம் வழங்கி வருகின்றது. அது மிகுந்த புண்ணியமும் தபமும் சிறந்ததாக விளங்குகின்றது. அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சம்புவும் பசுபதியுமாகிய சிவபெருமா

னைத் தரிசிப்பவர்கள், ஸகல பாபங்களினின்றும் விடுபட்டவராகி
பிரம்ம ஞானத்தைப்பெற்று முடிவில் மோக்ஷத்தை யடைவர்.
அத்தீர்த்தத்திற்கு மேற்புறத்தில் ஸர்வஸித்தியைக் கொடுப்பதும்
மிகச்சிறந்ததுமான ஓமகுண்டமென்னும் ஒரு தீர்த்தமிருக்கின்
றது மங்களத்தைக்கொடுக்கும் அவ்வோம குண்டத்தில் எவன்
ஸ்நாநஞ்செய்கின்றானோ அவன் இரணரோகத்தினின்றும் விடுப
ட்டவனாகித் தன் மனோபீஷ்டத்தையும் பெறுகின்றான். ஸ்ரீ வி
சாலமென்னும் க்ஷேத்திரத்தையும் மனிதர்களுக் கிஷ்டத்தையு
மங்களத்தையும் கொடுப்பதுமான அத்தீர்த்தங்களையும் தரிசனஞ்
செய்பவர்கள் ஸகல ஸித்திகளையும் பெறுவார்கள். அவ்விடத்
தில் பரமேசுவரனது கலியாண முதற்கொண்டு பிராமணர்கள்
வஸித்து வருகின்றனர்.

மகாமேருவை வில்லாகவுடைய பரமசிவனுடைய இக்க
லியாண மகோற்சவம் மிகவும் புண்ணியகரமானதாகையால் இச்
சரித்திரத்தைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் மனோபீஷ்டத்
தையடைந்து சுகமாய் வாழ்வார்கள்.

# பதினான்காவது அத்தியாயம்.

## மகாபிரளயம் உண்டானது.

நந்திகேசுவரரைப் பார்த்து ஸனத்குமாரர் சொல்லுகின்
றார் " ஸர்வஞ்ஞனும் கிருபாமூர்த்தியுமான பிரபுவே! தேவரீர்
மிக்ககருணையுடன் கூறிய சரித்திரங்களைக்கேட்டுப் பரமானந்த
மடைந்தேன். ஆயினும் பக்தராகிய அமுதோகமந்திரி முக்திய
டைந்த சரித்திரத்தைச் சொல்லியருளவேண்டுகிறேன் " என்று
வணங்கிப்பிரார்த்திக்க, நந்திகேசுவரர் சொல்லத் தொடங்கினார்.



" ஸனத்குமாரரே! முன்னொருகாலத்தில் மகாபயங்கர
மான ஓர் பெரும் பிரளயமுண்டாகப் பதினான்கு லோகங்களி
லுமுள்ள தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள், பசு பக்ஷி மிருகங்
கள், முதலிய ஸ்தாவர சங்கமங்கள் யாவும் அழிந்துபோய் விட்
டன. எஞ்சிநின்றவர் காசியாரணியாதிபதியாகிய சிவபெருமான்
ஒருவரே யாவர் அவரது வாசஸ்தலமாகிய காசியாரண்ணியமா
த்திரம் நாசத்தையடையவில்லை. அன்றியும் சர்வவல்லமை பொ
ருந்திய பரமேசுவரன் அக்காசியாரணியமத்தியில் நின்று ஆநந்த
நர்த்தனமாடிக் கொண்டும், ஜலத்தின் மத்தியில் சயனித்துக்கொ
ண்டும், பரமாநந்தத்துடன் விளங்கிவந்தார். அக்ஷேத்திரமானது
ஆகாசமத்தியில் மேகத்தினால் மறைக்கப்பட்ட சந்திரன்போலும்
ஸமுத்திர நடுவில் அசைவற்றுநிற்கும் ஓர் கப்பல்போலும் காண
ப்பட்டது. அதனைச் சுற்றி வீசிக்கொண்டு நின்ற அலைகளோடு
கூடிய ஸமுத்திரமானது அக்ஷேத்திரத்தின் மகிமையைப்பிறருக்
கறிவிக்க வந்ததோ என்னும்படி தோற்றிற்று. உலகமெல்லாம்
இந்நீர்ப்பெருக்கினால் அழிந்து கிடக்க, அந்நீரின் செழுமையால்
காசியாரணியம் முழுமையும் மிகவும் செழிப்புற்றோங்கியது பல
வித விருக்ஷங்கள் கொடிகள் புஷ்பங்கனிவைகளாலும், சிம்மம்,
புலி, மான முதலிய மிருகங்களாலும், பலவித வர்ணங்களோடு
கூடிய பக்ஷிகளாலும், தருக்களாலும் நிரப்பப்பட்ட சோலைகளால்,
சிவபெருமானது லிங்கத்திற்கு நிழல் கொடுக்கப்பட்டு அழகாக
விளங்கிவந்தன திருவிளையாடல்களில் மிக்கப் பிரியரான சிவ
பெருமானினருளால், அவரது ஆலயமும் கோபுரங்களும் பிரள
யத்திற்கு இரையாக, மிஞ்சிநின்றது அவரது லிங்கமொன்றே
யாகும். சிம்மம் முதலிய மிருகங்களும், கருடன் முதலிய பக்ஷி
களும், சர்ப்பம் கறையான் முதலிய ஊர்வனவும் சிவபிரானைப்
பூஜித்து வந்தன. கறையான்கள் சிவபெருமான் மீதிருந்த விசே
ஷபக்தியால் அதைச் சுற்றிலும் புற்றெழுப்பிப் பூஜித்து வந்தன.
ஸர்ப்பங்களும் மிகுந்த பக்தியுடன் அப்புற்றுக்குள் நுழைந்து
பரமேசனை வணங்கி வந்தன. யானைகளும், சிம்மங்களும், தினந்
தோறும் அப்புற்றினருகில் வந்து சிவபெருமானைத் தொழுது

சென்றன" என்று நந்திகேசர் சொல்லச் சனத்குமாரர் "பிரபுவே வாயில்லா ஜீவன்கள் சிவலிங்கத்தைப் பூஜித்ததனால் யாது பயனை யடைந்தன? அதைச் சற்றுக் கூறவேண்டும்" என்று கேட்டனர்.

அதற்கு நந்திகேசுவரர் "சனத்குமாரரே! கேளும், பூர்வகாலத்தில் காலநேமி என்னுமோரசுரன் உலகங்களுக்குத் தீமையே புரிந்து வந்தான். அதனைப் பொறுக்கமுடியாத தேவர்கள் விஷ்ணுவினிடஞ்சென்று முறையிட அவர் மகா கோபத்துடன் கிளம்பி அவ்வசுரனை வதைத்தனர். அக்கோப வெறியால் ஒன்றும் விளங்காமல் தன்னைத் துதித்து நிற்கும் தேவர்களையே எதிர்கக வாரம்பித்தனர். அச்சமயத்தில் இன்னது செய்வதென்றறியாத இந்திரன் முதலிய தேவர்கள் விற்பிடித்தகையையுடைய மகாவிஷ்ணுவின் முன்னிற்க முடியாமல் நடுநடுங்கி, கறையான்களிடஞ் சென்று "கறையான்களே! பெரிய வில்லையுடைய விஷ்ணுவானவர் எங்களுடைய சரீரமுழுமையும் அம்புகளால் புண்படுத்த, நாங்கள் வலிபொறுக்க மாட்டாமல் இவ்விடம் ஓடிவந்தோம் அவர் எங்கள் வரவையெதிர் பார்த்துக்கொண்டு, பூமியில் வில்லை ஊன்றி அதன் நுனியில் தலையை வைத்துக்கொண்டு, ஒரு காலால் நின்று நித்திரை செய்கின்றார் ஆகையால், உங்கள ரூபத்தை எடுத்துக்கொண்டு அவரது வில்லின் நாணையறுக்க வெண்ணங்கொண்டோம்" என்று சொல்ல அவைகள் அத்தேவர்களைப்பார்த்து "தேவர்களே! நாங்கள் சிவபெருமானைப் பூஜித்து வருபவர்கள் ஆகையால் எங்கள் வேஷம் பூண்டு நீங்கள் அக்காரியத்தைச் செய்வதால் எங்களுக்க பகீர்த்தியுண்டாகும். ஆயினும் நீங்கள் மிகுந்த ஆபத்திலிருப்பதாகக்காண்கிறபடியால், எங்களுக்கபகீர்த்தி யுண்டாயினும், உங்கள் வேண்டுகோளுக்கிணங்குகின்றோம். ஆகையால், எங்கள் முகத்தினால் பூமியில் எங்கு குழிதோண்டுகின்றோமோ அங்கு அமுதம் உண்டாகுமாறு வரமளிக்கவேண்டும்" என்று வேண்ட, அவ்வண்ணமே தேவர்களும் வரமளித்துப் பின்பு தாமும் அவர்கள் ரூபங்கொண்டு, மெதுவாகச்சென்று அம்மகாவிஷ்ணுவின் வில்லின் நாணை அறுத்து விட்



டனர். இவ்விதம் அறுபட்ட வில்லானது மேலே கிளம்பும்போது அது விஷ்ணுவின் சிரத்தை அறுத்து உயரத்தூக்கிச் சென்று கிழக்குத்திக்கில் வீழ்த்திவிட்டது இவ்விஷயம் மகா ஆச்சரியத்தைக் கொடுக்கத்தக்கது. அச்சிரசானது யாகத்திற்குரிய மகாவீரமென்னும் கர்மபாத்திரமாகிவிட்டது.

இவ்விஷயத்தையறிந்த மகாலக்ஷ்மியானவள் மிகுந்த துக்கத்தையடைந்து தக்ஷிணாமூர்த்தியிடம் வந்து முறையிட்டு தன் நாதனுக்குயிர் உண்டாக வேண்டுமென்று முறையிட, அவர் "லக்ஷ்மி! நீ விஷ்ணுவின் சிரத்தை அவரது உடலுடன் சேர்த்து வைப்பாயானால் உன் கோரிக்கை நிறைவேறும்," என்று வரமளித்தார். அதனைக்கேட்டு மகா சந்தோஷத்துடன் ஸ்ரீ தேவி விஷ்ணுவின் சிரசை யெடுத்து அவரது உடலில் அமைக்க அவர் முன்போல எழுந்துவிட்டனர் பிறகு லக்ஷ்மியால் பூஜிக்கப்பட்ட அந்த தக்ஷிணாமூர்த்தியை மகா விஷ்ணு அநேகவித உபசாரங்களால் பூஜித்து அவரது அனுக்கிரகததால் ஆறு புத்திரர்களை அடைந்தனர். பின்புசம்பத்துக்களைக் கொடுக்கப்பட்ட லக்ஷ்மீதேவியானவள் விஷ்ணுவின் நிமித்தம் கமலாலயத்தில் நின்று தவம் புரிந்து பரமசிவனிடமிருந்து சில வரத்தைப் பெற்றனள். இச்சரித்திரத்தை கமலாலய புராணத்தில் விரிவாய்க் கூறுகின்றேன் என்று சூதர் சொல்லியருளினர். பிறகு, தேவர்களிடமிருந்து வரம்பெற்ற கறையான்கள் தன் வாயிலிருந்துண்டாகும் அமிர்தாரையால் அச்சிவலிங்கத்தைச் சுற்றி செய்திருக்கும் புற்றை மறுபடியும் மிகவும் பலமாகச் செய்தன என்று சொல்லப்பட்ட அவரது ஆச்சரிய வசனங்களைக் கேட்டு சந்தோஷத்தை அடைந்திருக்கும் ரிஷிகளுக்கு மறுபடியும் சூதர்சொல்லத் தொடங்கினர்.

"முனிவர்களே! மிகவும் பலமாகச் செய்யப்பட்ட புற்றினுளிருந்த சிவலிங்கத்தைப் பூஜிக்கவெண்ணி, அப்புற்றைப் பலவிதமாகப் பெயர்க்க வெண்ணியும் அது பெயர்க்கப்படாமல், அதனையே தெய்வமாகப் பூஜித்து வந்தன. அதன்மேல் காய்கனிகளைத்தரும் மரங்களும் கொடிகளும் கிளம்பின. அன்றியும் லிங

சத்தின் முன் பாகத்தில் பாதாளத்திலிருந்துகொண்டு தேவி சுவாமியினிடம் வருவதும சுவாமி அம்பாளிடம் போவதுமாக இருந்தனர். இவ்விதம் பிரளயகாலத்தில் சிவபெருமான் காசியாரண்ணியத்தில் பார்வதியாலும், கலையான், மிருகங்கள் முதலியவைகளாலும் பூஜிக்கப்பட்டவராய் வெகுகாலம் ஆனந்த நிருத்தனம் செய்து அந்நடனத்தை விட்டுச் சுகமாக விளங்கி வந்தார். இவ்விதம் நெடுநாளானபிறகு கற்பவிகற்பத்துடன்கூடிய பிரளயகாலமும் முடிவடைந்தது, பிறகு கிருபாநிதியான பரமசிவனும் கிருதயுகத்தை யுண்டு பண்ணினர் அதன்பின் முக்கண்ணனாகிய பரமேசன் உலகசிருஷ்டிசெய்ய வெண்ணங்கொண்டு, தன்வலது பக்கத்தினின்று பிரம்மதேவனையும், இடதுபக்கத்திலிருந்து விஷ்ணுவையும், சிருஷ்டித்தனர்.

குணத்தைக்கடந்த அச்சிவபெருமான் தமோ குணத்தைத் தானே வகித்துக்கொண்டு, பிரம்மதேவனுக்கு ரஜோ குணத்தையும், விஷ்ணுவுக்குச் சத்துவகுணத்தையும், கொடுத்து அவரவர்கள் தொழிலை அவரவர்கள் உடனே செய்யக் கடவரென்றும் உத்தரவிட்டனர் பிரமமதேவன் மனதினாலேயே மரீசி முதலான பத்து பிரமாக்களையுண்டு பண்ணினார். மேலும் அவர் தன் வலக்கட்டை விரலிலிருந்து தக்கனை யுண்டு பண்ணினார்; முகத்திலிருந்து பிராமணர்களையும், கைகளினின்று க்ஷத்திரியர்களையும், தொடைகளிலிருந்து வைசியர்களையும், பாதங்களினின்று சூத்திரர்களையும் சிருஷ்டித்தார். மரீசியிடத்திலிருந்து காசிபர் உண்டாயினார் அக்காசிபரிடத்திலிருந்து தேவர்கள் அசுரர்கள் ஸர்ப்பங்கள் வாயுக்கள், கழுகுகள், கந்தருவர்கள், அப்ஸர ஸ்திரீகள் முதலான யாவரும் உண்டாயினர் மனுவிடத்திலிருந்து மனிதர்கள் உண்டானார்கள்; இவ்வண்ணம் நானாவித ஜாதிகளும் உண்டாகி, அவரவர்களும் தங்கள் தங்களுக்குரிய கருமங்களையும் நடத்தி வந்தனர். அத்திரி மகரிஷியினிடமிருந்து ரிஷிகளுக்குரிய தருமங்களும், க்ஷத்திரியர்களுக்குரிய தருமங்களும் வெளியாயின. புலத்தியர், புலகரிவர்களிடத்திலிருந்து யக்ஷர்களும் ராக்ஷசர்களும் உண்டானார்கள். ஆங்கிரசரெனும் முனிவரிடமிருந்து உசத்தியர் பிரகஸ்



பதி முதலியோருண்டாயினர். பிருகுவினிடத்திலிருந்து அக்னியும், வசிஷ்டர் முதலான சிலமுனி சிரேஷ்டர்களிடமிருந்து. சியவனர் முதலியோர்களும் உண்டாயினர்.

இவ்விதமாகவே பிரம்மதேவர் தன் புத்திரர்கள் மூலமாய் ஸகல ஜீவராசிகளையும் உண்டாக்கி, உலகங்களை நிரப்பினைத்தனர். மகாவிஷ்ணு பிருகு மகரிஷியின் புத்திரியான கமலையை விவாகஞ்செய்துகொண்டு மச்சம்முதலிய உருவங்களை யெடுத்து உலகங்களைக் காப்பாற்றி வந்தனர். பிரம்மதேவனால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகத்திற்கு, சிவபெருமானின் ஆஞ்ஞையால் வெகு காலமாயிருக்கின்ற காசியாரணியம் உபமானமாகவிருந்தது.

முனிசிரேஷ்டர்களே! இவ்விதமாகத்தான் கலியுகத்திற்கு முன் உலகம் சிருஷ்டிக்கப்பட்டது. சிலகாலம் சென்றபிறகு பூமியில் தர்மிஷ்டனும் மகாபுத்திமானுமாகிய முசுகுந்தன் என்னும் ஓர் சக்கிரவர்த்தி அவதரித்தான். அவ்வரசனுக்கு சிவபக்தியிற் சிறந்தவரும், மிகுந்த நுட்பம் பொருந்தியவருமான அமுதோகரென்னும் ஓர் மந்திரியிருந்தனர். அம்மந்திரியினுதவியால் முசுகுந்தமகாராஜன் இவ்வுலகத்தைச் சிறிதும் நீதி தவறாமல் பரிபாலித்து வந்தான். அக்காலத்தில் சுபமாயிருக்கின்ற காசியாரணிய க்ஷேத்திரத்தில் ஓர் வேடன் தன் ஸ்திரீயுடன் காய்கனிகளையும் மிருகங்களையும் புசித்துக்கொண்டு, மனிதசஞ்சாரமில்லாத அக்காட்டில் வசித்து வந்தான். ஓர் நாள் அவர்கள் தங்களாகார நிமித்தம் கிழங்குகளைப் பெயர்த்துக்கொண்டே வரும்போது, முடிவில் சிவலிங்கத்தை மூடிக்கொண்டிருக்கும் ஓர் புற்றுக்கருகில் வந்து சேர்ந்தனர். அப்புற்றின் அடிப்பாகத்திலிருந்து ஒரு கொடிவளர்ந்து அதனைச் சுற்றிக்கொண்டிருந்தது. அதனுடைய கிழங்கையெடுக்க எண்ணி தன் கையிலிருந்த ஓர் விதமான ஆயுதத்தால் புற்றினடிப் பாகத்தை மிகவும் சிரமத்துடன் வெகு ஆழமாக வெட்டியபோது, அவ்வெட்டானது அப்புற்றினுள்ளிருக்கும் சிவலிங்கத்தின் மீதுபட அதிலிருந்து பயங்கரமான கா

ற்றும் கொடிய தீப்பொறிகளும், கம்பீரமான சப்தமும் இரத்தப் பிரவாகமு முண்டாயின, அத்தருணத்தில் திடீரென்று அவ்வே டர்களின் நேத்திரங்கள் அவிந்து போயின, பிறகு அங்குள்ள ஜந்துக்களுக்கும் அவ்வெட்டினாலுண்டாம் இரணவேதனையினால் பொறுக்க முடியாத துன்பமுண்டாகி அவைகளனைத்தும் கூக்கு ரலிட்டன. அது போலவே அவ்வேடனும் வேடஸ்திரீயும் இர ணவேதனையால் கதறிக்கொண்டு, வெளியேற அவர்களுக்கு வழி தெரியாமல் இன்னது செய்வதென்று விளங்காமல் அவ்விடத்தி லேயே சுற்றிக்கொண்டிருந்தார்கள்.

புண்ணியசீலர்களாகிய ஓ முனிவர்களே! இந்தப்பிரகாரம் சிலாதபுத்ரராகிய நந்திகேசுவரர் சொல்லிவிட்டு ஆநந்தத்தால் கண்ணீர் பெருக சிவபெருமானைத்துதித்துப் பின்னும சில சரித் திரங்களைச் சொல்ல வாரம்பித்தனர்.

# பதினைந்தாம் அத்தியாயம்.

## அமுதோக மந்திரி முக்தி பெற்றது.

நந்திகேசுவரர் சொல்லுகின்றார்:— "சனத்குமாரரே! பூர்வகாலத்தில் மகாபலவானான சூரபத்மனென்னும் ஓர் அசுரன் இருந்தான். அவ்வசுரனைச் சுப்பிரமணியக்கடவுள் சங்கரித்து விட்டனர். அக்காலத்தில் சூரபத்மனுக்கு யாகத்திலும் பவித்த வனும், தேவீ பூஜையில் சிரத்தையுடையவனும், ஹிரணியாசுர னென்றும் நாமமுடைய மைந்தனொருவனிருந்தான். அவ்வசுரன் தன் தகப்பன் இறந்துபோனவுடன் சுப்பிரமணியரிடமிருந்த பய த்தினால் மீனுருவமெடுத்து சமுத்திரத்தில் மூழ்கி வெகுகாலம் வா ழ்ந்துவந்தான். பிறகு சிறிது தைரியங்கொண்டு வெளிக்கிளம்பி



தனக்கு நண்பரான பல அசுரர்களைச் சேர்த்துக்கொண்டு யுத்த
சன்னத்தனாய் தேவலோகம்சென்று தேவேந்திரன் முதலியோரை
விரட்டியடித்தான்.

அச்சமயத்தில் பூமியில் மிகவும் சிறந்தவனும் பலவானு
யும் தருமநெறி தவறாமல் நடப்பவனும், நீதிமானும், புத்தியில்
சிறந்தவனும், சிவபூஜாதுரந்தரனுமிருந்த முசுகுந்த மகாரா
ஜன் அரசாட்சி நடத்தி வந்தான். ஹிரணியாசுரனால் துரத்தப்
பட்ட தேவேந்திரன் முதலியோர் அம்முசுகுந்த ராஜனிடம் வந்து
தங்களுக்குதவிபுரிந்து அரக்கர்களை யொழிக்கவேண்டுமென்று
பிரார்த்திக்க, அம்மன்னனும் தன் இலக்ஷக்கணக்கான படைகளு
டன் தேவலோகஞ் சென்று அசுரர்களுடன் கடும்போர் புரிந்து
முடிவில் ஹிரணியாசுரனையும் சங்கரித்து விட்டனன். அப்பொ
ழுது இந்திரனுக்குண்டான சந்தோஷத்திற்களவேயில்லை. அவன்
முசுகுந்தனை நோக்கி "இராஜாதி ராஜனே! இப்பொழுது என்
னையும் என் மனைவியையுந்தவிர மற்றப் பொருள்கள் யாவையும்
தங்களுக்குத் தத்தம் செய்து விட்டேன், ஆகையால் அவைகளை
த் தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமெனப்பிரார்த்தித்தான்.
முசுகுந்தனும் அவைகளையும் தியாகராஜ மூர்த்தியையும் பெற்றுக்
கொண்டு, மகா சந்தோஷத்துடன் தன் பரிவாரங்கள் சூழச்சுவர்
ணமயமான ஓர் தேரிலேறிக்கொண்டு தன்னாட்டை நோக்கிப்புறப்
பட்டான். அவ்விரதம் ஆகாய மார்க்கத்தில் செல்லும்பொழுது
காசியாரணிய மார்க்கமாய்ப்போக, அவ்விடத்தில் சிவபெருமானு
டைய ஆக்ஞையால் அது அசையாமல் நின்றுவிட்டது. உடனே
மதியிற் சிறந்த அம்மன்னன் தன் மந்திரியாகிய அமுதோகரைப்
பார்த்து" மந்திரி! பதினான்கு உலகங்களிலும் சிறிதும் தடையின்
றிச் செல்லும் உன்னுடைய இவ்விரதமானது இங்கு நின்றுவிட்
டதே! இப்படிச்செய்தவன் யாராயிருக்கலாம். வெகு ஆச்சரி
யமாக விருக்கின்றது" என்று சொல்ல, அதனைக்கேட்டு நீதிசாஸ்
திரத்தில் சிறந்தவரும் சிவபக்தியுடையவருமான அம்மந்திரி, மன்
னனை வணங்கி "சுவாமி! பதினான்கு உலகங்களிலும் தங்கள் இர
தத்தை நிறுத்த வல்லவனில்லை யென்பதுண்மையே! ஆனதால்

இப்பொழுது தெய்வத் தன்மையாலேயே இது நின்றிருக்கவேண்டும். ஆகையால் நாம் அத்தெய்வத்தையே பிரார்த்திக்க வேண்டும்" என்று மறுமொழி கூறினர்.

அதனைக்கேட்ட புத்திமானான அவ்வரசன் அப்படித் தானிருக்கவேண்டுமென்று தனக்குள்ளேயே தீர்மானித்து, சூரர்கள் போன்ற தனது தூதர்களை வரவழைத்து அவர்களை நோக்கி "தூதர்களே! பதினான்கு உலகங்களிலும் என் இரதத்தைத் தடுப்பவன் எவனுமில்லையென்பதை நீங்களறிவீர்கள். ஆதலால் இவ்விரதம் தெய்வச் செயலாலேயே இங்கே நின்றிருக்க வேண்டுமென்றே அனுமானிக்க வேண்டியிருக்கிறது. ஆதலால் நீங்கள் உடனே கீழே இறங்கி இவ்வனத்துள் நுழைந்து மனிதர்களும் மிருகங்களும் நுழைய முடியாத இடங்களிலும் சென்று, ஏதேனும் விசேஷமுண்டானால் பார்த்து வாருங்கள்" என்று சொல்லியனுப்பினன். அரசனுத்திரவைச் சிரமேற்கொண்ட அத்தூதர்களும் தங்கள் பிரம்பைக் கையில் பிடித்துக்கொண்டு காசிபாரணியத்தின் மத்தியில் பிரவேசித்தனர். மரக்கூட்டங்களாலடர்ந்த அக்காட்டில் நான்கு பக்கங்களிலும் சுற்றிப்பார்த்துக் கொண்டு வரும்போது, ஓரிடத்தில் ஒரு வேடனும் ஒரு வேட ஸ்திரீயும், கண்களினின்று பெருகும் ஜலத்தால் உடம்பு முழுமையும் நனைந்து, ஆயுதத்தாலடிபட்ட தன் தேகத்திலுண்டானவிரண உபாதியாலும் கண்கெட்ட கஷ்டத்தாலும் மிகவும் வருத்தத்தையுமடைந்து, 'கோ' வென்றலறிக்கொண்டு நிற்கக் கண்டனர். மேலும் வெட்டுண்டு இரத்தம் பெருகும் ஓர் பெரும்புற்றையும் பார்த்தனர். இவைகளைக்கண்டு மிகவும் அஞ்சியவர்களாய் மேலே சென்று தன் எஜமானனை வணங்கி "பிரபுவே! தக்களுத்தரவின் பிரகாரம் நாங்கள் இக்கானகத்திலெங்கும் அலைந்து திரிந்து வரும்போது ஓரிடத்தில் இருகண்களையுமிழந்தவரும், இரத்தத்தால் நனைந்த மேனியையுடையவரும், கண்ணீர் சொரிந்துகொண்டிருப்பவருமான ஒரு வேடனையும் வேட ஸ்திரீயையும், அவர்களருகில் இரத்தம் பெருகிக்கொண்டிருக்கும் ஓர் புற்றையுங் கண்டு, மகா ஆச்சரியங்கொண்டு தங்களிடம் ஓடி வந்தோம்" என்று கூறினர்.



அம்மொழியைக் கேட்ட முசுகுந்தன் மிகுந்த ஆச்சரியத்துடன் கீழேயிறங்கி தூதர்கள் காண்பித்த விடம் சென்று சகலமும் அவர்கள்மொழிந்தபடியேயிருக்கக்கண்டான். உடனே அவன் கண்ணில்லாத அவ்விருவர்களையும் நோக்கி "வேடர்களே! நீங்கள் துக்கத்துடன் கண்ணீர் சொரிந்து கதறுவதற்கும், கண்ணில்லாமற் போனமைக்கும் காரணமென்ன? அனறியும் இப்புற்றினின்று இரத்தம் பிரவாகமாக வோடக் காரணம் யாது? இவைகளையறியாதவெனக்குச் சற்று சவிஸ்தாரமாகக் கூறுவாய்" என்றுகேட்க, அவ்வேடன் "மனிதர்களில்லாத இக்காட்டில் என்னுடன் சம்பாஷிக்கும் நீர்யார்? இதனைக் கேட்பதாலுமக்காவதென்ன?" என்று மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டான். அதற்கு மன்னன் "வேடனே! யான் இவ்வுலகத்தை யாளும் முசுகுந்தனென்போன். வேகமாகவும் எங்கும் தடையின்றிச் செல்லும் என்னுடைய இரதம் இவ்விடத்தில் வந்தவுடன் அசையாமல் நின்றுவிட்டது, அது தெய்வ சங்கற்பத்தாலேயே ஏற்பட்டதென்று மதித்து இவ்விடம் வந்து பார்க்கும்போது உன்னைக் கண்டேன். ஆகையால் நான் கேட்கும் இக்கேள்விகளுக்கு ஏற்ற மறுமொழிகூற வேண்டுமெனக் கேட்க, அவ்வேடன் பயபக்தியுடன் மன்னனை வணங்கி, தன் பாரியுடன் துக்கத்தால் கதறிக்கொண்டு, கிருபாளுவும், தர்மிஷ்டனும், தேவர்களால் நமஸ்கரிக்கப்பட்டவனுமாகிய அவ்வரசனை நோக்கி ஐயனே! இப்பொழுது நான் கிருதார்த்தனாக ஆகிவிட்டேனென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் என்னுடைய நேத்திரங்களால் பிரபுவாகிய தங்களைத் தரிசிக்கக்கூடாதவனாகி விட்டேன் என் ஜன்மம் அவ்விஷயத்தில் வீணாயிற்று தங்கள் வசனங்களைக் கேட்டதனாலேயே என் பிறப்பு சாபல்யத்தை யடைந்திருக்குமென்று நினைக்கிறேன் பிரபுவே! கண்களில்லாத எங்களைத் தாங்களே இரக்ஷிக்க வேண்டும். சுவாமி! மனிதர்கள் செய்யும் பாபங்களனைத்தும், அவரவாகள் தங்கள் தங்கள் வாக்கினால் சொல்லிவிட்டால் அவைகள் போய் விடுமென்று சொல்வதை நான் கேட்டிருக்கின்றேன். ஆகையால் இவ்விடத்தில் நடந்த விஷயத்தைச் சொல்லுகின்றேன், கேட்டருள வேண்டும். நாங்கள் இவ்வனத்திலுள்ள காய்

சனிலைத் தின்று உதரபோஷணம் செய்து வருவது வழக்கம், இப்படியிருந்த நாட்களிலோர் நாள், இதோ இருக்கும் இப்புற்றின் மேல் படர்ந்திருந்த ஓர் கொடியின் அடிக்கிழங்கை வெட்டிப் பறிக்கவெண்ணி வெட்டும்போது, அதற்குள்ளிருந்து திடீரென்று ஒருவிதக்காற்றும், சத்தமும், அக்கினிப் பொறிகளுமுண்டாயின அஃதன்றியும் அதனுள்ளிருந்து இரத்தப் பிரவாகம் உண்டாயிற்று. இவைகளைக் கண்டு நாங்கள் மிக்க பீதியடைந்தோம். அத்தருணத்தில் எங்களுடைய இருகண்களும் திடீரென்று தெரியாமற் போயின: கருணைக்கடலாகிய பிரபுவே! இம்மட்டுமே நாங்களறிவோம். ஏழைகளான எங்கள் மீது கிருபை கூர்ந்து எங்களை ரக்ஷிக்கவேண்டும்." என்று இரக்கமொழிகளாற் கூறினன்.

இவ்விஷயங்களைக் கேட்ட மன்னன் மிகவுமாச்சரியமடைந்து, அநாதையான அவ்வேடர்களுக்கு வேண்டியமட்டும் திரவியங்களைக்கொடுத்துப் பின்பு தன் தூதர்களை நோக்கி இப்புற்றை நன்றாய்ப் பறித்துப் பரிசோதியுங்கள்" என்றுத்தரவிட்டான். அதன் படியே அவர்களதனைப் பிரித்துப்பார்க்க ஸர்வ பலன்களையுங் கொடுக்கப்பட்டதும், வேடனடியாலுடைந்து பெருகப்பட்ட இரத்தத்துடன் கூடிய முடியையுடையதும், பரிசுத்தமானதும், சுபமானதுமான ஓர் சிவலிங்கத்தைக் கண்டு, மகா ஆச்சரியத்துடன், அதனைத்தங்கமயமான புஷ்பங்களைக் கொண்டு பூஜித்து, திவ்யாபிஷேகங்கள் செய்வித்தான். பின்பு அங்கு ஒரு கோவிலைக்கட்டவேண்டுமென்றெண்ணி தன் மந்திரியான அமுதோகரைப்பார்த்து" மந்திரியே! இச்சிவபெருமானுக்கு அநேக கோபுரங்கள் மண்டபங்கள் பிரகாரங்கள் முதலியவைகளுடன் கூடின ஓர் ஆலயத்தைச் சீக்கிரம் நிருமித்து வாரும் என்றுத்தரவிட்டு, அதற்கு வேண்டிய திரவியங்களையும் கொடுத்துத் தன் இரதத்தின் மேலேறி, தேவர்களால் ஸ்துதிக்கப் பெற்றவனுகத் தன்னிருப்பிடமான திருவாரூரை யடைந்தான்.

அப்பொழுது சிவபக்தியிற்சிறந்த அமுதோகமந்திரியானவர், தனக்குச் சிவன்கோவில் திருப்பணி செய்ய வேண்டுமென்று



மன்னன் கட்டளையிட்டது, தன் நற்காலப்பயனென்று கருதி மிகவும் உத்ஸாகத்துடன் அவ்வனத்திலுள்ள முட்செடிகள் விருக்ஷங்கள் முதலியவைகளையழித்து, பூமியைச்சீர்திருத்திச் சமமாகச் செய்து சிற்பசாஸ்திரத்தில் தேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு முன் இருந்ததுபோல் சுவாமி அம்மன் முதலானவர்களுக்கு விமானங்களும், மண்டபங்களும், உயர்ந்த கோபுரங்களும், பெரிய மதில்களும், எழுப்பச்செய்து, மற்றும் செய்யவேண்டிய திருப்பணிவேலைகளைச்செய்து முடித்து, ஆலயத்தைச்சுற்றியுள்ள அமிர்தபுஷ்கரணியையும் மற்றைய தீர்த்தங்களையும் சீர்ப்படுத்தி படிகள் முதலானவைகளும் கட்டி முடித்தனர். பின்பு அவ்வாபத்ஸகாயருக்கு ஐந்துரதங்களையும் விருஷபம் முதலான பலவாகனங்களையும் செய்துவைத்து, ஆலயத்திற்குக் கும்பாபிஷேகமுஞ் செய்வித்தார். பின்பு, தினந்தோறும் ஆறுகாலம் பூஜை நைவேத்தியங்களும், காலாகாலங்களிலாடல் பாடல்களும், வருஷந்தோறும் இரதம் முதலிய மகோற்சவங்களும், நடக்கும்படி ஏற்பாடு செய்து, கோவிலுக்குவேண்டிய ஸ்தானீகர்கள், மணியக்காரர்கள், பரிசாரகர்கள், குருக்கள், தாசிதாசர்கள் முதலிய பலபேர்களை நியமித்தார். மேலும் சுவாமிகளுக்கு அநேகவித ஆபரணங்களும் வஸ்திரங்களும், பூஜாசாமான்களும், பூமிகளும்வாங்கிவைத்தனர். ஓ! சனத்குமாரரே! இவ்வளவெல்லாம், அவர் தன்னுடைய திரவியத்திலிருந்து செய்தனரேயொழிய அரசன் கொடுத்தசெல்வத்தில் சிறிதும் செலவு செய்யவில்லை.

இவ்விதம் மன்னனுத்தரவுப்படி கோயில்திருப்பணிவேலை முழுவதையும்முடித்துவிட்டுதன்சேவகர்களில்ஒருவனையழைத்து சிவபக்திகளிற் சிறந்தவரும், தியாகராஜஸ்வாமிக்குப் பக்தரும், தன் எஜமானுமாகியமுசுகுந்த மகாராஜனுக்கு, அவ்விஷயத்தை யறிவிக்கும்படி உத்தரவிட்டனுப்பினர். அரசனும் சேவகன் கொண்டுவந்த பத்திரிகையைப் படித்துப்பார்த்துமகாசந்தோஷத்தையடைந்து அவ்வாலயத்தைக்கண்டு தரிசிக்க ஆவல்கொண்டு காசியாரணியம் வந்து சேர்ந்தனன். மன்னன் வரும விஷயத்தை முன்னமே ஒற்றர்களாலறிந்த அமுதோகர்மிகுந்த மகிழ்ச்சியுடன்

மகாராஜனை எதிர்கொண்டழைத்துவந்து, சுவர்ணமயமான விமானங்களையும், கோபுரங்களையும், மண்டபங்களையும், மதில்களையும், காண்பித்து, அரசனுக்கு விசேஷமான சந்தோஷத்தை யுண்டுபண்ணினார். பின்பு அரசன் சிவபெருமானையும், அம்பிகையையும், தக்ஷிணாமூர்த்தியையும் கணபதி, சுப்பிரமணியர் முதலிய பரிவாரதேவதைகளையும், தரிசித்து வணங்கிவிட்டு, அச்சிவபெருமானுக்கு வஸ்திராபரணங்களையும் பூமி முதலானவைகளையும் கொடுத்து, அன்னதானம் சுவர்ணதானம முதலான அனேக தானங்களைப் பிராமணர்களுக்குச் செய்து, சிவபெருமானின் ஸந்நிதியிலுள்ள ஓர் மண்டபத்தில் சுகமாக வீற்றிருந்தான்.

அச்சமயத்தில், சிவபக்த சிரோமணியான அமுதோதகர், முன்பு அரசனால் திருப்பணி வேலைக்கென்று கொடுக்கப்பட்ட திரவியங்களனைத்தையும் எடுத்துக்கொண்டு வந்து அவர் முன் வைத்து வணங்கி நின்றார். அதனைப் பார்த்த சக்ரவர்த்தி தன் அமைச்சரை நோக்கி "அமுதோதகரே! முன்பு நான் கொடுத்த பொருளைக் காட்டிலும் அதிகமாகவே இங்கு கொணர்ந்து வைத்தீர்! இஃதென்ன? இப்பொருள்கள் செலவாகாமல் உமக்கு ஆலயத் திருப்பணி வேலைகளெல்லாம் எவ்வாறு நடந்தது? அதை விவரமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டார். சர்வ குணங்களும் பொருந்திய சக்ரவர்த்தியைப் பார்த்து மகாபுத்திமானான அமுதோதகர் "தேவர்களால் வணங்கப்பட்ட பிரபுவே! தங்களுக்கு என்னிடத்தில் கிருபையிருந்தாற் போதுமானது, இத்திரவியங்களாலாவதென்ன? அன்றியும் மிகவும் தெரிந்தவரும் வெகு பராக்கிரமத்திற் சிறந்தவரும், பக்தியில்மேம்பட்டவருமாகிய தங்களுடைய திருநாமத்தைச் சொல்லிக் கொண்டும், தங்களுடைய கிருபையை முன்னிட்டுக் கொண்டுமிருக்கின்ற அடியேனுக்கு ஆகாதகாரியம் என்னவிருக்கின்றது" என்று விடையளித்தனர். அதைக்கேட்டு அரசன் "மந்திரி! அஃதிருக்கட்டும். யாருடைய பொருளைக்கொண்டு திருப்பணி செய்தீர். அதைச்சொல்லும்" என, மந்திரி "மகாராஜாவே! தங்களுடைய கிருபையால் நான் சம்பாதித்த என்னுடைய திரவியத்தைக்கொண்டே இவ்வாலயத்



திருப்பணிகளைச் செய்து முடித்தேன்" என்று பணிவாகப் பதிலளித்தார்.

அதைக்கேட்ட அரசன் "மந்திரீ! நீர் எப்பொழுதும் சுயகாரியங்களைச் செவ்வையாய் நடத்திக்கொள்வதில் சமர்த்தராயிருக்கின்றீர்; நீர் இப்பொழுது செய்துள்ள காரியத்தை நினைக்க வெகு ஆச்சரியமாயிருக்கின்றது. நான் கொடுத்திருக்கும் செல்வத்தை வைத்துவிட்டு உம்மால் சம்பாதிக்கப்பட்ட பொருளைக்கொண்டு சிவாலயத் திருப்பணியைச் செய்திருக்கின்றீர். அதனால் யாதொருதோஷமுமில்லை. ஆகையால் இப்பொழுது நீர் என்னுடைய ஆக்ஞையைத் தவறாமல் நடப்பவராயிருந்தால், நீர் செய்துள்ள இச்சிவன்கோவில் திருப்பணி தருமத்தை உதகபூர்வமாக எனக்குத் தத்தம் செய்வீர்" என்றுசொல்ல, உடனே மந்திரி "சுவாமி! தங்களுத்தரவை என்றும் மீறாமல் நடப்பவனாயிருப்பினும் இச்சிவதர்மத்தைத் தங்களுக்குக்கொடுக்க மனமில்லாதவனாயிருக்கின்றேன் பிரபுவே! மற்றைய விஷயங்களில் எவ்வித ஆக்ஞை செய்யினும் அவைகளைத் தடையின்றிச் செய்வேன்." என்று மிகவும் வணக்கத்துடன் கூறினார்.

(இவ்விதம் சில நேரம் இவ்விருவர்களுக்குள் விவாதம் நடந்தது.) பின்பும் அரசன் அமுதோதகரை நோக்கி "என் பிரியமுள்ள மந்திரியே! உம் தர்மத்திற் பாதியாவது கொடுத்தருளும்" என்றனர். அதற்கு அவர் ஒப்பவில்லை. பின்பு மன்னன் மந்திரியை அன்பரே! மகாபுத்தியுள்ளவரே! ஸர்வ கலியாண குணங்களும் நிறைந்தவரே! மிகுந்த வைராக்கியமுள்ளவரே! சகல தருமங்களையு மறிந்தவரே என்று பலவிதமாகப் புகழ்ந்து பேசி, அவரிடமிருந்து அத்தர்மத்தில், காற்பாகமேனும் அல்லது அரைக்காற்பாகமேனும், அல்லது பத்திலொன்றேனும்; அல்லது நூற்றிலொன்றேனும், அதுவும் முடியாவிடில் ஐந்நூற்றிலொரு பாகமேனும், இன்றேல் ஆயிரத்திலொன்றேனும், அஃதும் முடியாவிடத்து ஓர் அணுவேனும், கொடுக்கவேண்டுமென்று பலமுறையாக மன்றாடிக் கேட்டும், அவ்வமுதோதகர் ஓரேபிடிவாதமாய் முடியாதென்று சாதித்து விட்டார்.

அதன் மேல் மன்னனுக்கு அடங்காக் கோபம் உண்டாகி விட்டது, பற்களைக் கடித்தான், கண்கள் துடிதுடித்தன, உதடுகள் படபடத்தன, மனமோ பதைத்தது, கண்கள் கோபாக்கினியால் ஜொலித்தன. உடனே அவன் கொலையாளிகளாகிய தன் சேவகர்களைக் கூப்பிட்டு "தூதர்களே! இதோ நிற்கும் இவ்வமுதோகன் நமக்குத் துரோகம் செய்து விட்டான். ஆகையால் சத்துருவாகிய இவனை நம்மருகிலிருந்து இழுத்துச் சென்று, சிரச்சேதம் செய்து விடுங்கள்" என்றுஞ் ஞாயித்தான். இவ் விதம் ஆக்ஞாபித்து ஹூங்காரம்செய்து கொண்டிருக்கும் அரசனருகில் சென்று, அமுதோகர் மந்திரித் தொழிலினுடையாளமாய் அவர் தனக்களித்துள்ள மோதிரத்தைத்தன்விரலினின்றுங்கழற்றி அவரது ஆசனத்தின் கீழே வைத்தார்.

அரசனாணையைத் தவிர்க்க முடியாத தூதர்களனைவரும் மந்திரியை மெதுவாக வரவழைத்துக்கொண்டு வெளியேவந்து கண்ணீர் சொரிந்து அவரது பாதங்களில் வீழ்ந்து கதறினார்கள். இவ்விதம் வருந்தும் தூதர்களைக்கண்டு மந்திரி "மகாபாக்கியத்தைப்பெற்ற தூதர்காள்! நீங்கள் இப்பொழுது வருந்துவதால் யாது பயன்? நன்றாகத்தெரிந்தவர்களும் நடுவுநிலை தவறாமலிருக்கின்ற நீங்கள் பிரபுவான மகாராஜாவின் ஆக்ஞையைத் தவறாது நடத்துங்கள்." என்று சொல்லித் தேற்ற, அவர்கள் "பிரபுவே! தங்களுடைய சிரசை நாங்களோ வெட்டுவது? எங்கள் கைகள் எப்படிக் கிளம்பும் எஜமானனாகிய முசுகுந்த மகாராஜாவினிடம் தங்கள் சிரசை வெட்டி விட்டதாகச் சொல்லி விடுகின்றோம் தாங்கள் இஷ்டப்படி எங்காவது சென்று பிழைத்திருங்கள்" என்று தூதர்கள் பலவாறாகச் சொன்னார்கள்.

இவ்விதம் சொன்ன சேவகர்களைப்பார்த்து "தூதர்களே! நீங்கள் இவ்விதம் சொல்லாதீர்கள். சொல்லாதீர்கள். பிரபுவாயிருக்கும் மன்னனுக்குத் துரோகஞ் செய்யாதீர்கள். எஜமானத் துரோகம் செய்கின்றவனை யமன் சித்ரவதை செய்கின்றான். அன்றியும் அவனை நெருப்பினாற் கொளுத்தியும், சாட்டைகளாலடித்தும், ஊசிகளாற் குத்தியும், காய்ந்துகொண்டிருக்கும் எண்ணெக்



கொப்பரையிற் போட்டு வருத்தியும், முதுகில் தூக்கமுடியாதபாரத்தைத் தூக்கிவைத்துத் துன்புறுத்தியும், இன்னும் பலவிதமாகத் துன்பப்படுத்துவான். ஆகையால் நீங்கள் எக்காரணத்தைமுன்னிட்டும் எஜமானத் துரோகம் செய்யாதீர்கள். பிரபுவான மன்னனின் உத்திரவை உடனே செலுத்துங்கள். இவனை எவ்வண்ணம் வதஞ் செய்வதென்று யோஜிக்கின்றீர்களே. அவ்வெண்ணத்தை விட்டுவிடுங்கள். நீங்கள் எனக்கு எப்பொழுதும் நன்மையே செய்பவர்கள். இப்பொழுது செய்யப் புகும் காரியமும் எனக்கு நன்மை விளைப்பதாகும், ஆகலால் மிகவும் நன்மைகளைத் தெரிந்தவர்களான நீங்கள் இந்த உதவியைப் புரியவேண்டும். ஆனாலொன்றுமட்டும் கேட்டுக்கொள்வேன். காசியாரணிய பதியாயும் பிரபுவாயிருக்கும் ஆபத்ஸகாயருடைய சங்கின் சப்தம் எவ்வளவு தூரம்கேட்குமோ, அதற்கப்பாலேயே என்னை வதஞ்செய்யுங்கள் அதுவே யெனக்கு மிகவுமிதமாகும். இஃதொன்றே என் வேண்டுகோள். இனிக்காலதாமதஞ் செய்ய வேண்டாம்" என்று கூறினார் மகாபுத்திமானாகிய அமுதோகர்.

இம்மொழிகளைக் கேட்டு வேறொன்றும் செய்யமுடியாதவர்களாகத் அத்தூதர்கள் அவரை அவ்வாலயத்தினின்று ஒரு நாழிகை தூரம் கிழக்குத்திசையை நோக்கி அழைத்துச் சென்றனர். அங்குசென்றதும் அமுதோகர் தன்னை வெட்டுவதற்கேதுவாகத் தன் சரீரத்தை வளைத்துக்கொண்டு சந்தோஷசித்தராய் நின்றனர். தூதர்கள் அவரை வெட்டமுயன்றும் முடியாதவர்களாக நின்று மயங்கினர். அவர்களிலொருவன் சிறிது திடமனதுடன் அவரைக்கொல்ல ஒருவாறு மனந்துணிந்து, சத்துருக்களுக்கும் பயங்கரமான கத்தியைக் கையிலேந்தி, உயரத்தூக்கயத்தனித்த சமயத்தில், அவருடைய ஜீவாத்மாவானது உடனே அச்சரீரத்தைவிட்டு, 'அமுதோகன், அமுதோகன்' என்று சொல்லிக்கொண்டு சத்குருவான தக்ஷிணாமூர்த்தியின் ஆலயத்தைவந்து அடைந்தது. அச்சமயத்தில் அவ்வாலயத்தினின்றும் 'அமுதோகன்,' என்ற சப்தமே ஒருயாமநேரம் முழங்கிற்று அது போலவே, வேடன், வேடஸ்திரீயும் சிவபதமடைந்தார்கள், என்ற சப்தம்

உண்டாயிற்று. அச்சமயத்தில் கிருபாநிதியாகிய சிவபெருமான் நந்திகேச்வரரைப் பார்த்து நந்தி நமது மெய்யன்பனாகிய அமுதோகன் வருகின்றான். அவனை யாம் பார்க்கஇச்சை யுடனிருக்கின்றோம் ஆகையால் நீ மார்க்கத்தை விட்டுவிலகியிருந்து அவனை நம்மிடம் வரவழைப்பாய்” என்றுத் தரவளிக்க, நந்திகேசவரர் ஈசுவர ஸந்நிதியை விட்டுவிலகி அமுதோகனை ஈசுவரனிடம் போகும்படி செய்தனர். இவ்விதம் சிவபெருமானை யடைந்த அவ்வமுதோகருக்குப் பரமசிவன் மகா சந்தோஷத்துடன் ஒருவராலும் அடையமுடியாத சாயுஜ்ஜிய பதவியைக் கொடுத்தருளினார். அதே ஸமயத்தில் அக்ஷேத்திரவாஸிகளான வேடன் வேடஸ்திரீக்கும் அப்பதவியைக் கொடுத்தருளினர்.

அப்பொழுது ஆகாயத்தினின்று தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தனர். தேவதுந்துபிவாத்தியங்கள் முழங்கின. முனிவர்கள் “ஹரஹர” வென்று சிவநாமத்தைக் கோஷித்தார்கள். கின்னரர்கள், யக்ஷர், சித்தர், வித்தியாதரர், கிம்புருஷர், முதலாயினர் ஈசனைக்குறித்து வாயாரப்பாடினார்கள், ஊர்வசி முதலிய அப்ஸரஸ்திரீகள் நர்த்தனஞ் செய்தார்கள். இவ்வித ஆநந்தத்துடன் அமுதோகர் மோக்ஷமடைந்த அந்த க்ஷேத்திரத்திற்கு அபிமுக்தீசுவர மென்றும், அமுதோகேசுவ்ரபென்றும் நாமதேயங்கள் வழங்கி வருகின்றன. அங்கு ஸர்வான்மாக்களுக்கும் புக்தியையும் முக்தியையும் கொடுக்கப்பட்டதும், பிரம்மஹத்தி முதலான பாபங்களை நிவிர்த்தி செய்யப்பட்டதும், அபமிருத்யு முதலிய வியாதிகளைத்தீர்க்கப்பட்டதுமான] அபிமுக்தீசுவரர் என்னும் உத்தமமாகிய லிங்கம் [ விளங்கிவருகின்றது. அன்றியும் அவ்விடத்தில் புண்ணியமாயும் ஆணவமலமாகிய அக்ஞானத்தை நீக்கத்தக்கதாயும், பிரம்மஹத்தியாதி பாபங்களைத் தொலைக்கக்கூடியதாயுமிருக்கின்ற அமுதோக தீர்த்தமென்னும் ஒரு புண்ணிய தீர்த்தம் விளங்கி வருகின்றது. அத்தீர்த்தத்தில் எவர்கள் பக்தியுடன் ஸ்நானம் செய்து அபிமுக்தீசுவரலிங்கத்தைத் தரிசித்தும் ஸ்தோத்திரஞ் செய்கின்றார்களோ அவர்கள் சாயுஜ்ஜியத்தை யடைவார்களென்பதிற்சந்தேகமில்லை



சிவபக்தியில்லாத மூடர்களும், அக்ஷேத்திரத்தைத் தரிசித்த மாத்திரத்தில், சிவாக்ஞைபால் பக்தியைப் பெறுகின்றார்கள். சிவபெருமானை ஒரு தடவையாவது நினையாதவர்களும் அவருடைய மந்திரத்தை ஜபிக்காதவர்களும், அக்காசியாரணிய க்ஷேத்திரத்தையடைந்து ஒருநாள் வசிப்பார்களேயானால் மோக்ஷத்தைப்பெறுவார்களென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால் ஸதாகாலமும் அங்கே வாசஞ்செய்து புண்ணியத்தைச் செய்பவர்கள் மோக்ஷத்தை நிச்சயமடைவார்களென்பது சொல்லாமலே விளங்கும்.

# பதினாறாவது அத்தியாயம்.

## முசுகுந்த சக்கிரவர்த்திக்கு சிவபெருமான் அனுக்கிரகஞ் செய்தது.

ஸநத் குமாரர் நந்திகேசவரரை நோக்கி “ கிருபைக்கிருப்பிடமாகிய நந்தியெம்பெருமானே! இப்பொழுது தேவரீர் சொல்லியருளிய அமுதோக மந்திரியின் சரித்திரத்தை யான் கேட்கிருதார்த்தனாகவும் தர்மார்த்த காமமோக்ஷங்களின் பலன்களை யடைந்தவனாகவும் ஆகிவிட்டேன். ஆயினும் பக்தியிற் சிறந்த அமுதோக மந்திரியானவர் சிவசாயுச்சியத்தை யடைந்த பிறகு மகாபிரபுவாயும், மிகுந்த கோபத்துடன் கூடினவராயும், அந்த மந்திரியை வெட்டும்படி உத்திரவிட்டவராயுமிருந்த, அந்த முசுகுந்த சக்கரவர்த்தி பின்பு என்ன செய்தார்? அதைச் சொல்லியருள வேண்டும்” என்று மிகவும் ஆவலோடு கேட்ட சனத்குமாரரை நோக்கி ஸகலமுமுணர்ந்த நந்திகேசவரர் சொல்லத் தொடங்கினர்.

"சனத்குமாரரே! அரசனுடைய தூதர்கள் வந்து வணங்கி 'தங்கள் உத்தரவின்படி அமுதோதக மந்திரியின் சிரசைச் சேதித்து அவரை ஸம்ஹரித்து விட்டோம்' என்று விஷயத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். அம்மொழிகளைக்கேட்ட மன்னன் மிகுந்த துக்கத்தால் தலையைக் குனிந்துகொண்டு கலங்கின மனதுடன் பெருமூச்சு விட்டுக்கொண்டு "ஹா ஹா" என்று வருந்தி "ஐயோ! அமுதோதக! அமுதோதக!" என்ன ஒன்றுந் தோன்றாமல் கதறிக்கொண்டே கீழே விழுந்து விட்டான். பின்பு எழுந்து 'என்பிராணனுக்குச் சமானமான அமுதோதகரே! என்னைவிட்டு எங்கு சென்றீர்! நீர் போனவிடத்தைக்காட்டு வீரேல் நானும் அங்கு வந்து சேருவேன். இல்லாவிடில் நீராவது இங்கே வாரும்... என்னருமை மந்திரீ! உம்பெருமையை யறியாமூடனாயினேனே! உம்முடைய பிரபாவத்தையும் பக்தியையும் எவ்வளவோ அறிந்திருந்தும் முடிவில் பேதையாயினேனே! எனக்குப் பொறுமையுண்டாகவில்லையே, நீதிசாஸ்திரத்திலும்மந்திராலோசனையிலும் உம்மை விடமேம் பட்டவருளரோ! உம்மைவிட்டு நானெப்படிப் பிரிந்திருப்பேன்! உலகம் எவ்விதம் நடக்கும். சாஸ்திரங்களில் உம்மைவிடத் தேர்ந்தவரும் மந்திரிகளில் உம்மைவிட சாமர்த்தியமுள்ளவரும் பூலோகத்தில் எவருண்டு? அமுதோதகரை மந்திரியாகக் கொண்டிருக்கின்றேன், எனக்கு எவ்விதக்குறையுங்கவலையும் கிடையாதென்றேமாண்புற்றிருந்தேனே! நற்குணங்களிற் சிறந்த ஓ! அமுதோதகரே! உம்மை யவமதித்து பாக்கிய ஹீனனானேனே! அமுதோதகரே! என்னையும் உம்முடன் சிவபெருமானின் திருவடிகளிற் சேர்த்துக்கொள்ளும்." என்று பலவிதமாகப் புலம்பிக்கொண்டேயிருந்தான்.

இங்கு இப்படியிருக்க, முன்னம் முசுகுந்த மகாராஜனால் வதையுண்ட இரணியாசூரன் உபாசித்துவந்த மகாகாளியானவள் தன் பக்தன் அநியாயமாய்க் கொல்லுண்டானென்பதை யறிந்து, ஹூங்காரமிட்டு அஷ்டதிக்குக் கஜங்களையும் ஓடச்செய்து கொண்டு வந்தாள். உயரமாயும் அகலமாயும், ஆகாயத்தை அளாவிக்கொண்டிருக்கின்ற பெருத்த சரீரத்தை யுடையவளும், வெளுப்பான கிங்கப்பற்களுடையவளும், பயங்கரமான முகத்தையும், கோபத்தாற் சொலிக்கும் முகத்தையும், நெருப்புப் பொறிகள் பறப்பதும், உக்கிரமானதுமான பெரியநேத்திரங்களையும் உடையவளும், மைபோற்கருத்த மேனியை யுடையவளும், தலைமாலையை யணிந்தவளும், கையில் பாசம் டமருகம் திரிசூலம், கபாலம் முதலியவைகளை யுடையவளுமாக அம்மகாகாளியானவள் முசுகுந்தனைக்கொல்ல நினைத்து "என்பக்தனைக் கொன்றவன் யார்?" என்று பேரிடி முழக்கம்போல சத்தமிட்டுக்கொண்டு, அவனிருக்கும் பட்டணத்தைச் சுற்றிவளைத்துக் கொண்டாள். அதையறிந்த முசுகுந்த மகாராஜன் அமுதோதகரைக்கொன்ற தோஷபலனே இவ்வுருவுடன் இங்குவந்து தோன்றுகின்றது" என்று எண்ணி, தாரகாசுரனைக் கொன்ற ஸ்ரீசுப்பிரமணியக்கடவுளைத் தியானித்து." ஷண்முகக்கடவுளே! இப்பொழுது இக்காளியின் உபத்திரவத்தினின்றும் நீக்கி என்னை இரக்ஷிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கும்போது, கிரௌஞ்ச பர்வதத்தை பேதித்தவரான முருகக்கடவுளும் அவன் மீதுமனமிரங்கி, சிவபெருமான வியர்வையிலுண்டான இலக்ஷம் வீரர்களையும், அம்பாள் பாதச்சிலம்பிலுண்டான வீரபாகு முதலிய நவவீரர்களையும் பார்த்து "வீரர்களே! நீங்கள் உத்தரவின் பிரகாரம், இப்பொழுதே சென்று நம்முடைய பக்தனை முசுகுந்தனுடன் யுத்தம் புரிய வந்திருக்கும் காளியோடு யுத்தஞ்செய்துவாருங்கள் என்றனுப்பினர்.



அவ்வுத்தரவைச் சிரமேற்கொண்ட அவ்வீரர்கள் யுத்தசன்னாகத்துடன் சென்று காளியிருக்குமிடம் வந்து அவளைச் சுற்றிக்கொண்டு அவளுடன் கொடியதோர் போர் புரிய வாரம்பித்தார்கள். காளியானவள் சிறிதும் சலிப்படையாமல் கடும்போர் புரிந்து முசுகுந்தன் சைனியத்தையும், முருகக்கடவுளின் வீரர்களையும் தன் சூலாயுதத்தால் சம்ஹரித்து, அவர்களுடைய இரத்தத்தைத் தன் கபாலத்தில் ஏந்திக்குடித்து வந்தாள். இவ்விதம் தன் சைனியம் வரவரக்குறைந்து போவதைக் கண்ட முசுகுந்தன் மிகவும் மனவருந்தி, சரவணப் பொய்கையிலுண்டான ஸ்ரீ சுப்பிரமணியரைத் தியானித்து 'சுவாமி! இக்காளியாலுண்டாகிய ஆப

த்தினின்றும் காப்பாற்ற வேண்டும், பிரபுவே! தேவரீரனுப்பிய சைனியங்களும் அடியேனுடைய சைனியங்களும் இம்மகாகாளியால் நாசமாக்கப்படுகின்றன இத்தருணத்தில் தேவரீர் எழுந்தருளி வந்து காப்பாற்ற வேண்டும்" என்று பிரார்த்திக்க, கருணாநிதியாகிய, சுப்பிரமணியர் பிரத்தியக்ஷமாகிக் காளியின் கையிலிருந்த சூலாயுதத்தைப் பிடுங்கி விட்டனர். உடனே வீரர்களனைவரும் அவளிடம் சென்று விளையாட்டுப்போல அவளை நன்றாகக் கட்டி, ஷண்முகதாஸனாகிய முசுகுந்த மகாராஜனின் முன்விட்டு அரசனையும் முருகக்கடவுளையும் வணங்கி நின்றனர்.

அப்பொழுது ஷண்முகர் வீரபாகு முதலியோர்களை நோக்கி" வீரர்களே! இக்காளியின் காலில் விலங்குபூட்டி வேறிடஞ் செல்லாமல் இங்கேயே யிருக்கும்படி செய்து விடுங்களென்றாஞ்ஞாபித்தார். அவர்களும் அப்படியே செய்து விட்டனர். அச்சமயத்தில் காளியானவள் சுப்பிரமணியரைப் பார்த்து "சுவாமி! என ஜீவனத்திற்கு மார்க்கம் செய்ய வேண்டும், தேவரீரின் பக்தனாகிய முசுகுந்தனை எனக்கு நரபலி கொடுக்கும்படி உத்தரவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். உடனே சுப்பிரமணியர் முசுகுந்தனை நோக்கி "காளி கேட்டுக்கொண்டபடி அவளுக்கு நரபலி கொடு" என்று சொல்லிவிட்டு, அவளுக்குக் காவலாகத் தென்புரத்தில் ஐயனாரை இருக்கச் செய்து, மறைந்தருளினர்.

பிறகு முசுகுந்தன் தன்னீசன் உத்திரவுப்படி அக்காளிக்கு நரபலி முதலான பல பலிகளைக் கொடுத்து வந்தான். அது முதல் ஆலங்குடியென்னும் க்ஷேத்திரத்தில் ஸர்வ லோகங்களுக்கும் பலனையும் வரத்தையும் கொடுக்கப்பட்டவளான காளி, வாய்வு திக்கிலாலயமமர்ந்தவளென்ற பெயருடன் விளங்கி வருகின்றாள். அவளுக்கு வருஷந்தோறும் அரசன் ஒரு நரபலியையும் ஆயிரம் மற்ற பலிகளையும் கொடுத்து வந்தான். அவளும் அவைகளையேற்று அங்கேயிருந்து வருகின்றாள்.



பின்பு முசுகுந்தன் தன் மந்திரியைக் கொன்ற பாபத்தினின்றும் விடுபடவெண்ணி சிவபக்தியிற் சிறந்தவரும் சதுர்வேதங்களையுமுணர்ந்த நாலாயிரம் பிராமணர்களை வரவழைத்து, அவர்களுக்கு வேண்டியவளவு தானங்களையும் சதுர்வேதபுரமென்னும் ஓர் திவ்ய கிராமத்தையும் இன்னும் பலவேறு கிராமங்களையும் அவர்கள் குடியிருப்பிற்காகத் தானஞ் செய்தனன். பின்னும் சிவதீக்ஷைபெற்ற பிராமணர் ஒருவராவது கிடைக்கவில்லையே என்றேங்கி நிற்குஞ் சமயத்தில், சிவபெருமான் பிராமணவடிவுடன் பிரத்யக்ஷமாக வந்து சூரியன்போல் பிரகாசிப்பவராயும், தன்னைப் பார்ப்பவர்களுக்காசையை யுண்டு பண்ணப்பட்டவராயும், யௌவன புருஷராயும் திரிபுண்டரதாரியாயும், ருத்திராக்ஷமாலையணிந்தவராயும், காதில் குண்டலமும் கக்கத்தில் புத்தகமும், பாதம்வரை தொங்கக்கூடிய இடுப்பு வஸ்திரம் மேல் வஸ்திரங்களை யுடையவராயும் குருந்தமரத்தின் மொட்டின் நுனிபோல் வெளுத்த பல்வரிசைகள் உடையவராயும் தடிக்கம்பு, குடை, கமண்டலு முதலியவைகளைக் கையிலேந்தியவராயும், அநேக திருவிளையாடல்களை யுடையவராயும் அவ்வரசன் முன்தோன்றி, "ஓ ராஜேந்திரனே! உமக்கு மங்களமுண்டாகட்டும், மிகவும் தெரிந்தவராயும் பிரபுவாயுமிருக்கும் நீர் நூறுவயதளவும் இருக்கக்கடவீர். ராஜனே! உழுது தருமம் ஐயத்துடன் விளங்கட்டும், அரசனே! தாங்கள் சிவபக்தர்களான பிராமணர்களுக்கு அநேக கிராமங்களைத் தானஞ் செய்திருப்பதாகக் கேள்விப்பட்டிவ்விடம் வந்தேன். யானும் ஸம்ஸாரபாதையால் பாதிக்கப்படுபவன் எனக்கும் ஒரு கிராமத்தை யீதல் தர்மமாகும்" என்றனர்.

அவரது மொழிகளைக்கேட்ட மன்னன் அவரை நோக்கி "பிராமணோத்தமரே! நீரிருப்பதெந்ததேசம்" என்று கேட்டார். அதற்கு அப்பிராமணர் "நானிருப்பது காஞ்சீபுரம் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு இக்காசியாரணிய க்ஷேத்திரத்தில் ஏலாள்காம்பாளுடைய ஸன்னிதானத்தில் புராணத்தைப் படித்துக்கொண்டு எப்பொழுதும் வாசஞ் செய்யலாமென்று எண்ணிக்கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொல்ல, அவரை நோக்கிப்

பின்னும் அம்மன்னன் "பௌராணிகரான ஓ பிராமணோத்தமரே! உம்முடைய நாமதேயம் என்ன?" என்று வினவினர். அதற்கு அவர் "ஓ பிரபுவே! என்னைச் சோமனாதபட்டரென்பார்கள். "எனப்புகன்றார். இவைகளையெல்லாம் கேட்டு அரசன் மிகவும் சந்தோஷப்பட்டு அவரது சம்சாரயோக க்ஷேமத்திற்குப் போதுமான ஒரு கிராமத்தை தக்ஷிணை தாம்பூலத்துடன் தாராபூர்வமாகத் தத்தஞ் செய்து கொடுக்க, அப்பிராமணன் அதனைப்பெற்றுக்கொண்டு, சடுதியில் அந்தர்த்தியானமாயினர். இதைக்கண்டவரசன் மகாவாச்சரியங்கொண்டு, வந்தவர் சிவபெருமானேயென்று துணிவுகொண்டு, " சம்போ! ஜகதீசா! " என்று கூவிக்கொண்டே சிவலிங்கத்தினருகில் வந்து சேர்ந்தார்.

அவ்விடம் வந்து லிங்கத்தைப் பலமுறை நமஸ்கரித்து, "சம்போ! ஜகன்னாதா! சந்திரசேகரா! கங்காதரா! பிரபுவே! அடியேன் முன் பிராமண வேஷத்துடன் தோன்றி! என் பெயர் சோமனாதன் நான் இருப்பது காஞ்சீபுரம் நானொரு புராணிகன் ஏலாளகாம்பாள் ஸந்நிதியில் புராணம் படிப்போன் என்று சொல்லி ஏமாற்றி இப்பொழுது எங்கு சென்றீர்? ஓ! பக்தவத்சலா! ஏ! சங்கரா ஏலாளகபுராணிகரே! சுவாமி! என்னை நன்றாகச்சோதித்து விட்டீர்! உம்மை நான் நன்றாகவறிவேன், அறிவேனே! தேவாதிதேவனே! கருணாநிதே! ஆபத்ஸகாயா! என்னை ரக்ஷிக்கவேண்டும்" என்று கதறிப்பூமியில் விழுந்து புரண்டு, கண்ணீர் விட்டு, மயிர்க்கூச்சலுடன் பரவசமாக சிவபெருமானை வணங்கித் துதிக்கும்போது, சிவபெருமான் கைலாயத்திற் கொப்பான விருஷப வாகனத்திலாரோகணித்துக்கொண்டு, குண்டோதரனால் குடை பிடிக்கப்பட்டவராயும், நந்தி பிருங்கி முதலான கணங்களால் சூழப்பட்டவராயும், விஷ்ணு பிரம்மா முதலான தேவர்களால் துதிக்கப்பட்டவராயும், நாரதர் தும்புரு முதலானவர்களால் பாடப்பட்டவராயும், அப்ஸரஸ்திரீகள் நர்த்தனஞ் செய்ய, ஸகல தேவவாத்தியங்களும் கோஷிக்க, அவ்வரசன் முன்தோன்றி அவனை நோக்கி "இராஜசிரேஷ்டனாகிய குழந்தாய்! நானுன்முன் இப்பொழுது பிரத்தியக்ஷமாய் தோன்றியிருக்கின்றேன்.



உனக்குச் சகல செல்வங்களுமுண்டாகட்டும். உனதன்பின் மேலீட்டுக்காக நாலாயிரம் பிராமணர்களுக்குள் யானும் ஒருவனாகவிருந்து கொண்டிருக்கின்றேன்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர்.

பின்பு பூர்ணகிருபையுடன் கூடின சம்புவானவர் நாலாயிரத்துளொருவராக விருந்து வந்தார். அக்காசிபாரணியத்திற்கும் அன்று முதல் தக்ஷிணகாஞ்சி யென்ற பெயர் வழங்கலாயிற்று. முசுகுந்த மகாராஜனும் சிவபெருமானை ஸ்தோத்திரஞ்செய்து அக்ஷேத்திரத்தைப் பரிபாலித்து வந்தான். ஆங்கு மாகமாதத்தில் பிரம்மோற்சவம் ஆரம்பித்து சித்திரை மாதம் வரையில் முப்பத்திரண்டு நாட்களுக்கு ஆபத்ஸகாயருக்கும், மற்றுமுள்ளபரிவாரதேவர்களுக்கும்ரிஷபவாகனம்முதலியபலவாகனங்களும், சுவர்ண விமானங்களும், பஞ்சரதங்களும், மற்றுமுள்ள அலங்காரங்களுடன் சிவாகமவிதிப்படி உற்சவத்தைச் சிறப்பாக நடத்திப்பின்பு மிருகசீரிஷ நக்ஷத்திரமுதல் தக்ஷிணாமூர்த்திக்கு ஹா ஸத்வஜாரோகணஞ்செய்வித்து, ஒன்பதுநாள் மிகுந்த சிறப்புடன் ரதோத்ஸவ முதலிய திருவிழாக்கள் நடத்தி வந்தனர். அதுமுதல் அக்ஷேத்திரதிற்கு முசுகுந்தேசுவரமென்று நாமம் வழங்கி வருகின்றது.

வெகு புண்ணியத்தைக் கொடுப்பதாயும், பாபிகளின் பாபங்களனைத்தையும் போக்கடிப்பதாயும், பரிசுத்தமான பெருமையுடையதாயும், இவ்வுலகத்திலுள்ள சிவக்ஷேத்திரங்களனைத்திலும் உத்தமமானதுமான அக்காசியாரணி க்ஷேத்திரமானது மிகவும் மேன்மையடைந்து விளங்கிவருகின்றது. அவ்விடத்திலுள்ள ஆபத்ஸகாயரை எவர்கள் எவ்விடத்திலிருந்து தியானித்தபோதிலும் அவர்கள் தர்மார்த்த காமங்களையும் முடிவில் மோக்ஷத்தையும் பெறுவார். எவ்விதம் மந்திரங்களிற் பஞ்சாக்ஷரமும், தர்மங்களில் பரஹிம்ஸை செய்யாதிருத்தலும், தேவர்களிற் சிவபெருமானும், வேதங்களில் ஸ்ரீருத்திரமும், சிவபக்தர்களில் விஷ்ணுவும், இரக்ஷிப்பதில் விபூதியும், சிவதீக்ஷை பெற்றவர்களுள்

ஆசாரியரும், ஆபரணங்களில் உருத்திராக்ஷமும், சாஸ்திரங்களில் சிவாகமமும், சுகத்தில் வைராக்கியமும், பதவிகளுள் சாயுச்சியபதவியும், மேம்பட்டனவோ, அவ்விதமே உலகத்திலுள்ள க்ஷேத்திரங்களுள் காசியாரணியமே உத்தமமானது. சனதகுமாரரே! தர்மார்த்த காமமோக்ஷங்களையும், ஸர்வசித்திகளையும் கொடுக்கப்பட்ட இக்காசியாரணியத்தின் மகிமையை, எனக்குப்பணிவிடைசெய்யும் உமக்குச்சொன்னேன். ஆகையால் நீரும் இக்ஷேத்திரத்தின் இரகசியமான பெருமையை பக்தியில்லாத நாஸ்திகர்களுக்குச் சொல்லக்கூடாது.

சனத்குமாரரே! சமுசாரமாக்கடலிலிருந்தமனிதர்களுக்கு முத்தியளிப்பது இக்ஷேத்திரமேயாகும். இக்ஷேத்திர புராணகதை ஒருமுறை யேனும் கேட்பவர்கள், ஸகலயாகங்களையும் செய்வதால் எந்தப்பலனை யடைவார்களோ, அவ்விதபலனைப் பெறுவார்கள். அன்றியும் அதனைத் தினந்தோறும் சிவசன்னிதியில் கேட்பவர்கள், நிச்சயமாக சிவலோகத்தை யடைந்து கற்பகோடி காலம் வரையில் சுகானந்தத்தை யனுபவிப்பார்கள். எவ்வித மானகொடிய பாவத்தையும் செய்தவர்கள் இப்புராணத்தைக் கேட்டமாத்திரத்தில் சகல பாபங்களினின்றும் விடுபட்டு சுகத்தையும் சிவபதத்தையுமடைவார்கள். இப்புண்ணியபுஸ்தகத்தை யெவர்கள் தங்கள் கிரகங்களில் வைத்துப் பூஜிக்கின்றார்களோ, அவர்கள் அக்காசியாரணியாதிபதியைப் பூஜித்த பலனையெய்தி, அவருடைய அனுக்கிரகத்தால் ஸகல பயங்களினின்றும் நீங்கிச் சுகமாய் வாழ்ந்திருப்பார்கள். எந்த வித்வான் இப்புராணத்தைச் சிரத்தையுடன் படிக்கின்றானோ, அவன் தேவர்களால் பூஜிக்கப்பட்டு முடிவில் மோக்ஷத்தையடைகின்றான்.

ஆகையால் சனத்குமாரரே! நீரும் மிகுந்த சிரத்தையுடனும் பக்தியுடனும் காசியாரணியத்தை நோக்கிப்புறப்பட்டுப் போய்வாரும். பிரபுவான தக்ஷிணாமூர்த்தியின் தரிசனத்தின் பொருட்டு யானும் அங்கு வருகின்றேன்.'' என்று இவ்விதம் நந்திகேசுவரர் சனத்குமாரருக்குச் சொல்லி வந்த இவ்வபுராணத்தைச் சூதமாமுனிவர் நைமிசாரணிய வாசிகளான சௌனகர் முதலான ரிஷிகளுக்குச் சொல்லியருளினார்.



பின்பு சிலாதர்குமாரராகிய நந்திகேசுவரர் கைலாசபதியாகிய சிவபெருமானிடஞ்சென்று, அக்கைலாசபதியான பரமசிவனை ஆனந்த பாஷ்பத்துடன் நமஸ்கரித்து அச்சிவபெருமானை நோக்கி ''ஜகதீசா! பூலோகத்தில் உத்தமமாக விளங்குகின்ற காசியாரணிய க்ஷேத்திரத்தைத்தரிசிக்கவிரும்புகின்றேன். பிரபுவாயிருக்கின்ற தேவரீர் உத்தரவு கொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்தனர். பரமசிவனும் தமது பக்தருக்கு அவ்விதமே யுத்திரவளிக்க, நந்திகேசுவரர் வெகு சந்தோஷத்துடன் காசியாரணிய க்ஷேத்திரம் வந்துசேர்ந்து, தக்ஷிணாமூர்த்தியைத் தரிசித்துக் கொண்டு ஆங்கே வசித்துவந்தனர்.

ஸகல லோகங்களுக்கும் குருவும், ஸமுஸாரமென்னும் ரோகத்தையுடையவருக்கு வைத்தியரும், சர்வவித்தைகளுக்கு மிருப்பிடமுமான, ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக் கடவுளான சற்குருவை யான் நமஸ்கரிக்கின்றேன்.

"வாழ்கவந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெலாம அரனாமமே
சூழ்கவையகமுந் துயர் தீர்கவே."

"வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பியவன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே"

ஸ்ரீ கலங்காமற் காத்த விநாயகர் துணை
ஸ்கந்தர் துணை.
ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சற்குரு துணை
ஸ்ரீ ஆபத்ஸகாயேசுவர சுவாமி துணை
ஸ்ரீ ஏலவார்குழலம்பாள் திருவடியே துணை.

சுபம். சுபம். சுபம்.

காசியாரண்ணியமாகாத்மியம் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

1. சீரார்கழலே தொழுவீரிது செப்பீர்
வாரார் முலை மங்கையொடும் முடனாகி
யேராரிரும் பூளை யிடங்கொண்ட வீசன்
காரார் கடனஞ் சமுதுண்ட கருத்தே.

2. தொழலார் கழலே தொழுதொண்டர்கள் சொல்லீர்
குழலார் மொழிக்கோல் வளையோடுடனாகி
யெழிலாரிரும் பூளையிடங்கொண்ட வீசன்
கழறுங்கரி கானிடையாடு கருத்தே.

3. அன்பாலடி கைதொழு வீரறியீரோ
மின்போன் மருங்குன்மடவாளொடு மேவி
யின்பாயிரும் பூளையிடங்கொண்ட வீசன்
பொன்போற் சடையிற் புனல் வைத்த பொருளே.

4. நச்சித் தொழுவீர் நமக்கிது சொல்லீர்
கச்சிப் பொலிகாமக் கொடியுடன் கூடி
யிச்சித் திரும்பூளையிடங்கொண்ட வீச
னுச்சித் தலையிற் பலிகொண்டுழலூணே.

5. சுற்றார்ந்தடியே தொழுவீரிது சொல்லீர்
நற்றாழ் குழனங்கையொடும் முடனாகி
யெற்றே யிரும்பூளையிடங்கொண்ட வீசன்
புற்றாடரவோ டென்பு பூண்ட பொருளே,

6 7. தோடார் மலர் தூய்த்தொழு தொண்டர்கள் சொல்
சேடார் குழற் சேயிழையோடுடனாகி
வீடாயிரும் பூளையிடங்கொண்ட வீசன்
காடார் கடுவேடுவனான கருத்தே.



7. ஒருக்கும் மனத்தன் பருள்ளீரிது சொல்லீர்
பருக்கை மதவேழ முரித்துமை யோடு
மிருக்கை யிருப் பூளையிடங்கொண்ட வீச
னரக்கன்னுரந் தீர்த்தருளாக்கிய வாறே.

8. துயராயின நீங்கித் தொழுந்தொண்டர்கள் சொல்லீர்
கயலார் கருங்கண்ணி யொடும் முடனாகி
யியல்பாயிரும் பூளையிடங்கொண்ட வீசன்
முயல்வாரிருவர்க் கெரியாகிய மொய்ம்பே.

9. துணைநன்மலர் தூய்த்தொழுந் தொண்டர்கள் சொல்லீர்
பணைமென் முலைப்பார்ப்பதி யோடுடனாகி
யிணையில்லிரும் பூளையிடங்கொண்ட வீச
னணைவில்சமண் சாக்கிய மாக்கிய வாறே.

10. எந்தையிரும் பூளையிடங்கொண்ட வீசன்
சந்தம்பயில் சண்பையுண் ஞானசம்பந்தன்
செந்தண்டமிழ் செப்பியவித்திவை வல்லார்
பந்தம் மறுத்தோங்குவர் பான்மையினாலே.

முற்றிற்று.

## ஆபத்ஸகாயேசுவரர் துதி.

ஏர் பூத்தமதிக்குழவியிள நிலவுதவழுந்தி பெறிநீர்பொங்க
வார்பூத்த சடைப்பணம் வெளிலெரிப்பசீறநிகழ்மார்புந்தோளு
மார்பூத்த நறையிதழிமணமாறமான் மழுக்கைத்தலத்திலோங்கச்
சீர்பூத்த பூளைவனத்தினிதுறையும் பெருமானைச்சிந்தைசெய்வாம்

## ஏலவார்குழலம்மை துதி.

ஓலவாரியின் முளைத்தமருதியொருகோடியெனவொளிருமேனி
லநாயகனோர் பாலினிற்றிருக்குங்கோமளப்பைங்கொடியையே
மாமுதமெனக்கருணைபுரிபூளைவனத்தணங்கையெங்கள் (ஞான
வார்குழற் குயிலையிமையரையன்றருமயிலையிறைஞ்சவாமால்

4322

# பிழை திருத்தம்.

ஒ2:88 N15

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 16 | 29 | திருவிஸாலேசரம் | திருவிசாலேசுவரம் |
| 17 | 30 | ஸ்திரீ | ஸ்திரீ |
| 18 | 1 | அவனது | அவளது |
| 44 | 10 | சருவயா | சர்வப்பிரியா |
| ஷ | 19 | சாரசாரங்கள் | சராசரங்களை |
| 51 | 4 | சகமடைரயும் | சகமடையும் |
| ஷ | 9 | கோவ்வைக்கனி | கோவைக்கனி |
| 52 | 2 | பேனியைப்பட | மேனியட |
| 56 | 2 | ஸலவேதா | ஸக்லவேதா |
| 59 | 1 | சாறாசா | சராசர |
| 61 | 27 | ஸ்திரி | ஸ்திரீ |
| 63 | 17 | உயர்க்ஞ | உயர்கலு |
| 71 | 24 | சொருபயா | சொருபியா |
| 72 | 29 | ஸப்தாபுரம் | ஸப்தபுரம் |
| 76 | 5 | காந்த | காந்தி |
| 7- | 27 | சிவபெருமான் | சிவபெருமான் |
| 85 | 19 | அப்யுண்ணிய | அப்புண்ணிய |
| 88 | 3 | மகாசுவரர் | நந்திகேசுவரர் |
| 95 | 1 | தெற்குதிக்கில் | தென்திக்கில் |
| 96 | 1 | அபூஜிதது | பூஜித்து |
| ஷ | ஷ | வர்களகு | அவர்களருளால் |
| 98 | 18 | ஒருவருகொ | ஒருவருக்கொருவர் |
| 99 | 16 | என்னுவியாது | என்னுவியலாது |
| 104 | 26 | வாசனை விதம் | வாசனை வீசும் |
| 110 | 2 | தற்குத்தரவு | அதற்குத்தரவு |
| 112 | 15 | தளிபோன்ற | தளிர்போன்ற |
| 1'5 | 3 | கினைந்து | நனைந்து |
| 121 | 18 | மகாபிரளயம் | மகாப்பிரளயம் |
| 126 | 30 | அவர்கள் | அவைகள் |
| 131 | 26 | உன்னுடைய | என்னுடைய |
| 132 | 25 | தக்கனித்தா | தங்களுக்தா |
| ஷ | 29 | ஸ்திரீ | ஸ்திரீ |
| 141 | 8 | நிச்சயம் | நிச்சயமாய் |